# DJL32 - அற இலக்கியம்

## பாடத்திட்டம்

| | | | |
|---|---|---|---|
| அலகு 1 | : திருக்குறள் | : | பொருட்பால் முழுவதும் |
| | நாலடியார் | : | அறத்துப்பால்: செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை |
| அலகு 2 | : இன்னா நாற்பது | : | 1 முதல் 20 பாடல்கள் |
| | இனியவை நாற்பது | : | 1 முதல் 20 பாடல்கள் |
| அலகு 3 | : திரிகடுகம் | : | 1 முதல் 10 பாடல்கள் |
| | ஆசாரக்கோவை | : | 1 முதல் 10 பாடல்கள் |
| | பழமொழி நானூறு | : | கல்வி, சான்றோர் இயல்பு |
| | சிறுபஞ்சமூலம் | : | 1 முதல் 10 பாடல்கள் |
| அலகு 4 | : ஏலாதி | : | 1 முதல் 10 பாடல்கள் |
| | முதுமொழிக்காஞ்சி | : | சிறந்த பத்து, அறிவுப்பத்து |
| | மூதுரை | : | 1 முதல் 20 பாடல்கள் |
| அலகு 5 | : களவழி நாற்பது | : | முழுவதும். |

பாடநூல் : பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், கழக வெளியீடு,சென்னை
ஔவையார் அருளிய அறநூல்கள், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், தி.நகர், சென்னை.

# அற இலக்கியம்

## பாடத்திட்டம்


| அலகு வரிசை | | பாடங்கள் | பக்களண் |
|---|---|---|---|
| அலகு 1 | : | திருக்குறள் | 5 |
| | | நாலடியார் | 242 |
| அலகு 2 | : | இன்னாநாற்பது | 251 |
| | | இனியவைநாற்பது | 259 |
| அலகு 3 | : | திரிகடுகம் | 266 |
| | | ஆசாரக்கோவை | 272 |
| | | பழமொழி நானூறு | 276 |
| | | சிறுபஞ்சமூலம் | 283 |
| அலகு 4 | : | ஏலாதி | 287 |
| | | முதுமொழிக்காஞ்சி | 292 |
| | | மூதுரை | 295 |
| அலகு 5 | : | களவழி நாற்பது | 303 |


**பக்கங்கள் - (1-318)**

## அற இலக்கியம்

தமிழ்மொழி பேச்சு, எழுத்து, வழக்கு ஆகிய நிலைகளை இழக்காது பழமையையும் பாதுகாத்துப் புதுமையையும் போற்றி உலக மொழிகளிடையே தன் பெருமையையும் புகழையும் இன்றுவரை நிலைநாட்டி வருகிறது. பிற செம்மொழிகளுக்கு இல்லாத தகுதியைத் தமிழ் பெற்றுள்ளதற்கு இதுவே காரணம்.

காலங்கள் பல கடந்தாலும் பாடுபொருள் இன்றளவும் தமிழ் இலக்கியத்தின் உயிர்ப்பாக விளங்கி வருகிறது. உலக இலக்கியத் தளத்திற்குத் தமிழ் இலக்கியத்தைக் கொண்டு செல்வதற்கும் பாடுபொருள் காரணமாக இருக்கின்றது.

அறநெறிக் காலத்தில் தோன்றிய கீழ்க்கணக்கு நூல்களுள் நீதி ஆசாரங்களைப் பாடுபொருளாகக் கொண்டு பதினொன்று நூல்களும், திணையொழுக்கத்தைப் பாடுபொருளாகக் கொண்டு ஐந்து நூல்களும், கார்க்காலத்தைப் பாடுபொருளாகக் கொண்டு ஒன்றும், களத்தைப் பாடுபொருளாகக் கொண்டு ஒன்றும் பாடப்பெற்றுள்ளன. இந்நூல்கள் களப்பிரர்கள் ஆண்ட சங்க மருவியக் காலத்தில் பாடப்பெற்றுள்ளன.

சங்க நூல்களிலே மது, புலால் உணவு, பரத்தமை ஆகியவை கண்டிக்கப்படவில்லை. பதிணென்கீழ்க்கணக்கு நூல்களிலே கள், புலால் உணவு, வேசையர் நட்பு இவைகள் வன்மையாகக் கண்டிக்கப்படுகின்றன. இந்நூல்கள் வெண்பாவினால் பாடப்பெற்றுள்ளன. பாடல்கள் எல்லாம் இரண்டடி முதல் எட்டடி வரையிலும் உள்ளன. அளவில் குறைந்த கீழ்க்கணக்கு பதினெட்டு நூல்களையும்

> “நாலடி நாண்மணி நாநாற்பது ஐந்திணைமுப்
> பால் கடுகம் கோவை பழமொழி மாமூலம்
> இன்னிலை சொல் காஞ்சியுடன் ஏலாதி என்பவையே
> கைந்நிலைய ஆம் கீழ்க்கணக்கு.”

எனும் வெண்பா பாடல் மூலம் அறியலாம்.

## நூல்களும் ஆசிரியர்களும்

| | | |
|---|---|---|
| 1. நாலடியார் | - | பல சமண முனிவர்கள் |
| 2. நான்மணிக்கடிகை | - | விளம்பிநாகனார் |
| 3. இனியவை நாற்பது | - | பூதஞ்சேந்தனர் |
| 4. இன்னா நாற்பது | - | கபிலர் |
| 5. கார் நாற்பது | - | மதுரைக்கண்ணங்கூத்தனார் |
| 6. களவழி நாற்பது | - | பொய்கையார் |
| 7. ஐந்திணை ஐம்பது | - | மாறன்பொறையனார் |
| 8. திணைமொழி ஐம்பது | - | கண்ணஞ்சேந்தனார் |
| 9. ஐந்திணை எழுபது | - | மூவாதியார் |
| 10. திணைமாலை நூற்றைம்பது | - | கணிமேதாவியார் |
| 11. திருக்குறள் | - | திருவள்ளுவர் |
| 12. திரிகடுகம் | - | நல்லாதனார் |
| 13. ஆசாரக்கோவை | - | பெருவாயிற்முள்ளியார் |
| 14. பழமொழி | - | முன்றுரையரையனார் |
| 15. சிறுபஞ்சமூலம் | - | காரியாசான் |
| 16. கைந்நிலை | - | நல்லூர்க்கிழார் |
| 17. முதுமொழிக்காஞ்சி | - | கூடலூர்க்கிழார் |
| 18. ஏலாதி | - | கணிமேதாவியார் |

பதிணென்கீழ்க்கணக்கு நூல்களுள் அறஇலக்கியங்களான 1) திருக்குறள், 2) நாலடியார், 3) நான்மணிக்கடிகை, 4) .இனியவை நாற்பது, 5) இன்னா நாற்பது, 6) திரிகடுகம், 7) ஆசாரக்கோவை, 8) பழமொழி, 9) சிறுபஞ்சமூலம், 10) முதுமொழிக்காஞ்சி, 11) ஏலாதி ஆகிய பதினொரு நூல்களாகும்.

**அலகு:1 திருக்குறள் (பொருட்பால் முழுவதும்)**

குறள் வெண்பாவால் இரண்டு அடிகளில் முதல் அடியில் 4 சீர்களும் 2ஆம் அடியில் 3 சீர்களும் அமைத்துப்பாடுவது குறள் எனப்பெய்பெறும். ஒன்றே முக்கால் அடியில் ஏழு சீர்களைக் கொண்டு உலகத்தையே அளந்தது திருக்குறள். அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளதால் முப்பால் என அழைத்தனர். பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, உத்தரவேதம், தமிழ் மறை என்ற பெயர்களும் இந்நூலுக்கு உண்டு.

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். சமுதாயத்தைப் பற்றி நன்கு சிந்தித்தவர். மனிதச் சமுதாய முன்னேற்றத்திற்காகத் திருக்குறளை எழுதியவர் நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பெருநாவலர் போன்ற சிறப்புப்பெயர்களால் அவரைக் குறிப்பிட்டனர்.

திருக்குறள் வையத்துள் வாழ்வதற்கு வகுக்கப்பட்ட நெறிகள் அனைத்தையும் அறத்துப்பால் (38) பொருட்பால் (70) இன்பத்துப்பால் (25) என்ற மூன்று பெரும்பிரிவுகளில் பகுத்துத் தரப்பட்டுள்ளது.

திருக்குறள் பலமொழிகளில் வெளிநாட்டவரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சமயம், இனம், மொழி, கடந்து பொதுநோக்குடன் படைக்கப்பட்டுள்ளதால் ‘உலகப்பொதுமறை’ எனப் போற்றப்படுகிறது.

ஒரு நூலின் பெருமையைப் புலவர்கள் பலர் பாடியது திருக்குறளுக்கு மட்டும்தான். ‘திருவள்ளுவமாலை’ என்ற நூலில் கபிலர், பரணர் உட்பட 57 புலவர்கள் திருக்குறளின் பெருமையைப் பாடியுள்ளனர்.

“அணுவைத் துளைத்தேள் கடலைப் புகட்டிக்

குறுகத் தறிந்த குறள்” - என்று ஔவையார் பாடிய பாடல் இதன் பெருமையை உணர்த்துகிறது. எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையாதலால், எனவே உலகம் இருக்கும்வரை, மனிதம், இனம் இருக்கும்வரை பயன்படும் நூலாகத் திகழ்கிறது.

பாடப்பகுதியாக அமைந்துள்ள பொருட்பால் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என்று மூன்று இயல்களைக் கொண்டுள்ளது. இப்பிரிவில், அரசியல் - 25 அதிகாரங்களையும், அங்கவியல்-32 அதிகாரங்களையும், ஒழிபியல் - 13 அதிகாரங்களையும் கொண்டு மொத்தம் 70 அதிகாரங்கள் உள்ளன.

## அலகு – I

## திருக்குறள் (பொருட்பால் முழுவதும்)

## I அரசியல்

### 1.இறைமாட்சி

**(நாட்டிற்குத் தலைவனான மன்னனைப் பற்றியது)**

**1. படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு.**

படையும், குடிமக்களும், பொருளும், அமைச்சும், நட்பும், அரணும் ஆகிய ஆறுஉறுப்புக்களையும் உடையவன் அரசர்களுக்குள் ஆண் சிங்கம் போன்றவன் ஆவான்.

படை - படையும், குடி - குடிமக்களும், கூழ் - பொருளும், அமைச்சு - அமைச்சும் நட்பு - நட்பும், அரண் - அரணும் (ஆகிய) ஆறும் உடையான் - ஆறு உறுப்புக்களையும் உடையவன், அரசருள் - அரச்களுக்குள்ளே, ஏறு - ஆண் சிங்கம் போன்றவனாவான்.

**2. அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.**

வேந்த்ர்க்கு இயல்பாக இருக்க வேண்டிய பண்புகள் எவையென்றால், அஞ்சாத திண்மை,கொடை, அறிவு, ஊக்கம் ஆகிய நான்கும் இடைவிடாது நிற்றலாகும்.

வேந்தற்கு - வேந்தனுக்கு, இயல்பாவது - இயல்பான குணமாவது அஞ்சாமை -அஞ்சாத தன்மையும், ஈகை - ஈகைத் தன்மையும், அறிவு - அறிவும், ஊக்கம் -ஊக்கமும், இந்நான்கும் - ஆகிய இந்த நான்கு பண்புகளும்,எஞ்சாமை -எப்போதும் நீங்காமல் இருந்தலாகும்.

**3. தூங்காமை கல்வி துணிவுஉடைமை இம்மூன்றும்**
**நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.**

பூமியை ஆட்சி புரியும் திருவுடையார்க்கு,செயல்களில் விரைவு உடைமையும், தக்ககல்வியும்,ஆண்மையுடைமையும் ஆகிய இம்மூன்று குணங்களும் எப்போதும் நீங்காதிருப்பனவாகும்.

நிலன் - நிலத்தினை, ஆள்பவர்க்கு - ஆளும் மன்னர்க்கு, தூங்காமை - செயல்களில் விரைவு உடைமையும், கல்வி - ஏற்ற கல்வியும், துணிவுடைமை - துணிவென்னும் ஆண்மையுடைமையுமாகிய, இம்மூன்றும் - இந்த மூன்று தன்மைகளும், நீங்கா - எக்காலத்திலும் நீங்காதிருப்பனவாகும்.

**4. அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா**
**மானம் உடையது அரசு.**

அறத்திலிருந்து வழுவாமல் ஒழுகி, அறமல்லாதவைகளை நிகழவொட்டாமல் கடிந்து வீரத்தில் வழுவாத தாழ்வு இன்மையினை உடையான் அரசனாவான்.

அறன் இழுக்காது - அறத்திலிருந்து தவறாமல், அல்லவை அறமல்லாதவற்றை, நீக்கி – தன்னிடம் உண்டாகாமல் நீக்கி, மறன் - மறமான வீரத்திலிருந்து, இழுக்கா – தவறாத, மானம் - மானத்தினை (தாழ்வு இன்மையினை), உடையது அரசு – உடையவன் அரசனாவான்.

**5. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு.**

பொருள்வரும் வழிகளை மேன்மேல் உண்டாக்கலும், வந்தவற்றைத் தொகுத்தலும்,காப்பாற்றுதலும், காப்பாற்றியதைத் தக்கபடி வகுத்துச் செலவிடுதலும் ஆகிய இவைகளில் வல்லவனே அரசன்.

இயற்றலும் - பொருள் வரும் வழிகளை மென்மேலும் உண்டாக்கலும், ஈட்டலும் - கொள்ளாமல் காத்தலும், காத்த வகுத்தலும் - காத்தவற்றை முறையாகச் செலவிடுதலும், வல்லது அரசு - இவைகளில் வல்லவனே அரசனாவான்.

**6. காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்.**

யாவர்க்கும் காணுவதற்கு எளியவனாகவும், யாவர் மாட்டும் கடுஞ்சொல்லன் அல்லானாகவும் இருப்பானேயானால் அம் மன்னனது நிலத்தினை எல்லா நிலங்களிலும் உயர்ந்ததாக உலகம் கூறும்.

காட்சிக்கு – யாவரும் காண்பதற்கு, எளியன் - எளியவனாகி, கடும் - கடுமையான, சொல்லன் - சொல்லினன், அல்லனேல் - இல்லதவனாக

இருந்தால், மன்னன் - அம்மன்னனது, நிலம் - பூமியை, உலகம் - உலகமானது, மீக்கூறும் - எல்லாப் பூமிகளிலும் மேலானதென்று உயர்வாகப் பேசும்.

**7. இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்**
**தான்கண் டனைத்துஇவ் உலகு.**

இனிய சொல்லுடனே ஈதலைச் செய்து காப்பாற்ற வல்ல அரசனுக்கு இவ்வுலகம் தனது புகழோடு பொருந்தி அவன் எண்ணிய அளவில் இருக்கும்.

இன் - இனிய, சொலால் - சொற்களுடனே, - ஈத்து - ஈதலைச் செய்து, அளிக்க – காப்பாற்ற, வல்லாற்கு – வல்ல மன்னனுக்கு, இவ்வுலகு - இந்த உலகமானது, தன் - தனது, சொலால் - புகழுடன் பொருந்தி, தான் - தான், கண்டனைத்து – கருதின அளவினதாக அமையும்.

**8. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறைஎன்று வைக்கப் படும்.**

அரசனுக்கு ஏற்ற முறைமையைச் செய்து மக்களைத் துன்புறாமல் காப்பாற்றும் மன்னவன் பிறப்பால் மகனேயானாலும் செயலால் மக்களுக்கு இறைவன் என்று வைக்கப்படும்.

முறை – அறநூலும் நீதி நூலும் சொல்லும் நெறியில், செய்து – ஆட்சி செய்து, காப்பாற்றும் - மக்களைக் காப்பாற்றுகிற, மன்னன் - மன்னவன், மக்கட்கு – மக்களுக்கு, இறை – செயலினாலே இறைவன், என்று – என்பதாக, வைக்கப்படும் - வைக்கப்படுவான்.

**9. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.**

துணையாக இருப்போர் செவி பொறுத்துக் கொள்ள முடியாத சொற்களைச் சொன்னாலும் அவற்றின் நன்மை கருதிப் பொறுத்துக் கொள்ளும் பண்புடைய வேந்தனது குடை நிழலில் உலகம் தங்கி நிற்கும்.

சொல் - துணை நிற்பவர் சொல்லும் சொற்கள், செவி – காது, கைப்ப – பொறுக்க முடியாததாக இருந்தாலும், உடைய – உடை, வேந்தன் - வேந்தனது, கவிகைக் கீழ் - குடை நிழலின் கீழ், தங்கும் உலகு - இந்த உலகமானது தங்கி இருக்கும்.

**10. கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க்கு ஒளி.**

கொடுத்தலும் முகமலர்ந்து பேசுதலும், முறை செய்தலும், குடிகளைக் காத்தலும் ஆகிய இந்நான்கும் உடையவன் வேந்தர்களுக்கெல்லாம் விளக்காவான்.

கொடை - ஈகைத் தன்மையால் கொடுத்தலும், அளி – முகமலர்ந்து இன்சொல் கூறலும், செங்கோல் - முறை செய்தலும், குடி – குடிமக்களை, ஓம்பல் - பேணிக் காத்தலும், (ஆகிய) நான்கும் - இந்த நான்கும், உடையான் - உடையவன், வேந்தர்க்கு ஒளி – வேந்தர்களுக்கெல்லாம் ஒளி தரும் விளக்கு

## 2. கல்வி

**(கற்க வேண்டியவைகளும், சிறப்பும், பயனும்.)**

**1. கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

ஒருவன் கற்றதற்குரிய நூல்களைப் பழுதறக் கற்றல் வேண்டும். அப்படிக் கற்ற பிறகு அக்கல்விக்கேற்ப தக்கபடி ஒழுகுதல் வேண்டும்.

கற்பவை – படிப்பதற்குரிய நூல்களை, கசடு – பழுது, அற - இல்லாமல், கற்க – கற்றல் வேண்டும், கற்ற – அப்படிக் கற்ற, பின் - பிறகு, அதற்கு – அக்கல்விக்கு, தக – தக்கபடி, நிற்க – நின்று ஒழுகுதல் வேண்டும்.

**2. எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்**
**கண்என்ப வாழும் உயிர்க்கு.**

எண் என்று சொல்லப்படுவதும், எழுத்து என்று சொல்லப்படுவதும் ஆகிய இரண்டினையும் அறிந்தோர், சிறப்புடைய மக்களுயிர்கட்குக் கண் என்று சொல்லுவார்கள்.

எண் - எண், என்ப – என்று சொல்லப்படுபவைகளையும், ஏனை – மற்றை, இவ்விரண்டும் - ஆக இந்த இரண்டினையும், வாழும் - வாழ்தற்குரிய, உயிர்க்கு – மக்களுக்கு, கண் என்ப – கண்களாகும் என்று அறிந்தோர் கூறுவர்.

**3. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்.**

கண்ணுடையவர்கள் என்று உயர்த்திச் சொல்லப்படுபவர்கள் கற்றவர்களே ஆவார்கள். கல்லாதவர்கள் முகத்தில் இரண்டு புண்ணுடையவர்கள் ஆவார்கள்.

கண் - கண்கள், உடையர் - உடையவர்கள், என்பவர் - என்று சிறப்பாகச் சொல்லப்படுபவர்கள், கற்றோர் - கற்றவர்களே, ஆவார்கள். கல்லாதவர் - கற்காதவர்கள், முகத்து – முகத்தில், இரண்டு – இரண்டு, புண் - புண்களை, உடையர் - உடையவர்களாவார்கள்.

**4. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்.**

யாவரும் மகிழுமாறு அவர்களுடன் சேர்ந்து பழகி, ‘இனி அவரை எப்போதும் காண்போம் என நினைத்துப் பிரிகின்ற தன்மையுடையதே கற்றவர்களின் தொழிலாகும்.

உவப்ப – பிறர் மகிழுமாறு, தலைக்கூடி – அவருடன் கலந்து, உள்ள - இனி எப்போது அவரைக் காண்போம் என்று நினைக்கும்படியாக, பிரிதல் - பிரிவதாகிய, அனைத்து – அத்தன்மையினை – உடையதே, புலவர் - கற்றறிந்தவர்களது, தொழில் - செயலாகும்.

**5. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரே கல்லா தவர்**

செல்வர்கள் முன்னே வறியவர்கள் நிற்றல் போல தம்முடைய ஆசிரியர் முன்னே நின்று கல்வி கற்றவர்களே உயர்ந்தோராவர். அவ்வாறு கற்பதற்கு நாணமுற்றுக் கல்லாதவர்கள் இழிந்தோரேயாவர்.

உடையார் - செல்வந்தர், முன் - முன்னே, இல்லார்போல்- பொருளில்லாத வறிஞர்போல, ஏக்கற்றும்-தாழ்ந்து நின்று, கற்றார் - கற்றவர்களே சிறந்தோராவார், கல்லாதார் - அவ்வாறு கல்லாதவர்கள், கடையரே – தாழ்ந்தவரேயாவார்.

**6. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு.**

மணலின்கண் இருக்கும் கேணியானது தோண்டிய அளவுதான் நீரினைச் சுரக்கும். மக்களுக்குக் கற்ற அளவுதான் அறிவு சுரக்கும்.

மணற்கேணி – மணலின்கண்ணேயுள்ள கேணியானது, தொட்டனைத்து - தோ ண்டிய அளவுதான், ஊறும் - நீரானது சுரக்கும், (அதுபோல) மாந்தர்க்கு –

மக்களுக்கு, அறிவு – அறிவானது, கற்றனைத்து - கற்ற அளவுதான், ஊறும் - சுரக்கும்.

**7. யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு.**

கற்றவனுக்குத் தனது நாடும் ஊருமே அல்லாமல் எந்த ஊரும் நாடும் தன்னுடைய ஊராகும்: நாடாகும். அப்படியிருக்க, ஒருவன் தான் இறக்குமளவும் கல்லாமல் காலம் கழிப்பது என்ன நினைத்தோ?

யாதானும் - கற்றவனுக்கு எந்த ஒரு நாடும், நாடாம் - தன்னுடைய நாடாளும், ஊராம் - தன்னுடைய ஊராகும், (அப்படியிருக்க) சாந்துணையும் - இறப்பு வரும் வரையிலும், ஒருவன் கல்லாதவாறு – ஒருவன் கல்லாமல் காலம் கழிப்பது, என் - என்ன கருதி?

**8. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

ஒருவனுக்குத் தான் பிறப்பிலே கற்ற கல்வியானது எழுகின்ற பல பிறப்புகளிலும் பாதுகாப்பாக உதவுதலை உடையதாகும்.

ஒருவற்கு – ஒருவனுக்கு, தான் - தான், ஒருமைக்கண் - ஒரு பிறப்பிலே, கற்ற – கற்ற, கல்வி – கல்வியானது, எழுமையும் - பிறப்புக்களிலும், ஏமாப்பு – பாதுகாப்பாக, உடைத்து – உதவுதலை உடையதாகும்.

**9. தாம்இன் புறுவது உலஇன் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

தாங்கள் இன்பமடைவதற்குக்காரணமான கல்விக்கு உலகமானது இன்பமடைவதைக் கண்டறிந்து, கற்றறிந்தவர் மேலும் அக்கல்வியினையே பெரிதும் விரும்புவர்.

தாம் இன்புறுவது – தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்விக்கு, உலகு – உலகமானது, இன்புறக் கண்டு - இன்பமடைவதைக் கண்டறிந்து, கற்றறிந்தார் - கற்றறிந்த பெரியோர்கள், காமுறுவர் - பின்னும் அக்கல்வியினையே பெரிதும் விரும்புவார்கள்.

**10. கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடுஅல்ல மற்றை யவை.**

ஒருவனுக்கு அழியாத சீரிய செல்வமானது கல்வியேயாகும். அ.்.து அல்லாமல் மற்றைய செல்வங்கள் எல்லாம் பெருமையானவை அல்ல.

ஒருவற்கு –ஒருவனுக்கு, கேடு – அழிவு, இல் - இல்லாத, விழுச்செல்வம் - சீா்மை நிறைந்த செல்வமானது, கல்வி – கல்வியாகும், மற்றையவை -மற்றச் செல்வங்கள், மாடு – பெருமையுடையவை, அல்ல – அல்ல.

## 3. கல்லாமை

### (கல்வி இல்லாமையின் இழிவு)

**1. அரங்குஇன்றி வட்டாடி அற்றே நிரம்பிய**
**நூல்இன்றிக் கோட்டி கொளல்.**

தனக்கு அறிவு நிரம்புதற்குக் காரணமான நூல்களைக் கல்லாத ஒருவன், சபையில் ஒன்றினைச் சொல்லுதல், ஆடுகின்ற அரங்கினை அமைக்காமல் உண்டை (பகடைக்காய்) உருட்டியது போன்றதாகும்.

நிரம்பிய – தன் அறிவு நிரம்புவதற்குக் காரணமான, நூல் இன்றி - நூல்களைக் கற்றறியாமல், கோட்டி கொளல் - அவையில் ஒன்றினைச் சொல்லுதல், அரங்கு இன்றி - ஆடுகின்ற அரங்கில்லாமல், வட்டாடியற்றே – உண்டை (பகடைக்காய்) உருட்டியது போன்றதாகும்.

**2. கல்லாதான் சொல்கா முறுதல் முலைஇரண்டும்**
**இல்லாதாள் பெண்காமுற் றற்று.**

கல்வி இல்லாத ஒருவன் அவையில் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுதல் முலை இரண்டும் இல்லாத (முகிழ்த்தல் இல்லாத) பெண்ணான ஒருத்தி பெண்ணின்பத்தை விரும்பியது போலாகும்.

கல்லாதான்- - கல்வி இல்லாதவன்,சொல் காமுறுதல் -அவையில் (சபையில்) ஒன்றைச் சொல்ல ஆசைப்படுதல், முலை இரண்டும் -இரண்டு முலைகளும், இல்லாதாள் - இல்லாத ஒருத்தி, பெண் - பெண் தன்மையினை (இன்பத்தினை), காமுற்றற்று – ஆசைப்பட்டது போன்றதாகும்.

**3. கல்லா தவரும் நனிநல்லா் கற்றாா்முன்**
**சொல்லா திருக்கப் பெறின்.**

தாமே தம்மையுணா்ந்து கொண்டு கற்றாா் இருக்கும் அவையின்கண் ஒன்றனையும் சொல்லாதிருந்தால், கல்லாதவா்களும் மிகவும் நல்லவா்கள் ஆவாா்கள்.

கற்றார் முன் - கற்றறிந்வர்கள் இருக்கும் அவையில், சொல்லாது – யாதொன்றையும் சொல்லாமல், இருக்க -இருக்கும் தன்மையினை, பெறின் - பெற்றிருப்பார்களேயானால், கல்லாதவரும் - கல்வி இல்லாதவர்களும், நனி – மிகவும், நல்லர் - நல்லவர்களாவார்கள்.

**4. கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்**
**கொள்ளார் அறிவுடை யார்.**

கல்லாதவனுடைய அறிவுடைமை ஒரு நேரத்தில் மிக நன்றாக இருந்தாலும் அறிவுடையவர்கள் அதனை அறிவாகக் கொள்ளமாட்டார்கள்.

கல்லாதான் - கல்லாதவனுடைய, ஒட்பம் - அறிவுடைமையானது, கழிய – மிகவும், நன்றாயினும் - ஒரோ வழி நன்றாக இருந்தாலும் கூட, அறிவுடையார் - அறிவுள்ளவர்கள், கொள்ளார் - அதனை அறிவுடைமையாகக் கொள்ள மாட்டார்கள்.

**5. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**
**சொல்லாடச் சோர்வு படும்.**

நூல்களைக் கல்லாத ஒருவன், தான் கற்றவனென்று தன்னை மதித்துக் கொள்ளும் மதிப்பு, அவற்றைக் கற்றவன் கண்டு உரையாடக் கெட்டுவிடும்

கல்லா – கல்வியறிவில்லாத, ஒருவன் - ஒருவன், தகைமை – கற்றவனென்று தன்னை மதிக்கும் மதிப்பு, தலைப்பெய்து – கற்றவனைக் கண்டு, சொல்லாட – உரையாட, சோர்வு படும் - கெட்டு விடும்.

**6. உள்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களர்அனையர் கல்லா தவர்.**

கல்லாதவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்று சொல்லப்படும் அளவினர் ஆவதேயல்லாமல், தமக்கும் பிறர்க்கும் பயன் படாமையால் அவர்கள் விளையாத களர் நிலத்தினை ஒப்பாராவர்.

கல்லாதவர் - கல்லாதவர்கள், உளர் - இருக்கின்றார்கள், என்னும் - என்று சொல்லப்படும், மாத்திரையர் அல்லால் - அளவினர் ஆவதேயல்லாமல், பயவா – விளையாத, களர் - பயனில்லாத களர் நிலத்தினை, அனையர் - போன்றவர்கள் ஆவார்கள்.

**7. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை அற்று.**

நுண்ணியதாகப் பெருமையுடையதாகிப் பல நூல்களிலும், சென்ற அறிவு இல்லாதவனுடைய எழுச்சியும், அழகும் மண் சாந்தினால் செய்யப்பட்ட பாவையினுடைய எழுச்சியும் அழகும் போன்றதாகும்.

நுண் - நுட்பமாகிய, மாண் - மாட்சிமையுடையதாகி, நுழைபுலம் - நூல்களில் சென்ற அறிவினை, இல்லான் - இல்லாதவனுடைய, எழில்நலம் - எழுச்சியும் நல்ல அழகும், மண் - மண் சாந்தினாலே, மாண் -மாட்சிமையாக, புனை – அலங்காரம் செய்து புனையப்பட்ட, பாவை – பாவை அழகையும் எழுச்சியையும் கொண்டிருப்பதை, அற்று – போன்றதாகும்.

**8. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார்கண் பட்ட திரு.**

கல்லாதவர்களிடத்தில் உண்டாகிய செல்வமானது கற்றவரிடத்தில் உண்டாகிய வறுமையினை விடவும் துன்பம் செய்வதாகும்.

கல்லார்கண் - கல்லாதவரிடத்தில், பட்ட திரு - இருக்கின்ற செல்வம், நல்லார்கண் -நன்கு கற்றவரிடத்தில், பட்ட வறுமையின் - உண்டாகியுள்ள வறுமையினைக் காட்டிலும், இன்னாதே – துன்பம் தருவதாகும்.

**9. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
**கற்றார் அனைத்துஇலர் பாடு.**

கல்லாதவர்கள், மேலானவர்கள் பிறந்த குடும்பத்தில் பிறந்தவர்களாக இருந்தாலும், கீழானவர்கள் குடும்பத்தில் பிறந்து, கற்றவர்களாக இருப்பவரது பெருமையினைப் பெறாதவர்களாவார்கள்.

கல்லாதார் - கல்வியறிவில்லாதவர்கள், மேற் பிறந்தார் - மேலான குடும்பத்தில் பிறந்தவர்கள், ஆயினும் - ஆனாலும், கீழ்ப்பிறந்தும் - கீழான குடும்பத்தில் பிறந்திருந்தும், கற்றாரனைத்து – கற்றவரடையும் அளவு, பாடுஇலர் - சிறப்பு இல்லாதவராவார்கள்.

**10. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோடு ஏனை யவர்.**

விளக்கம் நிறைந்த நூல்களைக் கற்றவருடன் நோக்கக் கல்லாதவர்கள் மிருகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க மக்களாய்ப் பிறந்தவர்கள் எவ்வளவு நல்லவர்களோ அவ்வளவு தீமையுடையவர்களாவார்கள்.

இலங்கு – விளங்கிய, நூல் - நூலினை, கற்றாரோடு – கற்றவர்களோடு நோக்க, ஏனையவர் - கல்லாதவர்கள், விலங்கொடு – விலங்குகளோடு (ஒப்பிட்டுப் பார்க்க) மக்களனையர் - மக்கள் எவ்வளவு நன்மையுடையவர்களோ அவ்வளவு தீமையுடையவர்களாவார்கள்.

## 4. கேள்வி

## (கற்றறிந்தவர் சொல்வதைக் கேட்டல்)

**1. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை**

ஒருவருக்குச் சிறப்புடைய செல்வமானது செவியால் வரும் செல்வமாகும். அச்செல்வம் பிற செல்வங்கள் எல்லாவற்றையும் விடத்தலையாய செல்வமாகும்.

செல்வத்துள் - செல்வங்களுள் எல்லாம், செல்வம் - சிறப்பான செல்வமானது, செவிச்செல்வம் - செவியால் வரும் செல்வமாகும், அச் செல்வம் - அச் செல்வமானது, செல்வத்துள் - பிற செல்வங்கள், எல்லாம் - எல்லாவற்றினும், தலை – தலைமையானதாகும்.

**2. செவிக்குஉணவு இல்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்**

காதுக்கு உணவாகிய கேள்வி இல்லாதபோது வயிற்றுக்கும் சிறிதளவு உணவு இடப்படும்.

செவிக்கு – காதுக்கு, உணவு – உணவாகிய கேள்வி, இல்லாத - இல்லாத, போழ்து – நேரத்தில், வயிற்றுக்கும் - வயிற்றுக்கும், சிறிது ஈயப்படும் - சிறிதளவு உணவு இடப்படும்.

**3. செவியுணவிற் கேள்வி உடையார் அவியுணவின்**
**ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து.**

செவி உணவாகிய கேள்வியினையுடையவர்கள், பூமியில் வாழ்பவர்களாக இருந்தாலும் அவி உணவினையுடைய தேவர்களோடு ஒப்பாவார்கள்.

செவி – செவிக்கு, உணவின் - உணவாகிய, கேள்வி உடையார் - கேள்வினை உடையவர்கள், நிலத்து – பூமியில் இருந்தாலும், அவி –

வேள்வித்தீயில் இடப்படும், உணவின் - (அவியாகிய) உணவினையுடைய, ஆன்றாரோடு – தேவர்களோடு, ஒப்பர் – ஒப்பாவார்கள்.

**4. கற்றிலன் ஆயினும் கேட்க அ.்.துஒருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை.**

நூல்களை ஒருவன் தான் கற்கா விட்டாலும், கற்றறிந்தார் சொல்லக் கேட்க வேண்டும். அவ்வாறு கேட்பது, ஒருவனுக்குத் தளர்ச்சி வந்த காலத்தில் பற்றுக் கோடாகத் துணை செய்யும்.

கற்றிலன் - ஒருவன் தான் கல்லாதவனே, ஆயினும் - ஆனாலும், கேட்க – கற்றார் சொல்லக் கேட்டல் வேண்டும், அ.்.து – அக்கேள்வியறிவானது, ஒருவற்கு – ஒருவனுக்கு, ஒற்கத்தின் - மனத் தளர்ச்சி வந்த போது, ஊற்றாம் - பற்றுக் கோடான, துணை – துணையாகும்.

**5. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**
**ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.**

வழுக்குதலையுடைய சேற்று நிலத்தில் நடந்து போகின்றவர்களுக்கு ஊன்றுகோல் போல, துன்பம் வந்த காலத்தில் ஒழுக்கமுடையவர்களுடைய வாயிலிருந்து வரும் சொற்கள் துணையாக நின்று உதவும்.

ஒழுக்கம் - ஒழுக்கம், உடையார் - உடையவர்களின், வாய்ச்சொல் - வாயில் பிறக்கின்ற சொற்கள், இழுக்கல் - வழுக்குதல், உடையுழி – உண்டானபோது, (சேற்று நிலத்தில்) ஊன்றுக்கோல் - ஊன்றுகோல், அற்றே – போன்று உதவும்.

**6. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

ஒருவன் சிறிதளவாகவேனும் நற் பொருள்களைக் கேட்டாலும், அக் கேள்வியானது அந்த அளவுக்காவது நிறைந்த பெருமையினைத் தரும் என்பதாகும்.

ஏனைத்தானும் - எவ்வளவு சிறிதேயானாலும், நல்லவை கேட்க – நல்ல உறுதிப் பொருள்களைக் கேட்டறிதல் வேண்டும், (அவ்வாறு கேட்டறிவது) அனைத்தானும் - அந்த அளவினாலும், ஆன்ற – நிறைந்த, பெருமை – பெருமையினை, தரும் - தருவதாகும்.

**7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து**
**ஈண்டிய கேள்வி அவர்.**

நுட்பமாக ஆராய்ந்து அறிந்து நிறைந்த கேள்வியுடையவர்கள், தவறாக அறிந்த இடத்தும் தமக்குப் பேதைமையினை உண்டாக்கும் சொற்களைச் சொல்ல மாட்டார்கள்.

இழைத்துணர்ந்து – நுண்ணியதாக ஆராய்ந்தறிந்து, ஈண்டிய – நிறைந்த, கேள்வியவர் - கேள்வியினையுடையவர்கள், பிழைத்து – தவறாக, உணர்ந்தும் - உணர்ந்த போதும், பேதைமை – அறியாமையினைப் புயக்கும் சொற்களை, சொல்லார் - சொல்லமாட்டார்கள்.

**8. கேட்பினும் கேளாத் தகைவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி.**

கேள்வி ஞானத்தாலே துளைக்கப்படாத காதுகள் ஓசையினைக் கேட்பதாக இருந்தாலும் கேளாத – செவிடான தன்மையுடையனவேயாகும்.

கேள்வியால் - உறுதிப் பொருள்களைக் கேட்டு, தோட்கப்படாத – துளைக்கப்படாத, செவி – காதுகள், கேட்பினும் - ஓசையைக் கேட்பதாக இருந்தாலும், கேளா – கேட்காத, தகையவே - தன்மையானவையே ஆகும்.

**9. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய**
**வாயின ராதல் அரிது.**

நுட்பமான கேள்வி ஞானத்தை உடையவரல்லாதவர்கள் வணக்கத்தினைக் காட்டுகிற சொற்களையுடையவராதல் என்பது முடியாததாகும்.

நுணங்கிய – நுண்ணியதாகிய, கேள்வியர் - கேள்வியினையுடையவர், அல்லார் - அல்லாதவர்கள், வணங்கிய – பணிவான வணக்கத்தினையுடைய, வாயினர் - சொல்லினையுடையவர், ஆதல் - ஆகுதல், அரிது - கூடாததாகும்.

**10. செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்.**

செவிகளால் அறியப்படும் சுவைகளை அறியாமல், வாய் உணர்வினை மட்டும் உடைய மாந்தர் இறந்தாலும் வாழ்நதாலும் ஆகும் பயன் யாது?

செவியின் - செவியால் அறிந்துணரும், சுவை – சுவைகளை, உணரா – அறியாமல், வாயுணர்வின் - வாயின் சுவை உணர்ச்சிகளையுடைய, மாக்கள் -

மாந்தர், அவியினும் - இறந்தாலும், வாழினும் - வாழ்ந்தாலும், என் - என்ன பயனாகும்?

**5.அறிவுடைமை**

**(கல்வி கேள்விகளினால் அறிவுடையவனாக இருத்தல்)**

**1. அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளழிக்கல் ஆகா அரண்.**

அறிவு என்பது இறுதி வாராமல் காப்பாற்றுகின்ற கருவியாகும். பகைவர்களாலும் அழிக்க உள்ளிருப்பதாகிய காவலிடமென்னும் கோட்டையாகும்.

அறிவு – அறிவு என்பது, அற்றம் -இறுதிவராமல், காக்கும் கருவி – காப்பாற்றுகிற படையாகும், செறுவாக்கும் - பகைவர்களுக்கும், அழிக்கல் - அழிக்க, ஆகா – முடியாத, உள் அரண் - உள்ளிருப்பதாகிய காவலிடமும் ஆகும்.

**2. சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

மனத்தினை அது சென்ற வழியிலே போக விடாமல் தீமையிலிருந்து நீக்கி நல்லவையிடத்தே செலுத்துவது அறிவாகும்.

சென்ற – மனத்தினை அது சென்ற, இடத்தால் - எண்ணமாகிய வழியிலே, செலவிடா – போக விடாமல், தீது – தீமையிலிருந்து, ஒரீஇ -நீக்கி, நன்றின்பால் - நல்லவையிடத்து, உய்ப்பது அறிவு – செலுத்துவது அறிவாகும்.

**3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு**

எந்த ஒரு பொருளைப்பற்றியும் யார் யர் சொல்லக் கேட்டாலும் அப்பொருளினுடைய உண்மையான கருத்தின் பயனைக் காணும் வல்லமையுள்ளது அறிவாகும்.

எப்பொருள் - எந்தவொரு பொருளை, யார் யார் - எவரெவர், வாய்க் கேட்பினும் -சொல்லக் கேட்டாலும், அப்பொருள் - அப்பொருளினுடைய, மெய்ப் பொருள் - உண்மையான பயனை, காண்பது அறிவு – காணும் வல்லமையுள்ளது அறிவாகும்.

**4. எண்பொருள் ஆகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**

**நுண்பொருள் காண்பது அறிவு.**

தான் பிறர் அறிந்து கொள்வதற்கு எளிமையாக மனங் கொள்ளும்படியாகச் சொல்லி, பிறர் வாயில் கேட்கும் சொற்களில் நுணுக்கமான பொருள்களைக் கண்டறிய வல்லது அறிவாகும்.

தான் -தான், எண் - பிறர் அறிந்து கொள்ள எளிமை, பொருள் ஆக – விளங்கும் பொருளாக, செலச் சொல்லி - மனங்கொள்ளுமாறு சொல்லி, பிறர்வாய் - பிறர் வாயில் கேட்கும் சொற்களில், நுண் -நுணுக்கமான, பொருள் - பொருள்களை, காண்பது அறிவு – கண்டறியவல்லது அறிவாகும்.

**5. உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு.**

உயர்ந்தோர்களை நட்பாக்கிக் கொள்ளுவது ஒருவனுக்கு அறிவுடைமையாகும். உலகத்தினைத் தழுவி நடப்பதும் அதுவேயாகும். அந்நட்பின்கண் முன் மலர்தலும், பின் குவிதலும் இல்லாமல் ஒரே நிலையில் நிற்பது அறிவாகும்.

உலகம் - உலகத்தில் உயர்ந்தோரை, தழீஇயது – நட்பாக்கிக் கொள்ளுவது, ஒட்பம் - ஒருவனுக்கு அறிவுடைமையேயாகும். மலர்தலும் - முன் மலர்தலும், கூம்பலும் - பின் குவிதலும், இல்லது அறிவு - இல்லாதது அறிவாகும்.

**6. எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வது உறைவது அறிவு.**

உலகமானது எந்த முறையில் நடந்து வருகின்றதோ அவ்வுலகத்துடன் பொருந்தித்தானும் அந்த முறையில் நடந்து கொள்ளுவது அறிவுடைமையாகும்.

உலகம் - உலகமானது, எவ்வது – எந்த முறையினால், உறைவது - நடந்து வருகின்றதோ, உலகத்தோடு – அவ்வாறு உலகத்துடன் பொருந்தி, அவ்வது தானும் அந்த முறையினால், உறைவதும்,எஅறிவு – நடந்து கொள்ளுவது அறிவுடைமையாகும்.

**7. அறிவுடையார் ஆவது அறிவார் அறிவில்லார்**
**அஃதுஅறி கல்லா தவர்.**

அறிவுடையார் பின்னர் வர இருப்பதனை முன்பாகவே அறியவல்லவராவர், அறிவில்லாதவர்கள் அவ்வாறு பின்னர் வரஇருப்பதனை முன்னே அறிந்து கொள்ளமுடியாதவர்கள் ஆவார்கள்.

அறிவு – அறிவினை, உடையார் - உடையவர்கள், ஆவது – பின்னர் வர இருப்பதை, அறிவார் - முன்பாகவே அறிய வல்லவராவார்கள், அறிவு – அறிவு, இலார் - இல்லாதவர்கள், அ.்.து - அவ்வாறு பின்னர் வர இருப்பதனை, அறிவில்லாதவர் - முன்னே அறிந்து கொள்ள முடியாதவர்கள் ஆவார்கள்.

**8. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்.**

அஞ்ச வேண்டியதற்க்கு அஞ்சாதிருத்தல் அறியாமையாகும். அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுதல் அறிவுடையோர்களது தொழிலாகும்.

அஞ்சுவது – அஞ்சவேண்டியதற்கு, அஞ்சாமை – அஞ்சாதிருத்தல், பேதைமை – அறிவில்லாண்மையாகும், அஞ்சுவது – அஞ்சவேண்டியதற்கு, அஞ்சல் - அஞ்சுதல், அறிவார் - அறிவுடையோர்களது, தொழில் - செயலாகும்.

**9. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்.**

இனி வரக்கூடியதனை முன்னமேயே அறிந்து காத்துக் கொள்ளும் அறிவுடையோர்க்கு நடுங்கும்படியாக வருவதொரு துன்பம் இல்லை.

எதிரதா – பின் வருவதனை முன்னறிந்து, காக்கும் - காத்துக் கொள்ளும், அறிவினார்க்கு – அறிவுடையோர்க்கு, அதிர – நடுங்கும்படியாக, வருவதோர் - வருவதொரு, நோய் இல்லை – துன்பம் இல்லை.

**10. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**
**என்னுடைய ரேனும் இலர்.**

அறிவுடையவர்கள், வேறு பொருள்கள் எதுவும் இல்லாதிருந்தாலும், எல்லாம் உடையவர்களேயாவார்கள், அறிவில்லாதவர்கள் எல்லாப் பொருள்களும் உடையவர்களாகவே இருந்தாலும் ஒன்றும் இல்லாதவர்களே யாவார்கள்.

அறிவுடையார் - அறிவுடையவர்கள், எல்லாம் - வேறெதுவும் இல்லாதிருந்தாலும், உடையார் - எல்லாம் உடையவரேயாவர்கள், அறிவிலார் - அறிவில்லாதவர்கள், என் - எல்லாம், உடையரேனும் - உடையவராக இருந்தாலும், இலர் - ஒன்றும் இல்லாதவரே ஆவார்கள்.

## 6.குற்றங்கடிதல்

**(குற்றங்கள் யாவை என்பதும் வாராமல் காத்தலும்)**

**1. செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்**
**பெருக்கம் பெருமித நீர்த்து.**

செருக்கும் (மதமும்), கோபமும், காமமும் ஆகிய குற்றங்கள் இல்லாதவருடைய செல்வம் மேம்பாடான தன்மையினை உடையதாகும்.

செருக்கும் - மதம் என்பதும் சினமும் - கோபமும், சிறுமை – காமமும்(ஆகிய குற்றங்கள்), இல்லார் - இல்லாதவருடைய, பெருக்கம் - செல்வமானது, பெருமித – மேம்பாடான, நீர்த்து – தன்மையினையுடையதாகும்.

**2. இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா**
**உவகையும் ஏதம் இறைக்கு.**

கொடுக்க வேண்டியவற்றிற்குப் பொருள் கொடாதிருத்தலும், நன்மையில் நீங்கிய மானமும், அளவு கடந்த உவகையும் அரசனுக்குக் குற்றங்களாகும்.

இவறலும் - கொடுக்க வேண்டியதற்குப் பொருள் கொடாதிருத்தலும், மாண்பு – நன்மையின், இறந்த – நீங்கிய, மானமும் - மானமும், மாணா – அளவு கடந்த, உவகையும் - களிப்பும், இறைக்கு – மன்னனுக்கு, ஏதம் - குற்றங்கள் எனப்படும்.

**3. தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பழிநாணு வார்.**

பழிக்கு நாணமுற்று அஞ்சுபவர்கள் தினையளவு சிறிதான குற்றமானது தம்மிடத்தில் உண்டானாலும் அதனைப் பனையளவு பெரிதாகக் கருதுவார்கள்.

பழி – பழிக்கு, நாணுவார் - நாணமுற்று அஞ்சுபவர்கள், தினைத்துணையாம் - தினையளவு சிறிதான, குற்றம் - குற்றமானது, வரினும் - தம்மிடத்தில் உண்டானாலும், (அதனை) பனைத்துணையா – பனையினளவு பெரிதாக, கொள்வர் - கருதுவார்கள்.

**4. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே**
**அற்றம் தருஉம் பகை.**

முடிவினைத் தருவதாகிய பகை குற்றமேயாகும், ஆதலால் அக்குற்றம் தனக்கு வாராதிருப்பதனையே பயனாகக் கொண்டு காத்தல் வேண்டும்.

அற்றம் - முடிவினை, தருஉம் - தருவதான பகை, குற்றமே – குற்றமேயாகும், (ஆதலால்) குற்றமே – அக்குற்றமானது வாராமல், பொருளாக – கருத்தாகக் கொண்டு, காக்க – தன்னைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும்.

**5. வருமுன்னார்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்.**

குற்றம் வருவதற்கு முன்பாகவே தன்னைக் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை அக்குற்றம் வந்தால், நெருப்பின் முன்னே இருக்கும் வைக்கோலினைப் போல அழிந்து விடும்.

வருமுன்னர் - குற்றமானது வருவதற்கு முன்னதாகவே, காவாதான் - தன்னைக் காத்துக் கொள்ளாதவனுடைய, வாழ்க்கை – வாழ்க்கையானது, எரி – நெருப்பின், முன்னர் - முன்னே இருக்கும், வைத்தூறு – வைக்கோல் குவியலை, போல – போன்று, கெடும் - கெட்டுவிடும்.

**6. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்**
**என்குற்றம் ஆகும் இறைக்கு.**

தன்னுடைய குற்றத்தினை முன்னதாகவே கண்டு கொண்டு அதனை நீக்கிப் பின்னர், பிறர் குற்றத்தினைக் காணவல்லவராக இருந்தால் தலைவனுக்கு நேரக்கூடிய குற்றம் யாது?

தன் - தன்னுடைய குற்றம் - குற்றத்தினை, நீக்கி – முன்னே நீக்கிவிட்டு, பிறர் - மற்றவருடைய, குற்றம் - குற்றத்தினைப், பின் காண்கின் - பின்னே காண வல்லவனானால், இறைக்கு – தலைவனுக்கு, ஆகும் - உண்டாகக்கூடிய , குற்றம் என் - குற்றம் யாதாக இருக்கு முடியும்?

**7. செயற்பால செய்யாது இவறியான் செல்வம்**
**உயற்பால தன்றிக் கெடும்.**

செல்வத்தினால் தனக்குச் செய்து கொள்ள வேண்டியவைகளைச் செய்து கொள்ளாமல் உலோபியாக அதனிடம் மிகுந்த பற்று வைத்திருப்பவனுடைய செல்வம், பின்னர் இல்லாததாகிக் கெட்டுவிடும்.

செயற்பால – பொருளால் தனக்குச் செய்யப்பட வேண்டியவைகளை, செய்யாது – செய்து கொள்ளாமல், இவறியான் - உலோபம் செய்தவனுடைய, செல்வம் - செல்வம், உயல் - பின்பு இருப்பதாகிய, பாலது – தன்மை, அன்றி - இல்லாமல், கெடும் - பயனின்றிக் கெட்டுவிடும்.

**8. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்**
**எண்ணப் படுவதொன்று அன்று.**

செய்யவேண்டிய ஈகைச் செயல்களைச் செய்யாமல் கருமித் தன்மையால் பற்றுதலை வைத்திருக்கும் அத்தன்மை, குற்றமான தன்மைகளுள் ஒன்றாக வைத்து எண்ணப்படும். தொன்று அன்று: அது மிகுந்த குற்றமாகும்.

பற்றுப் - பொருளினை விடாமல் பற்றிக் கொண்டிருக்கும், உள்ளம் - மனப்பான்மை, என்னும் - என்கின்ற, இவறன்மை – உலோபத் தன்மையானது, எற்றுள்ளும் - எல்லாக் குற்றத் தன்மைகளுள்ளும், எண்ணப்படுவது – வைத்து எண்ணப்படுவது, ஒன்று – ஒன்று, அன்று – அல்ல என்பதாகும். (எல்லாவற்றினும் மிகுதியான குற்றமாகும்.)

**9. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க**
**நன்றி பயவா வினை.**

செருக்கினால் எப்போதும் தன்னைத் தானே மதித்துக் கொள்ளாதிருப்பாயாக: தனக்கு நன்மையினை உண்டாக்காத தொழில்களை மனத்தால் விரும்பாதிருப்பாயாக.

எஞ்ஞான்றும் - தான் மிக உயர்ந்திருக்கும் காலத்திலும், தன்னை – தன்னை, வியவற்க – செருக்கினால் மதியாதிருப்பானாக: நன்றி பயவா – நன்மையினை உண்டாக்காத, வினை – செயல்களை, நயவற்க – மனதில் விரும்பாதிருப்பானாக.

**10. காதல் காதல் அறியாமை உய்க்கிற்பின்**
**ஏதில ஏதிலார் நூல்.**

தான் விரும்பிய (காதலித்த) பொருள்கள் எவையென்று தமது விருப்பத்தினைப் பகைவர் அறிந்து கொள்ளாதபடி அனுபவிக்க வல்லவனானால், அப்பகைவர் தன்னை வஞ்சிக்க எண்ணும் எண்ணம் பழுதாகிவிடும்.

காதல் - தான் காதலிக்கின்ற பொருள்களை, காதல் அறியாமை – அவ்விருப்பத்தினைப் பகைவர் அறிந்து கொள்ளாமல், உய்க்கிற்பின் -நுகர்வதற்கு வல்லவனாகிய பிறகு, ஏதிலார் - பகைவர், நூல் - தன்னை வஞ்சிக்க எண்ணும் எண்ணம், ஏதில - பழுதாகிவிடும்.

**11. பெரியாரைத் துணைக்கோடல்**

**(எல்லா வகைகளிலும் பெரியோர்களைத் துணையாகக் கொள்ளுதல்)**

**1. அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல்.**

அறத்தினது சிறப்பினையறிந்து தன்னைவிட மூத்த அறிவுடைய பெரியார்களது நட்பின் அருமையினையறிந்து தனக்குத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

அறன் - அறத்தினது சிறப்பினை, அறிந்து – அறிந்த, மூத்த அறிவுடையார் - தன்னைவிட மூத்த அறிவுடையவர்களுடைய, கேண்மை – நட்பினை, தேர்ந்து – அதனது சிறப்பினைத் தெரிந்து, திறன் - கொள்ளும் திறத்தினை, அறிந்து – அறிந்து, கொளல் - துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

**2. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.**

தனக்கு வரும் துன்பங்களை நீக்கும் வழியறிந்து நீக்கி, பிறகு அவ்வாறான துன்பங்கள் தனக்கு வாராதபடி முன் அறிந்து காக்க வல்ல தன்மையுடையவர்களை அவர்கள் மகிழ்வதைச் செய்து துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

உற்ற நோய் - தனக்கு வந்த துன்பங்களை, நீக்கி – நீக்கும் வழியறிந்து நீக்கி, உறாஅமை – பிறகு அத்துன்பங்கள் வாராதபடி, முற்காக்கும் - முன்னதாகவே காக்க வல்ல, பெற்றியார் - ஆற்றல் மிக்க தன்மையுடையவர்களை, பேணிக் கொளல் - அவர் மகிழ்வன செய்து துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

**3. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.**

ஆற்றல் மிகுந்த பெரியார்களை அவர் மகிழ்வன செய்து தமக்குச் சிறந்த துணையாகக் கொள்ளுதல், அரிய செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் அரிதானதாகும்.

பெரியாரை – ஆற்றல் மிகுந்த பெரியவர்களை, பேணி – அவர் மகிழ்வனவற்றைச் செய்து, தமராக் கொளல் - தமக்கு உற்றவராகக்

கொள்ளுதல், அரியவற்றுள் - அருமையான பேறுகள், எல்லாம் - எல்லாவற்றுள்ளும், அரிதே – அரியதாகும்.

**4. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையுள் எல்லாம் தலை.**

அறிவு முதலியவற்றினால் தம்மைவிட மிகுந்தவர்களைத் தமக்குச் சிறந்தவராகக் கொண்டு நடந்து கொள்ளுதல் எல்லா வலிமைகளைக் காட்டிலும் தலைமையானதாகும்.

தம்மின் - அறிவு முதலியவற்றால் தம்மைவிட, பெரியார் - பெரியவர்களை, தமரா – தமக்கு உற்றவராகக் கொண்டு, ஒழுகுதல் - அவர் வழி நின்று நடந்து கொள்ளுதல், வன்மையுள் - வலிமைகள், எல்லாம் - எல்லாவற்றையும்விட, தலை – முதன்மையானதாகும்.

**5. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**
**சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.**

அரசனது பாரம் தன்னைச் சூழ்ந்துள்ள பெரியார்களைக் கண்ணாகக் கொண்டு நடத்தலால், அவன் அவ்வாறு சூழ்ந்துள்ளவர்களை ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்.

சூழ்வார் - சூழ்ந்துள்ள பெரியார்களை, கண்ணாக – கண்களாக் கொண்டு, ஒழுகலால் - தன் ஆட்சியினை நடத்துவதால், மன்னவன் - சூழ்வாரை – அப்படிப்பட்ட பெரியார்களை, சூழ்ந்து கொளல் - ஆராய்ந்து தனக்குத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

**6. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்**
**செற்றார் செயக்கிடந்தது இல்.**

தகுதியான பெரியவர்களின் துணையினை உடையவனாகித் தானும் அறிந்து நடந்து கொள்ள வல்லவர்க்குப் பகைவர் செய்யக் கூடியதொரு துன்பம் இல்லையாகும்.

தக்கார் - பெரியவர்களின், இனத்தனாய் - நட்புத் துணையினை உடையவனாகி, தான் -தானும், ஒழுக – அறிந்து நடந்து கொள்ள, வல்லனை – வல்லவனை, செற்றார் - பகைவர், செயக் கிடந்தது - அவனுக்குச் செய்யகூடியதொரு துன்பம், இல் - இல்லை.

**7. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே**

**கெடுக்கும் தகைமை யவர்.**

தீயன கண்டால் நெருங்கிச் சொல்லும் தன்மையுடைய பெரியார்களை, ‘இவர்கள் தமக்குச் சிறந்தார்’ என்று கொள்ளுபவர்களைக் கெடுக்கும் பெருமையுடைய பகைவர் யாவர் உளர்?

இடிக்கும் - தீயன கண்டால் இடிந்து நெருங்கிப் புத்தி சொல்லும், துணையாரை – துணையாய் நின்ற பெரியார்களை, ஆள்வாரை - இவர் நமக்குச் சிறந்தவர் என்று கொள்ளுகின்ற அரசரை, கொடுக்கும் - கொடுக்கின்ற, தகைமையவர் - தன்மையுடைய பகைவர், யார் - யார் - யாரே உளர்?

**8. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானும் கெடும்.**

நெருங்கிப் புத்தி சொல்லும் பெரியார்களைத் துணையாகக் கொள்ளாத காவலற்ற அரசன், பகையாய்க் கெடுப்பவர்கள் இல்லாவிட்டாலும் தானே கெடுவான்.

இடிப்பாரை இல்லாத –தக்க நேரத்தில் இடித்துப் புத்தி சொல்லுபவர்களைத் தனக்குத் துணையாகக் கொள்ளாத, ஏமரா – பாதுகாவலற்ற, மன்னன் - மன்னவன், கெடுப்பார் - பகையாய்க் கெடுப்பவர், இலானும் - இல்லாவிட்டாலும், கெடும் - தானே கெட்டுவிடுவான்.

**9. முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்**
**சார்புஇலார்க்கு இல்லை நிலை.**

முதற் பொருள் இல்லாத வணிகர்களுக்கு அதனால் வரும் ஊதியம் இல்லையாகும். அதுபோலத் தம்மைத் தாங்குவதாம் துணை இல்லாதவர்களுக்கு அதனால் வரும் உறுதியான நிலை இல்லையாகும்.

முதல் - முதற்பொருள், இலார்க்கு - இல்லாத வணிகர்க்கு, ஊதியம் - அதனால் வரும் இலாபம், இல் - இல்லையாகும். ( அது போல) மதலையாம் - தம்மைத் தாங்குவதாகிய, சார்பு – துணை, இலார்க்கு - இல்லாதவர்களுக்கு, நிலை இல்லை – உறுதியாக நிலைத்தல் என்பது இல்லை.

**10. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர்கை விடல்.**

பெரியார்களது நட்பினைக் கொள்ளாமல் விட்டுவிடுதல் என்பது, பலரோடும் பகைமையினைக் கெள்ளுவதைவிடப் பத்து மடங்கு தீமையுடையதாகும்.

பல்லார் - பலருடன், பகை – பகைமை, கொளலின் - கொள்ளுவதைவிட, பத்தடுத்த – பத்துப்பங்கு, தீமைத்தே – தீமையுடையதாகும், (எதுவென்றால்) நல்லார் - நல்ல பெரியார்களோடு, தொடர்நட்பினைக் கொள்ளாது, கைவிடல் - விட்டுவிடுதலாகும்.

## 8.சிற்றினம் சேராமை

## (தீமையான இழிந்த குணமும் செயலும் உள்ளவர்களோடு தொடர்பு கொள்ளாதிருத்தல்)

**1. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்**
**சுற்றமாச் சூழ்ந்து விடும்.**

பெரியோர் இயல்பு கீழான இனத்தைக் கண்டால் அஞ்ச நிற்பதாகும். சிறியோர் இயல்பு அந்த இனத்தைத் தனக்குச் சுற்றமாக எண்ணும்.

பெருமை – பெரியோர் தன்மை, சிற்றினம் அஞ்சும் - கீழான இயல்புடைய சிறிய இனத்தைக் கண்டு அஞ்சி நிற்பதாகும். சிறுமைதான் - சிறியோர் தன்மை, சுற்றமா – அந்த இனத்தை உறவைப் போல, சூழ்ந்து விடும் - எண்ணும்.

**2. நிலத்து இயல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்பு அதுஆகும் அறிவு.**

நீரானது, தான் சேர்ந்த நிலத்தினாலே மாறுபட்டு அந்த நிலத்தின் தன்மையதாகிவிடும். அதுபோல, மனிதர்க்கு அறிவானது தாம் சேர்ந்த இனத்தினாலே வேறுபட்டு அந்த இனத்தின் தன்மையதாகிவிடும்.

நிலத்து – சேர்ந்த நிலத்தினுடைய, இயல்பான் - தன்மையினாலே, நீர் திரிந்து – நீரானது தனது தன்மை வேறுபட்டு, அற்றாகும் - அந்த நிலத்தின் தன்மையதாகிவிடும்,(அது போல ) மாந்தர்க்கு – மாந்தர்க்கு, அறிவு – அறிவும், இயல்பு – தாம் சேர்ந்த சேர்க்கையான இனத்தினது தன்மையினாலே, அது ஆகும் - தன் தன்மை திரிந்து அந்த இனத்தின் தன்மைத்தாகி விடும்.

**3. மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான்ஆம்**
**இன்னான் எனப்படும் சொல்.**

மாந்தர்க்கு பொது உணர்வு தன் மனம் காரணமாக உண்டாகும். இவன் இத்தன்மையன் என்று உலகத்தாரால் சொல்லப்படும் சொல், இனம் காரணமாக உண்டாகிவிடும்.

மாந்தர்க்கு – மக்களுக்கு, உணர்ச்சி – பொது உணர்ச்சியானது, மனத்தான் ஆம் - தன் மனத்தின் காரணமாக உண்டவதாகும், இன்னான் - இவன் இப்படிப்பட்டவன், எனப்படும் சொல் - என்று கூறப்படும் சொல்லானது, இனத்தான் - அவன் சேர்ந்த இனத்தினாலே, ஆம் - உண்டாவதாகும்.

**4. மனத்துஉளது போலக் காட்டி ஒருவற்கு**
**இனத்துஉளது ஆகும் அறிவு.**

ஒருவனுடைய சிறப்பான உணர்வானது தனது மனத்தில் உள்ளது போலப் புலப்படுத்தி உண்மையில் அவன் சேர்ந்த இனத்தினாலே அமைவதாகும்.

அறிவு – சிறப்பான அறிவானது, ஒருவற்கு – ஒருவனுக்கு, மனத்து உளதுபோல – மனத்தினாலே உண்டாவது போல, காட்டி – தன்னைப் புலப்படுத்தி, (உண்மையில்) இனத்து – அவன் சேர்ந்த இனத்தினாலே, உளது – உள்ளது, ஆகும் - ஆகும்.

**5. மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்**
**இனம்தூய்மை தூவா வரும்.**

மனம் தூய்மையுடையவனாகும் தன்மையும், செய்யும் தொழில் தூய்மையுடையதாகும் தன்மையும் ஆகிய இரண்டும் அவன் சேர்ந்த இனம் தூய்மையாயுள்ள தன்மையினைப் பற்றுக் கொண்டு வருவனவாகும்.

மனம் - மனமானது தூய்மையதாகும் தன்மையும், செய்வினை தூய்மை – செய்தொழிலில் தூய்மையதாகும் தன்மையும், இரண்டும் - ஆகிய இரண்டும், இனம் தூய்மை – சேர்ந்த இனமானது தூய்மையதாகும் தன்மையினை, தூவா – பற்றுக் கோடாகக் கொண்டு, வரும் - வருவதாகும்

**6. மனம்தூயார்க்கு எச்சம்நன்று ஆகும் இனம்தூயார்க்கு**
**இல்லை நன்றுஆகா வினை.**

மனம் துய்மையானவர்களுக்கு எஞ்சி நிற்பதாகிய எச்சம் சிறப்பானதாக அமையும். இனம் தூய்மையானவர்களுக்கு நன்றாகாத செயல்எதுவுமே இல்லை.

மனம் - தூயார்க்கு - மனமானது தூய்மையானவர்களுக்கு, எச்சம் - வாழ்க்கையில் எஞ்சி நிற்பது, நன்றாகும் - நல்ல புகழாக இருக்கும், இனம் - சேர்ந்த இனம், தூயார்க்கு – தூய்மையானவர்களுக்கு, நன்று ஆகா – நன்மையாகாத, வினை – செயல், இல்லை - இல்லை.

**7. மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்.**

நிலைபெற்ற மக்களுயிர்க்கு மனம் நன்றாக இருப்பது செல்லத்தினைத் தரும் இனமானது நன்றாக இருப்பது எல்லாப் புகழினையும் கொடுக்கும்.

மன் - நிலைபெற்ற, உயிர்க்கு – உயிர்களுக்கு, மனம் - மனம், நலம் - நன்றாக இருப்பது, ஆக்கம் - செல்லத்தினைக் கொடுக்கும், இனநலம் - சேர்ந்த இனமானது நன்றாக இருப்பது, எல்லா – எல்லா வகையான, புகழ் - புகழினையும், தரும் - தருவதாகும்.

**8. மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு**
**இனநலம் ஏமாப்பு உடைத்து.**

மனம் நன்றாக இருப்பதனை நல்லபடியாகத் தாமே தம் பிறவியிலேயே உடையவராக இருந்தாலும், நிறைகுணம் பெற்ற பெரியோர்களுக்கு சேர்ந்த இனம் நன்றாக இருப்பது, காப்பான வலிமை உடையதாகும்.

மனநலம் - மனம் நன்றாக இருப்பதை, நன்கு உடையராயினும் - நல்லபடியாகத் தாமே உடையவராக இருந்தாலும், சான்றோர்க்கு – நிறைகுணம் பெற்ற பெரியார்களுக்கு, இன – சேர்ந்த இனம், நலம் -நன்றாக இருப்பது, ஏமாப்பு – பாதுகாப்பான வலிமையானவை, உடைத்து – உடையதாகும்.

**9. மனநலத்தின் ஆகும் மறுமைமற்று அஃதும்**
**இனநலத்தின் ஏமாப்பு உடைத்து.**

ஒருவனுக்கு மனம் நன்றாக இருந்தால் மறுமை இன்பம் உண்டாகும். அதற்கு அந்தச் சிறப்புத்தானும் இனம் நன்றாக இருந்தால் பாதுகாப்பான வலிமையினை உடையதாகும்.

மனநலத்தின் - ஒருவனுக்கு மனம் நன்றாக இருந்தால், மறுமை ஆகும் - மறுமை இன்பம் உண்டாகும், மற்று அஃதும் - அதற்கு அந்தச் சிறப்பும், இன நலத்தின் - இனம் நன்றாக இருப்பதால், ஏமாப்பு உடைத்து – பாதுகாப்பான வலிமையினை உடையதாகும்.

**10. நல்லினத்தின் ஊங்கும் துணைஇல்லை தீயினத்தின்**
**அல்லல் படுப்பதூஉம் இல்.**

ஒருவனுக்கு நல்ல இனத்தினைவிட மேற்பட்ட துணையும் இல்லை. தீய இனத்தினைவிட மிக்க பகையும் இல்லை.

நல் - நல்ல, இனத்தின் - இனத்தினைவிட, ஊங்கும் - மேற்பட்ட, துணை – துணை, இல்லை - இல்லையாகும், தீயினத்தின் - தீய இனத்தினைவிட, அல்லற்படுப்பதூஉம் - துன்பம் கொடுப்பதும், இல் - இல்லை.

## 9.தெரிந்து செயல்வகை

**(தலைவனானவன் தானே செய்ய வேண்டியவைகளை நன்கு ஆராய்ந்து செய்வதாகும்)**

**1. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்**
**ஊதியமும் சூழ்ந்து செயல்.**

தொழில் செய்யும்போது, அப்போது அதனால் ஆகும் அழிவினையும், பிறகு ஆவதனையும், ஆனபிறகு தரும் ஊதியத்தினையும் சீர்தூக்கிப் பார்த்துச் செய்தல் வேண்டும்.

அழிவதூஉம் - தொழில் செய்யுங்கால் உண்டாகும் அழிவினையும், ஆவதூஉம் - பின்னே பயனாக ஆவதையும் ஆகிய, ஆராய்ந்து - அறிந்து, வழிபயக்கும் - பின்பு வருகின்ற, ஊதியமும் - ஊதியத்தினையும், சூழ்ந்து செயல் - ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

**2. தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு**
**அரும்பொருள் யாதொன்றும் இல்.**

நாம்தெரிந்து கொண்ட இனத்துடனே செய்யத்தகும் தொழிலினை ஆராய்ந்து எண்ணிச் செய்து முடிக்க வல்லவர்களுக்கு அடைவதற்கு அரிய பொருள் யாதொன்றும் இல்லை.

தெரிந்த – ஆராய்ந்து தெரிந்து கொண்டிருக்கும், இனத்தொடு – சேர்ந்திருக்கும் இனத்தாருடனே, தேர்ந்து எண்ணி – ஆராய்ந்து பழுதற எண்ணி, செய்வார்க்கு – செய்து முடிக்க வல்லவர்களுக்கு, அரும் - பெறுதற்கு அருமையான, பொருள் - பொருள் என்று யாதென்றும் - யாதொரு பொருளும், இல் - இல்லை.

**3. ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை**

**ஊக்கார் அறிவுடை யார்.**

பின்பு வரக் கூடிய ஊதியத்தினைக் கருதி முன்பு பெற்றுள்ள முதலினையும் இழப்பதற்குக் காரணமான தொழிலினை அறிவுடையோர் மேற்கொள்ள மாட்டார்கள்.

அறிவுடையார் - அறிவு நிறைந்தவர்கள், ஆக்கம் - பிறகு வரக்கூடிய ஊதியத்தினை, கருதி – எண்ணி, முதல் இழக்கும் - முதலாக வைத்துள்ளதை இழப்பதற்குக் காரணமான, செய்வினை – தொழிலினை, ஊக்கார் - செய்ய நினைக்க மாட்டார்கள்.

**4. தெளிவுஇ லதனைத் தொடங்கார் இளிவுஎன்னும்**
**ஏதப்பாடு அஞ்சு பவர்.**

தமக்கு இழிவு எனப்படும் குற்றம் உண்டாவதற்கு அஞ்சுபவர்கள், இனத்துடனும் தனித்தும் ஆராய்ந்து துணியப்படாத தொழிலைத் தொடங்கமாட்டார்கள்.

இளிவு – தமக்கு இழிவு, என்னும் - என்கின்ற, ஏதப்பாடு – குற்றம் உண்டாவதற்கு, அஞ்சுபவர் - அஞ்சுபவர்கள், தெளிவுஇலதனை – ஆய்ந்து முடிவு செய்யப்படாத தொழிலினை, தொடங்கார் - செய்வதற்குத் தொடங்க மாட்டார்கள்.

**5. வகைஅறச் சூழாது எழுதல் பகைவரைப்**
**பாத்திப் படுப்பதோர் ஆறு.**

வினைமேல் சென்றால் நிகழும் திறங்களை யெல்லாம் முழுவதும் எண்ணாமல் சிலவற்றை எண்ணியவுடனே தொழில்மேல் செல்லுதல், பகைவரை வளரும் நிலத்திலே நிலை பெறச் செய்யுமொரு வழியாகும்.

வகை – வழிமுறைகளை யெல்லாம், அற – முழுவதும், சூழாது – எண்ணிப் பாராமல், எழுதல் - வினைமேற் செல்லுதல் (பகைமேற் செல்லுதல்), பகைவரை – அப்பகைவர்களை, பாத்தி – தானாக வளர்கின்ற நிலத்திலே, படுப்பது – நிலைத்து நிற்கச் செய்கின்ற, ஓர் - ஒரு, ஆறு – வழியாகும்.

**6. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்.**

தான் செய்யக் கூடாத செயல்களைச் செய்வதால் ஒருவன் கெட்டுவிடுவான்; செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாதிருப்பதாலும் கெட்டுவிடுவான்.

செய்தக்க அல்ல – செய்யக் கூடாத செயல்களை, செயக்கெடும் - செய்வதால் கெட்டுவிடுவான், செய் - செய்ய, தக்க – தகுந்த செயல்களை, செய்யாமையானும் - செய்யாதிருப்பதாலும், கெடும் - கெட்டுவிடுவான்.

**7. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.**

தொழிலினை, முடிக்கும் திறத்தினை நன்கு எண்ணிப் பார்த்துத் தொடங்குதல் வேண்டும். தொழிலினைத் தொடங்கிய பிறகு முடிக்கும் திறத்தினை எண்ணுவோம் என்பது குற்றமேயாகும்.

கருமம் - தொழிலினை, எண்ணி - முடிக்கும் திறத்தினை நன்கு எண்ணிப் பார்த்து, துணிக – தொடங்குதல் வேண்டும், துணிந்தபின் - தொழிலினைத் தொடங்கிய பிறகு, எண்ணுவம் - முடிக்கும் திறத்திணை எண்ணுவோம், என்பது இழுக்கு – என்று சிந்திப்பது குற்றமேயாகும்.

**8. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும்.**

செய்து முடிக்க வேண்டிய வழியினால் தொழிலினை முயலாத முயற்சி, துணையாகப் பலர் இருந்து குற்றம் வராமல் காப்பாற்றினாலும் குற்றம் உடையதாகவே முடியும்.

ஆற்றின் - செய்து முடிக்க வேண்டிய வழியினால், வருந்தாவருத்தம் - தொழிலினை முயலாத முயற்சி, பலர் - துணையாகப் பலர், நின்று - இருந்து, போற்றினும் - குற்றம் வாராமல் காப்பாற்றினாலும், பொத்தப்படும் - குற்றமுடையதாகவே முடியும்.

**9. நன்றுஆற்றல் உள்ளும் தவறுஉண்டு அவரவர்**
**பண்புஅறிந்து ஆற்றாக் கடை.**

அவரவர் குணங்களை ஆராய்ந்து அவற்றிற்கேற்ப செய்யாமற் போனால், பிறர்க்கு நல்லவைகளையே செய்தாலும் குற்றம் உண்டாகிவிடும்.

அவரவர் - அவரவர்களுடைய, பண்பு அறிந்து - குணங்கள் இத்தன்மையதென்று ஆராய்ந்து அறிந்து, ஆற்றாக்கடை — செய்யாமற் போனால், நன்று - நல்லனவற்றை, ஆற்றலுள்ளும் - செய்வதனாலும், தவறு உண்டு — குற்றம் என்பது உண்டாகும்.

**10. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு**
**கோள்ளாத கொள்ளாது உலகு.**

தொழிலினை முடிப்பதற்காக வேண்டித் தம் நிலைமைக்குப் பொருந்தாத வழிமுறைகளைச் செய்வாராயின், உலகம் தம்மை இகழும். ஆதலால் இகழப்படாத வழிமுறைகளை நாடிச் செய்தல் வேண்டும்.

தம்மொடு — தமது நிலைமைக்கு, கொள்ளாத — பொருத்தமில்லாத வழிமுறைகளைச் செய்தால், உலகு கொள்ளாது - உலகமானது ஏற்றுக் கொள்ளாது, (ஆதலால்) எள்ளாத — உலகத்தால் இகழ்ந்து கூறப்படாத வழிகளை, எண்ணிச் செயல் - எண்ணி அறிந்து செய்தல் வேண்டும்.

## 10.வலி அறிதல்

**(எல்லா வகையான வலிமையினையும் அறிதல்)**

**1. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்.**

தான் செய்யக் கருதிய தொழிலின் வலிமையினையும், அதனைச் செய்து முடிக்கின்ற தனது வலிமையினையும், பகைவனது வலிமையினையும், இருவர்க்கும் துணையாயினார் வலிமையினையும் ஆராய்ந்து செய்தல் வேண்டும்.

வினைவலியும் - செய்யும் தொழிலினது வலிமையினையும், தன்வலியும் - தன்னுடைய வலிமையினையும், மாற்றான் - பகைவனது, வலியும் - வலிமையினையும், துணைவலியும் - இருவர்க்கும் துணை நிற்பவர் வலிமையினையும், தூக்கிச் செயல் - ஆராய்ந்தறிந்து செய்தல் வேண்டும்.

**2. ஒல்வது அறிவது அறிந்துஅதன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்.**

தம்மால் முடியும் செயலையும், அதற்கு அரிய வேண்டிய வலிமையினையும், அறிந்து அதனை எப்போதும் அதனையே நினைவாகக் கொண்டு பகை மேல் செல்லும் அரசர்க்கு முடியாத பொருள் இல்லை.

ஒல்வது – செய்யக்கூடும் தொழிலையும், அறிவது அறிந்து – அதற்கு அறியக்கூடிய வலிமையினையும் அறிந்துணர்ந்து அதன்கண் - அவ்வினையில், தங்கி – எண்ணத்தினை அதனிடம் எப்போதும் வைத்து, செல்வார்க்கு – பகைமேல் செல்பவர்களுக்கு, செல்லாதது இல் - முடியாதது எதுவும் இல்லையாகும்.

**3. உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முறிந்தார் பலர்.**

முதன்மையாக உடைய தனது வலிமையினை அளந்தறியாமல் மன எழுச்சியால் தம்மைவிட வலியாரோடு போர் செய்தலைத் தொடங்கி முடிக்கப்பெறாமல் இடையே கெட்ட அரசர் பலருண்டு.

உடை – தலைமையாகிய, தம்- தமது, வலி – வலிமையினை, அறியார் - அறிந்து கொள்ளாதவராகி, ஊக்கத்தின் -தமது மனஊக்கத்தினால், ஊக்கி – போர் செய்யத் தொடங்கி, (அது முடிவு பெறாமல்) இடைக்கண் - நடுவிலே, முறிந்தார் பலர் - கெட்ட அரசர் உலகில் பலராவர்.

**4. அமைந்துஆங்கு ஒழுகான் அளவுஅறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்.**

பிறரோடு பொருந்தி ஒழுகுவதும் செய்யாமல், தனது வலிமையிதுனையும் அறியாமல், தன்னையே பெருமையாக வியந்து கொண்டு பகைத்துக் கொண்ட அரசன் விரைவாகக் கெடுவான்.

அமைந்து ஆங்கு - மாற்றாரிடத்தில் அமைந்தது ஒழுகான் - பொருந்தி நடந்து கொள்ளாதவனாயும், அளவு – தனது வலிமையின் அளவினை, அறியான் - அறிந்து கொள்ளாதவனாயும், தன்னை வியந்தான் - தன்னையே புகழ்ந்து கொண்டு பகைத்த அரசன், விரைந்து கெடும் - விரைவினில் கெட்டுவிடுவான்.

**5. பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்**

மயிலிறகு ஏற்றிவைக்கப்பட்ட வண்டியும் அச்சு முறிவதாகிவிடும்: எப்போது என்றால், அம்மயிலிறகானது மிகவும் அதிகப்படுத்தப்பட்டு ஏற்றப்பட்டால் என்பதாம்.

பீலீ – மயிலிறகு, பெய் - ஏற்றி வைக்கப்பட்ட, சாகாடும் – வண்டியும், அச்சு – அச்சு, இறும் – முறியும், (எப்போதென்றால்) அப்பண்டம் –

அம்மயிலிறகானது, சால – மிகவும் மிகுத்துப் பெயின் – அதிகப்படுத்தி ஏற்றப்பட்டால் என்பதாகும்.

**6. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்**
**உயிர்க்குஇறுதி யாகி விடும்.**

ஒரு மரக் கொம்பின் நுனியில் ஏறி நின்றவர் அந்த அளவினையும் கடந்து மேலும் ஏற, தமது ஊக்கத்தால் மன எழுச்சிக் கொணடு விட்டால் உயிர்க்கு முடிவாகிவிடும்.

கொம்பர் நுனி - ஒரு மரக் கொம்பினது நுனியில், ஏறி நின்றவர், - அஃது – அந்த அளவினையும், இறந்து - கடந்து, ஊக்கின் மேலும் ஏறிச் செல்ல மன ஊக்கம் கொண்டால், உயிர்க்கு – அவருடைய உயிர்க்கு, இறுதி – முடிவு, ஆகிவிடும் - உண்டாகிவிடும்.

**7. ஆற்றின் அளவுஅறிந்து ஈக அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி.**

ஈதல் செய்வதனைத் தமக்கு உள்ள பொருளின் எல்லையையறிந்து அதற்கேற்ப ஈதலினைச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தல், பொருளினைப் போற்றிக் கொண்டொழுகும் வழியாகும்.

ஆற்றின் ஈதல் செய்யும் நெறியில், அளவு - தனக்குள்ள பொருளின் அளவினை, அறிந்து – அறிந்து கொண்டு, ஈக – அதற்கேற்ப ஈதல் வேண்டும், அது – அவ்வாறு செய்வதானது, பொருள் போற்றி –பொருளினைக் காப்பாற்றிக் கொண்டு, வழங்கும் - ஒழுகும், நெறி – வழியாகும்.

**8. ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை.**

செலவு செய்யப்படுகின்ற வழியின் அளவு அதனைவிடப் பெரியதாக இல்லாமலிருந்தால் பொருள் வருகின்ற வழியளவு சிறியதாக இருந்தாலும் அதனால் கெடுதி இல்லை.

போகு – பொருள் செலவாகின்ற, ஆறு – வழி, அகலாக்கடை – அதனைவிடப் பெரிதாக இல்லாதிருக்குமானால், ஆகு – வருவாய் (பொருள்) வருகின்ற, ஆறு – வழியானது, அளவு – அளவானது, இட்டிது – சிறிதானதாக, ஆயினும் – இருந்தாலும், கேடு – கெடுதி, இல்லை - இல்லையாகும்.

**9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்.**

தனக்குள்ள பொருளின் அளவினை அறிந்து அதற்கேற்ப வாழாதவன் வாழ்க்கை, இருப்பது போலத் தோன்றி உண்மையாகவே இல்லாததாகி, பிறகு அத்தோற்றமும் இல்லாமல் கெட்டுவிடும்.

அளவு அறிந்து – தனக்குள்ள பொருளின் அளவினை அறிந்து கொண்டு, வாழாதான் வாழ்க்கை – அதற்கேற்ப வாழாதவனுடைய வாழ்க்கையானது, உளபோல – உள்ளது போலத் தோற்றமளித்து, இல்லாகி – உண்மையில் இல்லாததாகி, தோன்றா – பிறகு அந்தத் தோற்றமும் இல்லாமல், கெடும் - கெட்டுவிடும்.

**10. உளவரை தூக்காத ஒப்புரவு ஆண்மை**
**வளவரை வல்லைக் கெடும்.**

தனக்குள்ள பொருளின் அளவினை ஆராய்ந்தறியாமல், ஒப்புரவாண்மை - யெனும் உபகாரம் செய்பவனுடைய செல்வத்தின் அளவு விரைவாகக்கெடும்.

உளவரை – தனக்குள்ள அளவினை, தூக்காத – ஆராய்ந்தறியாமல் (செய்யப்படும்) ஒப்புரவாண்மை – உபகாரமுடைமை என்னும் தன்மையால், வளவரை – ஒருவனுடைய செல்வத்தின் அளவு, வல்லை- சீக்கிரம், கெடும் - கெட்டுவிடுவதாகும்.

## 11.காலம் அறிதல்

## (காலத்தின் அருமையினைக் கூறுதல்)

**1. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
**வேந்தார்க்கு வேண்டும் பொழுது.**

தன்னைவிட வலிமையுள்ள (கூகையை) கோட்டானைக் காக்கையானது பகற் பொழுதில் வென்று விடும். அது போலவே, பகைவரை வெல்லக் கருதும் அரசர்க்கு அதற்கேற்ற காலம் இன்றியமையாத தாகும்.

கூகையை – தன்னைவிட வலிமையுள்ள கோட்டானை, காக்கை – காகமானது, பகல் - பகற்பொழுதினில், வெல்லும் - வென்றுவிடும், (அது

போல) இகல் - பகைவர்களது பகைமையினை, வெல்லும் - வெல்லக் கருதும், வேந்தர்க்கு – வேந்தர்க்கு. பொழுது வேண்டும் - அதற்குத் தகுந்த காலம் இன்றியமையாது வேண்டப்படுவதாகும்.

**2. பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்**
**தீராமை ஆர்க்கும் கயிறு.**

காலத்தோடு பொருந்த தொழில் செய்து நடந்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்வது செல்வத்தினைத் தன்னிடமிருந்து நீங்காமல் கட்டுகின்ற கயிறாகும்.

பருவத்தோடு–காலத்தோடு, ஒட்டபொருந்த ஒழுகல் – நடந்து கொள்ளுதல், திருவினை – செல்வத்தினை, தீராமை - தன்னிடமிருந்து நீங்காமல், ஆர்க்கும் கயிறு – கட்டுகின்ற கயிராகும்.

**3. அருவினை என்ப உளவோ கருவியால்**
**காலம் அறிந்து செயின்.**

செயலை முடித்தற்கு ஏற்ற கருவிகளுடனே காலமறிந்து செய்வாராயின், செய்வதற்கு அரிய தொழில்கள் என்று சொல்லப்படுவனவும் உண்டோ?

கருவியால் - செய்ய வேண்டிய கருவிகளைக் கொண்டு, (காலம் - தகுந்த காலத்தினை, அறிந்து செயின் - அறிந்து செய்தால், அரு – செய்வதற்கு அரிய, வினை – தொழில், என்று – என்று சொல்லப்படுகின்ற தொழில்களும், உளவோ - இருக்கின்றனவோ!

**4. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தான் செயின்.**

காலத்தினைக்கருதி தக்க இடத்தோடு பொருந்தி அதற்குச் செய்ய வேண்டிய செயல்களைச் செய்வாராயின், உலகு முழுவதையும் ஒருவன் ஆள நினைத்தாலும் அது முடியும்.

காலம் கருதி – தகுதியான காலத்தினைக் கருதி , இடத்தால் செயின் - தக்க இடத்தோடு பொருந்தி அதற்குச் செய்ய வேண்டிய செயலினைச் செய்வாராயின், ஞாலம் - உலகம் முழுவதையும், கருதினும் - ஒருவன் ஆள நினைத்தாலும், கைகூடும் - அதுமுடியும்.

**5. காலம் கருதி இருப்பர் கலங்காது**
**ஞாலம் கருது பவர்.**

தவறாமல் பூமி முழுவதையும் கொள்ளக் கருதும் அரசர், தமக்கு வலிமை அதிகமாக இருந்தாலும் அதற்கேற்ற காலத்தினையே சிந்தித்து அது வருமளவும்.

கலங்காது – தவறாமல், ஞாலம் - பூமிமுழுவதையும், கருதுபவர் - கொள்ளக் கருதும் அரசர், காலம் - அதற்கேற்ற காலத்தினையே, கருதி இருப்பர் - சிந்தித்து அது வருமளவும் பாத்ததிருப்பர்.

**6. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தூக்குற்குப் பேரும் தகைத்து.**

வலிமை மிகுதியுடைய மன்னன் பகைமேற் செல்லாமல் காலம் பார்த்திருக்கின்ற செய்கை எப்படிப்பட்டதென்றால், போர் செய்கின்ற ஆட்டுக்கடா மிகுந்த வேகத்துடன் தாக்குவதற்குக் கால்களைப் பின்வாங்கும் தன்மையதாகும்.

ஊக்கம் - ஊக்கம், உடையான் - வலிமையுடையவன், ஒடுக்கம் - பகைமேற் செல்லாமல் காலம் பார்த்து ஒடுங்கி இருப்பதானது, பொரு – போரினைச் செய்கின்ற, தகர் - ஆட்டுக்கடா, தாக்கற்கு – தாக்கிப் பாய்வதற்காக, பேரும் - பெயர்ந்து செல்லும், தகைத்து – தன்மையதாகும்.

**7. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம் பார்த்து**
**உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.**

அறிவுடைய அரசர், பகைவர் தீமை செய்த அப்போதே புறத்தில் தெரியுமாறு கோபம் செய்ய மாட்டார்கள், வெல்லுதற்கேற்ற காலம்வரை உள்ளுக்குள்ளேயே கோபத்தினை வைத்திருப்பர்.

ஒள்ளியார் - அறிவு நிறைந்தவர்கள், ஆங்கே – பகைவர் தீமை செய்த அப்பொழுதே, பொள்ளென – விரைவாக, புறம் - புறத்திலே, வேரார் - அவர் அறிய கோபிக்கமாட்டார், காலம் - தக்க காலத்தினை, பார்த்து – பார்த்திருந்து, உள்வேர்ப்பர் - அது வரும்வரை உள்ளுக்குள்ளேயே வெகுள்வர்.

**8. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை**
**காணின் கிழக்காம் தலை.**

தாம் வெல்லக் கருதினால் பகைவருக்கு இறுதிக்காலம் வரும்வரை அவரைக் கண்டால் பணியவே இறுதிக்காலம் வந்து முடியும்போது அப்பகைவர் தலை கீழாகிக் கெடுவர்.

செறுநரை – பகைவர்களை, காணின் - காணுங்கால், சுமக்க – காலம் வரும்வரை பணிவுடன் இருத்தல் வேண்டும், இறுவரை - இறுதிக்காலம், காணின் - வந்து முடியும் போது, கிழக்காம்தலை – அப்பகைவர் தலை கீழாகிக் கெடுவர்.

**9. எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற்கு அரிய செயல்.**

பகைவரை வெல்லுவதற்குப் பெறுதற்கரிய காலம் வந்து கூடியபோது, அக்காலம் கழிவதற்கு முன்பே செய்தற்கு அரிய தொழில்களைச் செய்து கொள்ளுவார்கள்.

ஏய்தற்கு – அடைதற்கு, அரியது – அரியதான காலம், இயைந்தக்கால் - வந்து கூடிய போது, அந்நிலையே – அக்காலம் நிற்கும் அளவுக்குள்ளே, செய்தற்கு – செய்வதற்கு, அரிய – அருமையான செயல்களை, செயல் - செய்து கொள்ளுதல் வேண்டும்.

**10. கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்**
**குத்துஒக்க சீர்த்த இடத்து.**

பொருந்திருக்கும் காலத்தில் கொக்கு இருப்பதுபோல அமைதியாக இருத்தல் வேண்டும். மற்றபடி, தொழில்மேல் காலம் வந்து வாய்த்தபோது அக்கொக்கினைப் போல் (குத்துவதைப் போல) தப்பாமல் செய்து முடித்துக் கொள்ளுதல் வேண்டும்.

கூம்பும் - சுருங்கிய, பருவத்து – காலத்தில், கொக்கு – கொக்கு, ஒக்க - இருப்பதைப் போ ல அமைதியாக இருக்க வேண்டும், மற்று சீர்த்தவிடாது – செய்து முடிக்கும் காலம் உண்டானபோது, அதன் - அந்தக் கொக்கின், குத்து – தவறாத குத்தினை, ஒக்க – ஒத்து செயலினைச் செய்து முடித்தல் வேண்டும்.

## 12.இடனறிதல்

**(இடனறிந்து தொழிலினைச் செய்தல் வேண்டும்)**

**1. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
**இடங்கண்ட பின்அல் லது.**

பகைவரை முற்றுகை இடுவதற்கு ஏற்ற இடம் பெற்றபின், அல்லாமல் அவர் மீது யாதொரு தொழிலினையும் தொடங்காதிருத்தல் வேண்டும். அப்பகைவரைச் சிறியர் என்று இகழாதிருத்தல் வேண்டும்.

முற்றும் - பகைவரை முற்றுகையிட்டுக் கொள்ளுவதற்காக, இடம் - தக்க இடத்தினை, கண்டபின் - கண்டறிந்தபின், அல்லால் - அல்லாமல், எவ்வினையும் - யாதொரு தொழிலினையும், தொடங்கற்க – அவர் மேல் தொடங்காதிருக்க வேண்டும், எள்ளற்க – அப்பகைவரை சிறியர் என்று இகழாதிருக்க வேண்டும்.

**2. முரண்சேர்ந்த மொய்ம்பின் அவர்க்கும் அரண்சேர்த்துஆம்**
**ஆக்கம் பலவும் தரும்.**

மாறுபாட்டுடன் கூடிய மனத்தினையுடைய வலிமை நிறைந்த அரசர்க்கும் அரணைச் சேர்ந்து ஆகின்ற வெற்றி பற்பல பயன்களைக் கொடுப்பதாகும்.

முரண் சேர்ந்த – மாறுபாட்டோடு கூடிய, மொய்ம்பினவர்க்கும் - வலிமையுடையவர்க்கும், அரண்சேர்ந்து – கோட்டையினைச் சேர்ந்து, ஆம் - ஆகின்ற, ஆக்கம் - வெற்றி செல்வாக்கானது, பலவும் தரும் - பற்பல பயன்களையும் தருவதாகும்.

**3. ஆற்றாகும் ஆற்றி அடுப இடன் அறிந்து**
**போற்றார்கண் போற்றிச் செயின்.**

வலிமை இல்லாதவர்களும் வலிமையுடையவராகி வெல்லுவார்கள், எப்போது என்றால், அதற்குத் தகுந்த இடத்தினை யறிந்து, தம்மைக் காத்துக் கொண்டு பகைவரிடம் வினைகளைச் செய்வார்களானால் என்பதாம்.

இடன் - அறிந்து – அதற்குத் தகுந்த இடத்தினையறிந்து, போற்றி – தம்மைக் காத்துக் கொண்டு, போற்றார்கண் - பகைவரிடம், செயின் - வினையினைச் செய்வார்களானால், ஆற்றாரும் - வலிமையில்லாத பகைவர்களும், ஆற்றி – வலிமையுடையவராகி, அடுப – வெல்லுவார்கள்.

**4. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடன்அறிந்து**
**துன்னியார் துன்னிச் செயின்.**

தாம் தொழில் செய்வதற்கேற்ற இடத்தினையறிந்து சென்ற அரசர் அரணைப் பொருந்தி (கோட்டையினை) நின்று அதனைச் செய்வாராயின் வெல்லக் கருதிய பகைவர் தம் எண்ணத்தினை இழப்பார்கள்.

இடனறிந்து – தக்க இடத்தினை அறிந்து கொண்டு, துன்னியார் - சென்ற மன்னர், துன்னி – அரணைப் பொருந்தி நின்று, செயின் – தொழிலினைச் செய்வாரானால், எண்ணியார் - வெல்லக் கருதிய பகைவர், எண்ணம் இழப்பவர் - அந்த எண்ணத்தினை இழந்து விடுவார்கள்.

**5. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின அதனைப் பிற.**

நீரில் வாழும் முதலை, ஆழமுடைய நீரில் பிறவற்றையெல்லாம் வென்றுவிடும், அந்த நீரை விட்டு நீங்கிவிட்டால், அம்முதலையை மற்றவை வென்றுவிடும்.

முதலை – முதலையானது, நெடும் - ஆழமுள்ள, புனலும் - நீரிலிருந்தால், பிற – மற்ற உயிினங்களையெல்லாம் , வெல்லும் - வென்று விடுவதாகும், புனலின் நீங்கின் - அந்நீரிலிருந்து நீங்கிவிட்டால், அதனை – அந்த முதலையை, பிற அடும் -மற்ற உயிர்கள் வென்றுவிடும்.

**6. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்**
**நாவாயும் ஓடா நிலத்து.**

வலிமையுள்ள உருளைகளைக் கொண்ட பெரிய தேர்கள் கடலில் ஒட மாட்டாவாம். கடலில் ஓடும் மரக்கலங்களும் நிலத்தில் ஓட மாட்டாவாம்.

கால் - உருளைகளாலானவை, வல் - வலிமையாகக் கொண்ட, நெடும் பெரிய, தேர் - தேர்கள், கடல் - கடலில், ஒடா - ஓட முடியாதவையாகும், கடல் – கடலில், ஒடும் - ஓடுகின்ற, நாவாயும் - மரக்கலங்களும், நிலத்து ஓடா – பூமியில் ஓட முடியாதவைகளாகும்.

**7. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி இடத்தால் செயின்.**

பகைவரிடத்தில் தொழில் செய்யும் திறங்களில் குறையாமல் எல்லாவற்றையும் எண்ணி அவற்றை அரசர் இடத்தோடு பொருந்தச் செய்வாராயின், அச்செயலுக்குத் தமது மனத்தின் திண்மையல்லாமல் வேறு துணை வேண்டுவதில்லை.

எஞ்சாமை – தொழில் செய்யும் திறங்களில் குறைவில்லாமல், எண்ணி – எண்ணிப்பார்த்து, இடத்தால் செயின் - இடத்துடன் பொருந்த செய்வாரானால்,

அஞ்சாமை – மனத்திண்மை, அல்லால் - அல்லாமல்,(வேறு) துணை வேண்டா – துணை வேண்டுவதில்லை.

**8. சிறுபடையான் செல்இடம் சேரின் உறுபடையான்**
**ஊக்கம் அழிந்து விடும்.**

பெரும் படையினையுடைய அரசன் சிறு படையுடையவனை வெல்லக் கருதி அவன் இருக்கும் இடத்தினைச் சேருவானானால் அப்பகைவனால் தனது பெருமை அழிவான்.

உறு – மிகப்பெரிய, படையான் - படையினையுடைய வேந்தன், சிறு – சிறிய, படையான் - படையினையுடையவனது, செல்லிடம - ஆகும் இடத்தினை, சேரின் - சேர்வானானால், ஊக்கம் அழிந்துவிடும் - அவனால் தனது சிறப்பு அழிந்து விடுவதாகும்.

**9. சிறைநலனும் சீரும் இலர்எனினும் மாந்தர்**
**உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.**

அரண் அழித்தற்கு அருமையினையும் பெருமையினையும் ஆகிய ஆற்றலினையும் இல்லாதவராக இருந்தாலும் தொழிலுக்கு உரிய மாந்தரை அவர்கள் இருக்கின்ற இடத்திற்குச் சென்று தாக்குதல் அரிதானதாகும்.

சிறை – அரண், நலனும் - அழித்தற்கு அருமையினையும், சீரும் - சிறப்பான ஆற்றலினையும், இலர் - உடையவர்களாக இல்லை, எனினும் - என்றாலும், மாந்தர் - தொழில் செய்வதற்குரிய மக்களை, உறை – நிலையாக இருக்கின்ற, நிலத்தோடு - இருப்பிடத்திற்குச் சென்று, ஒட்டல் - தாக்குதல், அரிது – அரியதாகும்.

**10. கால்ஆழ் களரின் நரிஅடும் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்த களிறு.**

பாகர்க்கு அடங்காததாயும், வேலினையுடைய வீரர்களைக் கோத்த கொம்பினையுடைய வாயுமுடைய யானைகள், கால் புதைகின்ற அளவுக்குச் சேற்று நிலத்தில் அகப்பட்டுக் கொண்டால் நரிகள் கொல்லும்.

குண்ணஞ்சா – பாகர்க்கு அடங்காதவைகளாயும், வேலாள் - வேலினையுடைய வீரர்களை, முகத்த – கோத்த கொம்பினையுடையவையாயும் உள்ள, களிறு – யானைகளை, கால் - கால்கள், ஆழ் - புதைகின்ற அளவுள்ள, களரில் - சேற்று நிலத்திலே, நரிஅடும் - நரிகள் கொன்றுவிடும்.

## 13. தெரிந்து தெளிதல்

## (அமைச்சர் முதலியவைகளைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்)

**1. அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்**
**திறம்தெரிந்து தேறப் படும்.**

அரசன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒருவனை அறம், பொருள், இன்பம், உயிாக்காக அச்சம் ஆகிய நான்கு வகைகளினால் மனத்தின் தன்மையினைத் தெளிந்து தேர்ந்து அறிந்து கொள்ளப்படுவான்.

அறம் - அறமும், பொருள் - பொருளும், இன்பம் - இன்பமும், உயிரச்சம் - உயிர்க்காரணமாக வரும் அச்சமும் ( ஆகிய ) நான்கின் - நான்கு வகையான, திறம் தெரிந்து – திறத்தினால் மனத்தின் இயல்பு அறிந்து, தேறப்படும் - தெளியப்படுவான்.

**2. குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்**
**நாணுடையான் கட்டே தெளிவு.**

உயர்ந்த குடியில் பிறந்து குற்றங்கள் இல்லாமல் ‘நமக்குக் கெடுதி வருமோ’ என்று அஞ்சி நாணுகின்றவனைத் தேர்ந்து அமைத்துக் கொள்வதே தலைவனுக்குத் தெளிவாகும்.

குடிப்பிறந்து – நற்குடியிலே பிறந்து, குற்றத்தின் குற்றங்களிலிருந்து, நீங்கி – நீங்கி, வடு – குற்றமாகுமோ என்று , பரியும் – அஞ்சுகின்ற, நாணுடையான் கட்டே – நாணமுடையவனிடத்தில், தெளிவு – அரசனுக்குத் தெளிவு உண்டாவதாகும்.

**3. அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்**
**இன்மை அரிதே வெளிறு.**

சிறந்த அருமையான நூல்களைக் கற்றறிந்து குற்றங்கள் எதுவும் இல்லாதவரிடத்திலும் நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் அறியாமையென்பது இல்லாதிருப்பது அரிது.

அரியகற்று – சிறந்த அருமையான நூல்களைக் கற்றறிந்து, ஆசு – குற்றங்கள், அற்றார் - இல்லாதவர்கள், கண்ணும் - இடத்திலும், தெரியுங்கால் -

நுட்பமாக ஆராயும்போது, வெளிறு – அறியாமை யென்பது, இன்மை - இல்லாதிருப்பது, அரிது – அருமையேயாகும்.

**4. குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்.**

ஒருவனுடைய குணங்களையும் ஆராய்ந்து, குற்றங்களையும் ஆராய்ந்து, அந்த இரண்டு வகைகளிலும் மிக்கவற்றை ஆராய்ந்து, அந்த மிக்கவைகளைக் கொண்டு அவனை அறிந்து கொள்ளல் வேண்டும்.

குணம்நாடி – ஒருவனுடைய நற்குணங்களையும் ஆராய்ந்தறிந்து, குற்றமும்நாடி – ஏனைய குற்றங்களையும் ஆராய்ந்தறிந்து, அவற்றுள் - அந்த இருவகைகளிலும், மிகை – மிகுதியாக இருப்பவற்றை, நாடி – ஆராய்ந்து கொண்டு, மிக்க – மிகுந்திருப்பதை வைத்து, கொளல் - அவனை யாவன் என்று அறிந்து கொள்ளும் வேண்டும்.

**5. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டகளைக் கல்.**

ஒருவனுடைய பெருமைக்கும் மற்றைய சிறுமைக்கும் உரைகல்லாக இருப்பது அவனவன் செய்கின்ற செயல்களேயாகும்.

பெருமைக்கும் - ஒருவனுடைய பெருமைக்கும், ஏனை – மற்றைய, சிறுமைக்கும் - சிறுமைக்கும், (தெரிந்து கொள்ள) கட்டளைக்கல் - உரைகல்லாக இருப்பது, தம்தம் - அவரவர் செய்கின்ற, கருமமே – செயல்களேயாகும்.

**6. அற்றரைத் தேறுதல் ஓம்புக மற்றுஅவர்**
**புற்றுஇலர் நாணார் பழி.**

சுற்றம் இல்லாதவர்களைத் தெளிந்து அமைத்துக் கொள்ளுவதை நீக்க வேண்டும், ஏனெனில் அவர்கள் உலகத்துடன் தொடர்பு இல்லாதவர்கள் ஆனபடினால் பழிக்கு அஞ்ச மாட்டார்கள்.

அற்றாரை – சுற்றத்தார் இல்லாதவர்களை, தேறுதல் - தெளிவதனை, ஓம்புக – நீக்குக, மற்றுஅவர் - அவர்கள், பற்று – உலகத்தோடு தொடர்பு, இலர் - இல்லாதவர்கள், பழிகாணார் - பழிக்கு அஞ்ச மாட்டார்கள்.

**7. காதன்மை கந்தா அறிவுஅறியார்த் தேறுதல்**
**பேதைமை எல்லாம் தரும்.**

அன்புடையவர்கள் என்பதைக் காரணமாகக் கொண்டு தாம் வேண்டுவனவற்றை அறியாதவர்களைத் தேர்ந்தெடுத்தல் அரசனுக்கு எல்லா அறியாமையிமையும் கொடுக்கும்.

காதன்மை – அன்புடைமை என்பதனை, கந்தா – காரணமாகக் கொண்டு, அறிவுஅறியார் - அறிய வேண்டுவனற்றை அறியாதவர்களை, தேறுதல் - தெரிந்து கொள்ளுவது, பேதைமை – அறிவற்ற தன்மையினை, எல்லாம் கொடுக்கும்.

**8. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை**
**தீரா இடும்பை தரும்.**

தன்னுடைய தொடர்பு இல்லாதவனை ஆராயாமல் தெளிந்து (தேர்ந்து கொண்ட) அரசனுக்கு அச்செயல் அவன் சந்ததி முறையிலும் நீங்காத துன்பத்தினைக் கொடுக்கும்.

பிறனை – தன்னுடன் தொடர்பில்லாதவனை, தேரான் - ஆராய்ந்து பார்க்காமல், தெளிந்தான் - தெளிந்த மன்னனுக்கு, வழிமுறை – தனது பரம்பரையான வழிமுறையெல்லாம், தீராஇடும்பை – நீங்காத துன்பத்தினை, தரும் - கொடுக்கும்.

**9. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்**
**தேறுக தேறும் பொருள்.**

யாரையும் ஆராய்ந்து பாராமல் தெளியவேண்டாம் ஆராய்ந்தபின் தெளியப்படும் பொருள்களை ஐயுறாமல் (சந்தேகிக்காமல்) தெளிதல் வேண்டும்.

யாரையும் - எவரையும், தேராது – ஆராய்ந்து கொள்ளாமல், தேறற்க – தெளியாதிருப்பானாக, தேர்ந்த – ஆராய்ந்த, பின் - பிறகு, தேறும் - தெளியப்படுகின்ற, பொருள் - பொருள்களை, தேறுக – ஐயறாமல் தெளிதல் வேண்டும்.

**10. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**தீரா இடும்பை தரும்.**

முன்னன் யாரையும் ஆராயாமல் தெளிதலும், ஆராய்ந்து தெளிந்த பிறகு தெளியப்பட்டவனிடத்தில் ஐயப்படுதலும் ஆகிய இவ்விரண்டும் அவனுக்கு நீங்காத துன்பத்தினைக் கொடுக்கும்.

தேரான் - யாரையும் ஆராயாமல், தெளிவும் - தெளிந்து கொள்ளலும், தெளிந்தான்கண் - ஆராய்ந்து தெளிந்து கொண்டவனிடத்தில், ஐயுறவும் - சந்தேகம் கொள்ளுதலும், தீரா – நீங்காத, இடும்பை தரும் - துன்பத்தினைத் தருவதாகும்.

## 14. தெரிந்து வினையாடல்

## (தெளியப்பட்டவர்களை ஆளுகின்ற திறம்)

**1. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும்**

தலைவன் தொழிலினைத் தன்னிடத்தில் வைத்தால், ஆவனவும் ஆகாதனவுமாகிய தொழில்களை ஆராய்ந்தறிந்து அவற்றுள். ஆவனவற்றையே விரும்பும் - இயல்புடையான், அரசனால் சிறந்த தொழில்களில் ஆளப்படுவான்.

நன்மையும் - ஆகும் தொழிலினையும், தீமையும் - ஆகாதனவாகிய தொழிலினையும், நாடி – நன்கு ஆராய்ந்து கண்டு, நலம் - அவற்றில் முடியக்கூடியவைகளை, புரிந்த – தெரிந்து விரும்பிய, தன்மையான் - தன்மையுடையவன், ஆளப்படும் - அரசனாலே அத்தொழில்களில் ஆளப்படுவான்

**2. வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை**
**ஆராய்வான் செய்க வினை.**

பொருள் வருகின்ற வழிகளை விரியச் சென்று செல்வங்களை வளர்ந்து அவைகளுக்கு உண்டான இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவன் மன்னனுக்குத் தொழில் செய்தல் வேண்டும்.

வாரி – பொருள் வரக்கூடிய வழிகளை, பெருக்கி – பெருகச் செய்து, வளம் - செல்வத்தினை, படுத்து – வளர்த்து, உற்றவை - இடையில் வந்த இடையூறு முதலியவற்றை, ஆராய்வான் - ஆராய்ந்து கண்டு நீக்குபவன், வினை செய்க – தொழிலகளை மேற்கொண்டு செய்வானாக.

**3. அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்**

**நன்குடையான் கட்டே தெளிவு.**

அன்பும் அறிவும் கலங்காத தெளிவும் ஆசையில்லாமையும் ஆகிய இந்தநான்கும் நல்லபடியாக உடையவனிடத்தில் தொழிலினை விட்டிருப்பதே தெளிவாகும்.

அன்பு அறிவு – அன்புடைமையும் நிறைந்த அறிவும், தேற்றம் - கலங்காத தன்மையும், அவா – ஆசையும், இன்மை - இல்லாத இயல்பும், (ஆகிய) இந்நான்கும் - இந்த நான்கு பண்புகளையும், நன்கு – நன்றாக, உடையான்கட்டே – பெற்றிருப்பவனிடத்தில், தெளிவு – தொழிலினை ஒப்படைக்கும் தெளிவு இருந்தல் வேண்டும்.

**4. எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையால்**
**வேறாகும் மாந்தர் பலர்.**

எல்லா வகையிலும் ஆராய்ந்து தெளிந்து தொழிலில வைத்த பின்னும், அத் தொழிலின் தன்மையால் வேறுபடும் மாந்தர் உலகத்தில் பலருண்டு.

எனை – எல்லாவிதமான, வகையால் - வகைகளினாலும், தேறியக் கண்ணும் - ஆராய்ந்து தெறிந்த பிறகும், வினை – அத் தொழிலின், வகையான் - தன்மையினால், வேறாகும் - மாறி விடுகின்ற, மாந்தர் பலர் - மாந்தர் பலர் உலகத்தில் உண்டு.

**5. அறிந்துஆற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்**
**சிறந்தான்என்று ஏவற்பாற் றன்று.**

தொழிலினைத் தக்கபடி ஆராய்ந்தறிந்து முடிவு செய்ய வல்லவனை-யல்லாமல், ‘இவன் நம்மிடத்தில் அன்பு உள்ளவன்’ என்ற காரணத்தினால் தொழிலின்மேல் ஒருவனை அமா்த்தும் தன்மை கூடாது.

அறிந்து – ஆய்ந்தறிந்து, ஆற்றி - இடையில் வரும் துன்பங்களைத் தாங்கி, செய்கிற்பாற்கல்லால் - செய்து முடிக்கும் வல்லவனையல்லாமல், வினைதான் - அத்தொழில் என்பதனை, சிறந்தான் - ‘இவன் நம்மிடத்தில் அன்புடையவன்’ என்று நினைத்து, ஏவல் - தொழிலின் மேல் அவனை ஏவுகின்ற, பாற்று – தன்மையுடையது, அன்று – தொழிலல்ல.

**6. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு**
**எய்த உணா்ந்து செயல்.**

முதலில் தொழில் செய்பவனுடைய இலக்கணத்தினை ஆராய்ந்து செய்யப்படும் தொழிலினுடைய இயல்பினை ஆய்ந்து, பிறகு தாமே தக்க காலத்தினைத் தெரிந்து அவனை அத்தொழிலினிடத்தில் ஆளக்கடவன்.

செய்வானை நாடி – முதலில் தொழில் செய்பவன் இலக்கணத்தினை ஆராய்ந்தறிந்து, வினை நாடி – அத்தொழிலினுடைய தன்மையினை ஆராய்ந்தறிந்து, காலத்தோடு – காலத்தினையும் பொருத்திப் பார்த்து, எய்த உணர்ந்து – பொருத்தமுற அறிந்துணர்ந்து, செயல் - தொழிலில் அவனை நடத்துதல் வேண்டும்.

**7. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.**

இத்தொழிலினை இக்கருவியினால் இவன் முடிக்க வல்லவன் என்று வகைப்படுத்தி ஆராய்ந்து, அவையனைத்தும் ஒத்திருந்தால் அத்தொழிலினை அவனிடம் விடுதல் வேண்டும்.

இதனை - இந்தத் தொழிலினை, இதனால் - இந்தக் கருவியினால், இவன் - இவன், முடிக்கும் - முடிக்கின்ற வல்லமையுடையவன், என்று – என்று, ஆய்ந்து – ஆராய்ந்து, (இம்முன்றும் ஒத்திருந்தால்) அதனை – அத்தொழிலினை, அவன்கண் - அவனிடத்தில், விடல் - செய்வதற்கு விடுதல் வேண்டும்.

**8. வினைக்குஉரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரியவன் ஆகச் செயல்.**

ஆராய்ந்தறிந்து தனது தொழிலுக்கு உரியவனாகத் துணிந்த பிறகு அவனை அத்தொழிலுக்கு உரியவனாக உயரச் செய்தல் வேண்டும்.

வினைக்கு உரிமை – தொழிலினைச் செய்ய உரியவனாக இருக்கும் தன்மையினை, நாடிய – ஆராய்ந்து அறிந்த, பின்றை – பிறகு, அவனை அதற்கு – அவனை அத்தொழிலினை மேற்கொண்டு செய்வதற்கு, உரியவனாக – உரிமை உடையவனாக, செயல் - செய்து வைத்தல் வேண்டும்.

**9. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு.**

எப்போதும் தொழிலினிடத்தில் முயற்சியாய் இருப்பவன் உரிமையால் தன்னிடம் சுற்றமாகப் பழகுகின்றவனை அதற்குப் பொறாதவர்கள் சொன்னதைக் கேட்டு மாறுபட நினைக்கும் தலைவனைவிட்டுத் திருமகள் நீங்குவாள்.

வினைக்கண் - மேற்கொண்ட தொழிலினிடத்தில், வினையுடையான் - எப்போதும் நல்ல முயற்சியுடையவன், கேண்மை – உரிமையால் சுற்றம் போல் நடக்கின்ற தன்மையினை, வேறாக நினைப்பானை –தவறாக நினைக்கின்ற தலைவனை, திரு – திருமகள், நீங்கும் - நீங்குவாள்.

**10. நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்யான்**
**கோடாமை கோடாது உலகு.**

தொழில் செய்பவன் மனம் கோணாதிருந்தால் உலகு கோணாது. ஆகையினால் மன்னவன் நாள்தோறும் அவன் செயல் முறைகளை ஆராய்ந்து கவனித்தல் வேண்டும்.

வினை – தொழில், செய்வான் - செய்யும் தொழிலாளியானவன், கோடாமை மனம் கோணாதிருக்க, உலகு கோடாது – உலகம் கோணாது இருக்கும், (ஆகையினால்) நாடோறும் - நாள்தோறும், மன்னன், நாடுக – அவன் செயல்முறைகளைக் கவனித்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

**15. சுற்றம் தழால்**

**(தனது சுற்றமாயினோரை நீங்காவிடாமல் அணைத்துக் காத்தல்)**

**1. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்**
**சுற்றத்தார் கணணே உள.**

ஒருவன் செல்வமிழந்து வறியவனான காலத்திலும் அவனுடன் பழைமையை எடுத்துக் கொண்டடுகின்ற இயல்புகள் சுற்றத்தாரிடம் இருப்பனவாகும்.

பற்று – செல்வம், அற்ற கண்ணும் - இழந்து வறிஞனான காலத்திலும், பழைமை – தம்முடன் உண்டான பழைமையை, பாராட்டுதல் - நினைத்துக் கொண்டாடும் தன்மைகள், சுற்றத்தார் உறவினரான சுற்றத்தார்கள், கண்ணே - இடத்தில், உள - இருப்பனவாகும்.

**2. விருப்புஅறச் சுற்றம் இயைபின் அருப்புஅறா**
**ஆக்கம் பலவும் தரும்.**

அன்பு நீங்காத சுற்றம் ஒருவருாக்கு உண்டாகி விடுமானால் அது அவருக்குக் கிளைத்தல் நீங்காத பல செயல்களையும் தரும்.

விருப்பு – அன்புடைமை, அறா- நீங்காத, சுற்றம் - சுற்றம் என்பது, இயைபின், இருந்து விடுமானால், அருப்பறா – கிளைத்தல் என்பது நீங்கிவிடாத, ஆக்கம் - செல்வம், பலவும் - பலவற்றையும், தரும் - அவனுக்குத் தருவதாகும்.

**3. அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்**
**கோடுஇன்றி நீா்நிறைந் தற்று.**

சுற்றத்தாருடன் நெஞ்சு கலந்து பழகுதல் இல்லாதவனுடைய வாழ்க்கையானது குளத்தின் பரப்பானது இருக்க வேண்டிய கரையில்லாமல் நீா் நிறைந்தது போலாகும்.

அளவளாவு – சுற்றத்தாருடன் நெஞ்சு கலந்து பழகுதல், இல்லாதான் - இல்லாதவனுடைய, வாழ்க்கை – வாழ்க்கையானது, குளவளா – குளத்தின் பரப்பானது, கோடு - இருக்க வேண்டிய கரை, இன்றி - இல்லாமல், நீா் - நீா், நிறைந்தற்று – நிறைந்தது போன்றதாகும்.

**4. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வம்தான்**
**பெற்றத்தாற் பெற்ற பயன்.**

செல்வம் பெற்ற ஒருவன் அதனால் அடையும் பயன் என்னவென்றால் சுற்றத்தா்களால் தான் சூழப்படும் வகையில் தழுவி நடந்து கொள்ளுதலாகும்.

செல்வம் - செல்வத்தினை, பெற்றத்தால் - ஒருவன் பெற்றிருப்பதனால், பெற்ற – பெற்றிருக்க வேண்டிய, பயன் - பயனாவது, சுற்றத்தால் - சுற்றத்தா்களால், தான் - தான், சுற்றப்பட - சூழப்பட்டிருக்கும் வகையில், ஒழுகல் - நடந்து அவா்களைத் தழுவி வாழ்தலாகும்.

**5. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய**
**சுற்றத்தால் சுற்றப் படும்.**

கொடுத்தலும் இன் சொலும் ஆற்றின் அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும்.

கொடுத்தலும் - சுற்றத்தா்க்குக் கொடுப்பதையும், இன் - இனிய, சொலும் - சொற்கள் சொல்லுவதையும், ஆற்றின் - ஒருவன் செய்வானாயின், அடுக்கிய – என்றும் தொடா்ந்து வருகின்ற, சுற்றத்தால் - சுற்றத்தா்களால், சுற்றப்படும் - சூழப்பட்டு வாழ்வான்.

**6. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்**
**மருங்குடையார் மாநிலத்து இல்.**

ஒருவன் சிறந்த கொடையாளியாகவும், கோபத்தினை விரும்பாதவனாகவும் இருப்பானானால் அவனைப்போல கிளை உடையார் இவ்வுலகில் இல்லை.

பெரும் - சிறந்த, கொடையான் - கொடையாளியாகவும், வெகுளி – சினத்தினை, பேணான் - விரும்பாதவனாகவும் இருந்துவிட்டால், அவனின் அவனைவிட, மருங்குடையார் - கிளையென்னும் சுற்றத்தார் உடையவர்கள், மா - இப் பெரிய, நிலத்து இல் - உலகில் இல்லையாகும்.

**7. காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்**
**அன்னநீ ரார்க்கே உள.**

காகங்கள் தமக்கு இரை கிடைத்தவுடன் அதனை மறைக்காமல் தமது இனத்தை அழைத்து அதனோடு உண்ணும் சுற்றத்தினால் அடையக் கூடிய செல்வங்களும் அத்தன்மை உடையவர்களுக்கே உண்டாகும்.

காக்கை – காக்கைகள், கரவா – மறைத்து உண்ணாமல், கரைந்து - கூவித் தன் இனத்தை அழைத்து, உண்ணும் - உண்ணுகின்றனவாகும், ஆக்கமும் - செல்வப் பெருக்கமும், அன்ன – அப்படிப்பட்ட, நீரார்க்கே – தன்மையுடையவர்களுக்கே, உள - இருப்பதாகும்.

**8. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்**
**அதுநோங்கி வாழ்வார் பலர்.**

எல்லோரையும் ஒரே தன்மையராக நோக்காமல், அரசன் அவரவர் தகுதிக்கு ஏற்ப நோக்கிக் கவனிப்பானாகில் அச்சிறப்பு நோக்கி அவனை விடாமல் வாழ்கின்ற சுற்றத்தார் பலராவர்.

பொது – எல்லோரையும் பொதுப்பட ஒரு தன்மையாராக, நோக்கான் - பார்க்காமல், வேந்தன் - வேந்தனானவன், வரிசையா - அவரவருடைய தகுதிக்கு ஏற்றபடி, நோக்கின் - நோக்கி நடப்பானாகில், அது – அச்சிறப்பினை, நோக்கி – கருதி, வாழ்வார் பலர் - அவனைச் சூழ்ந்து வாழ்கின்ற சுற்றத்தார் பலராவார்.

**9. தமர்ஆகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்**
**காரணம் இன்றி வரும்.**

முன்பு சுற்றத்தாராக இருந்து தன்னோடு பொருந்தாமல் யாதானுமொரு காரணத்தால் பிரிந்து போனவர், பின்னும் வந்து சுற்றமாகுதல் என்பது முன்பிருந்த பொருந்தாத காரணம் தன்னிடத்தில் இல்லையாதலால் உண்டாவதாகும்.

தமராகி – முன்னர் சுற்றத்தாராகக் கூடி இருந்து, தன் துறந்தார் - யாதானுமொரு காரணங்கொண்டு பிரிந்து சென்றவர்கள், சுற்றம் - மறுபடியும் வந்து சுற்றமாகுதல், அமராமை – முன்பு பொருந்தாமைக்கு, காரணம் - காரணம், இன்றி - இப்போது தன்னிடம் இல்லாததால், வரும் - உண்டாவதாகும்.

**10. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்**
**இழைத்திருந்து எண்ணிக் கொளல்.**

காரணமின்றித் தன்னைவிட்டுப் பிரிந்து போய்ப் பின் காரணத்தால் வந்த சுற்றத்தானை, வேந்தன் அந்தக் காரணத்தைச் செய்து வைத்து ஆராய்ந்து தழுவிக் கொள்ளுதல் வேண்டும்.

உழைப்பிரிந்து – காரணம் ஒன்றுமில்லாமல் பிரிந்து போய், காரணத்தின் - பின்பு காரணத்தால், வந்தானை – வந்து சேருகின்ற சுற்றத்தானை, வேந்தன் - வேந்தனானவன், இழைத்திருந்து – மீண்டும் பிரியாதிருக்க அக்காரணத்தைச் செய்து அமைத்து, எண்ணிக் கொளல் - ஆராய்ந்தறிந்து சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

## 16. பொச்சாவாமை

**(களிப்பு மிகுதியால் சோர்வு என்னும் மறதி கொள்ளாதிருத்தல்)**

**1. இறந்த வெகுளியின் தீதே சிறந்த**
**உவகை மகிழ்ச்சியின் சோர்வு.**

மிகுந்த உவகைக் களிப்பினால் வருகின்ற மறதியானது அரசனுக்கு அளவுகடந்த கோபத்தினைவிடவும் தீமையாகும்.

சிறந்த – மிகுந்த, உவகை மகிழ்ச்சியின் - உவகைக் களிப்பினால் (வருகின்ற) சோர்வு – மறதியானது, சிறந்த – அளவு கடந்த, வெகுளியின் - சினத்தினைவிட, தீது – தீமை பயப்பதாகும்.

**2. பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை**
**நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.**

நாள்தோறும் வரும் வறுமையானது ஒருவனுடைய அறிவினைக் கொல்லுவதைப் போல, ஒருவனுடைய புகழினை மறதியானது கொன்று விடுவதாகும்.

அறிவினை – ஒருவனுடைய அறிவினை, நிச்ச – நாள்தோறும் வருகின்ற, நிரப்பு – வறுமை, கொன்றாங்கு – கொல்லுவதைப் போல, புகழை – ஒருவனுடைய புகழினை, பொச்சாப்பு – மறதியானது, கொல்லும் - கொன்றுவிடும்

**3. பொச்சாப்பார்க்கு இல்லை புகழ்மை அது உலகத்து**
**ஏப்பால்நூா லோர்க்கும் துணிவு.**

மறதியைக் கொண்டு நடப்பவர்களுக்கு புகழுடைமை இல்லை. இவ்வுண்மை நீதி நூலுடை யார்க்கேயன்றி உலகத்தில் எவ்வகைப்பட்ட நூலுடையவர்க்கும் ஒப்ப முடிந்த முடிவாகும்.

பொச்சாப்பார்க்கு – மறதியைக் கொண்டு நடப்பவர்களுக்கு, புகழ்மை இல்லை – புகழ் உடைமை இல்லையாகும், அது - இவ்வுண்மையானது, உலகத்து – உலகத்தில், எப்பால் - எவ்வகைப்பட்ட, நூலோர்க்கும் நூலுடையவர்களுக்கும், துணிவு – ஒப்ப முடிந்த முடிபாகும்.

**4. அச்சம் உடையார்க்கு அரண்இல்லை ஆங்குஇல்லை**
**பொச்சாப்பு உடையாாக்கு நன்கு.**

சிறந்த அரண் என்னும் கோட்டை இருந்தாலும் மனத்தில் அச்சம் உடையவர்களுக்கு அதனால் பயன் இல்லை. அதுபோல், செல்வமெல்லாம் உடையவராயினும் மனத்தில் மறதியுடையவர்களுக்கு அதனால் பயனில்லை.

அரண் - சிறப்பான கோட்டையிருந்தாலும், அச்சம் - பயம், உடையார்க்கு – உடையவர்களுக்கு, இல்லை – அதனால் பயனில்லை, ஆங்கு – அதுவேபோல, பொச்சாப்பு – மறதி, உடையார்க்கு – உடையவர்களுக்கு, நன்கு – செல்வம் எல்லாம் இருந்தாலும்கூட, இல்லை – அவற்றால் எந்தப் பயனும் இல்லையாகும்.

**5. முன்னுறக் காவாது இழுக்கியான் தன்பிழை**
**பின்ஊறு இரங்கி விடும்.**

வருகின்ற துன்பங்களை முன்னதாகவே அறிந்து காத்துக் கொள்ளாமல் மறந்திருந்தவன் பின்னர் தனது பிழையினை நினைத்து இரங்கிக் கவலைப்படுவான்.

முன்னுற – முன்னதாகவே, காவாது – தெரிந்து தன்னைக் காத்துக் கொள்ளாமல், இழுக்கியான் - மறந்திருந்தவன், பின் - பிறகு, ஊறு – துன்பம் வந்துற்றபோது, தன் - தன்னுடைய, பிழை – தவறினை உணர்ந்து, இரங்கிவிடும் - இரக்கப்பட்டுக் கவலையடைவான்.

**6. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை**
**வாயின் அ∴துஒப்பது இல்.**

மறவாமைக்குணம் யாவரிடத்தும் எக்காலத்திலும் இடையீடின்றி உண்டாகி விடுமானால் அதனையொத்த நன்மை வேறு எதுவும் இல்லை.

இழுக்காமை – மறவாமைக்குணம், யார்மாட்டும் - யாவரிடத்தும், என்றும் - எக்காலத்திலும், வழுக்காமை – ஒழிவில்லாமல், (எப்போதும்) வாயின் - வாய்ந்து இருக்குமேயானால், அ∴து ஒப்பது – அதனை ஒத்த நன்மை, இல் - வேறு எதுவும் இல்லை.

**7. அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்**
**கருவியான் போற்றிச் செயின்.**

மறதி இல்லாத மனத்தாலே எண்ணிச் செய்யப்பட்டால் ‘இவை செய்வதற்கு அருமையானவை, என்று சொல்லப்படும் முடியாத செயல்கள் எதுவுமே இல்லை.

பொச்சாவா – மறதியில்லாத, கருவியிால் - மனத்தினாலே, போற்றிச்செயின் - எண்ணிச் செய்தால், அரிய – செய்து முடிக்க அருமையானது, என்று – என்று சொல்லப்படும், ஆகாத இல்லை – ஒருவற்கு முடியாத காரியங்கள் எதுவும் இல்லை,

**8. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது**
**இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.**

நீதி நூலுடையார் இவை மன்னர்க்கு உரியன என்று கூறியவைகளைக் கடைப்பிடித்துச் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாமல் மறந்தவர்களுக்கு எழுமையிலும் நன்மை இல்லை.

புகழ்ந்தவை – நீதிநூலுடையார் உயர்த்திச் சொல்லியவைகளை, போற்றி – கடைப்பிடித்து, செயல் - செய்தல், வேண்டும் - வேண்டும், செய்யாது – அவ்வாறு செய்யாமல் இகழ்ந்தார்க்கு – மறந்தவர்களுக்கு, எழுமையும்இல் - எழுமையிலும் நன்மை இல்லை.

**9. இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.**

மன்னர்கள் தமது செருக்கில் களிப்புற்றிருக்கும்போது, முற்காலத்தில் அப்படிப்பட்ட குணத்தினால் உண்டான மறதியால் கெட்டவர்களை நினைத்துப் பார்க்கவேண்டும்.

தம் - தமக்குண்டான, மகிழ்ச்சியில் - களிப்பில், தாம் - தாங்கள், மைந்துஉறும் போழ்ந்து – செருக்கடையும்போது, இகழ்ச்சியின் - முன்பு அப்படிப்பட்ட மறதியினாலே, கெட்டாரை – கெட்டவர்களை, உள்ளுக – நினைத்துப் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

**10. உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின.**

தான் அடைய நினைத்த பொருள்கள் அத்தனையும் ஒருவன் அடைதல் எளிதாக முடியும். எப்போது என்றால், பின்னும் தான் அதனையே நினைத்திருப்பானேயானால், என்பதாம்.

தான் - தான், உள்ளியது – அடைய நினைத்த பொருளினை, எய்தல் - அடைதல், எளிதுமன் - எளிதானதாகும், மற்றும் - பின்னும்,(அவன்) உள்ளியறு – நினைத்த அப்பொருளினையே, உள்ள – நினைத்துக் கொண்டிருக்க, பெறின் - தன்மை பெற்றால்.

**17.செங்கோன்மை**

**(அரசன் ஆட்சியின் சிறப்புத் தன்மை)**

**1. ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்துசெய் வஃதே முறை.**

குடிமக்கள் குற்றம் செய்தால் அக்குற்றத்தினை நாடி அறிந்து யாவரிடத்தும் கண்ணோட்டம் இல்லாமல் நடுவு நிலைமையாக அமைந்து, குற்றத்திற்குச் சொல்லப்பட்ட தண்டனையை ஆராய்ந்து செய்வதே முறையாகும்.

ஓர்ந்து – குற்றத்தினை யறிந்து, யார்மாட்டும் - யாவரிடத்தும்,கண்ணோடாமல் - முகம் கொடாமல் (தாட்சண்மின்றி) இறை – நடுவு நிலைமை, புரிந்து – பொருந்துமாறு, தேர்ந்து – குற்றத்திற்குரிய தண்டனையை ஆராய்ந்து, செய்வஃதே – அந்த அளவில் செய்வதே, முறை – செங்கோன்மை என்பதாகும்.

**2. வான்நோக்கி வாழும் உலகுஎல்லாம் மன்னவன்**
**கோல்நோக்கி வாழும் குடி.**

உலகத்திலுள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழும், குடிமக்கள் அரசனுடைய செங்கோலினை நோக்கி வாழ்வார்கள்.

உலகு – உலகத்திலுள்ள, எல்லாம் - உயிர்கள் எல்லாம், வான்நோக்கி – மழை உண்டானால், வாழும் - வாழ்வனவாகும், குடி – குடிமக்கள், மன்னவன் - மன்னவனுடைய, கோல் - செங்கோன்மையினை, நோக்கி – பார்த்து, வாழும் - வாழ்வார்கள்.

**3. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்**
**நின்றது மன்னவன் கோல்.**

அந்தணர்களுடைய மறையாகிய நூலுக்கும் அறத்திற்கும் முதற் காரணமாக நிலைபெற்றது எதுவென்றால் அரசனால் செலுத்தப்படும் செங்கோலாகும்.

அந்தணர் - அந்தணர்களுடைய, நூற்கும் - மறையாகிய நூலுக்கும், அறத்திற்கும் - அறம் என்பதற்கும், ஆதியாய் - முதற்காரணமாகி, நின்றது – நிலைபெற்றிருப்பது, (எதுவென்றால்) மன்னவன் - மன்னவனால் செலுத்தப்படும், கோல் - செங்கோலாகும்.

**4. குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு.**

தனது குடிமக்களை அணைத்துச் செங்கோல் செலுத்தும் பெருநில மன்னனது அடியைப் பொருந்தி உலகத்தோர் விடாது நிற்பர்.

குடி – தன் குடிமக்களையும், தழீஇ - அணைத்து, கோல் - செங்கோல், ஓச்சும் - செலுத்தும், மாநில – பெருநில, மன்னன் - மன்னனது, அடி – அடியை, தழீஇ - பொருந்தியிருந்து, நிற்கும்உலகு – விடாமல் உலக மக்கள் இருப்பார்கள்.

**5. இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட**
**பெயலும் விளையுளும் தொக்கு.**

நூல்கள் சொல்லிய இயல்பால் செங்கோலினைச் செலுத்தும் மன்னனது நாட்டில் பருவமழையும் குன்றாத விளைச்சலும் ஒருங்கே சேர்ந்து இருப்பனவாகும்.

பெயலும் - பருவகாலத்து மழையும், விளையுளும் - குன்றாத விளைச்சலும், தொக்கு – ஒன்றுகூடி, இயல்புளி – நூல்களில் கூறப்பட்ட இயல்பினாலே, கோல் - செங்கோலினை, ஓச்சும் - செலுத்தும், மன்னவன் - மன்னனது, நாட்ட – நாட்டில் இருப்பனவாகும்.

**6. வேல்அன்று வென்றி தருவது மன்னவன்**
**கோல்அதூஉம் கோடாது எனின்.**

மன்னவனுக்குப் போரில் வெற்றியினைக் கொடுப்பது அவன் எறியும் வேல் அல்ல: செங்கோலேயாகும். அக்கோலும் கோணாது இருக்குமானால் என்பதாம்.

மன்னவன் - மன்னவனுக்கு, வென்றி – போரில் வெற்றியினை, தருவது – கொடுப்பது, வேல் - வேற்படை, அன்று – அல்ல, கோல் - அவனுடைய செங்கோலாகும், அதுஉம் - அக்கோலும், கோடாது – தான் கோணாமல், எனின் - இருக்குமானால்.

**7. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை**
**முறைகாக்கும் முட்டாச் செயின்.**

வையகத்தை யெல்லாம் அரசன் காப்பாற்றுவான்: அந்த அரசனை அவனுடைய செங்கோல் காப்பாற்றும்: அதனை அவன் முட்டாமல் செலுத்துவானானால் என்பதாகும்.

வையகம் - பூமி, எல்லாம் - முழுவதையும், இறைகாக்கும் - மன்னவன் காப்பாமுற்றுவான். அவனை- அம்மன்னனை, முறை – அவனுடைய செங்கோலானது, காக்கும் - காப்பாற்றும், (எப்பொது) முட்டாச்செயின் - செங்கோலினை முட்டாமல் செலுத்துவானானால்.

**8. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்**
**தண்பதத்தான் தானே கெடும்.**

எல்லோரும் எளிமையாகக் காண முடிகின்றவனாகி ஆராய்ந்து முறை செய்யாத மன்னவன், தாழ்ந்த பாவமும் பழியும் அடைந்து கெடுவான்.

என்பதத்தான் - குடிமக்கள் எளிமையாகக் காண்பவனாகி, ஓரா – ஆராய்ந்து, முறை – நீதி, செய்யா – வழங்காத, மன்னவன் - மன்னவன், தண்பதத்தால் - தாழ்ந்த பழி பாவத்திலேயே நின்று, தானே, கெடும் - கெடுவான்.

**9. குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்**

**வடுஅன்று வேந்தன் தொழில்.**

குடிமக்களைப் பிறா் துன்புறுத்தாமல் பேணிக் காத்துக் குற்றம் செய்தால் தண்டனையளிப்பது வேந்தனுக்குப் பழியாகாது, அவனுடைய தொழிலேயாகும்.

குடி – குடிமக்களை, புறங்காத்து – பிறா் துன்புறுத்தாமல் காப்பாற்றி, ஓம்பி – தானும் நலியாது பேணி, குற்றம் - அவர்களிடம் குற்றம் உண்டானால், கடிதல் - தண்டித்தல், வேந்தன் - வேந்தார்க்கு, வடு – பழி, அன்று – அல்ல, தொழில் -அவனுடைய தொழிலாகும்.

**10. கொலையின் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ்**

**களைகட் டதனோடு நேர்.**

வேந்தனானவன் கொடியவர்களைக் கொலையினால் தண்டித்துத் தக்கோரைக் காப்பாற்றுதல், உழவன் களையைக் களைந்து பசுமையான பயிரைக் காப்பாற்றுவதோடு ஒக்கும்.

வேந்து – வேந்தனானவன், கொடியாரை - கொடியவர்களை, கொலையின் - கொலையினாலே, ஒறுத்தல் - தண்டித்தல் (தக்கோரைக் காத்தல்) பைங்கூழ் - உழவன் பசுமையான பயிரை, களைகட்டு – களையைக் களைந்து காத்தலாகிய, அதனோடு – அந்தச் செயலோடு, நேர் - ஒக்கும்.

**18.கொடுங்கோன்மை**

**(அரசன் முறைசெய்தலில் கோணாதிருந்தல்)**

**1. கொலைமேற்கொண் டாரின் கொடிதே அலைமேற்கொண்டு**

**அல்லவை செய்துஒழுகும் வேந்து.**

பொருளைக் கருதி நீதியற்ற முறையில் குடிமக்களிடம் அல்லாதவைகளைச் செய்தொழுகும் வேந்தன், கொலை செய்யும் தொழிலை மேற்கொண்டவர்களை விடவும் கொடியவனாவான்.

அலை – பொருளுக்காக குடி மக்ககளை அலைத்தல் செய்வதை, மேற்கொண்டு – தன்மேற்கொண்டு, அல்லவை – முறை அல்லாதவற்றை, செய்து ஒழுகும் - செய்து நடக்கும வேந்து – மன்னவன், கொலை – பகைமையால் கொல்லுதல் தொழிலை, மேற்கொண்டாரின் -மேற்கொண்டு நடப்பவர்களைவிட, கொடிதே – கொடியவன் எனப்படுவான்.

**2. வேலோடு நின்றான் இடுஎன் றதுபோலும்**

**கோலொடு நின்றான் இரவு.**

தண்டிக்கும் தொழிலோடு நின்ற அரசன் குடிமக்களிடம் பொருள் வேண்டிக் கேட்டல், வேற்படைகளுடனே தனியே நின்ற கள்வன் வழிப்போக்கனை நோக்கிக் கைப்பொருளினைத் 'தா' என்பதனோடு ஒக்கும்.

கோலொடு – தண்டிக்கும் தொழிலோடு, நின்றான் - நின்ற அரசன், இரவு – குடிமக்களிடம் பொருள் வேண்டுதல், வேலொடு – வேலினைக் கையில் கொண்டு, நின்றான் - வழியில் தனியே நின்ற கள்வன், இடு – வழிப்போக்கனை நோக்கி உன் கைப்பொருளைத்தா என்றது போலும் - என்று சொல்லியது போலும்.

**3. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாள்தொறும் நாடு கெடும்.**

தனது நாட்டில் நிகழ்பவைகளை நாள்தோறும் ஆராய்ந்து அதற்குத் தக்க முறைகளை செய்யாத மன்னன் நாள்தோறும் நாட்டினை இழப்பான்.

நாள்தோறும் - நாள்தோறும், நாடி – நாட்டின் தீமைகளை ஆராய்ந்து, முறைசெய்யா – அதற்குத்தக்க முறையில் முறைமையை ஏற்றபடிசெய்யாத, மன்னவன் மன்னனுடைய, நாடு –நாடு, நாடொறும் - நாள்தோறும், கெடும் - கெட்டு விடுவதாகும்.

**4. கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்**
**சூழாது செய்யும் அரசு.**

பின்னர் விளைவதனையறியாமல் முறை தப்பச் செய்யும் அரசன், அச்செயலால் முன்பு ஈட்டிய பொருளையும் பின்பு ஈட்டுவதற்கு ஏதுவாகிய குடிமக்களையும் இழப்பான்.

சூழாது - பின் விளைவதனை நினைக்காமல், கோல் - செங்கோல், கோடி – தப்ப, செய்யும் - செய்கின்ற, அரசு – அரசன், கூழும் - பொருளையும், குடியும் -குடிமக்களையும், ஒருங்கு இழக்கும் - ஒன்று சேர இழப்பான்.

**5. அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீர்அன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை.**

குடிமக்கள் அரசனால் துன்பப்பட்டு அதனைப் பொறுக்க முடியாமல் அழுத கண்ணீரல்லவா அவனுடைய செல்வத்தினைக் குறைக்கும் கருவியாகும்.

அல்லல்பட்டு —(அரசனால்) குடிமக்கள் துன்பப்பட்டு, ஆற்றாது — அதனைப்பொறுக்க முடியாமல், அழுத — அழுத, கண்ணீரன்றே — கண்ணீரல்லவா, செல்வத்தை —அவனுடைய செல்வத்தினை, தேய்க்கும் - குறைக்கின்ற, படை — படைக் கருவியாகும்.

**6. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அ∴துஇன்றேல்**
**மன்னாவாம மன்னர்க்கு ஒளி.**

மன்னர்கள் புகழுடன் நிலைபெற்றிருத்தல் என்பது செங்கோன்மையினாலே ஆகும். அச்செங்கோன்மை இல்லாவிட்டால் அப்புகழ் உளவாகாது.

மன்னர்க்கு — மன்னர்களுக்கு, மன்னுதல் - புகழ்நிலை பெறுதல், செங்கோன்மை — செங்கோன்மையினாலாகும், அ∴து இன்றேல் - அவ்வாறான செங்கோன்மை இல்லையானால், மன்னர்க்கு — மன்னர்க்கு, ஒளி — அப் புகழானது, மன்னாவாம் - நிலை பெற்றிருக்காது.

**7. துளிஇன்மை ஞாலத்திற்கு எற்றுஅற்றே வேந்தன்**
**அளிஇன்மை வாழும் உயிர்க்கு.**

மழை இல்லாமையானது உலகில் வாழும் உயிர்களுக்கு எவ்வகைத் துன்பத்தினை உண்டாக்குமோ அவ்வகைத் துன்பம் அருளில்லாத வேந்தன் நாட்டில் வாழும் மக்களுக்கு உண்டாகும்.

வேந்தன் - வேந்தனுடைய, அளி — அருள், இன்மை - இல்லான்மையானது, வாழும் உயிர்க்கு நாட்டின் வாழும் மக்களுக்கு, துளி — மழைத்துளியானது, இன்மை - இல்லாமற்போனால், ஞாலத்திற்கு — பூமியில் வாழும் உயிர்களுக்கு, எற்று — எவ்வளவு துன்பம் தருமோ, அற்றே — அத்தகைய துன்பத்தினைத் தரும்.

**8. இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா**
**மன்னவன் கோற்கீழ்ப் படின்.**

செங்கோல் முறையினைச் செய்யாத, மன்னவனது கொடுங்கேலின் கீழ் வாழ்ந்தால் யாவர்க்கும் பொருள் வைத்திருப்பதானது பொருள் இல்லாமையினைக் காட்டிலும் அதிகமான துன்பத்தினைச் செய்வதாகும்.

முறை — செங்கோல் முறையை, செய்யா - செய்யாத, மன்னவன் - மன்னன், கோற்கீழ் - கொடுங்கோலின் கீழ், படின் - வாழ்ந்தால் (யாவர்க்கும்),

உடைமை – பொருள் வைத்திருப்பதானது, இன்மையின் - பொருள் இல்லாமையிமைக் காட்டிலும், இன்னாது – அதிகதுன்பத்தினைச் செய்வதாகும்.

**9. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி**
**ஒல்லாது வானம் பெயல்.**

மன்னவன் தன் செய்யும் பொருளை முறை தப்பச் செய்வானானால் அவன் நாட்டில் பருவமழை இல்லாமற் போகும்படி மேகம் மழை பொழிதலைச் செய்யாது.

மன்னவன் - மன்னன், முறைகோடி – செங்கோல் முறை தப்பி, செய்யின் - பொருளினைச் சேர்ப்பானேயானால், உறை – பருவமழை, கோடி - இல்லாமற் போகும்படியாக, வானம் - மேகம், பெயல் - மழை பொழிவதை. ஒல்லாது செய்தல் பொருந்தாது.

**10. அபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்**
**காவலன் காவான் எனின்.**

காத்தற்கரிய காவலனாக அரசன் உயிர்களைக் காப்பாற்றானாகில் அறம் இல்லாத அவன் நாட்டுப்பசுக்கள் பால் தருவது குறைந்து விடும். ஆறு வகைப்பட்ட தொழிலாளர்கள் தாங்கள் நூல் கற்பதை மறந்து விடுவார்கள். தொழில்கள் நசிந்துவிடும்.

காவலன் - காத்தற்குரிய அரசன், காவான் - உயிர்களைக் காப்பாற்றாதவன், எனின் -என்றால், ஆ – பசுக்கள் தருகின்ற, பயன் - பயனாகிய பால், குன்றும் - சுருங்கி விடும், அறுதொழிலோர் - ஆறுவகைப்பட்ட தொழிலைச் செய்பவர்கள், நூல் மறப்பர் - தாங்கள் கற்கும் நூல்களை, மறப்பர் - மறந்து விடுவார்கள்.

## 19.வெகுவந்த செய்யாமை

**( குடிமக்கள் அஞ்சி நடுங்கக் கூடியவைகளைச் செய்யாதிருத்தல்)**

**1. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.**

தக்க முறையில் நடுவாக நின்று ஆராய்ந்து குற்றம் செய்தவன் பின்னும் அதனைச் செய்யாமல் இருக்கும்பொருட்டு அக்குற்றத்திற்குத்தகுந்தபடி தண்டிப்பவனே வேந்தனாவான்.

தக்காங்கு – குற்றத்தினை நடுவாக நின்று, நாடி – நல்லபடியாக ஆராய்ந்து, தலைச்செல்லா வண்ணத்தால் - மீண்டும் அப்படிப்பட்ட குற்றத்தினை அவன் செய்யாமற் பொருட்டு, ஒத்தாங்கு – குற்றத்திற்குத் தகுந்தபடி, ஒறுப்பது வேந்து – தண்டிப்பவனே வேந்தனாவான்.

**2. கடிதுஓச்சி மெல்ல எறிக நெடிதுஆக்கம்**
**நீங்காமை வேண்டு பவர்.**

செல்வம் தன்னைவிட்டு நெடுங்காலம் நீங்காமல் நிற்பதை வேண்டுபவர்கள் தன்டிக்கும் போது அளவு கடந்து செய்வது போலத் தொடங்கி, செய்யும்போது அளவு கடவாமல் செய்தல் வேண்டும்.

ஆக்கம் - தமது செல்வம், நெடிது நீண்ட காலம், நீங்காமை – நீங்காதிருக்க வேண்டுமென்று, வேண்டுபவர் - விரும்பி வேண்டி இருப்பவர்கள், கடிது – தொடங்கும்போது அளவு கடந்து செய்வதுபோல், ஓச்சி – தொடங்கி, மெல்ல – செய்யும் போது அளவு மீறாமல், எறிக – செய்தல்வேண்டும்.

**3. வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின**
**ஒருவந்தம் ஒல்லைக் கெடும்**

குடிகள் மிகவும் அஞ்சுகின்ற செயல்களைச் செய்து நடக்கும் வெங்கோலனாகிவிடில் அவ்வரசன் உறுதியாகக் கடிதில் கெடுவான்

வெருவந்த – குடிமக்சுள் மிகவும் அஞ்சுகின்ற தொழில்களை, செய்து ஒழுகும் - செய்து நடக்கின்ற வெங்கோலன் - கொடுங்கோலன், ஆயின் - ஆனால், ஒருவந்தம் - உறுதியாகவே, ஒல்லை – விரைவில், கெடும் - அழிவான்

**4. இறைகடியன் என்றுஉரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்**
**உறைகடுகி ஒல்லைக் கெடும்.**

குடிமக்களால் ‘தமது தலைவன் கொடுமையானவன்’ என்று சொல்லப்படும் துன்பமான சொல்வினை யுடைய வேந்தன் ஆயுளும் குறைந்து செல்வமும் விரைவில் இழப்பான்.

இறை – வேந்தன். குடியன் - கொடியன், என்று உரைக்கும் - என்று மக்களாலே சொல்லப்படுகின்ற, இன்னாச் சொல் - துன்பமான சொல்லையுடைய, வேந்தன் - வேந்தன், உறை கடுகி – தனது ஆயுளும் குறைந்து, ஒல்லை – விரைவில் (செல்வத்தையும்) கெடும் - இழந்து விடுவான்.

**5. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்**
**பேஎய்கண்டு அன்னது உடைத்து.**

தன்னைக் காண வருவோர்க்கு எளிதில் காண முடியாதவனாகயும், கண்டால் கடிய முகத்தையுடையவனாகவும் இருக்கின்ற மன்னனுடைய செல்வம் பேயால் காணப்பட்டதொரு குற்றத்தினை உடையாதாகம்.

அருஞ்செவ்வி – தன்னைக் காண வருவோர்க்கு காண முடியாதபடி அரிதாகவும், இன்னா- இனிமையில்லாத, முகத்தான் - முகத்தையுடையவனாகவும, (இருக்கின்றவனது) பெரும் - பெரிய, செல்வம் - செல்வமானது, பேஎய் - பேயால், கணடன்னது – காணப்பட்டாற் போன்றதொரு குற்றத்தினை, உடைத்து – பெற்றதாகும்.

**6. கடுஞ்சொல்லன் கண்இலன் ஆயின் நெடுஞ்செல்வம்**
**நீடுஇன்றி ஆங்கே கெடும்.**

அரசன் கடிய சொல்லினையுடையவனாகவும், கண்ணோட்டம் (இரக்கம்) இல்லாதவனாகவும் இருந்தால், அவனுடைய பெரிய செல்வம் நீடுதலில்லாமல் அப்பொழுதே கெடும்.

கடும் - கடுமையான, சொல்லன் - சொல்லினையுடையவனும், கண்ணிலன் - கண்ணோட்டம்(இரக்கம்) இல்லாதவனும், ஆயின் - ஆனால், நெடும் - பெரிய, செல்வம் - செல்வமானது, நீடு – நீடுதல், இன்றி - இல்லாமல், கெடும் - கெட்டுவிடும்.

**7. கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்**
**அடுமுரண் தேய்க்கும் அரம்.**

கடுமையான சொல்லும் குற்றத்திற்கு மேம்பட்ட தண்டனையும் ஆன இரண்டும் அரசனது வெல்லுதற்கேற்ற மாறுபாடு என்னும் இரும்பினைத் தேய்க்கின்ற அறமாகும்.

கடு – கடுமையான, மொழியும் - சொல்லும், கையிகந்த – குற்றத்தின் மிக்க, தண்டமும் - தண்டனையும், வேந்தன் - வேந்தனது, அடும் - பகையினை வெல்லுதற் கேற்ற, முரண் - மாறுபாடு என்னும் இரும்பினை, தேய்க்கும் அரம் - தேய்க்கின்ற அறமாகும்.

**8. இனத்துஆற்றி எண்ணாத வேந்தன் சினத்துஆற்றிச்**
**சீறின் சிறுகும் திரு.**

தன் அமைச்சர்களோடு தானும் சிந்தனை செய்து செயல்படாத வேந்தன் அக்குற்றத்தினால் தனது செயல் பழுதுபட்டபோது பிறர்மேல் கோபம் கொள்ளுவானாகில் அவனுடைய செல்வம் நாள்தோறும் சுருங்கும்

இனத்து – தனது இனமாகிய அமைச்சர்களுடன், ஆற்றி – பொருந்த அமைந்து, எண்ணாத – கலந்து எண்ணிச் செய்யாத, வேந்தன் - வேந்தன்(தனது செயல் பழுதுபட்ட போது) சினத்தாறறி – தன்னைச் சினமாகிய குற்றத்திலே செலுத்தி, சீறின் - அவர்களைச் சினந்து கொண்டால், திரு – அவனுடைய செல்வம், சிறுகும் - நாள்தோறும் சுருங்கும்.

**9. செருவந்த போழ்தின் சிறைசெய்யா வேந்தன்**
**வெருவந்து வெய்து கெடும்.**

பகைவர் வருவதற்கு முன்பாகவே தனக்குப் புகலிட மானதோர் அரண் செய்து கொள்ளாத அரசன் போர் வந்த காலத்தில், பாதுகாப்பு இல்லாததால் விரைவில் கெடுவான்.

சிறை – முன்னரே அரண், செய்யா – செய்து கொள்ளாத, வேந்தன் - வேந்தனானவன், செருவந்த – பகை(போர்), வந்த, போழ்து – காலத்தில், வெருவந்து – பாதுகாப்பு இல்லாததால் பயந்து, வெய்து கெடும் - விரைவில் கெடுவான்.

**10. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுஅல்லது**
**இல்லை நிலக்குப் பொறை.**

கடுங்கோலனாகிய அரசன் நீதி நூல் முதலியனவற்றைக் கல்லாதாரைத் தனக்கு அங்கங்களாக வைத்துக் கொள்ளுவான். ஆக்கூட்டத்தினரைவிடப் பூமிக்கு அதிகமான பாரம் வேறு இல்லை.

கடுங்கோல் - கடுங்கோலனாகிய வேந்தன், கல்லார் - நீதி நூற்களைக் கல்லாதவர்களை, பிணிக்கும் - தனது ஆட்சிக்கு உறுப்புக்களாகக் கூட்டி வைத்துக் கொள்ளுவான், அது – அந்தக் கூட்டம், அல்லது – அல்லாமல், நிலக்கு – பூமிக்கு, பொறை இல்லை – மிகையான பாரம் வேறு எதுவும் இல்லை.

## 20.கண்ணோட்டம்

**(தன்னுடன் பழகியவரைக் கண்டால் அவர் கூறியதை மறுக்க முடியாமை)**

**1. கண்ணோட்டம் என்னும் கழி பெருங் காரிகை**
**உண்மையான் உண்டுஇவ் வுலகு.**

கண்ணோட்டம் (பழகியவர் மீது அன்புடைமை) என்னும் சிறப்புடைய அழகு இருந்து வருவதால் தான் இந்தவுலகம் இருந்து வருகின்றது.

கண்ணோட்டம் - கண்ணோட்டம்(அன்பால் இரக்கப்படுதல்) என்னும் - என்று சொல்லப்படுகின்ற, கழி – மிகவும், பெரும் - பெரிய, காரிகை – அழகானது, உண்மையால் - இருப்பதால்தான், இவ்வுலகு - இவ்வுலகமானது, உண்டு – உண்டாகி இருந்து வருகின்றது.

**2. கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அ∴திலார்**
**உண்மை நிலக்குப் பொறை.**

உலக நடைமுறை யென்பது கண்ணோட்டத்தினால் நிகழ்வதாகும். ஆதலால் கண்ணோட்டம் இல்லாதவர்கள் இருப்பது இந்நிலத்திற்குப் பாரமாகும்.

உலகியல் - உலக நடைமுறையானது, கண்ணோட்டத்து – கண்ணோட்டம் இருப்பதால் தான், உள்ளது – அன்றாடம் நிகழ்ந்து வருவதாகும், அ∴து – அக்கண்ணோட்டம், இலார் - இல்லாதவர்கள், உண்மை - இருப்பது, நிலக்குப் பொறை – பூமிக்குப் பாரமேயாகும்.

**3. பண்என்னாம் பாடற்கு இயைபுஇன்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.**

பாடுவதற்குப் பொருத்தமில்லாமற் போனால் பண் என்ன பயனையுடையதாகும். அது போலவே கண்ணோட்டமில்லாத கண் என்ன பயனையுடையதாகும்?

பண் - இசையானது, என்ஆம் - என்ன பயனைச் செய்வதாகும், (எப்போது) பாடற்கு – பாடல் தொழிலோடு, இயைபு – பொருத்தம், இன்றேல் - இல்லையானால், கண் - கண்ணானது, என்ஆம் - என்ன பயனைச் செய்வதாகும்? (அதுபோல) கண்ணோட்டம் - கண்ணோட்டம், இல்லாத கண் - இல்லாத கண்கள்.

**4. உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்**
**கண்ணோட்டம் இல்லாத கண்**

அளவு மீறாத கண்ணோட்டம் (தாட்சண்யம்) இல்லாத கண்கள், பார்ப்பதற்கு – பார்ப்பவர்களுக்கு - இருப்பதுபோலத் தோன்றுமேயல்லாமல் என்ன பயனைச் செய்யும்?

அளவினால் - தக்க அளவோடு, கண்ணோட்டம் - கண்ணோட்டம் என்பது, இல்லாத - இல்லாத, கண் - கண்கள், முகத்து – முகத்தினில், உளபோல் - இருப்பதுபோல் தோற்றம் தருவதன்றி, எவன் - வேறு என்ன பயனை, செய்யும் - செய்வன என்று கூறமுடியும்.

**5. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதுஇன்றேல்**
**புண்என்று உணரப் படும்.**

ஒருவனுடைய கண்ணிற்கு அணியும் ஆபரணம் கண்ணோட்டமே யாகும். அந்த ஆபரணம் இல்லையானால், அது அறிவுடையோரால் புண் என்று உணரப்படும்.

கண்ணிற்கு – கண்களுக்கு, அணி – அணியப்படுகின்ற, கலம் - ஆபரணமானது, கண்ணோட்டம் - கண்ணோட்டமாகும், அஃது – அந்த அணிகலம், இன்றேல் - இல்லையானால், (கண்கள்) புண் - புண்கள், என்று – என்பதாக, உணரப்படும் - தெரிந்துணரப்படும்.

**6. மண்ணொடு இயைந்த மரத்துஅனையர் கண்ணொடு**
**இயைந்துகண் ணோடா தவர்.**

கண்ணோட்டம் இருக்க வேண்டிய கண்களோடு பொருந்தி, அதற்குரிய கண்ணோட்டம் இல்லாதவர்கள் மண்ணோடு பொருந்தி இருக்கின்ற மரத்தினை ஒப்பர்.

கண்ணோடு – கண்ணோட்டத்திற்குரிய கண்களோடு, இயைந்து – பொருந்தி வைத்தும், கண்ணோடாதவர் - கண்ணோட்டமில்லாதவர்கள், மண்ணோடு, இயைந்த – பொருந்தி நிற்கும், மரத்து – மரத்தினை, அனையர் - ஒப்பர்.

**7. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்**
**கண்ணோட்டம் இன்மையும் இல்.**

கண்ணோட்டம் இல்லாதவர்கள் கண்ணுடையரும் அல்லர் கண்ணுடையவர்கள் கண்ணோட்டம் இல்லாதிருப்பதும் இல்லை.

கண்ணோட்டம் - கண்ணோட்டம், இல்லவர் - இல்லாதவர்கள், கண் - கண் உடையவரும், இலர் - அல்லர், கண்ணுடையார் - கண்ணுள்ளவர்கள், கண்ணோட்டம் - கண்ணோட்டம், இன்மையும் - இல்லாதவராதலும், இல் - இல்லையாகும்.

**8. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு**
**உரிமை உடைத்துஇவ் வுலகு.**

முறை செய்தலாகிய தனது தொழில் கெடாமல் கண்ணோட்டம் செலுத்த வல்லவர்களுக்கு இவ்வுலகம் உரியதாகிய தன்மையுடையது.

கருமம் - முறை செய்தலாகிய தன்னுடைய செயல், சிகையாமல் - கெடாமல், கண்ணோட – கண்ணோட்டம் செய்ய, வல்லார்க்கு – வல்லவர்களுக்கு, இவ்வுலகு - இந்த உலகம், உரிமை – உரியதாகின்ற தன்மையினை, உடைத்து – உடையது.

**9. ஒறுத்துஆற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்**
**பொறுத்துஆற்றும் பண்பே தலை.**

தமக்குத் துன்பம் கொடுக்கும் தன்மையுடையவரித்திலும், கண்ணோட்டம் உடையவராகிக் குற்றத்தினைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பு தலையான பண்பாகும்.

ஒறுத்துஆற்றும் - தம்மைத் தண்டித்து வருத்துகின்ற, பண்பினார்கண்ணும் - குணமுடையவரிடத்தும், கண்ணோடி – கண்ணோட்டமுடையவராகி, பொறுத்தாற்றும் - குற்றத்தினைப் பொறுத்துக் கொள்ளும், பண்பே தலை – பண்புடைமையே தலையாய தன்மையாகும்.

**10. பெயக்கண்டும் நஞ்சுஉண்டு அமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்.**

பழகியவர்கள் தமக்கு நஞ்சிடுவதைக் கண்டும் மறுக்க முடியாமல் அதனையும் உண்டு பின்பும் அவருடன் பொருந்தி இருப்பார் . யாவராலும் விரும்பத்தக்க கண்ணோட்டத்தினை விரும்புகிறவர்கள்.

நஞ்சு – நஞ்சினை, பெயக்கண்டும் - பழகியவர்கள் இடக் கண்டும், உண்டு – மறுக்க முடியாமல் அதனை உட்கொண்டு, அமைவர் - பின்னும் அவருடன் பழகிச் சேர்ந்து இருப்பார், (யாரெனில்) நயத்தக்க – யாவராலும்

விரும்பப்படுகின்ற, நாகரிகம் வேண்டுபவர் - கண்ணோட்டத்தினை விரும்பி வேண்டுபவர்கள்.

## 21.ஒற்றாடல்

### (ஒற்றர்களின் ஆற்றல் கடமை முதலியன)

**1. ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்**
**தெற்றென்க மன்னவன் கண்.**

ஒற்றர்கள் புகழ் வாய்ந்த நீதி நூல்கள் ஆகிய இரண்டினையும் மன்னன் தனது இரண்டு கண்களாகக் கொள்ளுதல் வேண்டும்.

ஒற்றும் - ஒற்றனும், உரைசான்ற – புகழ் நிறைந்த, நூலும் - நீதி நூலுமாகிய, இவை - இவை, இரண்டு - இரண்டினையும், மன்னவன் மன்னன், கண் - (இரண்டு) கண்களாக, தெற்றென்க – தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

**2. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை - எஞ்ஞான்றும்**
**வல்அறிதல் வேந்தன் தொழில்.**

எல்லாரிடத்திலும் நிகழ்கின்ற எல்லாவற்றையும் நாள்தோறும் ஒற்றனால் விரைவில் அறிந்து கொள்ளுதல் வேந்தனுக்கு உரிய தொழிலாகும்.

எல்லார்க்கும் - எல்லாரிடத்திலும், நிகழ்பவை – நடப்பவை, எல்லாம் - எல்லாவற்றையும், எஞ்ஞான்றும் - எப்போதும், வல்லறிதல் - ஒற்றர்களால் விரைவில் அறிதல், வேந்தன் - வேந்தனுக்கு, தொழில் உரிய தொழிலாகும்.

**3. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்**
**கொற்றம் கொளக்கிடந்தது இல்.**

ஒற்றராலே எல்லாரிடத்திலும் நிகழ்ந்தவற்றை அறிந்து வருமாறு செய்து அதனால் அடையும் பயனை ஆராயாத மன்னவன், வெற்றியடைவதற்குரிய வழி இல்லை.

ஒற்றினான் - ஒற்றாா்களாலே, ஒற்றி – எல்லாரிடத்தும் நிகழ்வதை அறிந்து கொண்டு, பொருள் - அதனால் அடையும் பயனை, தெரியா மன்னன் - ஆராய்ந்தறியாத மன்னன், கொற்றம் - வெற்றி, கொளக்கிடந்தது – அடையக் கிடந்தது, இல் - பிறிது ஒரு நெறி இல்லையாகும்.

**4. வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு**
**அனைவரையும் ஆராய்வது ஒற்று.**

தம்முடைய தொழில் செய்பவர்கள், சுற்றத்தார் பகைவர் என்று சொல்லப்பட்ட அனைவரையும் சொல் செயல்களால் ஆராய்பவனே ஒற்றனாவான்.

தம் - தம்முடைய, வினை – தொழிலினை, செய்வார் - செய்பவர்கள், சுற்றம் - சுற்றத்தார், வேண்டாதார் - பகைவர், என்றாங்கு – என்று சொல்லப்பட்ட, அனைவரையும் - எல்லோரையும், ஆராய்வது ஒற்று - ஆராய்பவனே ஒற்றனாவான்.

**5. கடாஅ உருவொடு கண்அஞ்சாது யாண்டும்**
**ஊகாஅமை வல்லதே ஒற்று.**

அறிதற்குச் செல்லும் ஒற்றன் மற்றவர்களால் சந்தேகிக்கப்படாத உருவத்தோடு பொருந்தி, அவர்கள் சந்தேகித்து அறியத் தொடங்கினால் அஞ்சாமல் நின்று, பகைவர் என்ன செய்தாலும் மனத்தில் இருப்பதைச் சொல்லாதவனே ஒற்றனாவன்.

கடாஅ – பிறரால் சந்தேகிக்க முடியாத, உருவொடு – வடிவத்தோடு அமைந்து, கண்ணஞ்சாது – பிறர் தெரிந்து கொண்டு எதிர்த்து நோக்கினால் அஞ்சாமல், யாண்டும் - எவ்வித முறைகளை அவர்கள் செய்தாலும், உகாமை – மனத்தில் உள்ளதை வெளிப்படுத்தாதிருக்க, வல்லதே ஒற்று – வல்லவனே ஒற்றனாவான்.

**6. துறந்தார் படிவத்தர் ஆகி இறந்துஆராய்ந்து**
**என்செயினும் சோர்விலது ஒற்று.**

முற்றும் துறந்தவராயும், விரத ஒழுக்கினராயும் தோற்றமளித்து அரிய இடங்களில் எல்லாம் புகுந்து ஆய்ந்து, சந்தேகப்பட்டுப் பிடித்து எத்துன்பம் செய்தாலும் தன்னை வெளிப்படுத்தாதவனே ஒற்றனாவான்.

துறந்தர் - முற்றுந்துறந்த துறவியும், படிவத்தர் - விரதவொழுக்கினரும், ஆகி –ஆகிய தோற்றத்தினராகி, இறந்து – போவதற்கரிய இடங்களுக்கெல்லாம் சென்று, ஆராய்ந்து – அனைத்தையும் ஆராய்ந்து, என் - (ஐயுற்றுப் பிடித்து) எத்துன்பத்தினை, செயினும் - செய்தாலும், சோர்விலது – தன்னை வெளிப்படுத்தாதவனே, ஒற்று – ஒற்றன் என்பவைனாவான்.

**7. மறைந்தவை கேட்கவற்று ஆகி அறிந்தவை**
**ஐயப்பாடு இல்லதே ஒற்று.**

அறியப்பட வேண்டியவர்கள், மறைவாகச் செய்த செயல்களை அவர்க்கு உள்ளாயினரால் கேட்கவல்லவனாகி, கேட்டறிந்த செயல்களிலே பிறகு சந்தேகம் இல்லாதபடி துணியவல்லவனே ஒற்றனாவான்.

மறைந்தவை – மறைவாகச் செய்த செயல்களை, கேட்க – கேட்டறிவதில், வற்று – வல்லது, ஆகி – ஆகி, அறிந்தவை – அவ்வாறு உள்ளவரால் கேட்டறிந்தவைகளிலே, ஐயப்பாடு – சந்தேகம், இல்லதே - இல்லாமல் துணிபவனே, ஒற்று – ஒற்றனாவான்.

**8. ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றும்ஓர்**
**ஒற்றினால் ஒற்றிக் கொளல்.**

ஓர் ஒற்றன் தெரிந்து வந்து அறிவித்த காரியத்தையும் மற்றொரு ஒற்றன் கொண்டு வந்த செய்தியுடன் ஒப்புமை கண்டு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஒற்று – ஓர் ஒற்றனாலே, ஒற்றி – மறைவாக அறிந்து வந்து, தந்த பொருளினையும் - அறிவித்த செய்தியினையும், மற்றுமோர் - பின்னும் வேறொரு, ஒற்றினால் - ஒற்றனால், ஒற்றி – அறிந்து கொண்டு, கொளல் - ஒத்திருப்பதை உணர்ந்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

**9. ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர்**
**சொல்தொக்க தேறப் படும்.**

ஒற்றர்களை ஆளும் பொழுது ஒருவரை ஒருவர் அறியாதபடி ஆளுதல் வேண்டும். அவ்வாறுள்ள ஒற்றர்கள், மூவரை வேறு வேறாக ஒரு பொருளினை அறியச் செலுத்தி அம்மூவர் தருவதும் ஒத்திருந்தால் அது மெய் என்று தெரியப்படும்.

ஒற்று – ஓர் ஒற்றன், ஒற்று – மற்றொரு ஒற்றனை (ஒருவனையொருவன்) உணராமை ஆள்க – அறியாதிருக்குமாறு நடத்துதல் வேண்டும், உடன்மூவர் - ஒரு பொருள் பற்றி வெவ்வேறாக அனுப்பப்பட்ட மூவர், சொல் - சொற்களும், தொக்க – ஒத்திருக்குமானால், தேறப்படும் - அது உண்மையென்று அறியப்படுவதாகும்.

**10. சிறப்புஅறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்**
**புறப்படுத்தான் ஆகும் மறை.**

மறைவாகச் செய்தவைகளை அறிந்து கூறிய ஒற்றனுக்குச், செய்யும் சிறப்பினைப் பிறர் அறியுமாறு செய்யாதிருக்க வேண்டும். அப்படிச்

செய்வானானால் மறைத்து வைக்கப்பட வேண்டியதைத் தானே வெளிப்படுத்திவிட்டான் என்பதாகும்.

ஒற்றின்கண் - ஒற்றனிடத்துச் செய்யும், சிறப்பு அறிய – சிறப்பினைப் பிறர் அறிந்து கொள்ளுமாறு, செய்யற்க – செய்யாதிருத்தல் வேண்டும், செய்யின் - பிறர் அறியச் செய்தால், மறை – மறைவாக அடக்கி வைக்கப்பட்ட வேண்டியதை, புறப்படுத்தான் - தானே வெளிப்படுத்தினவன், ஆகும் - ஆகிவிடும்.

## 22. ஊக்கம் உடைமை

## (மனம் தளர்ச்சியின்றி எழுச்சியுடன் செயல் புரிதல்)

**1. உடையர் எனப்படுவது ஊக்கம் அ:்.துஇல்லார்**
**உடையது உடையரோ மற்று.**

ஒருவரை ‘உடையவர்’ என்று சொல்லச் சிறந்தது ஊக்கமேயாகும். அந்த ஊக்கம் இல்லாதார் வேறு யாது உடையவராயினும் உடையவர் ஆவரே? ஆகார் என்பதாம்.

உடையார் - ஒருவரை உடையவர், எனப்படுவது – என்று சொல்லச் சிறந்தது, ஊக்கம் - ஊக்கம் என்னும் மன உணர்ச்சியேயாகும், அ:்.து – அத்தகைய ஊக்கம், இல்லார் - இல்லாதவர்கள், மற்று – வேறு, உடையது - உடையரேயாயினும், உடையரோ – உடையவர்கள் ஆவார்களோ? (ஆக மாட்டார் என்பதாம்.)

**2. உள்ளம் உடைமை உடைமை பொருள்உடைமை**
**நில்லாது நீங்கி விடும்.**

ஊக்கம் உடையவராக இருப்பதே ஒருவர்க்கு நிலையான உடைமையாகும். மற்றபடி பொருள் உடைமை யென்பது நிலையாக நில்லாமல் நீங்கிவிடும்.

உள்ளம் - ஊக்கம், உடைமை – உடைமையே, உடைமை – நிலை பெற்ற உடைமையாகும், பொருள் - செல்வம், உடைமை – பெற்றிருப்பதானது, நில்லாது – நிலைத்திருக்காமல், நீங்கிவிடும் - அகன்று போய்விடும்.

**3. ஆக்கம் இழந்தேம்என்று அல்லாவார் ஊக்கம்**
**ஒருவந்தம் கைத்துடை யார்.**

நிலைபெற்ற ஊக்கத்தினைக் கைப்பொருளாகக் கொண்டவர்கள் இழந்தாராயினும், கைப் பொருளை இழந்தோம் என்று மனம் வருந்த மாட்டார்கள்.

ஒருவந்தம் - நிலைத்திருப்பதாகிய, ஊக்கம் - ஊக்கத்தினை, கைத்து உடையார் - தமது கைப்பொருளாக உடையவர்கள், ஆக்கம் - கைப்பொருளை (செல்வம் ), இழந்தேம் - இழந்து விட்டோம், என்று – என்று நினைத்து, 'அல்லாவார் - மனம் துன்புற மாட்டார்கள்.

**4. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவுஇலா**
**ஊக்கம் உடையான் உழை.**

அசைவில்லாத ஊக்கத்தினை உடையவன் இருக்கும் இடத்திற்குப் பொருள் தானே வழி தேடிக் கொண்டு போகும்.

அசைவு – தளர்ச்சி என்பது, இலா - இல்லாமல், ஊக்கம் - ஊக்கத்தினை, உடையான் - உடைய ஒருவன், உழை - இருக்கும் இடத்திற்கு, ஆக்கம் - செல்வமானது, அதர்வினாய் - தானே வழி கேட்டுக்கொண்டு, செல்லும் - போய்ச் சேரும்.

**5. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத்து அனையது உயர்வு.**

நீர்ப் பூக்களின் தாளினது நீளமானது நின்ற நீரினது அளவினதாக இருக்கும். அதுபோல மக்களுடைய ஊக்கத்தின் அளவினதேயாகும். அவர்களுடைய உயர்ச்சி.

மலர்நீட்டம் - நீர்ப்பூக்களுடைய தண்டுகளின் நீளம், வெள்ளத்தனைய - இருக்கின்ற நீரினது அளவேயாகும். (அதுபோல) மாந்தர் - மக்களுடைய, உள்ளத்தனையது – அவர்கள் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவினதேயாகும், (எதுவென்றால்) உயர்வு – அவர்களுடைய உயர்ச்சியான சிறப்பு.

**6. உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றுஅது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து.**

தாங்கள் கருதுவதெல்லாம் தங்களின் உயர்ச்சியினையே கருதுதல் வேண்டும். அவ்வுயர்ச்சி கூடி வரவில்லையென்றாலும், அக்கருத்துத் தள்ளாத தன்மையினை உடையதாகும்.

உள்ளுவது – நினைப்பது, எல்லாம் - எல்லாம், உயர்வு – உயர்ச்சியினையே, உள்ளல் - நினைத்தல் வேண்டும், அது – அவ்வாறு நினைத்த உயர்ச்சியானது, தள்ளினும் - கைகூடாமல் போனாலும், தள்ளாமை – தள்ளாமையான, நீர்த்து – தன்மையினை உடையதாகும்.

**7. சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதைஅம்பின்**
**பட்டுப்பாடு ஊன்றும் களிறு.**

யானையானது புதையாகிய அம்பினால் புண்பட்டபோதும், தளராமல் நின்று தனது பெருமையினை நிலை நிறுத்தும். அதுபோல ஊக்கம் உடையவர்கள், தாம் கருதிய உயர்ச்சிக்குச் சிதைவு வந்தபோதும் மனம் தளர மாட்டார்கள்.தமது பெருமையினை நிலை நிறுத்துவார்கள்.

களிறு – யானையானது, புதை – கட்டாக இருக்கும், அம்பின் - அம்புகளினாலே, பட்டு – புண்பட்ட போதும், பாடு – தளராமல் தனது பெருமையினை, ஊன்றும் - நிலை நிறுத்தும்,(அதுவே போல) உரவோர் - ஊக்கம் உடையவர்கள், சிதைவிடத்து – தாம் கருதிய உயர்ச்சிக்கு சிதைவு வந்தபோதும், ஒல்கார் - தளராது தமது பெருமையினை நிலைநிறுத்துபவர் ஆவார்கள்.

**8. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து**
**வள்ளியம் என்னும் செருக்கு.**

ஊக்கம் இல்லாதவர்கள் இவ்வுலகத்தாருள் 'யாம் வன்மையுடையேம்' என்று தம்மைத் தாமே மதிக்கும் பெருமையினைப் பெறமாட்டார்கள்.

உள்ளம் - ஊக்கம், இலாதவர் -இல்லாதவர்கள், உலகத்து – உலகத்தாருள், வள்ளியம் - வண்மையுடையேம் (ஈகைக்குணம் உடையேம்) உடையது. என்னும் - என்கின்ற, செருக்கு – தன்மைத் தாமே மதித்தலை, எய்தார் - அடையப்பெற மாட்டார்கள்.

**9. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்.**

எல்லா விலங்கினங்களிலும் தானே பெரிய உடம்பினையுடையது. அதுவேயன்றி கூரிய கொம்புகளையும் (தந்தங்களையும்) உடையது. என்றாலும். அப்படிப்பட்ட யானையனது, ஊக்கம் நிறைந்த சிறய உருவங்கொண்ட புலி தனக்கு எதிப்பட்டால் அதற்கு அஞ்சும்.

பரியது – மற்ற மிருகங்களைவிட பெரிய உடம்பினை உடையது, கூர் - கூர்மையான, கோட்டது – கொம்புகளையும் உடையது, ஆயினும் - என்றாலும், யானை – அந்த யானை, புலி – புலியானது, தாக்குறின் - தன்னை எதிர்த்து வந்தால், வெரூஉம் - பயப்படும்.

**10. உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கைஅ.்.து இல்லார்**
**மரமக்கள் ஆதலே வேறு.**

ஒருவர்க்குத் திண்ணிய அறிவானது ஊக்கம் மிகுந்திருப்பதேயாகும். அந்த ஊக்கம் இல்லாதவர்கள் மக்களாக மாட்டார்கள்: மரங்களாவார். இயற்கையாக உள்ள மரங்களுக்கும் இவர்களுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், மக்கள் தோற்றமேயாகும்.

ஒருவற்கு – ஒருவருக்கு, உரம் - திண்மையான அறிவென்பது, உள்ள – ஊக்கம், வெறுக்கை – நிறைந்திருப்பதேயாகும், அ.்.து – அந்த ஊக்கம், இல்லார் - இல்லாதவர்கள், மரம் - மரங்களாவர் (மக்களாகார்) வேறு – (இயற்கை மரங்களுக்கும் இந்த மரங்களுக்கும்) வேறுபாடு என்னவென்றால், மக்களாதலே – மக்களுக்குள்ள வடிவத்தில் இவர்களும் இருப்பதேயாகும்.

## 23.மடியின்மை

## (சோம்பல் இல்லாத தன்மை)

**1. குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்**
**மாசுஊர மாய்ந்து கெடும்.**

தான் பிறந்த குடியென்னும் அணையா விளக்கு ஒருவனுடைய சோம்பல் என்னும் மடியாகிய இருள் அடர மழுங்கிக் கெடுவதாகும்.

குடி - தான் பிறந்தகுடி, என்னும் - எனப்படுகின்ற, குன்றா – அனையாத விளக்கம் - விளக்கானது, மடி – சோம்பல், என்னும் - என்கின்ற, மாசு - இருளானது, ஊர – அடர்ந்து நெருங்க, மாய்ந்து – மழுங்கி, கெடும் - கெட்டுப் போகும்.

**2. மடியை மடியா ஒழுகல் குடியைக்**
**குடியாக வேண்டு பவர்.**

தாம் பிறந்த குடியை மேன்மேலும் உயர்ந்த குடியாகச் செய்ய வேண்டுவோர் சோம்பலினைச் சோம்பலாகவே நினைத்து முயற்சியுடன் ஒழுகுதல் வேண்டும்.

குடியை – தனது குடியினை, குடியா வேண்டுபவர் - உயர்ந்த நற்குடியாக இருக்க விரும்புகிறவர்கள், மடியை – சோம்பல் தன்மையினை, மடியா – சோம்பலாகவே கருதி, ஒழுகல் - முயற்சியுடன் ஒழுகுவார்களாக.

**3. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த**
**குடிமடியும் தன்னினும் முந்து.**

விடவேண்டிய சோம்பலினைத் தன்னுள்ளே வைத்து நடக்கின்ற அறிவில்லாதவன் பிறந்துள்ள குடியானது அவனுடைய காலம் முடிவதற்குள் அழிந்துவிடும்.

மடி – விட்டுவிட வேண்டிய, மடிகொண்டு – சோம்பலினைத் தன்னுள்ளே இருக்க வைத்து, ஒழுகும் பேதை – நடந்து கொள்ளும் அறிவற்றவன், பிறந்தகுடி – பிறந்த்ள்ள குடியானது. துன்னிலும் - அவன் காலம் முடிவதற்குள், முந்து – முன்னமேயே, மடியும் - கெட்டுப் போகும்.

**4. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து**
**மாண்ட உஞற்றுஇ லவர்க்கு.**

சோம்பலிலேயே வீழ்த்தமிழ்ந்து சிறந்த முயற்சி இல்லாதவர்களுக்குத் தனது குடியும் அழிந்து குற்றமும் பெருகிவிடும்.

மடி- சோம்பலிலேயே, மடிந்து – வீழ்த்தமிழ்ந்து, மாண்ட – சிறந்த உஞற்றிலவர்க்கு – முயற்சி இல்லாதவர்களுக்கு, குடிமடிந்து – தனது குடியும் அழிந்து, குற்றம் பெருகும் - குற்றமும் பெருகிவிடும்.

**5. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன்.**

சோம்பலும், விரைந்து செய்ய வேண்டியதை நீட்டித்துச் செய்யும் இயல்பும், மறதியும், தூக்கமும் ஆகிய இந்நான்கும் கெட்டுப் போகும் தன்மையுடையவர்கள் விரும்பி ஏறும் மரக் கலங்களாகும்.

முடி – மடிமைத் தன்மையும், நெடுநீர் - விரைவில் செய்ய வேண்டியதைத் தாமதமாகச் செய்யும் குணமும், மறவி – மறதியும், துயில் - தூக்கமும், நான்கும் - இந்த நான்கும், கெடு – கெட்டழியும், நீரார் - தன்மையினர், காமக் கலன் - விரும்பி ஏறிச் செல்லும் மரக் கலங்களாகும்.

**6. படிஉடையார் பற்றுஅமைந்தக் கண்ணும் மடியுடையார்**
**மாண்பயன் எய்தல் அரிது.**

நிலம் முழுவதனையும் ஆண்டவரது செல்வம் தானே வந்து சேர்ந்த போதும சோம்பல் கொண்டவர்கள் அதனால் சிறந்த பயனை அடைவதில்லையாகும்.

படிஉடையார் - நிலம் முழுவதும் ஆண்டவரது, பற்று – செல்வம், அமைந்தக் கண்ணும் - தானாகவே வந்து அடைந்த போதும், மடி – மடிமைத்தனம், உடையார் - உள்ளவர்கள், மாண் - சிறப்பான, பயன் - பயனை, எய்தல் - அடைதல், அரிது – முடியாததாகும்.

**7. இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து**
**மாண்ட உஞற்றுஇ லவர்.**

சோம்பலினை விரும்பி சிறந்த முயற்சியினை மேற்கொள்ளாதவர்கள், நண்பர்களும் பிறரும் கண்டித்துப் பேசி இகழும் சொல்லினைக் கேட்பவராவர்.

முடி – சோம்பலினை, புரிந்து – விரும்பி மேற்கொண்டு, மாண்ட – சிறப்பு மிக்க, உஞற்றிலவர் - முயற்சியினைக் கொள்ளாதவர்கள், இடிபுரிந்து – பிறர் கண்டித்துப் பேசி, எள்ளும் - இழிவாகப் பேசும், சொல் - சொற்களை, கேட்பார் - கேட்பவர்கள் ஆவார்கள்.

**8. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு**
**அடிமை புகுத்தி விடும்.**

மடியானது நற்குடியில் பிறந்தவனிடத்தில் இருந்து விடுமானால், அது அவனைத் தன்னுடைய பகைவர்களுக்கு அடிமையாகும் தன்மையிமை உண்டாக்கிவிடும்.

மடிமை – மடிமைக் குணம், குடிமைக்கண் - நற்குடியாளனிடம், தங்கின் - இருந்து விடுமேயானால், (அவனை) தன் - தன்னுடைய, ஒன்னார்க்கு – பகைவர்களுக்கு, அடிமை – அடிமையாக்கும் நிலைமையிமை, புகுத்திவிடும் - உண்டாக்கிவிடும்.

**9. குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்**
**முடியாண்மை மாற்றக் கெடும்.**

ஒருவன் தன்னிடமிருந்து மடியென்றும் சோம்பலினை ஒழித்துவிட்டால் அவனுடைய குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள் நீங்கிவிடும்.

ஒருவன் - ஒருவன், மடி – மடியினை, ஆண்மை – ஆளும் தன்மையினை, மாற்ற – நீக்கி விட்டால், குடி – அவனுடைய குடிக்குள்ளும், ஆண்மையுள் - ஆண்மையினுள்ளும், வந்த – வந்த, குற்றம் கெடும் - குற்றங்கள் கெட்டோடும்.

**10. மடிஇலா மன்னவன் எய்தும் அடிஅளந்தான்**
**தாஅயது எல்லாம் ஒருங்கு.**

தன் அடியளவினாலே எல்லா உலகையும் அளந்தவனுடைய பரப்பு முழுவதையும் மடியில்லாத் (சோம்பலில்லாத) மன்னன் ஒரே காலத்தில் ஒருங்கே அடைவான்.

அடி – தனது அடி அளவினாலே, அளந்தான் - எல்லா உலகத்தினையும் அளந்தவன் தாயது – கடந்த பரப்பு, எல்லாம் - முழுவதையும், மடி – சோம்பல்தன்மை, இலா - இல்லாத, மன்னவன் - மன்னன், ஒருங்கு – ஒரே காலத்தில் ஒன்று சேர, எய்தும் - அடைந்து விடுவான்.

## 24.ஆள்வினை உடைமை

## (இடைவிடாத மெய்ம்முயற்சி உடையவனாதல்)

**1. அருமை யுடைத்துஎன்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.**

‘இத்தொழில் செய்து முடிக்க அருமையானது’ என்று எண்ணி மனம் தளராதிருத்தல் வேண்டும் அதனை முடித்தற்கேற்ற பெருமையினைத் தனக்கு முயற்சி உண்டாக்குவதாகும்.

அருமை - இச்செயல் முடிப்பதற்கு அருமைத் தன்மையிமை, உடைத்து – உடையதாக இருக்கின்றது, என்று – என்று கருதி, அசாவாமை – மனம் தளராமை, வேண்டும் - வேண்டியதாகும், பெருமை – அத்தொழிலினைச் செய்து முடிக்கும் பெருமையினை, முயற்சி – முயற்சியானது, தரும் - உண்டாக்கித் தருவதாகும்.

**2. வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**

தொழில் செய்தல் என்னும் குறைபாட்டினைச் செய்யாது விட்டவரை உலகம் விட்டு விட்டது. ஆதலால் செய்யப்படும் தொழிலில் செயலற்று இருப்பதை நீக்குதல் வேண்டும்.

வினை – தொழிலாகிய, குறை – குறைபாட்டினை, தீர்ந்தாரின் - செய்யாது விட்டவரை, உலகு – உலகம், தீர்ந்தன்று – விட்டுவிட்டது,(ஆகையால்) வினைக்கண் - செய்யத்தகும் தொழிலினிடம், வினைகெடல் - செய்யாமல் செயலற்று இருப்பதை, ஓம்பல் -நீக்குதல் வேண்டும்.

**3. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வேளாண்மை என்னும் செருக்கு.**

எல்லோருக்கும் உபகாரம் செய்தல் என்னும் மேம்பாடு, முயற்சி என்று சொல்லப்பட்ட உயர்ந்த குணத்தினிடத்தல் நிலை பெற்றிருப்பதாகும்.

வேளாண்மை – எல்லோருக்கும் உபகாரம் செய்தல், என்னும் - எனப்படுகின்ற, செருக்கு – மேம்பாடு, தாளாண்மை – முயற்சி, என்னும் - என்று கூறப்படும், தகைமைக்கண் - உயர்ந்த குணத்தினிடம், தங்கிற்றே – நிலைபெற்றிருப்பதேயாகும்.

**4. தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வோளாண்மை போலக் கெடும்.**

முயற்சி இல்லாதவன் உபகாரியாக இருக்கும் தன்மையென்பது, படையினைக் கண்டால் அஞ்சுகின்ற பேடி தனது கையில் வாளினை வைத்திருக்கும் தன்மை போல இல்லையாக முடியும்.

தாளாண்மை – முயற்சியுடைமை, இல்லாதான் - இல்லாதவன், வேளாண்மை – உபகாரியாக இருக்கும் தன்மையானது, பேடி – படையினைக் கண்டால் அஞ்சுகின்ற பேடியானவன், கை – தனது கையில், வோளாண்மை போல – வாளினை ஆளும் தன்மைபோல, கெடும் - இல்லையாக முடியும்.

**5. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்துஊன்றும் தூண்.**

தனக்கு இன்பத்தினை விரும்பாதவனாகி தொழில் முடிப்பதையே விரும்புகிறவன் தனது சுற்றத்தாரின் துன்பத்தினை நீக்கிச் சுற்றத்தாராகிய பாரத்தினைத் தாங்கும் தூணாகவும் ஆவான்.

இன்பம் - தனக்கு இன்பத்தினை, விழையான் - விரும்பாதவனாகி, வினை – தொழில் முடிப்பதையே, விழைவான் - விரும்புவான், தன் - தன்னுடைய, கேளிர் - சுற்றத்தார், நண்பர்களுடைய, துன்பம் - துன்பத்தினை, துடைத்து – நீக்கி, ஊன்றும்தூண் - அதனைத் தாங்கும் தூணாகும்.

**6. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

முயற்சியானது செல்வத்தினை வளர்க்கும். அம்முயற்சி இல்லாதிருப்பதானது வறுமையில் கொண்டுபோய் விட்டுவிடும்.

முயற்சி – முயற்சியானது, திருவினை – செல்வத்தினை, ஆக்கும் - வளர்க்கும், முயற்று – அம்முயற்சி, இன்மை - இல்லாமையானது, இன்மை – வறுமையினை, புகுத்திவிடும் - சேர்த்துவிடும்.

**7. மடியுள்ள மாமுகடி என்ப மடியிலான்**
**தாளுளாள் தாமரையி னாள்.**

கரிய சேட்டையானது ஒருவனுடைய சோம்பலினிடத்திலே வாசம் செய்யும். திருமகள் மடியில்லாதவனுடைய முயற்சியினிடத்தே தங்கி இருப்பாள் என்று அறிந்தோர் சொல்லுவர்.

மாமுகடி – கரியசேட்டையானவள், மடிஉளாள் - ஒருவனுடைய சோம்பலின் கண்ணே இருப்பவளாவாள், தாமரையினாள் - தாமரையினாள் என்னும் திருமகள், மடி – சோம்பல், இலான் - இல்லாதவனுடைய, தாள் - முயற்சியினிடத்தில், உளான் என்ப - இருப்பாள் என்று அறிந்தோர் சொல்லுவர்.

**8. பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து**
**ஆள்வினை இன்மை பழி.**

பயனைத் தருவதாகிய விதி இல்லாமை ஒருவதற்குப் பழி ஆகாது. ஆறிய வேண்டியவற்றை அறிந்து முயன்று தொழில் செய்யாமையே பழியாகும்.

பொறி – பயனைத்தரும் விதி, இன்மை - இல்லாமையானது, யார்க்கும் - எவர்க்கும் பழி – பழி, அன்று – அல்ல, அறிவு – அறியவேண்டுவனவற்றை, அறிந்து – அறிந்து தெரிந்து, ஆள்வினை – முயன்று தொழில் செய்தல், இன்மை - இல்லாதிருப்பதே, பழி – ஒருவருக்குப் பழியாகும்.

**9. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.**

முயன்ற தொழில் ஊழ்வினையால் கருதிய பயனைத் தராமல் போனாலும், வருந்திய வருத்தத்தின் கூலி அளவு பயனைத் தரும் வீண் போகாது.

தெய்வத்தான் - ஊழ்வகையான், ஆகாது – கருதிய பயனைத் தாராதாயினும், முயற்சி – முயற்சியானது, தன் - தனக்கு இடமாகிய, மெய் -

உடம்பு, வருந்த – வருந்திய வருத்தத்தின், கூலி - கூலி அளவு, தரும் - பயனைத் தருவதாகும்.(வீண் போகாது).

**10. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்**
**தாழாது உஞற்று பவர்.**

ஊழ்வினைச் செயலுக்கு இளைக்காமல் தொழிலில் தாழ்வில்லாமல் முயற்சி செய்பவர்கள், பயனை விளக்குவதாகிய ஊழினையும் புறங் காண்பர்.

உலைவு – தளர்ச்சி, இன்றி – இல்லாமல், தாழாது – தாழ்வு இல்லாமல், உஞற்றுபவர் - தொழிலில் முயற்சி செய்வோர், ஊழையும் - பயனை விலக்குகின்ற ஊழையும், உப்பக்கம் - புறமாகிய பின்பக்கம், காண்பர் - காண்பார்கள்.

## 25.இடுக்கண் அழியாமை

## (தனக்குத் துன்பம் வந்தபோது கலங்காமை)

**1. இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அஃதொப்பது இல்.**

ஒருவன் தனக்கு இடுக்கண் (துன்பம்) வந்தபோது அதற்கு அழியாமல் உள்மகிழ்தல் வேண்டும். அத்துன்பத்தினை மேன்மேலும் நெருக்க வல்லது, அம்மகிழ்ச்சி போன்றது வேறு எதுவும் இல்லை.

இடுக்கண் வருங்கால் - துன்பமானது வந்தபோது, நகுக – மனம் கலங்காமல் உள்மகிழ்தல் வேண்டும், அதனை – அத்துன்பத்தினை, அடுத்து – தொடர்ந்து மேன்மேலும், ஊர்வது – மனவெழுச்சியால் போக்கக்கூடிய, அஃது – அம்மகிழ்ச்சியினை, ஒப்பது – போன்றது, இல் - வேறு எதுவும் இல்லையாகும்.

**2. வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தின் உள்ளக் கெடும்.**

வெள்ளம் போலக் கரையில்லாத துன்பங்கள் (இடும்பைகள்) எல்லாம், அறிவுடையவன் தனது உள்ளத்தினாலே ஒன்றனை நினைத்துப் பார்க்க அப்பொழுதே கெடும்.

வெள்ளம் - வெள்ளத்தினை, அனைய – போன்ற, இடும்பை – (கரையில்லாத) துன்பம் எல்லாம், அறிவுடையான் - அறிவுள்ளவன், உள்ளத்தினை – தனது மனத்தினில், உள்ள – ஒன்றனை நினைக்கக், கெடும் - அப்போதே கெட்டுவிடும்.

**3. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்.**

தொழில் செய்யும்போது இடையில் வந்த துன்பங்களுக்குத் துன்பப்படாதவர்கள், வந்த அத்துன்பங்களுக்குத் துன்பத்தினை உண்டாக்கி விடுவர்.

இடும்பைக்கு – துன்பத்திற்கு, இடும்பை – துன்பம், படாஅதவர் - அனுபவிக்காதவர், இடும்பைக்கு – வந்த அந்தத் துன்பத்திற்கு, இடும்பை படுப்பர் - துன்பத்தினை உண்டாக்கி விடுவர்.

**4. மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற**
**இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.**

விலக்கிய இடங்களில் எல்லாம் வண்டியினைப் பெருமுயற்சியுடன் இழுத்துச் செல்லுகின்ற மாட்டினைப் போல, தொழிலினை முயன்று செய்து கொண்டு போகின்றவனைத் துன்பறுத்தும் துன்புறுத்தும் துன்பம், தானே துன்பப்படும்.

மடுத்த – விலக்கித் தடுத்த, வாய் எல்லாம் - வழியான இடங்களில் எல்லாம், பகடு – (வண்டியினை இழுத்துச் செல்லும்) மாடு, அன்னான் - போன்றவனை, உற்ற – வந்தடைந்த, இடுக்கண் - துன்பமானது, இடர்ப்பாடு – தானே துன்பப்படுவதை, உடைத்து – உடையதாகும்.

**5. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கண் படும்.**

இடைவிடாமல் துன்பங்கள் மேன்மேல் வந்தாலும், தன் மனத்தில் உள்ள கோட்பாட்டினை விடாதவனிடம் வந்த துன்பங்கள் தாமே துன்பப்படும்.

அடுக்கி - இடைவிடாமல் மேன்மேல், வரின் - வந்து கொண்டிருந்தாலும், அழிவு – தனது உள்ளக் கோட்பாடு கெடுதல், இலான் - இல்லாதவனை, உற்ற – வந்தடைந்த, இடுக்கண் - துன்பமானது, இடுக்கண்படும் - துன்பப்பட்டு மறையும்.

**6. அற்றேம்என்று அல்லற் படுபவோ பெற்றேம்என்று**
**ஓம்புதல் தேற்றா தவர்.**

செல்வம் பெற்றிருந்த காலத்தில் உலோபியாக இருப்பதை அறியாதவர்கள், வறுமையுற்ற காலத்தில் மனத்தினாலே துன்பப்படுவார்களோ? படமாட்டார்கள்.

பெற்றோம் - செல்வம் பெற்றுள்ளோம், என்று – என்பதை நினைத்து, ஓம்புதல் - (செல்வக் காலத்தில்) உலோபத்தன்மையினை, அறியாதார் - அறியாதவர்கள் (ஈகைத் தன்மையில் இருந்தவர்கள்), அற்றேம் - பொருளின்றி வறியரானோம், என்று – என்று நினைத்து, அல்லல் - மனத்தால் துன்பம், படுபவோ – அடைவார்களோ! (அடையமாட்டார்கள்).

**7. இலக்கம் உடமபுஇடும்பைக்கு என்று கலக்கத்தைக்**
**கையாறாக் கௌ்ளாதாம் மேல்.**

உடம்பானது துன்பம் என்பதற்கு இலக்கு என்பதைத் தெரிந்துணர்ந்து தமக்கு வந்த துன்பத்தினைத் துன்பமாகக் கொள்ளமாட்டார்கள் அறிவுடையார் என்பதாகும்.

உடம்பு இந்த உடம்பானது, இடும்பைக்கு – துன்பத்திற்கு, இலக்கம் - வருகிற குறியிடம், என்று – என்பதனைத் தெளிந்து, கலக்கத்தை தமக்கு வந்த துன்பத்தினை, கையாறா –துன்பம் என்பதாக, கொள்ளாதாம் - கொள்ளமாட்டார்கள், மேல் - அறிவு நிறைந்தவர்கள்.

**8. இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்**
**துன்பம் உறுதல் இலன்.**

தனக்கு இன்பமாகவற்றை விரும்பாமல், துன்பம் வந்தால் இயற்கையென்று உணர்ந்திருப்பவன் தனது முயற்சியால் துன்பம் அடையமாட்டான்.

இன்பம் - இன்பமானவற்றை, விழையான் - விரும்பாமல், இடும்பை – துன்பம் வந்தால், இயல்பு - இது இயற்கை, என்பான் என்று சொல்லுபவன், துன்பம் - எந்நாளும் துன்பம், உறுதல் - அடைதல், இலன் - இல்லையாவான்.

**9. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**
**துன்பம் உறுதல் இலன்.**

தனக்கு இனபம் வந்தபோது அதனை அனுபவித்து மனத்தால் விரும்பாதவன், துன்பம் வந்த போதும் அதனை அனுபவித்து மனத்தால் வருந்தமாட்டான்.

இன்பத்துள் - இன்பம் வந்தபோது, இன்பம் - அந்த இன்பத்தினை, விழையாதான் - மனத்தால் விரும்பாதவன், துன்பத்துள் - துன்பம் வந்தபோதும், துன்பம் - அத்துன்பத்தினை, உறுதல் - மனத்தால் அடைதல், இலன் இல்லையாகும்.

**10. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்**
**ஒன்னார் விழையும் சிறப்பு.**

ஒருவன் தனக்கு வந்த துன்பத்தினையே இன்பமாகக் கற்பித்துக் கொண்டு இருக்கின்ற தன்மையுடையவனானால், அத்தன்மை தனது பகைவர்களும் நன்கு மதிக்கும் உயர்ச்சியினை அவனுக்கு உண்டாக்கும்.

இன்னாமை – வந்த துன்பத்தினையே, இன்பம் - இன்பமாகும், என – என்று, கொளின் - கற்பித்துக் கொள்ளுவானானால், தன் - தன்னுடைய, ஒன்னார் - பகைவர், விழையும் - நன்கு மதிப்பதற்குக் காரணமான, சிறப்பு – சிறப்பானது, ஆகும் - அவனுக்கு உண்டாம்.

## II அங்க இயல்

## 26 அமைச்சு

## (அமைச்சர்களுடைய கடமைகள், ஆற்றல்கள் முதலியன)

**1. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்டது அமைச்சு.**

தொழில் செய்யும்போது அதற்கு வேண்டிய கருவிகளும், அதற்கு ஏற்ற காலமும் செய்யும் வகையும், செய்யப்படும் அரிய தொழிலும் ஆகியவற்றை நன்கு எண்ணவல்லவனே அமைச்சனாவான்.

கருவியும் - தொழில் முடிக்கும் கருவிகளும், காலமும் - ஏற்ற காலமும், செய்கையும் - செய்யும் வழிமுறையும், செய்யும் - அவற்றினால் செய்யப்படும், அரு – அரியதான, வினையும் - தொழிலும், மாண்டது – ஆகியவற்றை நன்கு பொருத்தமாக எண்ணவல்லவனே, அமைச்சு – அமைச்சனாவான்.

**2. வன்கண் குடிகாத்தல் கற்றுஅறிதல் ஆள்வினையோடு**
**ஐந்துடன் மாண்டது அமைச்சு.**

தொழில் செய்யுங்கால் மனம் தளராமையும், குடிகளைக் காத்தலும், நீதி நூல்களைக் கற்று நல்லன தீயனவற்றை அறிதலும், முயற்சியும் ஆகிய இந்த ஐந்தும் சிறப்பாக உடையவனே அமைச்சனாவான்.

வன்கண் - கலங்காத கண்மையும், குடி – குடிமக்களை, காத்தல் - காப்பாற்றுதலும், கற்று – நீதி நூல்களைக் கற்று, அறிதல் - நன்கு அறிதலும், ஆள்வினை – முயற்சியும் ஐந்துடன் - இந்த ஐந்து பண்புகளுடனே, மாண்டது – சிறப்புடன் திருத்தமாக அமையப் பெற்றிருப்பவனே, அமைச்சு – அமைச்சனாவான்.

**3. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தாய்**
**பொருத்தலும் வல்லது அமைச்சு.**

தக்க காலத்தில் பிரிக்க வேண்டியவர்களைப் பிரித்தலும், வேண்டியவர்களை நன்கு ஆதரித்துப் பிரியாமல் வைத்துக் கொள்ளலும், பிரிந்தவர்களைப் பொருத்த வேண்டின் பொருத்தலும் ஆகியவைகளில் வல்லவனே அமைச்சனாவான்.

பிரித்தலும் - பிரிக்க வேண்டியவர்களைப் பிரித்தலும், பேணி – ஆதரவுதந்து இருக்க வேண்டியவர்களைப் பிரியாமல் போற்றி, கொளலும் - வைத்துக் கொள்ளலும், பிரிந்தாரை – முன்பு பிரிந்தவர்களை, பொருத்தலும் - பொருத்த வேண்டின் பொருத்திச் சேர்த்துக் கொள்ளலும், வல்லது அமைச்சு - இவைகளில் வல்லமையாக இருப்பவனே அமைச்சனாவான்.

**4. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு.**

செய்தொழிலில் ஆவன ஆராய்ந்து தெரிதலும், செய்யும்போது வாய்க்கும் திறத்தினை நாடிச் செய்தலும், திட்டமிட்டுச் செய்ய வேண்டியவைகளை முடிவாகச் சொல்லலும் ஆகிய இவைகளில் வல்லவனே அமைச்சனாவான்.

தெரிதலும் - யாவற்றையும் ஆராய்ந்து அறிதலும், தேர்ந்து – தொழில் முடியும் வகையினை நாடி, செயலும் - செய்தலும், ஒருதலையா – முடிவாகவும் துணிவுண்டாகுமாறும், சொல்லலும் - சொல்லுவதிலும், வல்லது அமைச்சு - இவைகளில் வல்லவனே அமைச்சனாவான்.

**5. அறன்அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்**
**திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை.**

செய்ய வேண்டிய அறம் இன்னது என்று அறிந்து ஏற்ற கல்வியால் அமைந்த சொல்லினையுடையவனாக, எக்காலத்திலும் தொழில் செய்யும் திறங்களையுடைய அமைச்சனே மன்னனுக்குச் சிறந்த துணையாவான்.

அறம் அறிந்து – அறம் இன்னது என்பதனை அறிந்து தெரிந்து, ஆன்று – நிறைந்த கல்வியால், அமைந்த – தகுதியாக அமைந்த, சொல்லான் - சொல்லையுடையவனாகி, எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், திறன் - தொழில் புரியும் திறங்களை, அறிந்தான் - அறிந்த அமைச்சனே, தேர்ச்சித் துணை - தலைவனுடைய ஆலோசனைகளுக்கு ஏற்ற துணையாவான்.

**6. மதிநுட்பம் நுா்லோடு உடையார்க்கு அதிநுட்பம்**
**யாவுள முன்நிற் பவை.**

இயற்கையாகிய நுண்ணறிவைச் செயற்கையாகிய நூலறிவோடு உடைய அமைச்சார்க்கு நுட்பத்தினையுடைய செயல்களாக முன் நிற்பவை யாவை உள?

மதி - இயற்கையாகவுள்ள அறிவு, நுட்பம் - நுண்ணியநுட்பத்துடனே, நூலோடு – செயற்கையாகிய நூலறிவினையும், உடையார்க்கு – உடைய அமைச்சர்களுக்கு, அதி – மிகுதிப்பட்ட, நுட்பம் - நுட்பமான ஆலோசனைகள் என்பதாக, முன்நிற்பவை – எதிராக இருக்கக் கூடியவை, யா – எவை, உள - இருக்கின்றன?

**7. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
**இயற்கை அறிந்து செயல்.**

நூல் வழிகளால் தொழில் செய்யும் திறன்களை அறிந்த போதும், அவ்வப்போது நடக்கின்ற உலக இயற்கையினை அறிந்து அதனோடு பொருந்தச் செய்தல் வேண்டும்.

செயற்கை – நூல்கள் வழிகளால் செய்யும் திறத்தினை, அறிந்த – அறிந்திருந்த, கடைத்தும் - இடத்தும், உலகத்து – உலகத்தில், இயற்கை – அவ்வப்போது நடக்கின்ற இயற்கை நிலைமைகளை, அறிந்து செயல் - அறிந்து கொண்டு அதனோடு பொருந்தச் செய்தல் வேண்டும்.

**8. அறிகொன்று அறியான் எனினும் உறுதி**
**உழையிருந்தான் கூறல் கடன்.**

அறிந்து சொல்லியவரது அறிவையும் அழித்து, தலைவன் தானும் அறியாதவனானாலும் அதனால் தலைவனை விட்டு விடாமல் அக்குற்றம் நீக்கி, உறுதியனவற்றைக் கூறுதல் அமைச்சனுக்கு முறைமையாகும்.

அறி – அறிந்து சொல்லியவரது அறிவையும், கொன்று – அழித்து, அறியான் - தலைவனான மன்னன் தானும் அறியாதவன், எனினும் - என்றாலும்,

(அதனல் மன்னனை விட்டுவிடாமல்) உறுதி கூறல் - உறுதியானவைகளைச் சொல்லுதல், உழையிருந்தான் - பக்கத்திலிருக்கும் அமைச்சனுடைய, கடன் - கடமையான முறையாகும்.

**9. பழுது எண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்**
**எழுபது கோடி யுறும்.**

பக்கத்திலிருந்து கொண்டே தவறானவைகளை எண்ணுகின்ற அமைச்சன் ஒருவன், அரசனுக்கு எதிராக நிற்கும் ஓர் எழுபது கோடி பகைவர்களை விடவும் கொடியவனாவான்.

பக்கத்துள் - பக்கத்திலேயே இருந்து கொண்டு, பழுது – தீமையானவைகளைச் செய்ய, எண்ணும் - எண்ணுகின்ற, மந்திரியின் - அமைச்சன் ஒருவனைவிட, (தலைவனுக்கு எதிராக நிற்பவர்) ஓர் - ஒரு, எழுபது கோடி - ஏழாகிய பத்துக்கோடி, தெவ் - பகைவர், உறும் ஆவர் என்பதாம்.

**10. முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்**
**திறப்பாடு இலாஅ தவர்.**

முடிப்பதற்கு ஏற்ற கூறுபாடுகள் அறியாதவர்கள், செய்யப்படும் தொழில்களை முன்பாகவே நன்கு எண்ணிவைத்திருந்தும், செய்யும்போது அவை முடியாதபடியே செய்வார்கள்.

திறப்பாடு - செயலினை முடித்தற்கேற்ற முறைகளை, இலாதவர் - அறிந்தில்லாதவர்கள், முறைப்பட – செய்ய வேண்டிய செயல்களை முன்பாகவே தெளிவுற, சூழ்ந்தும் - ஆராய்ந்து வைத்திருக்கும், முடிவிலவே – செய்யும்போது அவைகள் முடிவுறாதபடியே, செய்வர் - செய்பவராவார்.

## 27. சொல் வன்மை

## (சொற்களைச் சொல்லுவதில் ஆற்றலுடைமை)

**1. நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்**
**யாநலத்து உள்ளதூஉம் அன்று.**

அமைச்சர்க்கு மிகச் சிறந்த குணமாவது நாவின் நலம் உடையவராக இரத்தலாகும். ஆந்நலம் பிற எல்லா நலத்தினையும்விட மேலானதாகும்.

நா – நாவினால் உளதாகிய, நலம் - நன்மை, என்னும் - என்று சிறப்பித்துக் கூறப்படும், நலம் - நலத்தினை, உடைமை – உடையவராக இருத்தல் (வேண்டும்), அந்நலம் - அந்தச் சிறப்பானது. யா நலத்து – பிற

நலங்கள் எல்லாவற்றிலும், உள்ளதூஉம் - அடங்குவதும், அன்று – அல்ல (எல்லாவற்றையும்விட மேலானதாகும்).

**2. ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்**
**காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.**

செல்வப் பெருக்கமும் அழிவும் தமது சொல்லால் வரும். ஆகையால் சொற்களில் சோர்வில்லாமல் போற்றிக் காத்தல் வேண்டும்.

ஆக்கமும் - செல்வப் பெருக்கமும், கேடும் - கெடுதியும், அதனால் - தம் சொல்லால், வருதலால் - வரும் ஆதலால், சொல்லின்கண் - சொற்களிடத்தில், சோர்வு – சோர்வு உண்டாக்காமல், காத்து – பாதுகாத்து, ஓம்பல் - போற்றுதல் வேண்டும்.

**3. கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்.**

நண்பர்களாக இருந்து கேட்கும் உள்ளம் படைத்தவர்களைப் பிணிக்கும் தன்மையுடையதாகி பகைமையால் ஏற்றுக் கொள்ளாதாரும் பகை நீங்கி நண்பராக ஆக விரும்பும் வண்ணம் சொல்லப்படுவதே சொல்லாகும்.

கேட்டார் - நண்பராக ஏற்றுக் கொண்டவரை, பிணிக்கும் - வேறுபடாமல் கட்டுகின்ற, தகைஅவாய் - குணத்தினை விரும்புகின்றதாகவும், கேளாரும் - பகைமையால் ஏற்றுக் கொள்ள மனமில்லாதவரும், வேட்ப – நட்பினை விரும்புமாறு, மொழிவதாம். சொல் - சொல்லப்படுவதே சொல்லாகும்.

**4. திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
**பொருளும் அதனின்ஊங்கு இல்.**

சொல்லின் திறங்களை அறிந்து தெரிந்து சொல்லுதல் வேண்டும். அப்படிச் சொல்வதற்கு மேலான அறமும் பொருளும் வேறு இல்லை என்பதாம்.

சொல்லை – சொல்லினை, திறனறிந்து – திறங்களைத் தெரிந்து, சொல்லுக – சொல்லுதல் வேண்டும், அதனின் - அப்படிச் சொல்லுவதைவிட, ஊங்கு – மேலான, அறனும் - அறமும், பொருளும் - பொருளும், இல் - வேறு இல்லை.

**5. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை**
**வெல்லும்சொல் இன்மை அறிந்து.**

தாம் சொல்லக் கருதிய சொல்லினைப் பிறிதோர் சொல் வெல்லுதற்கு இல்லாமை யறிந்து பின் அச்சொல்லினைச் சொல்லுதல் வேண்டும்.

சொல்லை – தாம் சொல்ல வேண்டிய சொல்லினை, பிறிதோர் - மற்றும் ஒரு, சொல் - சொல், வெல்லும் - வெல்லுகிற, சொல் - சொல்லாக, இன்மை - இல்லாமையினை, அறிந்து – அறிந்து தெரிந்து, அச்சொல்லை – அந்தச் சொல்லினை, சொல்லுக – சொல்லுதல் வேண்டும்.

**6. வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்**
**மாட்சியின் மாசற்றார் கோள்.**

பிறர்க்குத் தாம் சொல்லும்போது, அவர் கேட்பதற்கு விரும்புமாறு சொல்லி, அவர் தமக்குச் சொல்லும்போது அச்சொல்லின் பயனைக் கொண்டறிதல் குற்றம் அற்றவரது துணிபாகும்.

வேட்ப – பிறர் விரும்புமாறு, தாம் - தாங்கள், சொல்லி – எடுத்துச் சொல்லி, பிறர் - மற்றவர்கள், சொல் - சொல்லுகின்ற சொற்களில், பயன் - பயனை, கோடல் - கொள்ளுதல், மாட்சியின் - அமைச்சர்கள் இலக்கணத்தில், மாசு – குற்றம், அற்றார் - இல்லாதவர்களது, துணிபு – துணிபாகும்.

**7. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது.**

தான் எண்ணியவைகளைப் பிறர்க்குச் சொல்லுவதில் வல்லவனாகி, சொல்லுவதில் சோர்வில்லாதவனாகி, சபைக்கு அஞ்சாதவன் எவனோ அவனை மாறுபாட்டினால் வெல்லுதல் யாவர்க்கும் அரிதாகும்.

சொலல் - பிறர்க்குச் சொல்லுவதில், வல்லன் - வல்லவனாக இருந்து, சோர்வு – ஒன்றிலும் சோர்வு, இலன் - இல்லாதவனாகி, அஞ்சான் - அச்சம் இல்லாதவனாகி, (இருப்பவனாகிய) அவனை – அவனை, இகல் - மாறுபாடான பமைமை கொண்டு, வெல்லல் - வெல்லுதல், யார்க்கும் அரிது – எவர்க்கும் அருமையானதாகும்(முடியாததாகும்).

**8. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்துஇனிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின.**

சொல்லப்படுபவற்றை ஒழுங்காகவும் முறையாகவும் இனிதாகவும் சொல்லுகிற வல்லவரைப் பெற்று விட்டால், உலகம் அவற்றை விரைந்து ஏற்றுக் கொள்ளும்.

தொழில் - தொழில்களை (செயல்களை), நிரந்து – ஒழுங்குபடக் கோத்து, இனிது சொல்லுதல் - இனிமையாகச் சொல்லுவதில், வல்லார்ப் பெறின் - வல்லவரைப் பெற்றால், ஞாலம் - உலகமானது, விரைந்து கேட்கும் - அவற்றை விரைவாகக் கேட்டு ஏற்றுக் கொள்ளும்.

**9. பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற**
**சிலசொல்லல் தேற்றா தவர்.**

குற்றமில்லாதவைகளாகச் சில வார்த்தைகளில் சொல்லும் ஆற்றல் அறியாதவர்கள்,பற்பல வார்த்தைகளைத் தொகுத்துச் சொல்ல ஆசைப்படுவார்கள்.

மாசு – குற்றம், அற்ற - இல்லாதவர்களாக, சில – சில சொற்களை, சொல்லல் - ஆற்றலினால் சொல்லுதலை, தேற்றாதார் - அறியாதவர்கள், பல – பற்பல வகையான சொற்களை, சொல்லக் காமுறுவர் - எடுத்துக்கூற ஆசைப்படுவார்கள்.

**10. இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது**
**உணர விரித்துரையா தார்.**

தாம் கற்று வைத்துள்ள நூல்களைப் பிறர் அறியும் வண்ணம் விரித்துரைக்க முடியாதவர்கள், கொத்தாக மலர்ந்திருக்கும் மணமில்லாத மலரினை ஒப்பர்.

குற்றது – தாம் கற்ற நூல்களை, உணர – பிறர் அறியுமாறு, விரித்து – விரிவாகவும் தெளிவாகவும், உரையாதார் - உரைக்க முடியாதவர்கள், இணர் - கொத்தினிடத்தே, ஊழ்த்தும் - மலர்ந்து வைத்தும், நாறா – மணம் இல்லாத, மலர் - பூவினை, அனையர் - ஒப்பர்.

## 28. வினைத்தூய்மை

### (அறமும் பொருளும் தரும் நல்லனவற்றையே செய்தல்)

**1. துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்**
**வேண்டிய எல்லாம் தரும்.**

ஒருவனுக்குத் துணையினது நன்மையாவது செல்வம் ஒன்றினை மட்டும் தரும். தொழிலினது நன்மையாவது அவன் விரும்பிய எல்லாவற்றையும். கொடுக்கும்.

துணை – ஒருவருக்குத் துணையினது, நலம் - நன்மையானது, ஆக்கம் - செல்வத்தினை மட்டும், தரும் - தருவதாகும், வினை – தொழிலினது, நலம் - நன்மையென்பது, வேண்டிய – அவன் விரும்பிய, எல்லாம் தரும் - எல்லாவற்றையும் தரும்.

**2. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை.**

புகழினையும் அறத்தினையும் பயனாகத் தராத தொழில்களை எக்காலத்திலும் ஒழித்து நீக்குதல் வேண்டும்.

புகழொடு – புகழினையும், நன்றி – அறத்தினையும், பயவா – கொடுக்காத, வினை – தொழில்களை, என்றும் - எக்காலத்திலும், ஒருவுதல் - ஒழித்து விடுதல், வேண்டும் - வேண்டுவதாகும்.

**3. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**ஆஅதும் என்னும் அவர்.**

'மேலாகக் கடவோம்' என்று நினைப்பவர்கள் எல்லோராலும் மதிக்கப்படுவதாகிய தமது புகழினைக் கெடுக்கின்ற தொழில்களைச் செய்வதை விடுதல் வேண்டும்.

ஆஅதும் - மேலாகக் கடவோம், என்னும் - என்று எண்ணுகின்ற, அவர் - அவர்கள், ஒளி – தம்முடைய புகழ், மாழ்கும் - கெடுதற்குக் காரணமான, வினை – தொழிலினை, செய் - செய்வதை, ஓதல் - தவிர்த்தல், வேண்டும் - வேண்டுவதாகும்.

**4. இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்**
**நடுக்குஅற்ற காட்சி யவர்.**

அசைவு இல்லாத தெளிவினையுடையவர்கள், தாம் துன்பம் அடைய நேரிட்டாலும் அது நீங்குதற் பொருட்டு இழிவான செயல்களைக் செய்யமாட்டார்கள்.

நடுக்கற்ற – கலக்கமில்லாத, காட்சியவர் - தெளிந்த அறிவினையுடையவர்கள், இடுக்கண் - துன்பம், படினும் - அடைய நேரிட்டாலும்,(அதிலிருந்து தப்புவதற்காக) இளிவந்த - இழிவான தொழில்களை, செய்யார் - செய்ய மாட்டார்கள்.

**5. எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்**

**மற்றுஅன்ன செய்யாமை நன்று.**

'யான் செய்தது எப்படிப்பட்டது?' என்று பின்னர் தானே இரக்கப்படுகின்ற தொழில்களை ஒருக்காலும் செய்யாதிருத்தல் வேண்டும். அப்படி ஒருகால் மயங்கி செய்துவிடுவானேயானால், மீண்டும் அப்படிப்பட்டவற்றைச் செய்யாதிருத்தல் நல்லதாகும்.

எற்று – யான் செய்த செயல் எப்படிப்பட்டது, என்று – என்று நினைத்து, இரங்குப – வருத்தப்படும் தொழில்களை, செய்யற்க – செய்யாதிருத்தல் வேண்டும், செய்வானேல் - ஒரு வேளை தவறிச் செய்வானேயானால், மற்று அன்ன – பிறகு அவ்வாறு தானே வருத்தப்படும் செயல்களை, செய்யாமை நன்று – செய்யாதிருத்தல் நல்லதாகும்.

**6. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை.**

தன்னைப் பெற்ற தாயினது வறுமையினைக் கண்டு இரக்கப்படுகின்றபோதும், அதனைக் காட்டி அறிவுடையோர் பழிக்கும் தொழில்களை ஒருவன் செய்யாதிருக்க வேண்டும்.

ஈன்றாள் - தன்னுடைய தாயினது, பசி – பழியினை, காண்பான் - காணுகின்றவன், ஆயினும் - என்றாலும், (அதை நீக்க) சான்றோர் - அறிவு நிறைந்தோர், பழிக்கும் வினை – பழிக்கின்ற செயல்களை, செய்யற்க – செய்யாதிருத்தல் வேண்டும்.

**7. பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்**
**கழிநல் குரவே தலை.**

தீமையான தொழில்களைக் செய்து அதனால் பழியினைத் தம் மேற்கொண்டு பெற்ற செல்வத்தினைவிடப் பழியினை மேற்கொள்ளாத சான்றோர்கள் அனுபவிக்கும் மிகுந்த வறுமையே உயர்ந்ததாகும்.

பழி – பழியினை, மலைந்து – சுமந்து கொண்டு, எய்திய – அடைந்த, ஆக்கத்தின் - செல்வத்தினைவிட, சான்றோர் - பெரியோர்களின், கழி – மிகுதிப்பட்ட, நல்குரவே – வறுமையே, தலை – உயர்ந்ததாகும்.

**8. கடிந்த கடிந்துஓரார் செய்தார்க்கு அவைதாம்**
**முடிந்தாலும் பீழை தரும்.**

நூலோர் தீயவை யென்று நீக்கிய தொழில்களைப் பொருள் கருதி நீக்காமல் செய்த அமைச்சர்க்கு அவை ஒருவகையில் முடிந்தாலும் துன்பத்தினையே தரும்.

கடிந்த – அறமான நூலோர் விலக்கிய தொழில்களை, கடித்து – தாமும் கடிந்து நீக்கி, ஓரார் - ஒழிக்காதவராகி, செய்தார்க்கு – பொருள் கருதி செய்தவர்களுக்கு, அவைதாம் - அத்தொழில்கள்தாம், முடிந்தாலும் - ஒருவகையில் முடிந்தாலும், பீழைதரும் - துன்பத்தினையே தருவதாகும்.

**9. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்**
**பிற்பயக்கும் நற்பா லவை.**

ஒருவன் தீய தொழில்களைச் செய்து பிறர் அழுது இரங்கத் தான் கொண்டு சென்ற பொருள் எல்லாம், அவனே இரங்கி அழப் போய்விடும். தூய வழியில் சேர்த்த பொருள் முன்பு இழக்க நேரிட்டாலும் பின்பு வந்து நற்பயனைக் கொடுக்கும்.

அழ – பிறர் அழுது இரங்க (வருந்த), கொண்ட – தான் சேர்த்துக் கொண்ட, எல்லாம் - பொருள் எல்லாம், அழப் போம் - சேர்த்தவன் அழுது இரங்க அவனை விட்டுப் போய்விடும், நற்பாலவை – நல்ல செயல்களால் வந்தவை (வந்த பொருள்கள்), இழப்பினும் - முன்பு இழந்து விட்டான் என்றாலும், பிற்பயக்கும் - அவனுக்குப் பின்பு வந்து பயனைத் தரும்.

**10. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்**
**கலத்துள்நீர் பெய்துஇரீஇ யற்று.**

தீய தொழில்களால் பொருள் சேர்த்து அதற்குப் பாதுகாப்புச் செய்தல் என்பது, பச்சைமண் பாத்திரத்திற்குள்ளே நீரைப் பெய்து அதனைப் பாதுகாப்பது போலாகும்.

சுலத்தால் - தீய தொழில்களினால், பொருள் - பொருளினை, செய்து – சேர்த்துக் கொண்டு, ஏமார்த்தல் - அதனைப் பாதுகாத்தல், பசுமண் - பசிய மண்ணாலான, கலத்துள் - பாத்திரத்திற்குள், நீர் - நீரினை, பெய்து – ஊற்றி, இரீஇயற்று – அதனைப் பாதுகாத்தற்குச் சமமாகும்

## 29. வினைத்திட்பம்

## (தொழில் செய்தற்கு வேண்டிய மனத்திண்மை)

**1. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**

**மற்றைய எல்லாம் பிற.**

தொழில் செய்யும்போது திண்மையென்று சொல்லப்படுவது அதனை முடித்தற்குரியவனுடைய மனத்திண்மையே யாகும். அதுவல்லாத மற்றவையெல்லாம் திண்மையென்று சொல்லப்பட மாட்டாவாம்.

வினை – தொழில் செய்வதில், திட்பம் - திண்மையான வலிமை, என்பது – என்று சொல்லப்படுவது, ஒருவன் - செய்கின்ற ஒருவனுடைய, மனத்திட்பம் - மனத்தின்கண் கொண்ட வலிமையேயாகும், மற்றைய – அது இல்லாத மற்ற வல்லமை, எல்லாம் - எல்லாம், பிற – தொழிலுக்கு வலிமையென்று சொல்லப்படுபவை அல்லவாம்.

**2. ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்**
**ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்.**

நீதி நூல்களை ஆராய்ந்தவர்களுடைய துணிவு என்னவென்றால், பழுதுபடும் தொழில்களைச் செய்யாமையும், செய்தொழிலில் ஒருகால் பழுது உண்டானால் அதற்கு மனம் தளராமையும் ஆகிய இரண்டின் வழியேயாகும்.

ஆய்ந்தவர்கோள் - நீதி நூல்களை அறிந்தவரது துணிவு, (என்னவென்றால்) ஊறு – பழுதுண்டாகும் வினைகளை, ஒரால் - செய்யாதிருத்தலும், உற்றபின் - செய்யும் தொழிலில் பழுது உண்டானபோது, ஒல்காமை – அதனை நினைத்து மனம் தளராமையும்(ஆகிய) இவ்விரண்டின் - அந்த இரண்டினுடைய, ஆறு என்பர் - வழியாகும் என்று கூறுவர்.

**3. கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்**
**எற்றா விழுமம் தரும்.**

செய்யப்படும் தொழில்களை முடிந்த பிறகே தெரியுமாறு செய்தல் வேண்டும். இடையில் மறைத்துக் செய்வதே திண்மையாகும். இடையில் தெரிந்து விடுமானால் நீங்காத துன்பத்தினைக் கொடுக்கும்.

கடை – தொழில் முடிந்த பிறகே, கொட்க – தெரியுமாறு, செய்தக்கது – செய்வதுதான், ஆண்மை – வலிமை என்பதாகும், இடை – (அவ்வாறில்லாமல்) இடையிலே, கொட்கின் - வெளிப்பட்டுத் தெரிந்துவிடுமானால், எற்றா – நீங்காத, விழுமம் தரும் - துன்பத்தினைத் தந்துவிடும்.

**4. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்.**

'யான் இத்தொழிலினை இவ்விதத்தில் செய்து முடிப்பேன்' என்று சொல்லுதல் யார்க்கும் எளிதானதாகும். அதனை அவ்வாறே செய்தல் யார்க்கும் அரியதாகும்.

சொல்லுதல் - தொழில் செய்வதைச் சொல்லால் சொல்லுதல், யார்க்கும் எளிய – யாவர்க்கும் எளிமையானதேயாகும், (ஆனால்) சொல்லிய வண்ணம் - சொல்லியபடியே, செயல் அரியவாம் - செய்து முடித்தல் என்பது அரியதாகும்.

**5. வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்**
**ஊறுஎய்தி உள்ளப் படும்.**

எண்ணத்தால் சிறப்படைந்து மாட்சிமைப்பட்ட அமைச்சரது தொழில் வலிமையானது வேந்தனிடத்தில் செல்வத்தினையும் புகழினையும் உண்டாக்குவதால் எல்லோராலும் நன்கு மதிக்கப்படும்.

வீறு – எண்ணத்தால் சிறப்பினை, எய்தி – அடைந்து, மாண்டார் - பெருமையுற்ற அமைச்சரது, வினைத்திட்பம் - தொழில் திண்மையானது, வேந்தன்கண் - ˙வேந்தனிடத்தில், ஊறு எய்தி – ஆக்கமும் புகழும் உண்டாக்குவதனாலே, உள்ளப்படும் - எல்லோராலும் நன்கு மதித்துப் பாராட்டப்படும்.

**6. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.**

ஒன்றை நினைத்தவர்கள் அவற்றிற்குக் காரணமான தொழிலின்கண் திண்மையுடைவராக இருந்தால், தாம் அடைவதற்கு நினைத்த எல்லாவற்றையும் நினைத்தபடியே அடைய முடியும்.

எண்ணியார் - எண்ணியவர்கள், திண்ணியராக-எண்ணிய தொழிலினிடத்தில் வலிமையுடையவராக, பெறின் - இருந்து விட்டால், எண்ணிய – எண்ணப்பட்டவை களையெல்லாம், எண்ணியாங்கு – எண்ணியவாறே, எய்துப – அடையப் பெறுவார்கள்.

**7. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து.**

உருளுகின்ற பெரிய தேருக்கு அச்சிலுள்ள ஆணிபோல தொழிலின்கண் திண்மையுள்ளவர்களை இவ்வுலகம் பெற்றிருக்கின்றது. ஆதலால் ஒருவரை அவருடைய தோற்றத்தின் சிறுமை கண்டு இகழாதிருத்தல் வேண்டும்.

உருள் - உருளுகின்ற, பெரும் - பெரிய, தேர்க்கு – தேரினுக்கு, அச்சாணி – அச்சில் உள்ள ஆணி, அன்னார் - போன்ற தொழில் வலிமையுள்ளவரை, உடைத்து - இவ்வுலகம் உடையது, (ஆதலால்) உருவு – ஒருவருடைய உருவத்தினை, கண்டு – பார்த்து, எள்ளாமை - இகழாதிருத்தல், வேண்டும் - வேண்டப்படுவதாகும்.

**8. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கம் கடிந்து செயல்.**

மனம் தெளிந்து செய்வதற்குத் துணிந்த தொழிலினிடத்து அசைதலின்றி நீட்டித்துவிடாமல் செய்தல் வேண்டும்.

கலங்காது – மனம் கலங்காமல் தெளிந்து, கண்ட – செய்து முடிக்கத் துணிந்த, வினைக்கண் - தொழிலில், துளங்காது – அசைவில்லாமல் (மனத் திட்பத்துடன்) தூக்கம் - தொழிலை நீட்டித்துச் செய்வதை, கடிந்து – நீக்கி, செயல் - செயதல் வேண்டும்.

**9. துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி**
**இன்பம் பயக்கும் வினை.**

முதற்கண் மெய்ம்முயற்சியால் தனக்கு மிகுந்த துன்பம் வந்தாலும் அதுகண்டு தளராமல் முடிவில் இன்பம் பயக்கும் தொழிலினைத் திட்பமுடையவராகச் செய்தல் வேண்டும்.

துன்பம் - தொடக்கத்தில் துன்பமானது, உற – மிகுதியாக, வரினும் - வந்தாலும், (அதனால் மனம் தளராமல்) இன்பம் - இன்பத்தினை, பயக்கும் - முடிவின்கண் தருகின்ற, வினை – தொழிலினை, துணிவாற்றி – துணிந்து கலங்காமல் வலிமையுடன், செய்க – செய்தல் வேண்டும்.

**10. எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம**
**வேண்டாரை வேண்டாது உலகு.**

தொழிலின் திட்பங்களை, ‘இது நமக்குச் சிறந்தது’ என்று கொள்ளாதவர்கள் வேறு பல திட்பங்கள் உடையவர்களாக இருந்தாலும் உயர்ந்தோர் நன்கு மதிக்கமாட்டார்கள்.

வினைத் திட்பம் - தொழிலில் திண்மையினை, வேண்டாரை – விரும்பி மேற் கொள்ளாதவர்களை, எனைத்திட்பம் - (அதுவன்றி) வேறு பல வலிமைகள் எல்லாம் (அவர்கள்), எய்தியக் கண்ணும் - உடையவராகப் பெற்றிருந்தபோதிலும், உலகு – உயர்ந்தோர், வேண்டாது – நன்கு – மதிக்கமாட்டார்கள்.

## 30. வினை செயல்வகை

## (தொழிலினைச் செய்யும் திறம்)

**1. சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு**
**தாழ்ச்சியுள் தங்குதல் தீது.**

ஆலோசனை செய்வதற்கு எல்லை யென்பது யாதென்றால் ஆலோசிப்பவன் ‘இனி இது தவறாது’ என்ற துணிவினைப் பெறுதலாகும், அப்படித் துணிந்தபின் நீட்டிக்கப்படுமானால் அது குற்றமுடையதாகிவிடும்.

சூழ்ச்சி முடிவு – ஆலோசனை என்பதற்கு எல்லை எதுவென்றால், துணிவு – மேற்கொண்ட தொழில் தப்பாது என்னும் துணிவினை, எய்தல் - பெறுதலாகும், அத்துணிவு – அவ்வாறு துணிவு பெற்றபின், தாழ்ச்சியுள் - நீட்டித்துச் செய்வதில், தங்குதல் தீது –தங்கிவிடுமானால் அது குற்றமுடையதாகும்.

**2. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை.**

நீட்டித்துச் செய்யும் பகுதியான தொழில்களை நீட்டித்துச் செய்தல் வேண்டும். நீட்டியாது செய்யவேண்டிய தொழில்களை நீட்டியாமல் செய்தல் வேண்டும்.

தூங்கி – நீட்டித்து, செயற்பால – செய்ய வேண்டிய தன்மையான தொழிலினை, தூங்குக – நீட்டித்துச் செய்தல்வேண்டும், தூங்காது – நீட்டியாமல், செய்யும் -செய்ய வேண்டிய, வினை – தொழில்களில், தூங்கற்க – நீட்டியாமலும் தாமதிக்காமலும் இருத்தல் வேண்டும்.

**3. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்**
**சொல்லும்வாய் நோக்கிச் செயல்.**

தொழில் செய்யும் போது முடிந்த இடத்தில் எல்லாம் தண்டத்தினால், அதாவது போரினால் செய்தல் நன்று. அது முடியாதபோது மற்ற வழிமுறைகளினால் செய்தல் நல்லது.

ஒல்லும் - முடியக்கூடிய, வாய் எல்லாம் - இடத்தில் எல்லாம், வினை தண்டத்தினால் செய்தல், நன்று – நல்லதாகும், ஒல்லாக்கால் - அது முடியாதவிடத்தில், செல்லும் - அது முடிவதாகிய, வாய் நோக்கி – வேறு வழிகளைக் கருதி, செயல் - செய்தல் வேண்டும்.

**4. வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்**
**தீயெச்சம் போலத் தெறும்.**

செய்யத் தொடங்கிய தொழில், ஒழிக்க வேண்டிய பகை ஆகிய இரண்டிலும் எச்சமாக (மீதியாக) வைத்தால், அவைகள் மிச்சமாக விட்டுவிட்ட தீயானது வளர்ந்து விடுவது போல வளர்ந்து கெடுக்கும்.

வினை – எடுத்துக் கொண்ட தொழில், பகை – பகை, என்ற – என்று சொல்லப்பட்ட, இரண்டின் - இரண்டினுடைய, எச்சம் - குறை (மிச்சமாக வைத்தல்), நினையுங்கால் - ஆராய்ந்து பார்த்தால், தீ – நெருப்பினது, எச்சம் போல் - மிச்சம் போல, தெறும் - பிறகு வளர்ந்து கெடுப்பதாகும்.

**5. பொருள்கருவி காலம் வினைஇடனோடு ஐந்தும்**
**இருள்தீர எண்ணிச் செயல்.**

தொழில் செய்யும்போது பொருளும், கருவியும், காலமும், தொழிலும், இடமும் ஆகிய இந்த ஐந்தினையும் மயக்கம் நீங்க எண்ணிச் செய்தல் வேண்டும்.

பொருள் - பொருளினையும், கருவி – செய்யும் கருவியினையும், காலம் - தகுந்த காலத்தினையும், வினை – செய்யப்படும் தொழிலினையும், இடன் - இடத்தினையும், ஐந்தும் - ஆகிய ஐந்தினையும், இருள் - இவைகளில் மயக்கம், தீர – நீங்கித் தெளிவு பெற்று, எண்ணிச் செயல் - நன்கு சிந்தித்துச் செய்தல் வேண்டும்.

**6. முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்**
**படுபயனும் பார்த்துச் செயல்.**

தொழில் செய்யும்போது அது முடிவதற்குண்டான முயற்சியும், அதற்கு உண்டாகும் இடையூறும், வினை முடிந்த பிறகு அடைகின்ற பெரிய பயனும், சீர்தூக்கிப் பார்த்துச் செய்தல் வேண்டும்.

முடிவும் - தொழில் முடிப்பதற்கேற்ற முயற்சியினையும், இடையூறும் - செய்யுங்கால் வரும் இடையூற்றினையும், முற்றியாங்கு – வினை முடிந்த பிறகு,

எய்தும் - அடைகின்ற, படு – பெரிய, பயனும் - பயனையும், பார்த்துச் செயல் - சீர்தூக்கிப் பார்த்துச் செய்தல் வேண்டும்.

**7. செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை**
**உள்ளறிவான் உள்ளங் கொளல்.**

தொழில் செய்யத் தொடங்கியவன் தொழில் செய்யும் முறைமை எவ்வாறென்றால், அத்தொழிலினை முன்பு செய்தவனுடைய உளப்பாட்டினைத் தான் அறிந்து நடந்து கொள்ளுதலாகும்.

செய்வினை – செய்யப்படுகின்ற தொழிலினை, செய்வான் - செய்யப் புகுந்தவன், செயல் - செய்ய வேண்டிய, முறை – வழிமுறை யென்னவென்றால், அவ்வினை – அத்தொழிலினை, உள் அறிவான் - முன்பு செய்து முடித்தவனுடைய, உள்ளம் - கருத்தினை, கொளல் - தான் அறிந்து தெரிந்து கொள்ளுவதாகும்.

**8. வினையான் வினைஆக்கிக் கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று.**

செய்கின்ற ஒரு தொழிலினைக் கொண்டு பிறிதொரு தொழிலினையும் முடித்துக் கொள்ளுதல் வேண்டும். அப்படிச் செய்வது, மதம் பிடித்த யானை யொன்றினாலே மற்றுமோர் யானையினைப் பிடிப்பது போன்றதாகும்.

வினையான் - செய்து கொண்டிருக்கும் ஒரு தெழிலினாலே, வினை – பிறிதொரு தொழிலினையும், ஆக்கி – முடித்து, கோடல் - கொள்ளுதல் வேண்டும், ( அப்படிச் செய்வது) நனை – மதத்தால் நனைந்த, கவுள் - கபோலத்தினையுடைய, யானையால் - ஒரு யானையினால், யானை – மற்றொரு யானையினை, யாத்தற்று – பிடித்துக் கட்டியதற்குச் சமமாகும்.

**9. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே**
**ஒட்டாரை ஒட்டிக் கொளல்.**

தொழில் செய்பவன் தனது நண்பர்களுக்கு இனியன செய்வதைக் காட்டிலும் விரைவாகச் செய்ய வேண்டியது என்னவென்றால், தனது பகைவரோடு பகைவராக இருப்பவர்களைத் தனக்கு நட்பாக்கிக் கொள்ளுதலாகும்.

நட்டார்க்கு – நண்பர்களுக்கு, நல்ல - இனியவற்றை, செயலின் - செய்வதைக் காட்டிலும், விரைந்ததே – விரைவாகச் செய்யப்பட வேண்டியது,

(யாதெனில்) ஒட்டாரை – தனது பகைவருடைய பகைவரை, ஒட்டி – தனக்கு நண்பராக, கொளல் - கொள்ளுதலாகும்.

**10.உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்**
**கொள்வர் பெரியார்ப் பணிந்து.**

சிறிய நாட்டின் அமைச்சர் தம்மின் வலியவரால் எதிர்க்கப்பட்டபோது தனது பகுதிகள் நடுங்குவதற்கு அஞ்சி, அந்நிலைக்கு வேண்டுவதான வாய்ப்பு உண்டானால் அவரைத் தாழ்ந்து அதனை ஏற்றுக் கொள்ளுவார்கள்.

உறை – ஆளும் இடம், சிறியார் - சிறியரானவர்கள்,(தம்மைவிட வலியவர் தாக்கியபோது) உள் - தமது நாட்டின் பகுதிகள், நடுங்கல் அஞ்சி – நடுங்குவதைக் கண்டு அஞ்சி, குறை பெறின் - வாய்ப்புக்கிட்டுமானால், பெரியார் - அவ்வாறு பெரியாராயினோரை, பணிந்து கொள்வர் - தாழ்ந்து அதனை ஏற்றுக் கொள்வர்.

## 31.தூது

## (தூது செல்வோர் தன்மைகள்)

**1அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்**
**பண்புஉடைமை தூதுஉரைப்பான் பண்பு.**

எல்லோரிடத்திலும் அன்புடையவராக இருத்தலும், உயர்ந்த குடும்பத்தில் பிறந்திருத்தலும், வேந்தன் விரும்புகின்ற பண்புடையவராக இருத்தலும் ஆகிய இத்தன்மைகள் தூது செல்வோர்க்குரிய இலக்கணமாகும்.

அன்புடைமை – அன்புடைமையாக இருந்தலும், ஆன்ற – சிறந்த உயர்ந்தோர், குடிப்பிறத்தல் - குடியில் பிறத்தலும், வேந்து – மன்னர், அவாம் - விரும்பும், பண்புடைமை – குணமுடையவாக இருத்தலும், தூது – தூதுவனாகச் சென்று, உரைப்பான் - செய்தி சொல்லுவோனுக்கு, பண்பு – நற்பண்புகளான இலக்கணமாகும்.

**2.அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பார்க்கு**
**இன்றி யமையாத மூன்று.**

மன்னரிடம் நிறைந்த அன்புடைமையும், அறிவுடைமையும், ஆராய்ந்து சொல்லும் வன்மையும் என தூதுஉரைப்பார்க்கு இன்றியமையாத குணங்கள் மூன்று.

அன்பு – தலைவனிடத்தில் அன்பும், அறிவு – நிறைந்த அறிவுடைமையும், ஆராய்ந்த – ஆராய்ந்தறிந்த, சொல்வன்மை – எடுத்துச் சொல்லும் சொல்வன்மையும், தூது – தூதுவராகச் சென்று, உரைப்பார்க்கு – உரைப்பவர்களுக்கு, இன்றியமையாத மூன்று - இருந்து ஆகவேண்டிய மூன்று குணங்களாகும்.

**3.நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்**

**வென்றி வினையுரைப்பான் பண்பு.**

வேலினையுடைய வேற்றரசனிடம் சென்று தம் அரசனுக்கு வெற்றியைத் தரும்ம தொழில் சொல்வானுக்கு இலக்கணமாவது, நீதி நூல்களைக் கற்ற அமைச்சருக்குள் தான் அவைகளில் வல்லவனாதல்.

வேலாருள் - வேலினையுடைய வேற்றரசரிடம் சென்று, வென்றி – தனது தலைவனுக்கு வெற்றியைத் தேடித் தருகின்ற, வினையுரைப்பான் - தூதாகிய தொழிலின் மேல் செல்லுகிறவனுக்கு, பண்பு - இலக்கணம் எனப்படுவது, நூலாருள் - நீதி நூற்களைக் கற்ற பல அமைச்சருக்குள், நூல் - தான் அந்நூல்களுள், வல்லன் - வல்லவனாக இருத்தலாகும்.

**4.அறிவுஉரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்**

**செறிவுடையான் செல்க வினைக்கு.**

இயற்கையான அறிவும், கண்டார் விரும்பும் தோற்றமும், பற்பல வகையில் ஆராய்ந்த கல்வியும் ஆகிய இம்மூன்றும் நிறைந்திருக்கப் பெற்றவனே வேற்றரசரிடம் தூது செல்லக் கடவன்.

அறிவு - இயற்கையான அறிவும், உரு – கண்டார் விரும்பும் வடிவழகும், ஆராய்ந்த – ஆராய்ந்துணர்ந்த, கல்வி – கல்வியும், இம்மூன்றன் -இந்த மூன்றானது, செறிவு – நிறைந்திருக்கும் தன்மை, உடையான் - உடையவனே, வினைக்கு – தூதுவனான தொழிலுக்கு, செல்க – செல்லுதல் வேண்டும்.

**5.தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி**

**நன்றி பயப்பதாம் தூது.**

வேற்றரசரிடம் சொல்லும்போது தொகுத்துச் சொல்லியும், வெம்மையான சொற்களை நீக்கி இனிய சொற்களால் மனம் மகிழச் சொல்லியும் தன் அரசனுக்கு நன்மை பயப்பவனே தூதனாவான்.

தொகச் சொல்லி – வேற்றரசரிடம் செய்திகளைச் சுருக்கமாகத் தொகுத்துச் சொல்லியும், தூவாத – வெம்மையான கடிய சொற்களை, நீக்கி - சொல்லாமல் நீக்கியும், நக – கேட்பவர்மனம் மகிழுமாறு, சொல்லி - இனிமையாகச் சொல்லியும், நன்றி – தமது மன்னனுக்கு நன்மையினை, பயப்பது – உண்டாக்குபவனே, தூதன் - தூதன் ஆவான்.

**6.கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லி காலத்தால்**
**துக்கது அறிவதாம் தூது.**

நீதி நூல்களைக் கற்று, தான் சென்ற காரியத்தை வேற்றரசன் மனங் கொள்ளச் சொல்லி அவர் கோபமாகப் பார்த்தால் அதற்குப் பயப்பட்டுவிடாமல் காலத்தோடு பொருந்த செயல் முடிக்கவல்ல அறிவுடையவனே தூதனாவான்.

கற்று – நீதி நூல்களைக் கற்று, செலச்சொல்லி – தான் வந்த பணியினை எடுத்துக் கூறி, கண் - சினந்து நோக்கினால் அப்பார்வைக்கு, அஞ்சான் - அச்சம் இல்லாதவனாகி, காலத்தால் - காலத்தோடு பொருந்துமாறு, தக்கது – செயல் முடிக்கத்தக்க வழியினை அறிவது தூதாம் - அறிபவனே தூதுவன் ஆவான்.

**7.கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து**
**எண்ணி உரைப்பான் தலை.**

தான் செய்ய வேண்டிய முறையினை அறிந்து, காலம் பார்த்து இடத்தினையும் அறிந்து சொல்ல வேண்டியதை முன்னமேயே சிந்தித்துச் சொல்லுபவனே தூதுவர்களில் சிறந்தவன்.

கடன்அறிந்து – தனது கடமையினைச் செய்யும் முறையினை அறிந்து கொண்டு, காலம் - தக்க நேரத்தினை, கருதி – தெரிந்து, இடன்அறிந்து – ஏற்ற இடத்தினையும் அறிந்து, எண்ணி – முன்கூட்டியே நன்கு சிந்தித்து, உரைப்பான்தலை – சொல்லவல்லவனே முதன்மையான தூதுவனாவான்.

**8.தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்**
**வாய்மை வழியுரைப்பான் பண்பு.**

தன் அரசன் சொன்னவற்றை வேற்றரசரிடம் கொண்டு சென்று கூறும் தூதுவனின் இலக்கணம் என்னவென்றால், மனம் செயல் இவைகளில் தூய்மையாதலும் அவரமைச்சர் தனக்குத் தக்க துணையாம் தன்னையும் துணிவுடைமையும் ஆகிய இம்மூன்றோடு கூடிய மெய்ம்மையும் ஆகும்.

வழி – தனது தேசத்தலைவன் சொல்லிய நெறியிலேயே, உரைப்பான் - வேற்றரசனுக்குச் சொல்லுகிறவனுடைய, பண்பு – தகுதி யாதென்றால், தூய்மை – மனம்துய்மை உடையவனாதலும், துணைமை – -அவருடைய அமைச்சர் துணையாக இருப்பதும், துணிவு - மனத்துணிவு, உடைமை - உடையவனாக இருத்தலும், இம்மூன்றின் - இந்த மூன்றுடன் சேர்ந்த, வாய்மை – வாய்மையும் உடையனவாக இருத்தலுமேயாகும்.

**9.விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்**
**வாய்சோரா வன்க ணவன்.**

தன் அரசன் சொல்லிய வார்த்தைகளை வேற்று அரசர்களுக்குச் சொல்லதற்கு உரியவன், தனக்கு வரும் குற்றத்திற்கு அஞ்சித் தாழ்வான வார்த்தைகளை வாய் சோர்ந்தும் சொல்லாத வலிமையுடையவனாவான்.

விடுமாற்றம் - தனது வேந்தன் சொல்லியனுப்பிய வார்த்தைகளை, வேந்தர்க்கு – வேற்று நாட்டு மன்னர்க்கு, உரைப்பான் - சொல்லுதற்கு உரிய தூதன், வடு – தாழ்மையான, மாற்றம் - வார்த்தைகளை, வாய்சோரா – வாய் தடுமாறியும் சொல்லாத, வன்கணவன் - திண்மையுடையவனாவன்.

**10.இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு**
**உறுதி பயப்பதாம் தூது.**

தன் உயிர்க்கு முடிவினைத் தருவதாக இருந்தாலும் அதற்கு அஞ்சாமல் தனது தலைவன் சொல்லியபடியே வேற்று அரசனுக்குச் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லுபவனே தூதனாவான்.

இறுதி – தனது உயிர்க்கு முடிவினை, பயப்பினும் - தருவதாக இருந்தாலும், எஞ்சாது – அதற்கு அச்சப்பட்டு விடாமல், இறைவற்கு – தனது தலைவனுக்கு, உறுதி – உறுதியான மேம்பாட்டினை, பயப்பது தூதாம் - வேற்றரசனிடம் சொல்லுகின்றவனே தூதுவனாவான்.

## 32.மன்னரைச்சேர்ந்து ஒழுகுதல்

## (அமைச்சர் அரசரைப் பொருந்தி நடந்து கொள்ளுதல்)

**1.அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.**

விரைவில் கோபித்துக் கொள்ளும் இயல்புடைய மாறுபாடுடைய வேந்தர்களைச் சேர்ந்தொழுகும் அமைச்சர் அவரிடமிருந்து மிக நீங்காமலும் மிக நெருங்காமலும், தீக்காய்வார் போல இடையிலே நின்று பழகுதல் வேண்டும்.

இகல் - (விரைவில் கோபம் கொள்ளும்) மாறுபாட்டினையுடைய, வேந்தர் சேர்ந்து – வேந்தரிடம் சேர்ந்து, ஒழுகுவார் - பழகும் அமைச்சர், அகலாது – அதிகமாக நீங்கி விடாமலும், அணுகாது – மிகவும் நெருங்கி விடாமலும், தீ – தீயில், காய்வர் - குளிர் காய்பவர், போல்க – போன்று இருத்தல் வேண்டும்.

**2.மன்னர் விழைப விழையாமை மன்னரான்**
**மன்னிய ஆக்கம் தரும்.**

தம் மன்னர் விரும்புவனவற்றைத் தாம் விரும்பாதிருத்தல் வேண்டும். அவ்வாறிருத்தல் அமைச்சர்க்கு மன்னராலே நிலை பெற்ற செல்வத்தினைக் கொடுக்கும்.

மன்னர் - தமது மன்னர், விழைப – ஆவலுடன் விரும்புவனவற்றை, விழையாமை – தாமும் விரும்பாதிருத்தல் வேண்டும், மன்னரால் - (அத்தகைய குணம் ) அம்மன்னராலே, மன்னிய – நிலை பொறுதலையுடைய, ஆக்கம் தரும் - செல்வாக்கினைத் தமக்குத் தருவதாகும்.

**3.போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்**
**தோற்றுதல் யார்க்கும் அரிது.**

அமைச்சர் தங்களைக் காத்துக் கொள்ள நினைத்தால் அரிய பிழைகள் தம்மிடம் வாராமல் காத்தல் வேண்டும். அவை வந்ததாகக் கேட்டு அரசன் சந்தேகப்பட்டுவிட்டால் அவ்வரசரைப் பிறகு தெளிவு படுத்துதல் யாவர்க்கும் அரியாதாகும்.

போற்றின் - அமைச்சர் தம்மைத் தாமே காக்க விரும்பினால், அரியவை – பொறுத்தற்கரிய குற்றங்களை, போற்றல் - (தம்மிடம் உண்டாகாமல் ) காத்துக் கொள்ளுதல் வேண்டும், கடுத்தபின் -மன்னர் ஐயம் கொண்டுவிட்ட ால் பிறகு, தேற்றுதல் - அந்த மன்னரைத் தெளிவுபடுத்துதல் , யார்க்கும் அரிது – எவர்க்கும் அரிதான காரியமரிகிவிடும்.

**4.செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்**
**ஆன்ற பெரியா ரகத்து.**

ஆன்ற பெரியார்கள் அருகில் தாம் இருக்கும்போது அவருக்குத் தெரியுமாறு ஒருவருக்கொருவர் காதிலே சொல்லுவதும், ஒருவர் முகம் நோக்கி மற்றவர் சிரித்துக்கொள்ளுவதும் நீக்கி நடந்து கொள்ளுதல் வேண்டும்.

ஆன்ற – பெருமைபெற்ற, பெரியார் - பெியார்களின், அகத்து – மத்தியில் இருக்கும் போது, செவிச் சொல்லும் - ஒருவன் மற்றவன் காதில் சொல்லுவதையும், சேர்ந்த – ஒருவனைப் பார்த்து மற்றவன், நகையும் - சிரிப்பதையும், அவித்து – தவிர்த்து விட்டு, ஒழுகல் - நடந்துகொள்ளுதல் வேண்டும்.

**5. எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை விட்டக்கால் கேட்க மறை.**

அரசன் பிறரிடம் மறைவாகப் பேசும்போது எதையும் செவி கொடுத்துக் கேளாமல், அரசனிடம் சென்று வினாவாமல் இருந்துகொண்டு, அரசனே அம்மறைவான செய்திகளைத் தானே சொன்னால் கேட்டல்வேண்டும்.

மறை – தலைவர்கள் பிறருடன் மறைவாகப் பேசும்போது, எப்பொருளும் - யாதொரு கருத்தினையும், ஓரார் - செவி கொடுத்துக் கேட்கக் கூடாது, தொடரார் - அவரிடம் வினவுதலும் கூடாது, அப்பொருளை – அந்த மறை பொருளினை, விட்டக்கால் கேட்க – தலைவரே வெளியிட்டுச் சொன்னால் கேட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

**6.குறிப்புஅறிந்து காலம் கருதி வெறுப்பில வேண்டும் வேட்பச் சொலல்.**

அரசனுடைய குறிப்பினை எப்போதும் புரிந்துகொண்டு சொல்லுதற்கேற்ற காலத்தினையறிந்து வெறுப்பிலாதனவும் விரும்புதற்குரிய செயல்களை அவன் மனம் விரும்பும் வகையில் சொல்லுதல் வேண்டும்.

குறிப்பு – அரசனுடைய குறிப்பினை, அறிந்து – அறிந்து கொண்டு, காலம் - ஏற்ற காலத்தினை, கருதி – தெரிந்து, வெறுப்பில – வெறும்பு இல்லாதவையும், வேண்டுப - வேண்டுபவையும் ஆகியவற்றை, வேட்பச் சொலல்– அரசன் மனம் மகிழும் வகைகயில் சொல்லுதல் வேண்டும்.

**7.வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்**

**கேட்பினும் சொல்லா விடல்.**

அரசன் விரும்புவனவும், பெரிய பயனுள்ளவையுமானவற்றை அவன் கேட்டிலனாயினும் சொல்ல வேண்டும்: எப்போதும் பயனில்லாதவற்றை அரசன் தானே கேட்டாலும் சொல்லாதிருக்க வேண்டும்.

வேட்பன சொல்லி – பயனள்ளதான விரும்புவனவற்றைச் சொல்லி, எஞ்ஞான்றும் - எப்போதும், வினையில – பயனில்லாதவற்றை, கேட்பினும் - அரசனே விரும்பிக் கேட்டாலும், சொல்லா - சொல்லாமல், விடல் - விட்டுவிடுதல் வேண்டும்.

**8.இளையர் இனமுறையர் என்றுஇகழார் நின்ற**

**ஒளியோடு ஒழுகப் படும்.**

இவர் நமக்கு இளையவர் என்றும், இன்ன முறையில் இனத்தவர் என்றும், அரசரை அவமதிக்காமல் அவ்வரசருக்குள்ள உயர்ந்த நிலைமைக்குப் பொருந்த அமைச்சரானவர் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

இளையவர் - தம்மைவிட வயதில் இளையர், இன – தமக்கு இன்ன இனத்தினது, முறையர் - முறையினையுடைய உறவினர், என்று – என்பதாகக் கூறி, இகழார் - தாழ்வாக அவமதிக்காமல், நின்ற – நிலைபெற்ற, ஒளியோடு – மன்னர்க்குப் பொருந்திய மேலான சிறப்புடனே, ஒழுகப்படும் - மன்னரிடம் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

**9.கொளப்பட்டேம் என்றுஎண்ணிக் கொள்ளாத செய்யார்**

**துளக்குஅற்ற காட்சி யவர்.**

நிலைபெற்ற அறிவினையுடையவர்கள், அரசனால் ‘நாம் நன்கு மதிக்கப்பட்டுள்ளோம்’ என்று கருதி அவன் விரும்பாதவற்றைச் செய்ய மாட்டார்கள்.

துளக்கற்ற – மாறுதலின்றி நிலைபெற்ற, காட்சியவர் - அறிவினையுடையவர்கள், கொளப்பட்டேம் - அரசரால் நன்கு மதிக்கப்பட்டுவிட்டோம், என்று – என்பதாக, எண்ணி – நினைத்து, கொள்ளாத – அரசன் விரும்பாதவைகளை, செய்யார் - செய்யமாட்டார்கள்.

**10.பழையம் எனக்கருதிப் பண்புஅல்ல செய்யும்**

**கெழுதகைமை கேடு தரும்.**

அரசனுக்கு யாம் பழையவர்கள் என்று கருதி தமக்கு இயல்பல்லாதவற்றைச் செய்யும் உரிமை அமைச்சர்க்குக் கேட்டினைப் பயப்பதாகும்.

பழையம் - தலைவர்க்கு யாம் பழைமையானவர்கள், என – என்று, கருதி – நினைத்து, பண்பு – தமக்கு ஏற்பன, அல்ல – அல்லாதவற்றை, செய்யும் - செய்கின்ற, கெழுதகைமை – பழைமையாய் வந்த உரிமையானது, கேடு – தீமையினை, தரும் - கொடுத்துவிடும்.

**33.குறிப்பு அறிதல்**

**(ஒருவர் கூறாமலேயே அவர் மனத்தில் உள்ளதை அறிதல்)**

**1. கூறாமை நோக்கிக் குறிப்பு அறிவான் எஞ்ஞான்றும்**
**மாறாநீர் வையக்கு அணி.**

அரசன் குறித்த கருத்தினை அவன் கூறாமலேயே முகத்தினாலும் கண்ணினாலும் நோக்கி அறியும் ஆற்றல் உள்ளவன் எப்போதும் கடலால் சூழப்பட்ட வையத்தில் வாழ்பவர்களுக்கு ஓர் ஆபரணம் ஆவான்.

குறிப்பு – குறிப்பிட்ட தொழிலினை, கூறாமை – சொல்லாமலேயே, நோக்கி – முகத்திலும் கண்ணிலும் நோக்கி, அறிவான் - அறிகின்ற ஆற்றல் உள்ளவன், எஞ்ஞான்றும் - எப்போதும், மாறா – வற்றாத, நீர் - நீரினால் (கடலால்) சூழப்பட்ட, வையக்கு அணி - உலகில் உள்ளவர்களுக்குச் சிறந்த அணிகலன் ஆவான்.

**2.ஐயப் படாஅது அகத்தது உணர்வானை**
**தெய்வத்தோடு ஒப்பக் கொளல்.**

ஒருவன் மனத்தில் உள்ளதைச் சந்தேகமின்றி உணரவல்ல ஒருவனை, மக்களில் அவன் ஒருவனேயானாலும் தெய்வத்தோடு ஒப்ப நன்கு மதித்தல் வேண்டும்.

அகத்தது – ஒருவனுடைய மனத்தில் நிகழ்வதனை , ஐயப்படாது – யாதொரு சந்தேகமுமின்றி, உணர்வானை – உறுதியாக அறிய வல்லவனை, தெய்வத்தோடு – தெய்வத்திற்கு, ஒப்ப – சமத்துவமாக, கொளல் - கொண்டு மகிழ்தல் வேண்டும்.

**3.குறிப்பின் குறிப்புஉணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்.**

தன்னுடைய குறிப்பு நிகழ்வதை அறிந்து அதனால் பிறனுடைய குறிப்பினை அறியும் தன்மையாளரை, அரசர் தம் உறுப்புக்களுள் அவர் வேண்டுவ தொன்றனைக் கொடுத்தாகிலும் துணையாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பின் - தன்னிடம் குறிப்பு நிகழ்வதை யறிந்து, (அது கொண்டு) குறிப்பு – பிறப்பால் நிகழும் குறிப்பினை, உணர்வாரை – அறியும் தன்மையாளரை, உறுப்பினுள் - அரசர் தனது உறுப்புக்களுள், யாது – அவர் வேண்டுவ தொன்றனை, கொடுத்தும் - கொடுத்தாகிலும், கொளல் - துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.

**4.குறித்தது கூறாமைக் கொள்வாரோடு ஏனை**
**உறுப்புஓ ரனையரால் வேறு.**

ஒருவன் மனத்தில் கருதியதனை அவன் கூறாமலேயே அறிய வல்லவரோடு, மற்றவர்கள் உறுப்பால் ஒரு தன்மையராக ஒப்பாராயினும் அறிவால் வேறுபடுவர்.

குறித்தது கூறாமை - ஒருவன் மனத்தில் கருதியதனை அவன் கூற வேண்டாமலேயே கொள்வாரோடு – அறியும் ஆற்றலில் வல்லவரோடு, ஏனை – அவ்வாறு அறியமாட்டாத மற்றவர்கள், உறுப்பு - உறுப்புக்களினால், ஓரனையர் - ஒரு தன்மையராக ஒத்திருத்தாலும், வேறு – அறிவினால் வேறுபடுபவர்கள் ஆவார்கள். (ஆல் - அசை)

**5.குறிப்பின் குறிப்புஉணரா ஆயின் உறுப்பினுள்**
**என்ன பயத்தவோ கண்.**

குறித்ததைக் காணவல்ல தம் பார்வையால் பிறர் குறிப்பினை உணரவில்லையானால் உறுப்புக்களுள் சிறந்த கண்கள் வேறு என்ன பயனைச் செய்வனவாகும்.

குறிப்பின் - குறித்ததைக் காணவல்ல தனது பார்வையால், குறிப்பு – பிறருடைய மனத்தின் குறிப்பினை, உணராவாயின் -உணர்ந்தறிய முடியாவிட்டால், கண் - சிறப்பான கண்கள், என்ன – என்ன,பயத்தவோ – பயனைச் செய்வதாகும்?

**6.அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்.**

தன்னையடுத்த பொருளினது நிறத்தினைத் தானே கொண்டு காட்டும் பளிங்கினைப் போல ஒருவன் நெஞ்சத்தில் மிக்கதனை அவன் முகம் தானே கொண்டு காட்டும்.

அடுத்தது – தன்னை அடுத்து நின்ற பொருளினது நிறத்தினை, காட்டும் - தானே கொண்டு காட்டுகின்ற, பளிங்கு – கண்ணாடிப் பளிங்கினை, போல் - போல, நெஞ்சம் -ஒருவனுடைய மனத்தினில், கடுத்தது – மிகுதியாகும் குணத்தினை, முகம் - அவனுடைய முகமானது, காட்டும் - தானே கொண்டு காட்டிவிடும்.

**7.முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்**
**காயினும் தான்முந் துறும்.**

உயிரானது ஒருவனை விரும்பினாலும் வெறுத்தாலும், முகம் தான் அறிந்து முற்பட்டு நின்று உணர்த்தும். ஆதலால், முகத்தினைப் போல அறிவு மிக்கது வேறு ஒன்று இருக்கின்றதோ? (இல்லை என்பதாம்.)

உவப்பினும் - உயிர் ஒருவனை விரும்பினாலும், காயினும் - விரும்பாமல் வெறுத்தாலும், தான் முந்துறும் - முகம்தானே அறிந்து முற்பட்டு நின்று உணர்த்தும், ( ஆகையினால்) முகத்தின் - முகத்தினைப் போல, முதுக்குறைந்தது – அறிவு மிக்கதொன்று, உண்டோ – வேறு இருக்கின்றதோ? (இல்லை என்பதாம்.)

**8.முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி**
**உற்றது உணர்வார்ப் பெறின்.**

மனத்தில் உள்ளதைக் குறிப்பால் உணர்ந்து குறை நீக்க வல்லாரைப் பெற்றால் அவர் தம் முகம் நோக்கும் வகையில் தானும் அவர் முகம் நோக்கி நிற்க அமையும்.

அகம் - மனத்தில் உள்ளதை, நோக்கி – குறிப்பால் அறிந்துணர்ந்து. உற்றது - தான் உற்ற அதனை, உணர்வார் - தெரிந்து தீர்ப்பாரை, பெறின் - பெற்றிருந்தால், முகம் - அவர் தன் முகத்தினை நோக்கும் வகையில், நோக்கி - அவர் முகத்தினைத் தான் பார்த்து, நிற்க – நின்றால் , அமையும் - போதுமானதாக அமையும்.

**9.பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்**
**வகைமை உணர்வார்ப் பெறின்.**

பார்வையினால் அறிய வல்ல ஆற்றல் படைத்தவரை அரசன் பெற்றிருந்தால், கிடந்த பகைமையினையும் நட்பினையும் வேற்று வேந்தர் சொல்லாவிட்டாலும். அவர்கள் கண்களே சொல்லும்.

கண்ணின் - பார்வையின், வகைமை - வேறுபாட்டுத் தன்மைகளை, உணர்வார் - அறியும் ஆற்றலில் வல்லவர்களை, பெறின் – அரசர் பெற்றிருந்தால், பகைமையும் - பகைமை எண்ணத்தினையும், கேண்மையும் - நட்புத் தன்மையினையும், (பிறர் சொல்லாமலேயே ) கண் உரைக்கும் - கண்களே சொல்லிவிடும்.

**10.நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்**
**கண்அல்லது இல்லை பிற.**

'நுண்ணறிவு படைத்துள்ளோம்' என்று கூறும் ஆற்றல் உள்ளவர்கள் பிறர் கருத்தினை அளக்கும் கோலாக இருப்பது, ஆராயுங்கால் கண்கள் அல்லாமல் பிற இல்லையாகும்.

நுண்ணியம் - நுண்ணறிவுடையோம், என்பார் - என்கின்ற அமைச்சர்க்கு, அளக்கும் - பிறர் கருத்தினை அளந்தறியும், கோல் - அளவுகோல் என்பது, காணுங்கால் - ஆராயும் போது, கண் - அவரது கண்கள், அல்லது – அல்லாமல், பிற இல்லை – வேறு எதுவும் இல்லையாகும்.

## 34. அவை அறிதல்

## (அவையினது – சபையின் - இயல்பினை அறிதல்)

**1. அவைஅறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்**
**தொகைஅறிந்த தூய்மை யவர்.**

சொற்களின் வகைகளை அறிந்த தூய்மையினையுடையவர்கள் தாம் ஒன்று சொல்லும்போது அப்போதுள்ள அவையினை அறிந்து ஆராய்ந்து சொல்லுதல் வேண்டும்.

சொல்லின் - சொற்களில், தொகை – வகைகளை (கூட்டத்தினை), அறிந்த – அறிந்துணர்ந்த, தூய்மையவர் - தூய்மையான தன்மையினர், அவை அறிந்து – அப்போதுள்ள சபையினை அறிந்து கொண்டு, ஆராய்ந்து – ஆராய்ந்து தெரிந்து, சொல்லுக – பேசுதல் வேண்டும்.

**2. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்**

**நடைதெரிந்த நன்மை யவர்.**

சொற்களின் நடையினை ஆராய்ந்தறிந்த நன்மையுடையவர்கள் அவையில் ஒன்று சொல்லும் போது நிலைமையினை ஆராய்ந்து குற்றமில்லாமல் நன்கு தெளிந்து சொல்லுதல் வேண்டும்.

சொல்லின் - சொற்களின், நடை — நடைமுறையினை, தெரிந்த — ஆராய்ந்து கண்ட, நன்மையவா் -- நன்மையுடையவர்கள், இடை — சபையின் நேரத்தினையும் நிலைமையினையும், தெரிந்து — ஆராய்ந்து தெரிந்து, நன்கு — குற்றமற, உணர்ந்து — தெளிந்து, சொல்லுக -சொல்லுதல் வேண்டும்.

**3. அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்**
**வகையறியார் வல்லதூஉம் இல்.**

அவையினுடைய அளவினை அறியாமல் ஒன்று சொல்ல முயன்றவர் சொல்லுவதனுடைய கூறுபாடும் அறியார்: கற்று வல்ல கலையும் அவருக்கு இல்லையாம்.

அவை — சபையினுடைய தன்மையினை, அறியார் - அறிய முடியதவராகி, சொல்லல் - ஒன்று சொல்லுவதனை, மேற்கொள்பவர் - தம்மேற்கொண்டு செல்லுபவர், சொல்லின் - அவ்வாறு சொல்லுதலின், வகை — வகை முறையினையும், அறியார் - அறிய மாட்டார், வல்லதுர்உம் - கற்று வல்ல கலையும், இல் - அவரிடம் இல்லை.

**4. ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்**
**வான்சுதை வண்ணம் கொளல்.**

தம்மைவிடச் சிறந்தவர்கள் இருக்கும் அவைக்கண் (சபையில்) தானும் சிறந்த அறிஞராக விளங்குதல் வேண்டும். புல்லர்கள் இருக்கும் சபையில் அவர்கள் மதித்தற் பொருட்டு அவர்கள் போலவே ஆதல் வேண்டும்.

ஒளியார்முன் - அறிவால் மிக்கவரும் ஒத்தவரும் இருக்கும் சபையில், ஒள்ளியராதல் - தாமும் சிறந்த அறிவுடையராதல் வேண்டும், வெளியார் முன் - அறிவில்லாதவா் (புல்லர்கள்) சபையில், வான் - வெண்மையான, சுதை — சுண்ணாம்பின், வண்ணம் - நிறத்தினை, கொளல் - கொண்டிருத்தல் (ஒன்றும் அறியாதார்) போல் இருத்தல் வேண்டும்.

**5. நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்**
**முந்து கிளவாச் செறிவு.**

ஒருவற்கு நல்லது என்ற குணங்கள் எல்லாவற்றிலும் நல்லதாவது எதுவென்றால் தம்மைவிட மிக்கவர்கள் உள்ள அவைக்கண் அவரின் முற்பட்டு ஒன்றனைச் சொல்லததேயாகும்.

முதுவருள் - தம்மைவிட அறிவார் மிக்க சபையில், முந்து – அவர்களுக்கு முற்பட்டு, கிளவா – ஒன்றனைச் சொல்லாத, செறிவு – அடக்கமான குணம், நன்று - இது நல்லது, என்றவற்றுள்ளும் - என்று சொல்லப்பட்ட குணங்களுக்கெல்லாம், நன்றே – நல்லதேயாகும்.

**6. ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்**
**ஏற்றுஉணர்வார் முன்னர் இழுக்கு.**

அகன்ற நூற் பொருள்களை ஆய்ந்துணர வல்லார் அவையில் வல்லானொருவன் சொற்குற்றப்படுதல், நன்னறிக்கண் நின்றான் ஒருவன் அந்நெறியிலிருந்து நிலை தளர்ந்து வீழ்ந்ததைப் போன்றதாகும்.

வியம்புலம் - அகன்ற நூற் பொருள்களை, உணர்வார் - அவற்றினை உணரவல்லார், முன்னர் - சபையினிடத்து, இழுக்கு – (கற்றறிந்தவன்) சொற் குற்றம் உடையனாதல், ஆற்றின் - நன்னெறிக்கண் நின்ற ஒருவன், நிலை – தனது நிலைமை, தளர்ந்தற்றே – கெட்டு வீழ்ந்ததைப் போன்றதாகும்.

**7. கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடுஅறச்**
**சொல்தெரிதல் வல்லா ரகத்து.**

குற்றமின்றிச் சொற்களை ஆராய்வதில் வல்லவர்கள் உள்ள அவைக்கண் சொன்னால், பல நூல்களையும் கற்று அவற்றின் பயனை அறிந்தவரது கல்வி யாவர்க்கும் விளங்கித்தோன்றும்.

கசடு – குற்றம், அற - இல்லாமல், சொல் - சொற்களை, தெரிதல் - ஆராய்ந்து அறிவதில், வல்லார் - வல்லவர்கள், அகத்து – சபையில், கற்று - பல நூல்களையும்கற்று, அறிந்தார் - அறிந்த புலமையாளரது, கல்வி விளங்கும் - கல்வியானது எல்லோருக்கும் விளங்கித் தோன்றுவதாகும்.

**8. உணர்வது உடையார்முன் சொல்லல் வளர்வதன்**
**பாத்தியுள் நீர்சொரிந் தற்று.**

பிறர் உணர்த்தாமல் தாமே உணரவல்ல அறிவினையுடையவர்கள் இருக்கும் அவையில் ஒன்றனைச் சொல்லுதல் தானே வளர்வதொரு பயிர்நின்ற பாத்திக்கண் நீரினைச் சொரிந்தது போன்றதாகும்.

உணர்வது – தாமே நற்கருத்துக்களை உணரவல்ல அறிவினை, உடையார்முன் - பெற்றிருப்பவர்கள் முன்னே, சொல்லல் - கற்றார் ஒன்றனைச் சொல்லுதல், வளர்வதன் - தானாகவே வளர்கின்ற பயிர் உள்ள, பாத்தியுள் - பாத்திக்குள், நீர் - தண்ணீரை, சொரிந்தற்று – விட்டது போன்றதாகும்.

**9. புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்**
**நன்கு செலச்சொல்லு வார்.**

நல்லார் இருந்த அவையில் நல்ல பொருட்களை அவர் மனங் கொள்ளுமாறு சொல்லுதற்குரியவர், புல்லர்கள் இருந்த அவையில் அவற்றை மறந்தும் சொல்லாதிருத்தல் வேண்டும்.

நல்லவையுள் - நல்லறிஞர் இருக்கும் அவையுள், நன்கு – நல்ல கருத்துக்களை, செலச் சொல்லுவார் - கேட்பவர் மனம் ஏற்ப சொல்லுதற்குரியவர்கள் , புல்லவையுள் - புல்லர்கள் நிறைந்த அவையுள், பொச்சாந்தும் - மறந்தும்கூட, சொல்லற்க – சொல்லாதிருப்பார்களாக.

**10. அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம்கணத்தர்**
**அல்லார்முன் கோட்டி கொளல்.**

நல்லவர்கள், தம் இனத்தவர் அல்லாதார் அவையில் ஒன்றனையும் சொல்லாதிருத்தல் வேண்டும். அப்படிச் சொன்னால், அது தூய்மையில்லாத முற்றத்தில் அமிழ்தத்தினை ஊற்றுதல் போன்றதாகிவிடும்.

தம் - தம் வகையினைச் சேர்ந்த, கணத்தர் - இனத்தர், அல்லார் முன் - அல்லதவர்கள் சபையில், கோட்டி – பேசுவதை, கொளல் - மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும், (அப்படி ஏதேனும் சொன்னால்) அங்கணத்துள் - தூய்மையில்லாத முற்றத்தில், உக்க – சிந்திய அமிழ்தற்று – அமிழ்தத்தினைப் போன்றதாகும்.

## 35.அவை அஞ்ஞாமை

## (அவையில் - சபையில் - அஞ்சாமல் பேசுதல்)

**1. வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்**
**தொகையறிந்த தூய்மை யவர்.**

சொல்லின் தொகையெல்லாம் அறிந்த தூய்மையுடையவர்கள், வல்லவர்கள் நிறைந்த அவை, அல்லாதார் அவை என்னும் வகையினை யறிந்து அச்சத்தால் வழுப்படச் சொல்ல மாட்டார்கள்.

சொல்லின் - சொற்களின், தொகை – பல்வேறு சொற்களின் கூட்டத்தினை, அறிந்து – அறிந்து தெரிந்த, தூய்மையவர் - -தூய்மையான பண்பாளர்கள், வகை – சபைகளின் வகைகளை, அறிந்து – அறிந்து கொண்டு, வல்லவை – வல்லவர் சபையில் பேசும்போது, வாய்சோரார் - அச்சத்தால் பிழைபடச் சொல்லமாட்டார்கள்.

**2. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்**
**கற்ற செலச்சொல்லு வார்.**

கற்றவர்கள் இருக்கும் அவையில் (சபையில்) அஞ்சாமல் தாம் கற்றவற்றைச் சொல்லவல்லாரைச் கற்றார் எல்லோரையும்விட ‘இவர் நன்கு கற்றவர்’ என்று உலகத்தார் சொல்லுவார்கள்.

கற்றார்முன் - கற்றவர்கள் இருக்கும் அவையில், கற்ற – தாம் கற்றவைகளை, செலச்சொல்லுவார் - கேட்பவர் மனம் ஏற்ப சொல்ல வல்லவர்கள், கற்றாருள் - கற்றவர்கள் எல்லாருள்ளும், கற்றார் - இவர் நன்கு கற்றவர், எனப்படுவர் - என்று உலக மக்களால் சொல்லப்படுவர்.

**3. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்**
**அவையகத்து அஞ்சா தவர்.**

பகையினை எதிர்த்து அஞ்சாமல் சென்று இறப்பவர்கள் உலகத்தில் பலபேருண்டு, ஆனால், சபைக்கு அஞ்சாமல் சென்று சொல்ல வல்லவர்கள் சிலரேயாவர்.

பகை – பகைவர்கள், அகத்து - இருக்கும் இடத்திற்கு (அஞ்சாமல் சென்று ), சாவார் - இறப்பவர்கள், எளியர் - உலகில் பலருண்டு, (ஆனால்) அவையிடத்து – சபையில் சென்று, அஞ்சாதவர் - அஞ்சாமல் சொல்லும் ஆற்றல் உள்ளவர்கள், அரியர் - சிலரேயாவார்.

**4. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற**
**மிக்காருள் மிக்க கொளல்.**

கற்றவர்கள் நிறைந்த அவையில் தாம் கற்றவற்றைச் சொல்லி அவற்றின் மிக்க பொருள்களை மிகுதியாகக் கற்ற அவர்களிடமிருந்து அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

கற்றார்முன் - கற்றவர்கள் சபையில், கற்ற – தாம் கற்றவர்களை, செலச் சொல்லி – பிறர் மனம் ஏற்ப எடுத்துச் சொல்லி, தாம் - தாம், கற்ற – கற்றதைவிட, மிக்க – மிகுதியான பொருள்களை, மிக்காருள் - மிக அதிகமாகக் கற்றவரிடத்தில், கொளல் - தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

**5. ஆற்றின் அளவுஅறிந்து கற்க அவைஅஞ்சா**
**மாற்றம் கொடுத்தற் பொருட்டு.**

அவையில் அஞ்சாமல் பிறர் சொல்லுவதற்குப் பதிலாகச் சொல்லும் பொருட்டு, சொல் இலக்கண நெறியால் அளவை நூற்களைக் கற்றல் வேண்டும் என்பதாகும்.

அவை – அவையில் (சபையில்), அஞ்சா – அஞ்சாமல், மாற்றம் - மறுமொழியினை, கொடுத்தற் பொருட்டு - சொல்லுவதற்காக, ஆற்றின் - சொல்லிலக்கண நெறியில், அளவு – அளவை நூற்களை, அறிந்து கற்க – அறிந்துணர்ந்து கற்றல் வேண்டும்.

**6. வாளொடுஎன் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடுஎன்**
**நுண்அவை அஞ்சு பவர்க்கு.**

வன்கண்மை இல்லாதவர்களுக்கு வாளுடன் என்ன தொடர்பு உண்டு? அது போல, நுட்பமுள்ளவர்கள் நிறைந்த சபையைக் கண்டு அஞ்சுபவர்களுக்கு, கற்ற நூலோடு என்ன தொடர்பு உண்டு?

வன்கண்ணர் - மனத்துணிவு என்னும் திண்மை, அல்லார்க்கு - இல்லாதவர்க்கு, வாளொடு – போர் செய்தற்கான வாளுடன், என் - என்ன தொடர்பு உண்டு, (அது போல) நுண் - நுட்பமான, அவை – (அறிவு படைத்தோர் இருக்கும்) சபையினை, அஞ்சுபவர்க்கு - கண்டு அஞ்சுவோர்க்கு, நூலொடு – தாம் கற்ற நூலுடனே, என் - என்ன தொடர்பு உண்டு?

**7. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து**
**அஞ்சு மவன்கற்ற நூல்.**

சொல்லப்பட்ட வேண்டிய சபையினிடத்து அஞ்சுகின்றவன் கற்ற நூலானது, பகை நடுவில், அப்பகைக்கு அஞ்சுகின்ற பேடி பிடித்த கூர்வாளினை ஒக்கும்.

அவையகத்து – பேச வேண்டிய அவை நடுவில், அஞ்சும் - அஞ்சுகின்ற, அவன் - கற்ற அவன், கற்ற – கற்றறிந்த, நூல் - நூல்கள், பகை – போரிட வேண்டிய பகை, அகத்து – நடுவில், பேடி – போருக்கு அஞ்சுகின்ற பேடி, கை – தனது கையில் பிடித்த, ஒள் - கூரிய, வாள் - வாளினை ஒக்கும்.

**8. பல்லவை கற்றும் பயம்இலரே நல்லவையுள்**
**நன்கு செலச்சொல்லா தார்.**

நல்லவர்கள் இருந்த அவைக்கண் நல்ல சொற்பொருள்களை ஏற்கும்படி அச்சத்தால் சொல்ல மாட்டாதவர்கள் பல நூல்களைக் கற்றாராயினும் உலகிற்குப் பயனுள்ளவர் ஆகார்.

நல்லவையுள் - நல்லோரிருந்த அவையில், நன்கு – நல்ல கருத்துக்களை, செலச் சொல்லாதார் - கேட்பவர் ஏற்ப சொல்ல முடியாதவர்கள், பல்லவை – பல நூல்களை, கற்றும் - கற்றிருந்தாலும், பயமிலரே – பயனில்லாதவர்களே யாவர்கள்.

**9. கல்லா தவரின் கடைஎன்ப கற்றறிந்தும்**
**நல்லா ரவைஅஞ்சு வார்.**

நூல்களைக் கற்றிருந்தும் அவற்றின் பயனறிந்தும் சபைக்கு அஞ்சி ஆங்கே சொல்ல முடியாதவர்கள், உலகத்தாரால் கல்லாதவர்களைவிடக் கடையர் என்று சொல்லப்படுவார்கள்.

கற்று – நூல்களைக் கற்று , அறிந்தும் - அதன் பயன்களைத் தெரிந்திருந்தும், நல்லார் - நல்லவர்கள் நிறைந்த, அவை – அவையினை, அஞ்சுவார் - பயந்து சொல்லாதவரை, கல்லாதவரின் - கல்லாதவர்களைவிட, கடைஎன்ப – கடையர் என்று அறிந்தோர் சொல்லுவர்.

**10. உள்ர் எனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்**
**கற்ற செலச்சொல்லா தார்.**

அவை (சபை)க் களத்திற்குப் பயந்து தாம் கற்றவற்றை ஏற்கும்படியாகச் சொல்ல மாட்டாதார், உயிர் வாழ்கின்றார் என்றாலும் இறந்தவரோடு ஒப்பாவார்.

களன் - அவைக் களத்திற்கு, அஞ்சி – அச்சப்பட்டு, கற்ற – தாம் கற்றவைகளை, செலச் சொல்லாதார் - கேட்பவர் மனம் அறியுமாறு சொல்ல முடியாதவர்கள், உளர் - உயிரோடு வாழ்கின்றார்கள், எனினும் - என்றாலும், இல்லாரொடு - உயிரில்லாதவரோடு, ஒப்பர் - ஒப்பவராவார்.

## 36.நாடு

## (நாட்டின் இயல்புகளும் சிறப்பும்)

**1. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்**
**செல்வரும் சேர்வது நாடு.**

குறையாத விளைவு செய்வோரும், தக்க பெரியோர்களும், கேடில்லாத செல்வந்தர்களும் ஒருங்கு வாழ்வதே நாடாகும்.

தள்ளா – குன்றாத, விளையுளும் - விளைவு செய்வோரும், தக்காரும் - அறப் பெரியோர்களும், தாழ்வு - கேடு, இலா - இல்லாத, செல்வரும் - செல்வமுடையோரும், சேர்வது – ஒருங்கு வாழ்வதே, நாடு - நாடாகும்.

**2. பெரும்பொருளால் பெட்டக்கது ஆகி அருங்கேட்டான்**
**ஆற்ற விளைவது நாடு.**

அளவற்ற பொருளுடைமையால் பிற தேசத்தாரும் விரும்பத்தக்கதாகி கேடில்லாமையோடு கூடி மிக்க விளைச்சலினை யுடையதே நாடாகும்.

பெரும் - அளவற்ற, பொருளால் - பொருளுடைமையால், பெட்டக்கதாகி – பிற தேயத்தாரும் விரும்பத் தக்கதாகி, அருங்கேட்டால் - கேடில்லாமையோடு பொருந்தி, ஆற்ற – மிக்க, விளைவது – விளைச்சலையுடையதே, நாடு – நாடாகும்.

**3. பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு**
**இறைஒருங்கு நேர்வது நாடு.**

பிற நாடுகள் பொறுத்த பாரமெல்லாம் தன்மீது வந்தாலும் அவற்றைத் தாங்கி அதற்கு மேல் அரசனுக்கு இறைப் பொருள் முழுவதையும் கொடுப்பதே நாடாகும்.

பொறை – பிற நடு பொறுத்த பாரமெல்லாம், ஒருங்கு - ஒன்று சேர, மேல் வருங்கால் - தன்னிடம் வந்து சேரும்போது, தாங்கி –அவற்றைத் தாங்கிக்கொண்டு, இறைவற்கு – தன் மன்னருக்கு, இறை - இறைப்பொருள், ஒருங்கு - முழுவதையும், நேர்வது - கொடுப்பதே, நாடு – நாடாகும்.

**4. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேராது இயல்வது நாடு.**

மிக்க பசியும், நீங்காத நோயும், அழிவினைத்தரும் பகையும் இல்லாமல் இனிதாக நடப்பதுவே நாடாகும்.

உறு – மிகுதியான, பசி – பசியும், ஓவா – நீங்காத, பிணியும் - நோயும், செறு – அழிவினைச் செய்யும், பகை – பகையும், சேராது - இல்லாமல், இயல்வது - இனிது நடப்பதுவே, நாடு – நாடாகும்.

**5. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்துஅலைக்கும்**
**கொல்குறும்பும் இல்லது நாடு.**

பற்பல காரணங்களால் மாறுபட்டுக் கூடும் கூட்டங்களும், உடனிருந்தே பாழாக்கும் உட்பகையும், சமயம் வந்தால் வேந்தனை அலைக்கின்ற கொலைத் தொழில் குறும்பரும் இல்லாததே நாடாகும்.

பல் - பற்பல காரணங்களால் உண்டாகும், குழுவும் - கூட்டங்களும், பாழ் செய்யும் - உடனிருந்தே பாழாக்குகின்ற, உட்பகையும் - உட்பகையினரும், வேந்து - சமயம் வந்தபோது வேந்தனை, அலைக்கும் - அலைக்கின்ற, கொல் - கொலைத் தொழில் புரிகின்ற, குறும்பும் - குறும்பர்களும், இல்லது - இல்லாமல் இருப்பதே, நாடு - நாடாகும்.

**6. கேடுஅறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா**
**நாடுஎன்ப நாட்டின் தலை.**

பகைவரால் கெடுதல் என்பதனை அறியாததாய், கெட்டுப் போன காலத்திலும் தனது வளம் குன்றாத நாட்டினை எல்லா நாடுகளிலும், தலையானது என்று நூலோர் கூறுவர்.

கேடு – பகைவரால் கெடுதல் என்பதனை, அறியா – அறியாததாய், கெட்ட விடத்தும் - கெட்ட காலத்திலும், வளம் - தனது வளப்பம், குன்றா – குன்றாத, நாடு - நாட்டினை, நாட்டின் - எல்லா நாடுகளிலும், தலை என்ப – முதன்மையானதென்று நூலோர் கூறுவார்கள்.

**7. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்அரணும் நாட்டிற்கு உறுப்பு.**

கீழ்நீர், மேல்நீர் எனப்பட்ட நீரும், வாய்ப்பான மலையும், அதிலிருந்து வரும் நீரும், அழியாத அரணும் நாட்டிற்கு உறுப்புக்களாகும்.

இரு – கீழ்நீர், மேல்நீர் என்ற இருவகை, புனலும் - நீரும், வாய்ந்த – வாய்ப்புடைத்தான (வளமான), மலையும் - மலைகளும், வருபுனலும் - அவைகளிலிருந்து வரும் நீரும், வல் - அழியாத வலிமையுடைய, அரணும் - அரணும் (கோட்டையும்), நாட்டின் உறுப்பு – ஒரு நாட்டிற்கு உறுப்புக்களாகும்.

**8. பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்**
**அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து.**

நோய் இல்லாண்மையும், செல்வமும், நல்ல விளைச்சலும், இன்பமும், பாதுகாவலும் ஆகிய ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகாகும் என்று நூலோர் கூறுவர்.

பிணி – நோய், இன்மை - இல்லாமையும், செல்வம் - செல்வமும், விளைவு – நல்ல விளைச்சலும், இன்பம் - இன்பமும், ஏமம் - பாதுகாவலும், இவ்வைந்து - இந்த ஐந்தினையும், நாட்டிற்கு – ஒரு நாட்டிற்கு, அணி என்ப – அழகாகும் என்று நூலோர் கூறுவர்.

**9. நாடுஎன்ப நாடா வளத்தன நாடுஅல்ல**
**நாட வளந்தரும் நாடு.**

நாட்டில் வாழ்பவர்கள் தேடி வருந்தாமல் தாமே வந்தடையும் செல்வத்தினை உடையதனை நாடு என்று நூலோர் சொல்லுவர். தேடி வருந்தச் செல்வம் அடைவிக்கும் நாடுகள் நாடு ஆகா.

நாடா – மக்கள் தேடி வருந்தாமல், வளத்தன – தானே வந்தடையும் செல்வத்தினையுடையவைகளை, நாடு எனப - சிறந்த நாடு என்று நூலோர் கூறுவர், நாட - தேடிவருந்த வளம் - செல்வத்தினை, தரும் - கொடுப்பதாகிய, நாடு – நாடுகள், அல்ல – ஆகாவாம்.

**10. ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயம்இன்றே**
**வேந்துஅமைவு இல்லாத நாடு.**

வேந்தனோடு பொருந்துதல் இல்லாத நாடு எல்லாவிதமான குணங்களால் நிறைவு பெற்றிருந்தாலும் பயனுடையதல்ல என்பதாகும்.

வேந்து – வேந்தனோடு, அமைவு – பொருந்துதல், இல்லாத - இல்லாத, நாடு – நாடானது, ஆங்கு - கூறப்பட்ட நற்பண்புகள் எல்லாவற்றாலும், அமைவு – நிறைந்த பொருத்தம், எய்தியக்கண்ணும் - அடைந்திருந்தாலும், பயம் - அவற்றால் பயன், இன்றே - இல்லாததேயாகும்.

## 37.அரண்

**(நாட்டிற்குச் சிறப்பான அரண் - கோட்டை – விளக்கப்படுதல்)**

**1. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்**
**போற்று பவர்க்கும் பொருள்.**

பலவகை ஆற்றலும் உடையவர்களாகப் பகைவர்மேல் செல்லுவோர்க்கு அரண் சிறந்ததாகும். அதுவே யன்றித் தம்மேல் வருவோர்க்கு அஞ்சித் தன்னை அடைவார்க்கும் அரண் சிறந்ததாகும்.

ஆற்றுபவர்க்கும் - (பலவகை ஆற்றலுடையராய்) பகைவர் மேல் படையெடுத்துச் செல்வார்க்கும், அரண் - அரணானது, பொருள் - சிறந்த பொருளாகும், அஞ்சி – தம் மேல் வரும் பகைவர்க்குப் பயந்து, தற் போற்றுபவர்க்கும் - தன்னை வந்து அடைபவர்களுக்கும், பொருள் - அரண் சிறப்புடையதாகும்.

**2. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடையது அரண்.**

மணி போலும் நிறத்தினையுடைய நீரும், வெள்ளிடை நிலமும், மலையும், குளிர்ந்த நீரையுடைய காடும் உடையதே அரணாகும்.

மணி – மணி போலும் நிறத்தினையுடைய, நீரும் - நீரும், மண்ணும் - வெள்ளிடை நிலமும், மலையும் - மலையும், அணி – குளிர்ந்த, நிழற்காடும் - நிழலையுடைய காடும், உடையது - உடையதே, அரண் - அரணாகும்.

**3. உயர்வுஅகலம் திண்மை அருமைஇந் நான்கின்**
**அமைவுஅரண் என்றுஉரைக்கும் நூல்.**

உயர்ச்சியும், அகலமும், திண்மையும், அருமையும் என்று சொல்லப்பட்ட இந்த நான்கின் மிகுதியினையுடைய மதிலை அரண் என்று சொல்லுவர் நூலோர்.

உயர்வு - நல்ல உயர்ச்சியும், அகலம் - அகலமும், திண்மை — வலிமையும், அருமை — பொறிகளால் நெருங்க முடியாத அருமையும், ( என்று சொல்லப்பட்ட) இந்நான்கின் - இந்த நான்கினையும், அமைவு — மிகுதியாகவுடைய மதிலை, அரண் - அரண் (கோட்டை) என்று —என்பதாக, உரைக்கும் நூல் - நூலோர் கூறுவர்.

**4. சிறுகாப்பின் பேர்இடத்தது ஆகி உறுபகை**
**ஊக்கம் அழிப்பது அரண்.**

காக்க வேண்டிய இடம் சிறியதாகவும், அகலமான இடத்தினையுடையதாகவும் அமைந்து தன்னை வந்து முற்றுகையிட்ட பகைவரின் எழுச்சியினைக் கொடுப்பதே அரணாகும்.

சிறுகாப்பின் - காக்க வேண்டிய இடம் சிறியதாக, பேரிடத்ததாகி — அகன்ற இடத்தினையுடையதாகி, உறு — தம்மை முற்றுகையிட்ட, பகை — பகைவரது, ஊக்கம் - ஊக்கமான மன எழுச்சியினை, அழிப்பது — அழிப்பதே, அரண் - அரண் எனப்படும்.

**5. கொளற்குஅரிதாய்க் கொண்டகூழ்த்து ஆகி அகத்தார்**
**நிலைக்குஎளிதாம் நீரது அரண்.**

வெளியாரால் கொள்ளுதற்கு அரியதாகி உள்ளே பலவகையான உணவினை உடையதாகி உள்ளிருப்போர் போர் செய்வதற்கு எளிய தன்மையுடையதே அரணாகும்.

கொளற்கு — புறத்தோரால் கொள்ளுவதற்கு, அரிதாய் - முடியாமல் அருமையானதாகி கொண்ட — உள்ளே கொண்ட, கூழ்த்தாகி — பலவகை உணவு பொருள்களை உடையதாகி அகத்தார் - உள்ளே இருப்பவர், நிலைக்கு — போர் செய்ய வேண்டிய நிலைக்கு, எளிதாம் - எளியையானதாகியுள்ள, நீரது — தன்மையினையுடையதே, அரண் - அரணாகும்.

**6. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துஉதவும்**
**நல்லாள் உடையது அரண்.**

உள்ளே இருப்பவர்கள் வேண்டும் பொருள்கள் எல்லாம் உடையதாகி புறத்தோரால் அழிவு உண்டாகும்போது அவ்வாறு உண்டாக்காமல் காக்க வல்ல வீரரை யுடையதே அரணாகும்.

எல்லா – அகத்தோர்க்கு வேண்டுவனவாகிய எல்லாவிதமான, பொருளும் - பொருள்கள் பலவற்றையும், உடைத்தாய் - உள்ளே உடையதாகி, இடத்து – புறத்தோரால் அழிவு உண்டாகும்போது, உதவும் - அது வாராமல் உதவிக் காக்கும், நல்லான் உடையது – நல்ல வீரர்களை உடையதே, அரண் - அரணாகும்.

**7. முற்றியும் முற்றாது எறிந்தும் அறைப்படுத்தும்**
**பற்றற்கு அரியது அரண்.**

போக்குவரவு ஒழியும் வகையில் நெருங்கிச் சூழ்ந்தும், அவ்வாறு சூழாமல் நெகிழ்ந்தபோது இடம் நோக்கி ஒரு முகமாய்ப் போர் செய்தும், உள்ளிருப்போரை அவரைத் தெரிந்தோரால் கீழறத்துத் திறப்பித்தும் புறத்தோரால் கொள்ளுதற்கு அரிதானதே அரணாகும்.

முற்றியும் - போக்குவரவு முடியாத வகையில் நெருங்கி முற்றுகையிட்டும், முற்றாது எறிந்தும் - அப்படி முற்றுகையிடாமல் வாய்த்த இடம் நோக்கி ஒரு முகமாகப் போரிட்டும், அறைப்படுத்தும் - உள்ளிருந்தோரை தெரிந்தாரை விட்டுக் கீழறுத்துத் திறப்பித்தும், பற்றற்கு – புறத்தோரால் கொள்ளுவதற்கு, அரியது – அருமையானதாக இருப்பதே, அரண் - அரணாகும்.

**8. முற்றுஆற்றி முற்றி யவரையும் பற்றுஆற்றிப்**
**புற்றியார் வெல்வது அரண்.**

படைப் பெருமையால் சூழ வல்லாராய் வந்து சூழ்ந்த பகைவரையும், தன்னைப் பற்றி நின்ற உள்ளிடத்து வீரரால் பற்றிய இடம் விடாமல் நின்று போர் செய்து வெல்வதே அரணாகும்.

முற்று ஆற்றி - படைப் பெருமையால் முற்றுகையிட வல்லவராகி, முற்றியவரையும் - வந்து சூழ்ந்த பகைவரையும், பற்றியார் - தன்னைப் பற்றி நின்ற உள் இடத்தார், பற்று – தாம் நின்ற இடத்தில், ஆற்றி – விடாமல் நின்று, வெல்வது – போர் செய்து வெல்வதே, அரண் - அரணாகும்.

**9. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து**
**வீறுஎய்தி மாண்டது அரண்.**

போர் தொடங்கியபோது பகைவர் கெடும் வண்ணம், உள்ளிருப்போர் செய்யும் செயல் வேறுபாடுகளால் வீறு பெற்று மேலும் வேண்டிய ஆட்சியினையுடையதே அரணாகும்.

முனைமுகத்து – போர் தொடங்கியபோது, மாற்றலர் - பகைவர்கள், சாய – கெடும்வண்ணம், வினைமுகத்து – உள்ளிருப்போர் செய்யும் செயல் வேறுபாடுகளால், வீறு - உயர்வு, எய்தி – பெற்று, மாண்டது - மற்றும் வேண்டிய சிறப்பினையுடையதே, அரண் - அரணாகும்.

**10. எனைமாட்சித்து ஆகியக் கண்ணும் வினைமாட்சி**
**இல்லார்கண் இல்லது அரண்.**

அரண் எனப்படும் கோட்டையானது மேற்கூரிய பெருமைகளையெல்லலாம் பெற்றிருந்தாலும், செயல் புரிவதில் சிறப்புடைய வீரர்கள் இல்லாதபோது அவைகளும் இல்லாதனவேயாகும்.

அரண் - கோட்டையானது, எனை – எல்லா வகையான, மாட்சித்து - சிறப்புக்களையெல்லாம், ஆகியக் கண்டும் - உடையதாக இருந்தபோதிலும், வினை – தொழில் செய்யும்போது, மாட்சி – பெருமையினை (திண்மையினை), இல்லார்கள் - இல்லாதவர்களாக இருந்தால், இல்லது – அவை இல்லாததேயாகும்.

## 38. பொருள் செயல்வகை

### (பொருள் செய்தலின் திறம், சிறப்பு முதலியன)

**1. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருள்அல்லது இல்லை பொருள்.**

ஒரு பொருளாக மதிக்கப்படாதாரையும் மதிக்கப்படுபவரகச் செய்யவல்ல பொருள் அல்லாமல் வேறு ஒருவனுக்குப் பொருளாவதில்லை.

பொருள் - எத்தகுதியுமின்றி ஒரு பொருளாக, அல்லவரை - மதிக்கப்படாதவர்களையும், பொருளாக - மதிக்கப்படுபவராக, செய்யும் - செய்கின்ற, பொருள் - பொருள், அல்லது –அல்லாமல், பொருள் - ஒருவருக்குப் பொருளாவது, இல்லை – வேறு எதுவும் இல்லையாம்.

**2. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வார் சிறப்பு.**

எல்லா நன்மைகளும் இருந்தாலும் பொருள் இல்லாதவர்களை யாவரும் இகழ்வர். எல்லாத் தீமைகளும் உடையவரனாலும் பொருள் வைத்திருப்பவரை யாவரும் உயரச் செய்வர்.

இல்லாரை – பொருள் இல்லாதவர்களை, எல்லாரும் எள்ளுவர் - எல்லோரும் இகழ்வார்கள், செல்வரை – செல்வர்களை, எல்லாரும் - எல்லோரும், சிறப்பு – சிறப்பாக, செய்வர் - உயர்த்துவர் (எல்லாத் தீமையும் உடையவரனாலும் தாம் தாழ்ந்து அச்செல்வரை உயரச் செய்வர்.)

**3. பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும்**
**எண்ணிய தேய்த்துச் சென்று.**

பொருள் என்று கூறப்படுகின்ற பொய்யாத விளக்கானது தன்னை உடையவர்க்கு அவர் நினைத்த தேசத்திற்குச் சென்று பகை என்னும் இருளைச் கெடுக்கும்.

பொருள் - பொருள், என்னும் - எனப்படுகின்ற, பொய்யா – அணையாத, விளக்கம் - விளக்கானது, எண்ணிய - தன்னையுடையவர் நினைத்த, தேயத்து – தேசத்திற்கு, சென்று – சென்று, இருள்அறுக்கும் - பகையென்னும் இருளினை அழிக்கும்.

**4. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறன்அறிந்து**
**தீதுஇன்றி வந்த பொருள்.**

செய்யும் திறனறிந்து நல்வழியில் உண்டான பொருளானது அவனுக்கு அறத்தினையும் கொடுக்கும்: இன்பத்தினையும் கொடுக்கும்.

திறன் - பொருளீட்டும் நல்வழியினை, அறிந்து – தெரிந்து, தீது – கேடு, இன்றி - இல்லாதபடி, வந்த – உண்டான, பொருள் - பொருள், அறன் - அறத்தினையும், ஈனும் -தரும், இன்பமும் ஈனும் - இன்பத்தினையும் தருவதாகும்.

**5. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்.**

குடிகளிடம் கொண்ட அருளுடைமையினாலும், அன்புத் தன்மையினாலும் வாராத பொருள் பெருக்கத்தினைப் பொருந்தாரகிக் கழிய விடுதல் வேண்டும்.

அருளொடும் - அருள் நிறைந்த வழியாலும், அன்பொடும் - அன்பு நெறியாலும், வாரா பொருளாக்கம் - வாராத பொருள் ஆக்கத்தினை, புல்லார் - பொருந்தாதவராகி, புரளவிடல் - விட்டுவிடுதல் வேண்டும்.

**6. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்**
**தெறுபொருளும் வேந்தன் பொருள்.**

உடையவர் இல்லாததால் தானே வந்த பொருளும், சுங்கமாகிய பொருளும் தம் பகைவரிடமிருந்து திறையாகக் கொள்ளும் பொருளும் வேந்தனுக்கு உரிய பொருள்களாகும்.

உறு – (உடையவர் இல்லாமையால்) அரசுக்கு வந்த, பொருளும் - பொருளும், உல்கு – சுங்க வரிகளால், பொருளும் - வந்த பொருளும், தன் - தனது, ஒன்னார் - பகைவர்களை, தெறு பொருளும் - வென்றதால் திறையாக வந்த பொருளும், வேந்தன் - வேந்தனுக்குரிய, பொருள் - பொருள்களாகும்.

**7. அருள்என்னும் அன்புஈன் குழவி பொருள்என்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு.**

அன்பு பெருகி அதனால் வந்த அருள் என்னும் குழவி, பொருள் என்னும் உயர்த்திச் சொல்லப்படும் செல்வத்தினையுடைய செவிலியால் வளரும்.

அன்பு – அன்பானது, ஈன் - பெற்ற, அருள் - அருள், என்னும் - எனப்படும், குழவி – குழந்தையானது, பொருள் என்னும் - பொருள் என்று சிறப்பித்துக் கூறப்படும், செல்வம் - செல்வமாகிய, செவிலியால் - செவிலித் தாயாரால். உண்டு – வளர்வதாகும்.

**8. குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று**
**உண்டாகச் செய்வான் வினை.**

தன் கையில் பொருளினை வைத்துக்கொண்டு ஒரு தொழிலினை எடுத்துச் செய்தல், ஒருவன் மலைமேல் ஏறி நின்று யானைப் போரினைக் கண்டதை ஒக்கும்.

தன் - தன்னுடைய, கைத்து – கையிலே பொருள், உண்டாக – உளதாயிருக்க, ஒன்று செய்வான் - ஒரு தொழிலினைச் செய்பவனது, வினை – செயலானது, குன்று – குன்றின் மீது, ஏறி – ஏறி நின்று, யானைப் போர் - யானைகள் போரிடுவதை, கண்டற்று – காண்பதற்குச் சமமாகும்.

**9. செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும்**
**எ∴குஅதனிற் கூரியது இல்.**

தமக்கு ஒன்று உண்டாகக் கருதுபவர்கள் பொருளினை உண்டாக்குதல் வேண்டும். தமது பகைவர் செருக்கினை அறுக்கும் படைக்கலம் அதுவேயாம். ஆதற்கு அதுபோலக் கூரிய படைக்கலம் பிறிது இல்லை.

பொருள் - செல்வத்தினை, செய்க – உண்டாக்கிக் கொள்ளுவார்களாக, செறுநர் - தமது பகைவரது, செருக்கு அறுக்கும் - செருக்கினை அறுத்துவிடுகின்ற, எ∴கு – கருவி, அதனின் - அதுபோன்று, கூரியது இல் - கூர்மையான படைக்கலம் வேறு எதுவும் இல்லையாகும்.

**10. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்**
**ஏனை இரண்டும் ஒருங்கு.**

நல்ல வழியில் வரும் பொருளினை மிகுதியாகப் படைத்தவர்க்கு மற்றையதான அறமும் இன்பமும் ஒன்றாக அடைவதற்கு எளிய பொருள்களாகும்.

ஒண் - நல்வழியில் இருப்பதான, பொருள் - செல்வத்தினை, காழ்ப்ப – மிகுதியாக, இயற்றியார்க்கு – உண்டாக்கிக் கொண்டவர்க்கு, ஏனை – மற்றைய அறமும் இன்பமுமான, இரண்டும் - இரண்டும், ஒருங்கு – ஒருங்கு சேர்ந்து, எண் - எளிமையாக வந்தடையும், பொருள் - பொருள்களாகும்.

## 39.படைமாட்சி

## (படையினுடைய சிறப்பும் நன்மையும்)

**1. உறுப்புஅமைந்து ஊறுஅஞ்சா வெல்படை வேந்தன்**
**வெறுக்கையுள் எல்லாம் தலை.**

படைக்குரிய உறுப்புக்களால் அமைந்து போரினிடத்து ஊறுபடுவதற்கு அஞ்சாமல் நின்று பகையினை வெல்வதாகிய படை, வேந்தனுடைய செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலையான செல்வமாகும்.

உறுப்பு அமைந்து – படைக்குரிய உறுப்புக்களால் நிறைந்திருந்து, ஊறு – போரில் உண்டாகும் துன்பங்களுக்கு, அஞ்சா – அஞ்சாமல் நிலைத்து நின்று,வெல்படை – வெல்வதாகிய படை, வேந்தன் - வேந்தனுடைய, வெறுக்கையுள் - செல்வங்களுள், எல்லாம் - எல்லாவற்றிலும், தலை – தலையான (முதன்மையான ) செல்வமாகும்.

**2. உலைவிடத்து ஊறுஅஞ்சா வன்கண் தொலைவிடத்துத்**

**தொல் படைக்கு அல்லால் அரிது.**

தான் சிறிதாக இருந்த இடத்தும் போரில் அழிவு வந்தால் அஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மை, அவனுடைய முன்னோரைத் தாங்கிவரும் படைக்கு ( தொன்று தொட்டு வருவது ) அல்லாமல் உளதாகாது.

தொலைவிடத்து – தான் சிறியதாகியபோது, உலைவிடத்து – தனக்கு அழிவு வந்துவிட்டால், ஊறு அஞ்சா – உண்டான துன்பத்திற்கு அஞ்சாமல் நின்று போரிடுகின்ற, வன்கண் - திண்மையும் உறுதியும், தொல் படைக்கு – அவன் முன்னோரைத் தாங்கிவரும் படைக்கு, அல்லால் - அல்லாமல், அரிது – மற்றவற்றிற்கு உண்டாகாது.

3. **ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை**
   **நாகம் உயிர்ப்பக் கெடும்.**

எலியாகிய படை திரண்டு கடல் போல ஒலித்தாலும் நாகத்திற்கு என்ன துன்பத்தினைச் செய்ய முடியும்? அந்த நாகம் மூச்சு விட்டவுடனே அந்த எலிப்பகை கெட்டுவிடும்.

எலி – எலிகளாகிய, பகை – பகை மிகுந்து,உவரி – கடல் போன்று, ஒலித்தக்கால் - ஒலித்து ஓசையிட்டால், என்னாம் நாகத்திற்கு என்ன துன்பம் உண்டாகும், நாகம் - அந்த நாகப்பாம்பு, உயிர்ப்ப - மூச்சு விட்டவுடனே, கெடும் - அவை கெட்டழியும்.

4. **அழிவின்றி அறைபோகாது ஆகி வழிவந்த**
   **வன்கண் அதுவே படை.**

போரில் கெடுதல் இல்லாமல், பகைவரால் கீழறுக்கப்படாததாகித் தொன்றுதொட்டு வந்த வலிமையினை யுடையதே அரசனுக்குப் படையாவதாகும்.

அழிவு – போரில் கெடுதல், இன்றி - இல்லாமல், அறைபோகாது – பகைவரால் கீழறுக்கப்படாததாய், ஆகி – ஆகியிருந்து, வழி – தொன்றுதொட்டுப் பழமையாய், வந்த – வந்த, வன்கணதுவே – வன்கண்மையாகிய வலிமையுடையதே, படை – சிறந்த படையாகும்.

5. **கூற்றுஉடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்**
   **ஆற்ற லதுவே படை.**

கூற்றுவனே கோபித்து எதிர்த்து வந்தாலும் நெஞ்சத் துணிவுடன் எதிர்த்து நின்று தாங்கும் ஆற்றலை உடையதே படையாகும்.

கூற்று - கூற்றுவன், உடன்று – சினங்கொண்டு, மேல்வரினும் - தாக்குவதற்குத் தன்மேல் வந்தாலும், கூடி – நெஞ்சு ஒத்து, எதிர்நிற்கும் - எதிர்த்து நிற்கின்ற, ஆற்றலதுவே – வலிமையினையுடையதுவே, படை – படையாகும்.

**6. மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்**
**எனநான்கே ஏமம் படைக்கு.**

வீரமும் மானமும் மாட்சிமைப்பட்ட வீரர் வழியில் செல்லும் நம்பிக்கையுள்ளதும் ஆகிய நான்கு குணங்களுமே சேனைக்குப் பாதுகாப்பாகும்.

மறம் - வீரமும் தறுகண்மையும், மானம் - மானம் உடைமையும், மாண்ட – சிறப்பமைந்த, வழிச் செலவு – முன்பு வீரராயினார் சென்ற வழியீல் செல்லுதலும், தேற்றம் - தலைவனுடைய நம்பிக்கைக்குட்பட்டதும், என – என்று கூறப்பட்ட, நான்கே - இந்த நான்கு குணங்களுமே, படைக்கு ஏமம் - படைக்குப் பாதுகாவல்களாகும்.

**7. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த**
**போர்தாங்கும் தன்மை அறிந்து.**

பகைவரால் தன்மேல் வந்த போரினை விலக்குகிற வழி முறையினை அறிந்து வகுத்துக்கொண்டு, அவரது படைத் தாக்குதலை, தன்மேல் வராமல் தடுத்துக்கொண்டு தான் அப்படையின்மேல் செல்வதே படையாகும்.

தலைவந்த – பகைவரால் தன்னை எதிர்த்து வந்த, போர் - போரினை, தாங்கும் - நீக்கி விலக்குகின்ற, தன்மை – வகைமுறையினை, அறிந்து – வகுத்துக் கொண்டு, தார் - அவரது படைத் தாக்குதலை, தாங்கி – தன்மேல் வராமல் தடுத்துக்கொண்டு, செல்வது தானை – தான் அப்பகைவர்மீது செல்வதே படையாகும்.

**8. அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை**
**படைத்தகையால் பாடு பெறும்.**

சேனைக்குப் பகைவரைக் கொல்லும் தன்மையும், சிறந்த வீரமும் இல்லையென்றாலும், தனது தோற்றப் பொலிவாலே பெருமையினை அடையும்.

தானை – சேனையானது, அடல்தகையும் - போர் செய்கின்ற சிறந்த வீரமும், ஆற்றலும் - பகை தன்மேல் வந்தால் தாங்கும் வலிமையும், இல் - பெற்றில்லை,எனினும் - என்றாலும், படைத்தகையால் - தனது தோற்றப் பொலிவாலே, பாடுபெறும் - பெருமையினை எய்தும்.

**9. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்**
**இல்லாயின் வெல்லும் படை.**

குறைந்து சிறிதாகிக் கொண்டு போவதும், வெறுப்புணர்ச்சியும் வறுமையும் ஆகியவை இல்லாமலிருந்தால் அச்சேனையானது பகைவரை வெல்லும்.

சிறுமையும் - குறைந்து சிறிதாவதும், செல்லா – நீங்காத, துனியும் - வெறுப்புணர்ச்சியும், வறுமையும் - வறுமையும், இல்லாயின் - இல்லாதிருந்தால், படை வெல்லும் - சேனையானது பகைவரை வென்றுவிடும்.

**10. நிலைமக்கள் சால உடைத்துஎனினும் தானை**
**தலைமக்கள் இல்வழி இல்.**

போரில் நிலைத்து நிற்கும் வீரர் பலரை மிகுதியாகப் பெற்றிருந்தாலும், தனக்குத் தலைவர்களான தலைமை வீரர்கள் இல்லாதபோது சேனை நிற்காது.

நிலைமக்கள் - போரில் நிலைத்து நின்று போரிடும் வீரர்களை, சால – மிகுதியாக, உடைத்து – உடையதே, எனினும் - என்றாலும், தலைமக்கள் - தலைவர்களாகிய வீரர்கள், இல்வழி - இல்லாவிட்டால், தானைஇல் - சேனை நிற்காது.

## 40.படைச் செருக்கு

**(படையினது வீர மிகுதியினைக் கூறுவதாகும்.)**

**1. என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்ஐ**
**முன்நின்று கல்நின் றவர்.**

பகைவர்களே! எனது தலைவனை எதிர்த்து நின்ற இறந்து கல்லாய் நின்ற வீரர் பலராவர் ஆதலால் எனது தலைவன் முன்பாகப் போர் செய்து நிற்பதை நீக்குவீராக.

தெவ்விர் - பகைவர்களே! என்- என்னுடைய, ஐ – தலைவன், முன் - எதிரே, நின்று - போர் செய்து நின்று, கல் - தோற்றுவீழ்ந்து நடுகல்லாக, நின்றவர் - நின்றவர்கள், பலர் - பலராவார், (ஆதலால்) என் - என்னுடைய, ஐ – தலைவன், முன் - எதிரே, நில்லன்மின் - நிற்காது நீங்குவீர்களாக.

**2. கான முயல்எய்த அம்பினில் யானை**
**பிழைத்தவேல் ஏந்தல் இனிது.**

காட்டினில் ஓடும் முயலினைத் தப்பாது எய்திய அம்பினை ஏந்துவதைவிட யானையின் மீது எறிந்து தப்பிய வேலினை ஏந்தி வருதல் இனிமையானதாகும்.

கானமுயல் - காட்டினில் முயலினை, எய்த - தப்பாமல் எய்த, அம்பினில் -அம்பினை ஏந்துவதைக் காட்டிலும், யானை – யானையின் மீது எறிந்து, பிழைத்த – பாயாமல் தவறிய, வேல் - வேலினை, ஏந்தல் இனிது – கையினில் ஏந்தி வருதல் மகிழ்ச்சியுடையது.

**3. பேராண்மை என்ப தறுகண்ஒன்று உற்றக்கால்**
**ஊராண்மை மற்றுஅதன் எஃகு.**

பகைவர்மேல் கண்ணோடாமல் செய்யப்படும் வீரத்தினையே நூலோர், மிக்க ஆண் தன்மை என்று கூறுவர். பகைவர்க்கு ஒரு தாழ்வு வந்தபோது கண்ணோட்டம் செய்து அவர்க்கு உதவுகின்ற தன்மையினை, அந்த ஆண் தன்மைக்குக் கூர்மை என்று கூறுவர் நூலோர்.

தறுகண் - (பகைவர் மீது இரக்கமின்றிப் போர் செய்யும்) வீரத்தினை, பேராண்மை - மிகுந்த பேராண்மையாகும், என்ப – என்று கூறுவர் , ஒன்று – பகைவர்க்கு ஒரு தாழ்வு, உற்றக்கால் - வந்தபோது, ஊராண்மை - இரக்கங் காட்டி உதவி செய்தல், அதன் எஃகு - அதற்குக் கூர்மையென்று கூறுவர்.

**4. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்**
**மெய்வேல் பறியா நகும்.**

கைப்படையான வேலினை, தன்னை எதிர்த்து வந்த யானை மீது எறிந்து, வருகின்ற யானைக்கு வேல் தேடுபவன் தனது மார்பினிடத்தே பாய்ந்திருந்த வேலைக் கண்டு அதனைப் பார்த்து மகிழ்வான்.

கைவேல் - கைப்படையாகிய வேலினை, களிற்றொடு - தன்னை எதிர்த்து வந்த யானை மீது, போக்கி – செலுத்திவிட்டு, வருபவன் - வேறு வேல் தேடி வருகின்றவன், மெய் - தனது மார்பில் பாய்ந்திருந்த, வேல் - வேலைப் பார்த்து, பறியாநகும் - அதனைப் பறித் தெடுத்து மகிழ்வான்.

**5. விழித்தகண் வேல்கொண்டு எறிய அழித்துஇமைப்பின்**
**ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.**

பகைவரைக் கோபித்து நோக்கிய கண், பகைவர் எறிந்த வேலைக் கண்டு பொறுக்காமல் இருக்குமானால் அது வீரர்க்குப் புறங் கொடுத்தலாகும்.

விழித்த - (பகைவர் மேல் சினங் கொண்டு ) பார்த்த, கண் - கண்கள், வேல் - வேலினை, கொண்டு – பகைவர் வைத்துக் கொண்டு, எறிய – தன் மீது எறிய, அழித்து – அதற்குப் பொறாமல் பார்வையினை அழித்து, இமைப்பின் - கண் இமைக்குமானால், வன்கணவர்க்கு - ஆண்மை நிறைந்த வீரர்களுக்கு, ஓட்டன்றோ - புறங் கொடுத்தலாகு மல்லவா?

**6. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்**
**வைக்கும்தன் நாளை எடுத்து.**

தனக்குச் சென்ற நாட்களை எடுத்து எண்ணி அவற்றுள் போரில் சென்று சிறப்பான புண்கள் படாத நாட்களை யெல்லாம் பயன்படாமல் கழிந்த நாட்களுக்குள்ளே வீரன் வைப்பான்.

தன் நாளை - தனக்குக் கழிந்த நாட்களையெல்லாம், எடுத்து – எண்ணியெடுத்து, விழு – போரில் உண்டாகும் மேலான, புண் - புண்கள், படாத – ஏற்படாத, நாள் -நாட்களை, எல்லாம் - எல்லாம், வழுக்கினுள் வீணான நாட்களுக்குள்ளே, வைக்கம் - வீரன் வைப்பான்.

**7. சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்**
**சுழல்யாப்புக் காரிகை நீர்த்து.**

உலகில் சூழ்ந்து நிற்கும் புகழினை விரும்பி உயிர் வாழ்தலை வேண்டாத வீரர் வீரக் கழலைக் கட்டிக் கொள்ளுதல் அலங்காரத் தன்மையினை உடையதாகும்.

சுழலும் - சூழ்ந்து நிற்கும், இசை வேண்டி – புகழினை விரும்பி, வேண்டா – உயிர் வாழ்தலை விரும்பாத, உயிரார் - மறவர், கழல் - வீரக் கழலினை, யாப்பு – கட்டுதல், காரிகை - அலங்காரமான, நீர்த்து – தன்மையினையுடையதாகும்.

**8. உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்**
**செறினும்சீர் குன்றல் இலர்**

போர் வந்தால் தமது உயிர்ப்பொருட்டு அஞ்சாமல் போர்மேல் செல்லும் வீரர், தமது தலைவனாகிய இறைவன் (மன்னன்) ‘அது வேண்டாம்’ என்று கோபித்தாலும் அவ்வீர மிகுதியில் குன்றமாட்டார்கள்.

ஊறின் - போர் வந்தால், உயிர் அஞ்சா – உயிருக்கு அஞ்சாமல்(போர்மேற் செல்லும்) மறவர் - வீர மறவர், இறைவன் - தமது தலைவனான மன்னன், செறினும் - அது வேண்டாமென்று சினந்தாலும், சீர் - அவ்வீர மிகுதியில், குன்றல் இலர் - குறைதல் என்பது இல்லாதவராவர்.

**9. இழைத்தது இகவாமைச் சாவாரை யாரே**
**பிழைத்தது ஒறுக்கிற் பவர்.**

தாம் கூறிய வஞ்சினம் தப்பாமற்பொருட்டுப் போரிற் சென்று சாவ வல்ல வீரரை அது தப்பியவாறு சொல்லி இகழ்ந்து பேசுவதற்குரியார் யார்?

இழைத்தது – தாம் கூறிய வஞ்சினம், இகவாமை – தப்பாமல் இருக்க வேண்டி, சாவாரை – போருக்குச் சென்று இறக்க வல்ல வீரரை, பிழைத்தது – அது தப்பியவாறு சொல்லி, ஒறுக்கிற்பவர் யார் - ஏளனமாகப் பேசுபவர் யாவர்?

**10. புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு**
**இரந்துகோள் தக்கது உடைத்து.**

தமக்குச் செய்த நன்றிகளை நினைத்து ஆளும் அரசர் கண்களில் நீர் பெருகும் வகையில் போரில் சாகப் பெற்றால் அச்சாக்காடு இரந்தாயினும் (யாசித்தேனும்) பெற்றுக் கொள்ளும் தகுதியினை உடையதாகும்.

புரந்தார் - தம்மை ஆட்சி செய்த அரசரது, கண் - கண்களில், நீர் - நீர், மல்க – பெருகுமாறு, சாகிற்பின் - போரிலே சாக முடிந்தால், சாக்காடு –

அத்தகைய சாக்காடு (இறப்பு), இரந்து – யாசித்தேனும், கோள் - கொள்ள, தக்கது – தகுதியினை, உடைத்து – உடையதாகும்.

## 41.நட்பு

### (நண்பர்களைப் பற்றிய விளக்கமும் சிறப்பும், பயனும்)

**1. செயற்குஅரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்குஅரிய யாவுள காப்பு.**

நட்பினைப் போல செய்துக் கெள்ளுவதற்கு அரியபொருள்கள் யாவை உள? எவையும் இல்லை: அந்நட்பினைச் செய்து கொண்டால் அது போலப் பகைவா் செய்யும் தொழிலுக்கு அரிய பாதுகாப்பாவன யாவை உள? வேறு எவையும் இல்லை என்பதாம்.

நட்பின் - நட்பு செய்தலைப் போல, செயற்கு – ஒருவன் தனக்குச் செய்து கொள்ளுவதற்கு, அரிய – அருமையான செயல், யாஉள – எவை உண்டு, அது போல் - அதனைப் போல, வினைக்கு – (பகைவா்) செய்யும் தொழிலுக்கு, அரிய காப்பு - அருமையான பாதுகாவலானவை, யாஉள – எவை உண்டு.

**2. நிறைநீர நீரவா் கேண்மை பிறைமதிப்**
**பின்நீர பேதையாா் நட்பு.**

அறிவுடையாருடன் கொள்ளும் நட்பு நாள்தோறும் பிறைமதியினைப் போல் நிறையும் தன்மையினையுடையதாகும். பேதைமையுடையாா் நட்பு நிறைந்தமதி குறையும் தன்மைபோல நாள்தோறும் குறைந்து வருவதாகும்.

நீரவா் - அறிவுடையாா்களுடன் செய்து கொள்ளும், கேண்மை - நட்புக்களானவை, பிறை – பிறையைப் போல, நிறை - அன்றாடம் நிறைகின்ற, நீர - தன்மையினவாம், பேதையாா் - அறிவில்லாதவரது, நட்பு – நட்புக்கள், மதி – நிறைந்த சந்திரனானவன், பின் - பின்னே (நாள்தோறும் குறையும்), நீர - தன்மையுடையதாகும்.

**3. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளா் தொடா்பு.**

நற்குணமுடைய மக்கள் தமக்குள் செய்த நட்பு பழகுந்தோறும் அவா்க்கு இன்பம் செய்தலாவது நூற்பொருள்களைக் கற்குந்தோறும் அந்நூலானது கற்றாா்க்கு இன்பம் செய்தலை ஒக்கும் என்பதாம்.

பண்பு – நற்குணம், உடையாளர் - உடைய மேன்மக்கள், தொடர்பு - தமக்குள் செய்த நட்பானது, பயில்தொறும் - பழகும்போதெல்லாம் (இன்பம் தரும், அது) நூல் - நூற்பொருளினை, நவில்தொறும் - கற்கும்போதெல்லாம், நயம் போலும் - கற்பவர்களுக்கு இன்பம் செய்தலைப் போன்றிருக்கும்.

**4. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்.**
**மேற்சென்று இடித்தற் பொருட்டு.**

ஒருவரோடு ஒருவர் நட்புச் செய்து கொள்ளுதல் தம்முள் நகைத்துப் பழகுவதற்காக அல்ல: நண்பனிடம் வேண்டாத செய்கை உண்டாகும்போது முற்பட்டுக் கண்டித்து அவர்க்குப் புத்திமதி சொல்லுவதற்கேயாகும்.

நட்டல் - ஒருவரோடொருவர் நட்புச் செய்து கொள்ளுதல், நகுதற் பொருட்டன்று - உண்டானபோது, மேற்சென்று - முற்பட்டு, இடித்தற் பொருட்டன்று - நகைத்துப் பழகுவதற்காக அல்ல: மிகுதிக்கண் - நண்பனிடம் வேண்டாத செய்கை உண்டானபோது, மேற்சென்று - முற்பட்டு, இடித்தற் பொருட்டு – கண்டித்துப் புத்திமதி சொல்லுவதற்கேயாகும்.

**5. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாம் கிழமை தரும்.**

ஒருவனோடு ஒருவன் நட்பாவதற்கு ஒரே இடத்தில் இருப்பதும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டியதில்லை. ஒத்த மனவுணர்ச்சியே நட்பு என்கின்ற உரிமையைக் கொடுப்பதாகும்.

புணர்ச்சி - ஒரு தேசத்தில் இருந்தாலும், பழகுதல் - அடிக்கடி கண்டு பழகுதலும், வேண்டா – ஆகியவை வேண்டுவதில்லையாகும், உணர்ச்சிதான் - இருவருக்கும் உண்டான ஒத்த மனவுணர்ச்சியே, நட்பாம் - நட்பு என்னும், கிழமை தரும் - உரிமையினைத் தருவதாகும்.

**6. முகம்நக நட்பது நட்புஅன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு.**

கண்டபொழுது மனத்தால் அல்லாமல் முகத்தினாலே மட்டும் மலர்ந்து நட்புச் செய்வது நட்பு ஆகாது. அன்பினால் மனமும் மலர நட்புச் செய்வதே நட்பு என்பதாகும்.

முகம் - முகத்தினால் மட்டும், நக – மலர்ச்சியினைச் செய்து, நட்பது – நண்பனாக இருப்பது, நட்பு – நட்பு, அன்று – ஆகாது, நெஞ்சத்து – அன்பினால், அகம் - உள்ளம், நக – மகிழ்ச்சியால் மலர, நட்பதுநட்பு – நட்புச் செய்வதே நட்பாகும்.

**7. அழிவி னவைநீக்கி ஆறுஉய்த்து அழிவின்கண்**
**அல்லல் உழப்பதாம் நட்பு.**

கெடுதியினைத் தரும் தீய வழிகளில் செல்லும்போது நண்பனை அவ்வாறு செல்லாமல் விலக்கி நல்ல வழிகளில் செலுத்துவதும் கெடுதல் வந்தபோது தானும் உடனிருந்து அனுபவிப்பதுமே சிறந்த நட்பாகும்.

அழிவின் அவை – கேட்டினைத் தருகின்ற தீய வழிகளிலிருந்து, நீக்கி - நண்பனை நீக்கி, ஆறு - மற்ற நன்னெறியிலே, உய்த்து – செலுத்தி அழிவின்கண் - கெடுதி வந்துற்ற போது, அல்லல் -துன்பத்தினை, உழப்பதாம் - தானும் உடனிருந்து அனுபவிப்பதே, நட்பு – நட்பாகும்.

**8. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு.**

ஆடை குலைந்தவனுக்கு அப்பொழுதே கை சென்று உதவி செய்து இழிவினை நீக்குவது போல நண்பனுக்குத் துன்பம் வந்தபோது அப்பொழுதே சென்று உதவி செய்து அதனை நீக்குவதே நட்பாகும்.

உடுக்கை – உடை, இழந்தவன் - குலைந்த ஒருவனுக்கு, கைபோல – உடனே கை சென்று உதவுதல் போல, ஆங்கே – நண்பனுக்குத் துன்பம் வந்த அப்போதே, இடுக்கண் - அத்துன்பத்தினை, களைவதாம் - நீக்கி விடுவதுதான், நட்பு – நட்பாகும்.

**9. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்புஇன்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**

நட்பானது சிறப்பாக வீற்றிருக்கும் இடம் எதுவென்றால் அது எப்போதும் மாறுபாடு இல்லாமல் முடிந்த இடங்களில் எல்லாம் தளராமையினைத் தாங்கும் திண்மையாகும்.

நட்பிற்கு - நட்பு என்பதற்கு, வீற்றிருக்கை - இருக்கும் இடம் என்பது, யாது – எது, எனின் - என்றால், கொட்பு - திரிதல் (மாறுதல்)

இன்றி - இல்லாமல், (எப்போதும்) ஒல்லும் - முடிவும், வாய் - இடங்களில் எல்லாம் , ஊன்றும் - தளர்ச்சியின்றி உதவும், நிலை மனவலிமையாகும்.

**10. இனையர் இவர்எமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல்லென்னும் நட்பு.**

“இவர் நமக்கு இத்தகைய நண்பர், யாம் இவர்க்கு இத்தன்மையான நண்பர்” என்று வேறுபடுத்திக்கொண்டு ஒருவரை யொருவர் சிறப்பித்தாலும் நட்புக்கு அது சிறுமையுடையதாகும்.

இவர் - இந்த நண்பர், எமக்கு – எனக்கு, இனையர் - இப்படிப்பட்ட நண்பர், யாம் - யாம், இன்னம் - இத்தகைய அன்புடையோம், என்று - என்பதாகக் கூறி, புனையினும் - ஒருவரையொருவர் சிறப்பித்துப் பேசினாலும், (வேற்றுமையாகத் தோன்றுவதால்) நட்பு புல்லென்னும் - நட்பானது சிறுமை யுடையதாகிவிடும்.

## 42. நட்பு ஆராய்தல்

## (ஒருவரை நன்கு ஆராய்ந்தபின் நட்பினராக்குதல்)

**1. நாடாது நட்டலின் கேடுஇல்லை நட்டபின்**
**வீடுஇல்லை நட்புஆள் பவர்க்கு.**

நட்பினை விரும்பி ஒருவரோடு நட்புச் செய்தபின் அந்த நட்பினை விட்டுவிடுதல் என்பது உண்டாகாது. ஆதலால் ஆராயாமல் நட்புச் செய்தல் போலக் கேடு தருவது பிறிதொன்று மில்லை.

நட்பு – நட்பினை, ஆள்பவர்க்கு - விரும்பி அந்நட்பில் இருப்பவர்களுக்கு, நட்ட – நட்பினைச் செய்த, பின் - பின்னே, வீடு இல்லை – விடுதல் என்பது உண்டாகாது,(ஆதலால்) நாடாது - ஆராய்ந்தறியாமல், நட்டலில் - நட்பு செய்வதைப் போல, கேடு இல்லை – தீமை தருவது வேறு எதுவும் இல்லையாகும்.

**2. ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை**
**தான்சாம் துயரம் தரும்.**

குணம் செய்கை முதலியவற்றைப் பலகாலும் பலவாற்றாலும் ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவன் முடிவில் தான் சாதற்குக் காரணமான துன்பத்தினைத் தானே உண்டாக்கிக் கொள்ளுவான்.

ஆய்ந்துஆய்ந்து – பலகாலும் பலமுறைகளிலும் ஆராய்ந்து, கேண்மை – நட்பினை கொள்ளாதான் - செய்து கொள்ளாதவன், கடைமுறை – கடைசியில், தான் -(பகைவர் செய்யாமல்) தானே, சாம் துயரம் - சாவதற்குக் காரணமான துன்பத்தினை, தரும் - உண்டாக்கிக் கொள்ளுபவனாவான்.

**3. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா**
**இனனும் அறிந்துயாக்க நட்பு.**

ஒருவனுடைய குணத்தினையும், குடிப் பிறப்பினையும், குற்றத்தினையும், குறைவற்ற சுற்றத்தினையும் ஆராய்ந்தறிந்து அவனோடு நட்புச் செய்தல் வேண்டும்.

குணனும் - குணத்தினையும், குடிமையும் - குடிப்பிறப்பினையும், குற்றமும் - குற்றத்தினையும், குன்றா – குறைவில்லாத, இனனும் - சுற்றத்தினையும், அறிந்து – ஆராய்ந்தறிந்து, (பின்பு) நட்பு யாக்க – நட்பினைச் செய்து கொள்ளுவானாக.

**4. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்**
**கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.**

உயர்ந்த குடியின்கண் பிறந்து உலகோர் சொல்லும் பழிக்கு அஞ்சுபவனைச் சில கொடுத்தாயினும் நட்பு கொள்ளுதல் சிறந்ததாகும்.

குடி - நல்லோர் குடியில், பிறந்து – பிறந்திருப்பது, தன்கண் - தனக்குண்டாகும், பழி – பிறர் கூறும் பழிச் சொல்லாக்கு, நாணுவானை – நாணுமுறுபவனை, கொடுத்தும் - வேண்டுவன சில கொடுத்தாகிலும், நட்பு – அவனுடைய நட்பினை, கொளல் - செய்து கொள்ளுதல், வேண்டும் - வேண்டும் என்பதாகும்.

**5. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்குஅறிய**
**வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.**

தான் தகாதது செய்யப் புகுந்தால் வருத்தம் உண்டாகுமாறு சொல்லி விலக்கியும் செய்தக்கால் பின்னும் செய்யாமல் நெருக்கியும், செய்ய வேண்டியதைச் செய்யத்தவறினால் செய்யுமாறு ஆக்க வல்லவர்கள் ஆராய்ந்து நட்பினைச் செய்தல் வேண்டும்.

அல்லது - தகாதவற்றைச் செய்யப் புகுந்தால், அழ – வருத்தம் உண்டாக்கும் அளவுக்கு, சொல்லி – சொல்லியும், இடித்து - செய்தக்கால் நெருக்கியும், வழக்கு – உலக நடை முறையினைச் செய்யாதபோது, அறியவல்லார் - அறிந்து செய்விக்கும் படியும் ஆக்க வல்லவரை, ஆராய்ந்து – நன்கு ஆராய்ந்தறிந்து, நட்புக் கொளல் - நட்பாகக் கொள்ளுதல் வேண்டும்.

**6. கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை**
**நீட்டி அளப்பதோர் கோல்.**

ஒருவனுக்குக் கெடுதி உண்டானால் அக்கெடுதியானது தனது நண்பர்களை உறுதியாக அளந்து பார்க்கும் கோலாகும். ஆதலால் அக்கெடுதியிலும் தெரிந்து கொள்ளுவதொரு நல்லறிவு உண்டு.

கிளைஞரை - நண்பர்கள் என்னும் நிலங்களை, நீட்டி அளப்பது - குறைவு இல்லாமல் அளக்கின்ற, ஓர் - ஒரு, கோல் - அளவுகோல் (எதுவென்றால்) ஒருவனுக்கு நேரிடும் கெடுதியேயாகும், (ஆதலால்) கேட்டினும் - அக்கெடுதியிலும், ஓர் உறுதி - தெரிந்து கொள்ளுகின்ற ஓர் நல்ல அறிவு, உண்டு - உண்டு என்பதாகும்.

**7. ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்**
**கேண்மை ஒரீஇ விடல்**

ஒருவனுக்கு ஊதியம் என்பது யாதென்றால் அறிவில்லாதவருடன் கொண்ட நட்பினை ஒழித்து நீக்கி விடுவதாகும்.

ஒருவற்கு – ஒருவனுக்கு, ஊதியம் - நன்மை (இலாபம்), என்பது – என்று சொல்லப்படுவது, (யாதென்றால்) பேதையார் - அறிவற்றவர்களது, கேண்மை – நட்பினை, ஒரீஇவிடல் - ஒழித்து நீங்கி விடுவதாகும்.

**8. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க**
**அல்லற்கண் ஆற்றுஅறுப்பார் நட்பு.**

தன்னுடைய ஊக்கம் சுருங்குவதற்குக் காரணமான செயல்களைச் செய்ய நினையாதிருத்தல் வேண்டும். அதுபோல, தனக்கு ஒரு துன்பம் வந்தபோது கைவிடுவார் நட்பினைக் கொள்ளாதிருத்தல் வேண்டும்.

உள்ளம் - தனது ஊக்கமானது, சிறுகுவ - சுருங்கி விடுவதற்கான செயல்களை, உள்ளற்க – மனத்தில் செய்ய நினையாதிருப்பானாக, அல்லற்கண்

- தனக்கு ஒரு துன்பம் வந்த காலத்தில் ஆற்றறுப்பார் நட்பு – கைவிட்டு விடுபவரது நட்பினை, கொள்ளற்க – கொள்ளா திருப்பானாக.

**9. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை**
**உள்ளினும் உள்ளம் சுடும்.**

ஒருவன் கெட்டுப் போகும் காலத்தில் அவனை விட்டு நீங்குபவர்களிடம் செய்து கொண்ட நட்பினை, தன்னிடம் கூற்றுவன் வருகின்ற காலத்தில் நினைத்தாலும் அந்த நினைப்பு உள்ளத்தினைச்சுடும்.

கெடுங்காலை – ஒருவன் கெடுகின்ற காலத்தில், கைவிடுவார் கேண்மை – அவனை விட்டு நீங்கிவிடுபவர் நட்பினை, அடுங்காலை - கூற்றுவன் உயிர் கொள்ளும் காலத்தில், உள்ளினும் - நினைத்தாலும், உள்ளம் கூடும் - மனத்தினைச் சுட்டுவிடும்.

**10. மருவுக மாசற்றார் கேண்மைஒன்று ஈத்தும்**
**ஒருவுக ஒப்பிலார் நட்பு.**

உலகத்தோடு ஒத்து வாழ்கின்ற குற்றமில்லாதவர்களுடைய நட்பினையே செய்தல் வேண்டும். உலகத்தோடு பொருந்துதல் இல்லாதவரது நட்பினை அவர் வேண்டிய தொன்றனைக் கொடுத்தாயினும் விட்டு விடுதல் வேண்டும்.

மாசு – குற்றம், அற்றார் - இல்லாதவரது, கேண்மை – நட்பினையே, மருவுக – தழுவிக் கொள்ளுவானாக, ஒப்பு – உலகத்தோடு ஒத்துவாழ்தல், இலார் - இல்லாதவர்களுடைய நட்பு - நட்பினை, ஒன்று ஈத்தும் - அவன் வேண்டிய ஒன்றினைக் கொடுத்தாகிலும், ஒருவுக – விட்டு விடுவாயாக.

## 43.பழைமை

## (பழைய நட்பின் தன்மை)

**1. பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்**
**கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.**

பழைமைய என்று சொல்லப்படுவது யாது என்றால் பழைய நண்பர்கள் உரிமையால் செய்தவைகளைச் சிறிதேனும் நீக்காமல் அப்படியே உடன்படும் நட்பாகும்.

பழைமை – பழைமை, எனப்படுவது – என்று சொல்லப்படுவது, யாது – எது, எனின் - என்று வினவின், கிழமையை – பழைய நண்பர்கள் உரிமையால்

செய்தவைகளை, யாதும் - சிறிதளவுகூட, கீழ்ந்திடா – விலக்காமல் ஏற்றுக் கொள்ளும், நட்பு – நட்பாகும்.

**2. நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றுஅதற்கு**
**உப்பாதல் சான்றோர் கடன்.**

நட்பினுக்கு உறுப்புக்களானவை யாவை என்றால் நண்பர்கள் உரிமையால் செய்வனவேயாகும். அந்த உரிமைக்கு உடன்பட்டு இனியவராதல் பெரியோர்களுக்கு முறையான கடமையாகும்.

நட்பிற்கு – நட்பினுக்கு, உறுப்பு – உறுப்பானவை எவை யென்றால், கெழுதகைமை – நண்பர்கள் உரிமையால் செய்வனவாகும், அதற்கு – அந்த உரிமைக்கு, உப்பாதல் - உடன்பட்டு இனியவராதல், சான்றோர் கடன் - நிறைகுணம் செறிந்த பெரியோர்களுக்கு முறையான கடமையாகும்.

**3. பழகிய நட்பு எவன்செய்யும் கெழுதகைமை**
**செய்தாங்கு அமையக் கடை.**

நட்பினர் உரிமையால் செய்தவைகளைத் தாமே செய்தது போல உடன்படாராயின் பழைமையால் வந்த நட்பு என்ன பயனைச் செய்யும்?

கெழுதகைமை – நண்பர்கள் உரிமை கொண்டு செய்தவைகளுக்கு, செய்தாங்கு – தாமே செய்தாற் போல, அமையாக்கடை – உடன்பட்டு இராவிட்டால், பழகிய நட்பு – பழையதாய் வந்த நட்பு, எவன் செய்யும் - என்ன பயனைச் செய்யும்?

**4. விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையான்**
**கேளாது நட்டார் செயின்.**

நண்பர்கள் பழகிய உரிமையால் தம்மைக் கேளாமலேயே தமது காரியத்தைச் செய்வாராயின் அச்செயல் விரும்பப்படும் தன்மையுடையதாதலால் நண்பர்கள் அதற்கு உடன்பட்டு விரும்பி இருப்பார்கள்.

நட்டார் - நண்பர்கள், கெழுதகையான் - பழகிய உரிமையால், கேளாது செயின் - தம்மைக் கேளாமலேயே தமது செயலிமைச் செய்து விடுவாரானால், விழை – அச்செயல் விரும்பப்படும், தகையான் - தன்மையுடையதாதலால், வேண்டியிருப்பர் - அறிவுடைய நண்பர்கள் அதற்கு உடன்பட்டு விரும்பி இருப்பார்கள்.

**5. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க**

**நோதக்க நட்டார் செயின்.**

நண்பர்கள் நாம் வெறுக்கத்தக்கனவற்றைச் செய்வாரானால், அதற்குக் காரணம் ஒன்று அறியாமையாக இருக்க வேண்டும்: அல்லது மிகுதியான உரிமையினால் இருத்தல் வேண்டும்.

நோதக்க – நாம் வருந்தக் கூடியவைகளை, நட்டார் செயின் - நண்பர்கள் செய்தால் (அதற்குக் காரணம்) பேதைமை யொன்றோ – ஒன்று அறியாமையினால் இருத்தல் வேண்டும். (அல்லது) பெருங்கிழமை – மிகுந்த உரிமையாய் இருத்தல் வேண்டும், என்று உணர்க – என்பதாக அறிந்து கொள்ள வேண்டும்.

**6. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்**
**தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.**

நட்பு ஆகிய வரம்பினைத் தாண்டாமல் அதன் கண்ணே நின்றவர்கள், தம்முடன் பழைமையான தன்மையில் மாறாமல் வந்தவரது நட்பினை அவரால் கெடுதி வந்த போதும் விட மாட்டார்கள்.

எல்லைக்கண் - நட்பு என்பதன் வரம்புக்குள், நின்றார் - நின்றவர்கள், தொல்லைக்கண் - தம்முடன் பழைமையில், நின்றார் - மாறாமல் நின்றவரது, தொடர்பு – நட்பினை, தொலைவிடத்தும் - அவரால் கேடு வந்த காலத்திலும், துறவார் - விடமாட்டார்கள்.

**7. அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்**
**வழவந்த கேண்மை யவர்.**

பழைமையாய் வந்த நட்பினை உடையவர்கள் தமக்கு அழிவு வருவனவற்றை நண்பர்கள் செய்தாலும் அவர்களிடம் கொண்டுள்ள அன்பிலிருந்து நீங்க மாட்டார்கள்.

அன்பின் - அன்பு கொண்டு, வழி – பழைமையாய், வந்த – வந்த, கேண்மையவர் - நட்பினைக் கொண்டவர்கள், அழிவந்த – நட்பு செய்தவர் அழிவுக்குக் காரணமானவைகளை, செய்யினும் - தமக்குக் செய்தரேயானாலும், அன்பு – அவரிடம் கொண்ட அன்பிலிருந்து அறார் - நீங்கமாட்டார்கள்.

**8. கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு**
**நாள் இழுக்கம் நட்டார் செயின்.**

நண்பர்கள் செய்த பிழையினைத் தாமேயல்லாமல் பிறர் சொன்னாலும் கொள்ளாத உரிமையறிய வல்லவர்களுக்கு அந்த நண்பர்கள் பிழை செய்த நாள் பயன்பட்ட நாளாகும்.

கேள் - நண்பர்கள் செய்த, இழுக்கம் - குற்றத்தினை, கேளா – தாமேயன்றிப் பிறர் சொன்னாலும் கேளாத, கெழுதகைமை – உரிமையினை, வல்லார்க்கு – அறிய வல்லவரான நண்பர்களுக்கு, நட்டார் - அந்த நண்பர்கள், இழுக்கம் செயின் -குற்றத்தினைச் செய்வாரானால், நாள் - அந்த நாள் பயன்பட்ட நாளாகக் கருதப்படும்.

**9. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை**
**விடாஅர் விழையும் உலகு.**

உரிமை அற்றுப் போகாமல் பழையதாய் வந்த நட்புடையவரது, நட்பினை அவர் பிழை நோக்கியும் விடாதிருப்பவர்களை உலகம் அந்த நட்புக் குறித்து விரும்பும்.

கெடாஅ – உரிமையானது கெட்டு விடாமல், வழி – பழையதாய், வந்த – வந்ததான, கேண்மையார் - நட்புள்ளவரது, கேண்மை – நட்பினை, விடாஅர் - குற்றம் கருதி விடாதவரை, உலகு விழையும் - உலகமானது நட்பினைக் கருதி விரும்புவதாகும்.

**10. விழையார் விழையப் படுப பழையார்கண்**
**பண்பின் தலைப்பிரியா தார்.**

பழைமையாய் வந்த நண்பர்கள் பிழை செய்தாலும் தம் பண்பினால் அவர்களை விட்டு நீங்காதவர்கள், பகைவர்களாலும் விரும்பப்படுவார்கள்.

பழையார்கள் - பழைமையாய் வந்த நண்பர்கள்,(குற்றம் செய்தாலும்) பண்பின் - நற்குணத்தில், (எப்போதும்) தலைப் பிரியாதார் - நீங்காதவர்கள், விழையார் - பகைவர்களாலும், விழையப்படுப - விரும்பப்படுவார்கள்.

## 44.தீ நட்பு

### (தீய குணமுடையவர்களுடைய நட்பு)

**1. பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை**
**பெருகலின் குன்றல் இனிது.**

அன்பு மிகுதியால் நீரைப் பருகுவதுபோலப் பழகினாலும் தீயகுணமுடையவர்களின் நட்பு வளர்வதைவிடத் தேய்வதே நல்லதாகும்.

பருகுவார் - ஆவல் மிகுதியால் பருகுவார், போலினும் - போன்றாராயினும், பண்பு – நற்குணம், இலார் - இல்லாதவருடைய, கேண்மை – நட்பு, பெருகலின் - வளர்வதைவிட, குன்றல் இனிது - தேய்தல் நல்லதாகும்.

**2. உறின்நட்டு அறின்ஒருஉம் ஒப்புஇலார் கேண்மை**
**பெறினும் இழப்பினும் என்.**

தமக்குப் பயன் உள்ளவரைக்கும் நட்பினைச் செய்து பயனில்லாதபோது நீங்கிவிடும் தீயவர்களின் நட்பினைப் பெற்றிருந்தால்தான் என்னபயன்? இழந்தால்தான் என்ன பயன்?

உறின் - பயனுள்ளபோது நட்பினைச் செய்து, அறின் - பயனில்லாதபோது, ஒரூஉம் - நீங்கி விடுகின்ற, ஒப்பிலார் - பழகுவதற்குப் பொருத்தமில்லாதவருடைய, கேண்மை - நட்பினை, பெறினும் இழப்பினும் - பெற்றாலும் அல்லது இழந்தாலும், என் - என்ன பயன்?

**3. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது**
**கொள்வாரும் கள்வரும் நேர்.**

நட்பினைக் கருதாமல் நட்பினால் வரும் பயனைக் கருதுவோரும், கொடுப்பாரைக் கருதாமல் பணத்தின் அளவைக் காணும் பொதுமகளிரும், பிறர் கேடு நோக்காமல் அவரது சோர்வினைப் பார்க்கும் கள்வரும் ஒரே தன்மையராவர்.

உறுவது – நட்பினைக் கருதாமல் வருகின்ற பயனை, சீர்தூக்கும் - அளவு கண்டு பார்க்கும், நட்பும் - நட்பினரும், பெறுவதும் - பெறுகின்ற பொருளினை, கொள்வாரும் - கருதுகின்ற பொது மகளிரும், கள்வரும் - பிறர்கேட்டினைக் கருதாத கள்வர்களும், நேர் - ஒரே தன்மையினராவார்கள்.

**4. அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்**
**தமரின் தனிமை தலை.**

முன்பெல்லாம் தாங்கிக் கொண்டிருந்து போர்க்களத்தில் வீழ்த்திவிட்டுப் போகும் கல்லாத குதிரையைப் போன்றவர்களுடைய நட்பினைவிடத் தனிமையாக இருப்பதே சிறப்பு உடையதாகும்.

அமரகத்து - போர் வந்தபோது போர்க்களத்தில், ஆற்று அறுக்கும் - வீழ்த்திவிட்டுப் போகும் கல்லாமா - கல்வி யில்லாத குதிரை, அன்னார் - போன்றவர்கள், தமரின் - உற்றார் போன்றிருக்கும் நட்பின்

தன்மையினைவிட, தனிமை தலை - தனிமையாக இருப்பதே பெருமையுடையதாகும்.

**5. செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை**
**எய்தலின் எய்தாமை நன்று.**

நன்மை நிற்குமாறு செய்துவைத்தாலும், பாதுகாப்பு ஆகாத கீழ்மையானவர்களின் தீய நட்பானது உண்டாவதைவிட உண்டாக்காமல் இருப்பதே நல்லதாகும்.

செய்து - நன்மையினைச் செய்துவைத்தாலும், ஏமம் - பாதுகாப்பு, சாரா – ஆகாத, சிறியவர் - கீழ்மையானவர், புன்கேண்மை - தீய நட்பானது, எய்தலின் - உண்டாவதை விட, எய்தாமை நன்று – உண்டாகாமல் இருப்பதே நல்லதாகும்.

**6. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்**
**ஏதின்மை கோடி உறும்.**

அறிவில்லாத பேதையினுடைய மிக நெருங்கிய நட்பினைவிட அறிவுடையவர்களது பகைமை கோடி மடங்கு நல்லதாகும்.

பேதை – அறிவில்லாதவர்களுடைய, பெரும் - மிகவும், கெழீஇ - செறிந்த, நட்பின் - நட்பினைக் காட்டிலும், அறிவுடையார் - அறிவுடையவர்களுடைய, ஏதின்மை - பகைமையானது, கோடி – கோடி மடங்கு, உறும் - நல்லதேயாகும்.

**7. நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்**
**பத்துஅடுத்த கோடி உறும்.**

அறிய வேண்டியதை அறியாமல் எப்போதும் நகைத்துக் கொண்டு மட்டும் இருக்கின்ற நட்பினால் வரும் இன்பத்தை விடப பகைவரால் வருவம் துன்பம் பத்துக் கோடி மடங்கு நல்லதாகும்.

நகை – நகைத்துக்கொண்டு மட்டும் இருக்கும், வகையர் -வகையினர், ஆகிய - ஆனவர், நட்பின் - நட்பினால், (வரும் இன்பத்தைவிட) பகைவரால் - பகைவர்களால் (வரும் துன்பங்கள்) பத்தடுத்த கோடி - பத்துக் கோடி மடங்கு, உறும் - நல்லவையாக இருக்கும்.

**8. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை**
**சொல்லாடார் சோர விடல்.**

தம்மால் செய்து முடிக்கக் கூடிய செயல்களையும் முடியாததென்று இருப்பவர்களுடன் கொண்ட நட்பினைக் கண்டால் சொல்லாமலேயே கைவிடுதல் வேண்டும்.

ஒல்லும் - தம்மால் முடியக்கூடிய, கருமம் - செயலினையும், உடற்றுபவர் - முடியாததென்று இருப்பவர்களுடன் கொண்ட, கேண்மை – நட்பினை, சொல்லாடார் - அவருக்குத் தெரிவித்துச் சொல்லாமலேயே, சோர - விடுவது தெரியாமலேயே, விடல் - நட்பினை விட்டுவிடுதல் வேண்டும்.

**9. கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு.**

செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் இருப்பவர்களுடைய நட்பானது கனவில்கூடத் துன்பத்தினைத் தருவதாகும்.

வினை – செய்யும் செயல், வேறு - வேறாகவும், சொல் - பேசும் சொல், வேறு – வேறாகவும், பட்டார் - இருப்பவர்களுடைய, தொடர்பு – நட்பானது, கனவினும் - கனவிலும் கூட, இன்னாது – துன்பத்தினைத் தருவதாகும்.

**10. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ**
**மன்றில் பழிப்பார் தொடர்பு.**

தனித்து வீட்டிலிருக்கும்போது நெருங்கிய நட்புடன் பழகி, பலர் கூடியிருக்கும் மன்றத்தில் பழித்துப் பேசுவோர் நட்புச் சிறிதளவேனும் தம்மைச் சாராமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

மனை – மனையில் இருக்கும்போது, கெழீஇ - நெருங்கிப் பழகி, மன்றில் பழிப்பார் - பலர் இருக்கும் மன்றத்தில் பழித்துப் பேசுபவருடைய, தொடர்பு – நட்பினை, எனைத்தும் - எவ்வளவு சிறிதேயானாலும், குறுகுதல் - தம்முடன் நெருங்குவதை, ஓம்பல் - விலக்குதல் வேண்டும்.

## 45.கூடாநட்பு

## (மனத்தால் கூடாமல்இருக்கும் பகைவர் நட்பு)

**1. சீர்இடம் காணின் எறிதற்குப் பட்டடை**
**நேரா நிரந்தவர் நட்பு.**

மனத்தால் கூடாதிருந்து தீமையினைச் செய்வதற்குத் தக்க நேரம் வரும் வரையில் நட்பினர் போலப் பழகும் நட்பு, வாய்க்குமிடம் கண்டால் நன்றாக எறிதற்குத் துணையான பட்டடை போன்றதாகும்.

நேரா – மனத்தால் கூடாதிருந்தே, நிரந்தவர் - (தீமை செய்ய வாய்ப்புக் கிட்டும் வரையில்) புறத்தே நன்பர்கள் போல இருப்பவரது, நட்பு – நட்பு, சீரிடம் காணின் - (கெடுதி செய்ய) வாய்க்குமிடத்தினைக் கண்டதும், எறிதற்கு - எறிதற்குத் (நசுக்குவதற்கு) துணையான, பட்டடை – பட்டடை என்பதாகும்.

**2. இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்**
**மனம்போல வேறு படும்.**

உற்றார் போன்று காட்டித் தமக்கு இனமல்லாதவர்களுடைய நட்பு இடம் பெற்றால் பெண்பாலாருடைய மனம்போல வேறுபடும்.

இனம் - நமக்கு உற்ற இனத்தவர், போன்று - போல, இனம் - நமக்கு உற்றவர், அல்லார் - அல்லாதவருடைய, கேண்மை – நட்பு, (இடம் பெற்றால்) மகளிர் - பெண் பாலாருடைய, மனம்போல - மனத்தினைப் போல, வேறுபடும் - வேறுபடும் விடுவதாகும்.

**3. பலநல்ல கற்றக் கடைத்தும் மனம்நல்லர்**
**ஆகுதல் மாணார்க்கு அரிது.**

நல்லனவாகிய பல நூல்களைக் கற்றிருந்த போதும், பகைமை உள்ளம் படைத்தவர்களுக்கு அவைகளினால் மனம் திருத்தி நட்பாதல் இல்லை.

நல்லபல – நல்லனவாகிய பற்பல நூல்களை, கற்றக் கடைத்தும் - கற்றிருந்தாலும், மனம் - மனம், நல்லர் - திருத்தி நல்லவர், ஆகுதல் - ஆகுதல், மாணார்க்கு - பகைவர்க்கு, அரிது – முடியாததாகும்.

**4. முகத்தின் இனிய நகாஅ அகத்துஇன்னா**
**வஞ்சரை அஞ்சப் படும்.**

கண்ட பொழுது முகத்தால் இனிதாகச் சிரித்து எப்போதும் மனத்தால் தீயவர்களான வஞ்சகர்களைப் பார்த்து நாம் அஞ்சுதல் வேண்டும்.

முகத்தின் - முகத்தினால் மட்டும், இனிய - இனிமையாக, நகாஅ – நகைத்த, அகத்து – நெஞ்சினில், இன்னா – பகைமை கொண்ட, வஞ்சரை அஞ்சப்படும் - வஞ்சகர்களைக் கண்டு பயப்படுதல் வேண்டும்.

**5. மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்**
**சொல்லினால் தேறல்பாற் றன்று.**

மனத்தினால் தம்முடன் பொருந்துதல் இல்லாதவர்களை எவ்விதமான செயலிலும் சொல்லினால் தெரிந்து கொள்ளும் முறையானது கூடாது என்பதாம்.

மனத்தின் அமையாதவரை - மனத்தினால் தம்முடன் பொருந்துதல் இல்லாதவர்களை, எனைத்தொன்றும் - எந்தவிதமான செயலிலும், சொல்லால் - சொற்களினால், தேறல்பாற்று – தெரிந்து புரிந்து கொள்ளும் முறையானது, அன்று - கூடாததாகும்.

**6. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்**
**ஒல்லை உணரப் படும்.**

நண்பர்கள்போல நன்மை பயக்கும் சொற்களைச் சொன்னாலும் பகைவர்களுடைய சொற்கள் சொல்லிய அப்பொழுதே அறிந்து கொள்ளப்படும்.

நட்டார்போல் - நண்பர்களைப் போல, நல்லவை சொல்லினும் - நன்மை பயக்கும் சொற்களையே சொன்னாரேயானாலும், ஒட்டார் - பகைவர்களுடைய, சொல் - சொற்கள், ஒல்லை – விரைவில், உணரப்படும் - அறிந்து தெரிந்து கொள்ளப்படும்.

**7. சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்**
**தீங்கு குறித்தமை யான்.**

வில் வளைகின்ற வணக்கமானது தீமை செய்ததைக் குறித்தமையால் பகைவர்களிடம் உண்டாகின்ற சொற்களின் வணக்கத்தினையும் தீமையுண்டாக்குவதாகவே கொள்ளுதல் வேண்டும்.

வில் - வில்லினது, வணக்கம் - வளையும் தன்மையானது, தீமை – தீமையுண்டாக்குவதை, குறித்தமையான் - குறிப்பதானபடியால், ஒன்னார்கண் - பகைவரிடத்தில், (காணப்படும்) சொல் - சொற்களையுடைய, வணக்கம் -

வணக்கத்தினையும், கொள்ளற்க - நல்லதென்று கொள்ளாதிருத்தல் வேண்டும்.

**8. தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்**
**அழுதகண் ணீரும் அனைத்து.**

பகைவர்கள் தொழுதகையினுள்ளும் படைக்கருவி மறைந்திருக்கும். அப்பகைவர் அழுத கண்ணீரும் அவ்வாறே அது மறைந்திருப்பதற்கு இடமானதாகும்.

ஒன்னார் - பகைவர்கள், தொழுத – தொழுது வணங்குகின்ற, கையுள்ளும் - கையினுள்ளும், படை – படைக்கருவி, ஒடுங்கும் - மறைந்திருப்பதாகும், அழுத - அவர்கள் அழுத, கண்ணீரும் - கண்ணீரும், அனைத்து – அவ்வாறு அது மறைந்திருப்பதற்கு இடமானதாகும்.

**9. மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து**
**நட்பினுள் சாப்புல்லற் பாற்று.**

பகைமையுள்ள மனம் தெரியாதபடி வெளிப்புறத்திலே நட்பினை மிகுதியாகச் செய்து காட்டி, உள்ளத்தில் தம்மை இகழும் பகைவரை, தாமும் அவர் போலவே நட்பினைச் செய்து அந்நட்பு சாகுமாறு செய்தல் வேண்டும்.

மிக – புறத்தில் மட்டும் நட்பினை மிகுதியாக, செய்து – செய்துகாட்டி, தம் எள்ளுவாரை – உள்ளத்தில் தம்மை இகழ்கின்ற பகைவர்களை, நட்பினுள் - நாமும் அவர் போலவே நட்புறவில் இருந்து, நக – புறத்தில் அவர் மகிழுமாறு, செய்து – செய்து, சாப்புல்லற்பாற்று – உள்ளுக்குள் அந்த நட்பு சாகும்படிச் செய்தல் வேண்டும்.

**10. பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு**
**ஆகநட்பு ஒரீஇ விடல்.**

பகைவர்கள் தம்மிடம் நண்பராக நடந்து கொள்ளுகின்ற காலம் வந்தபோது அவர்களுடன் முகத்தினால் மட்டும் நட்பினைச் செய்து மனத்தினால் அவர்கள் நட்பினைத் தவிர்த்தல் வேண்டும்.

பகை – பகைவர்கள், நட்பு – தம்மிடம் நண்பராக, ஆம் - நடந்து கொள்ளுகின்ற, காலம் -காலம், வருங்கால் - வந்தபோது, முகம் நட்டு – அவர்களுடன் முகத்தினால் மட்டும் நட்பினைச் செய்து, அகம் - மனத்தினால்,

நட்பு — அவர்கள் நட்பினை, ஒரீஇ - நீக்கி, விடல் - முற்றிலும் விட்டுவிடுதல் வேண்டும்.

## 46.பேதைமை

## (அறிலிகளின் அறியாமைக் குணம்)

**1. பேதைமை என்பதுஒன்று யாதெனின் ஏதங்கொண்டு**
**ஊதியம் போக விடல்.**

பேதைமை என்று சொல்லப்படுவது எல்லாக் குற்றங்களிலும் மிக்கதாகும். அது யாதென்று கேட்டால், தமக்குக் கெடுதி உண்டாக்குவதைக் கைக்கொண்டு ஆக்கம் தருவதை விட்டுவிடுவதாகும்.

பேதைமை - அறியாமைதன்மை, என்பது — என்பது, ஒன்று — ஏனைய குற்றங்களைவிட மிக்கது ஒன்று, யாது - அது எது, எனின் - என்று கேட்டால, ஏதங்கொண்டு - தமக்குத் தீங்கு உண்டாக்குவதை மேற்கொண்டு, ஊதியம் - ஆக்கம் தருகின்றவைகளை, போகவிடல் - விட்டுவிடுவதாகும்.

**2. பேதைமை யுள்எல்லாம் பேதைமை காதன்மை**
**கையல்ல தன்கண் செயல்.**

பேதைமைகளுக்கெல்லாம் மிகுந்த பேதைமை என்னவென்றால், தன்னால் முடியாத செயல்களில் மிக்க விருப்பத்தினைக் கொண்டு செய்தலாகும்.

பேதைமையுள் - பேதைமைகளுக்குள், எல்லாம் - எல்லாம், பேதைமை - மிக்கதான பேதைமை என்னவென்றால், கையல்லதன்கண் - தன்னால் முடியாத பணிகளில், காதன்மை - மிக்க விருப்பத்தினை, செயல் - கொண்டு செய்தலாகும்.

**3. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்**
**பேணாமை பேதை தொழில்.**

நாணவேண்டுவனவற்றிற்கு நாணம் கொள்ளாமையும், நாட வேண்டுவனவற்றை நாடாமையும், யாவரிடத்தும் அன்பில்லாமையும், விரும்ப வேண்டுவனவற்றை விரும்பாமையும் பேதையினுடைய தொழில்களாகும்.

நாணாமை - எதற்கும் வெட்கப்படாமையும், நாடாமை - விரும்ப வேண்டியவற்றை விரும்பாமையும், நார் - அன்பு, இன்மை - இல்லாமையும், யாதொனறும் - நல்லன எதையும், பேணாமை - பேணிப் போற்றாமையும், பேதை - பேதை எனப்படும் மூடனது, தொழில் - தொழில்களாகும்.

**4. ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப்**
**பேதையின் பேதையார் இல்.**

நல்ல நூல்களைக் கற்றிருந்தும் அதன் பொருளினை உணர்ந்திருந்தும் மற்றவர்களுக்கு எடுத்துக் கூறியும் தான் அடங்கி நடக்காத பேதையைப்போல பேதையார் உலகத்தில் இல்லை.

ஓதி – நல்ல நூல்களைக் கற்றும், உணர்ந்தும் - அவைகளின் பயன்களை உணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும் - மற்றவர்களுக்கு எடுத்துக் கூறியும், தான் - தான் மட்டும், அடங்கா - முறையாக அடங்கி ஒழுகாத, பேதையின் - பேதையினைப் போல, பேதையார் இல் - அறிவிலிகள் இல்லையாம்.

**5. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
**தான்புக்கு அழுந்தும் அளறு.**

பேதையானவன் வருகின்ற பிறவிகளில் எல்லாம் தான் புகுந்து துய்க்கின்ற துன்பத்தினை இந்த ஒரு பிறவியிலேயே செய்து கொள்ளுவான்.

பேதை - அறிவற்ற பேதை, எழுமையும் - வருகின்ற எல்லாப் பிறவிகளிலும், தான்புக்கு - தான் புகுந்து, அழுந்தும் - துய்க்கின்றவற்றிற்கு இடமான, அளறு – துன்பம் என்னும் நரகத்தினை,ஒருமை - இந்த ஒரு பிறவியிலேயே, செயலாற்றும் - செய்து கொள்ளுகின்றவனாவான்.

**6. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்**
**பேதை வினைமேற் கொளின்.**

செய்யும் முறையறியாத பேதை ஒரு காரியத்தை மேற்கொண்டால் அக்காரியமும் கெடும், அவனும் தானே தளை பூணுகின்ற நிலைமையினையும் அடைவான்.

கையறியா – செயலினைச் செய்யும் முறை தெரியாத, பேதை - பேதையானவன், வினை - தொழிலொன்றினை, மேற்கொளின் - மேற்கொண்டால், பொய்படும் - அத்தொழிலும் கெட்டுவிடும், ஒன்றோ அதுமட்டுமல்ல, புனை - தளையினை, பூணும் - பூணுகின்ற நிலையும் அடைவான்.

**7. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை**
**பெருஞ்செல்வம் உற்றக் கடை.**

பேதையானவன் பெரிய செல்வத்தினைப் பெற்றுவிட்டால் தன்னொடு யாதொரு தொடர்பும் இல்லாதவர்கள் பயனடைவார்கள். எல்லாத் தொடர்பும் கொண்ட சுற்றத்தார் பசித்திருப்பார்.

பேதை – பேதையானவன், பெரும் - மிகுந்த, செல்வம் - செல்வத்தினை, உற்றக்கடை - பெற்றிருப்பானானால், ஏதிலார் - எவ்வித தொடர்பும் இல்லாதவர்கள், ஆர - பயன் நிறையப் பெற, தமர் பசிப்பர் - தொடர்புள்ள சுற்றத்தார் பசித்திருப்பார்கள்.

**8. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்**
**கைஒன்று உடைமை பெறின்.**

தன்னிடம் ஒன்றை உடையவனாகப் பெற்றிருக்கும் பேதையானவன் மயக்கம் அடைவது எப்படிப்பட்ட தென்றால், முன்னேயே பித்துப் பிடித்தவன் மதுவுண்டு மயங்குவது போன்றதாகும்.

பேதை - அறிவில்லாத பேதை, தன்கை – தனது கையில், ஒன்று – ஒன்றினை, உடைமை – உடைமையாக, பெறின் - பெற்றால், (அது) மையல் - பித்துப் பிடித்த, ஒருவன் - ஒருவன், களித்தற்று - மதுவினை உண்டது போன்றதாகும்.

**9. பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்**
**பீழை தருவதுஒன்று இல்.**

பிரிந்து போகின்ற காலம் வரும்போது துன்பம் தவருது ஒன்றும் இல்லையாதலால் பேதையானவர்களுடன் நட்புக் கொள்ளுதல் மிகவும் இனிமையானதாகும்.

பிரிவின் - பிரியும் நேரம் வந்தபோது, தருவது - உண்டாவதாகிய, பீழை – துன்பம், ஒன்று - என்பதொன்று, இல் - இல்லையாதலினால், பேதையார் - அம்மூடரது, கேண்மை - நட்பு, பெரிது - மிகவும், இனிது - இனிமையானதாகும்.

**10. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்**
**குழாஅத்துப் பேதை புகல்.**

சான்றோர்கள் நிலைத்திருக்கும் அவையில் பேதையானவன் நுழைதல், இன்பம் தரும் அமளிக்கண் தூய்மை அல்லாதவற்றை மிதித்த காலினை வைத்தது போன்றதாகும்.

சான்றோர் - மேலான சான்றோர்கள் இருக்கும், குழாஅத்து – அவையில், பேதைபுகல் - பேதையானவன் நுழைதல், கழாஅக்கால் - கழுவாத காலினை, பள்ளியில் - இன்பம் சுவைக்கும் அமளியின் மேல், வைத்தற்று – வைத்தது போன்றதாகும். (ஆல் அசை).

## 47.புல்லறிவாண்மை

## (அற்ப அறிவுள்ளவன் தன்னைச் சிறந்த அறிஞனாக எண்ணி நடத்தல்)

**1. அறிவுஇன்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை**
**இன்மையா வையாது உலகு.**

ஒருவனுக்கு இல்லாமை பலவற்றுள்ளும் மிக்க இல்லாமை அறிவில்லாமையேயாகும். மற்றைப் பொருளில்லாமையோ யென்றால் அதனை இல்லாமையாக உலகத்தார் கொள்ள மாட்டார்கள்.

இன்மையுள் - இல்லாமை பலவற்றிலும், இன்மை - இல்லாமையென்பது என்னவென்றால், அறிவு – அறிவு, இன்மை - இல்லாண்மையேயாகும், பிறிது – மற்றவை, இன்மை - இல்லாமையினை, இன்மையா – அவ்வாறு இல்லாமையாக, உலகு - உலகத்தார், வையாது - கருத மாட்டார்கள்.

**2. அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாதும்**
**இல்லை பெறுவான் தவம்.**

புல்லறிவாளனானவன் ஒருவனுக்கு மனமுவந்து ஒன்று கொடுப்பானேயானால் அதற்குக் காரணம் பெறுகின்றவனுடைய நல்வினையேயல்லாமல் வேறொன்று மில்லையாகும்.

அறிவிலான் - புல்லறிவாளன், நெஞ்சு – மனம், உவந்து – களித்து, ஈதல் - பிறர்க்குக் கொடுப்பானேயானால், (அவ்வாறு கொடுப்பதற்குக் காரணம்) பெறுவான் - அதனைப் பெறுகின்றவனுடைய, தவம் நல்வினையேயாகும், பிறிது – வேறு, யாதும் - எந்தக் காரணமும், இல்லை - இல்லையென்பதாம்.

**3. அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை**

**செறுவார்க்கும் செய்தல் அரிது.**

புல்லறிவுடையவர்கள் தமக்குத் தாமே உண்டாக்கிக் கொள்ளும் துன்பம், அவர்களுடைய பகைவர்களும் அவர்களுக்குச் செய்ய முடியாததாகும்.

அறிவில்லார் - சிற்றறிவாளர்கள், தாம் - தமக்குத்தாமே, தம்மை – தங்களை, பீழிக்கும் - துன்புறுத்திக் கொள்ளும், பீழை – துன்பமானது, செறுவார்க்கும் - அவர்களின் பகைவர்க்கும், செயதல் அரிது – செய்வதற்கு முடியாததாகும்.

**4. வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை**
**உடையம்யாம் என்னும் செருக்கு.**

புல்லறிவுடைமை என்பது யாது என்று கேட்டால், அது தம்மைத்தாமே "யாம் நல்லறிவுடையோம்" என்று நன்கு மதித்துக் கொள்ளும் மயக்கமேயாகும்.

வெண்மை – புல்லறிவுடைமை, எனப்படுவது – என்று சொல்லப்படுவது, யாது – எது, எனின் - என்று கேட்டால், ஒண்மை – நல்லறிவு, உடையம் யாம் – யாம் உடையோம் என்னும் - என்று தம்மைத் தாமே மதித்துக் கொள்ளும், செருக்கு – மயக்கமான எண்ணமாகும்.

**5. கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடுஅற**
**வல்லதூஉம் ஐயம் தரும்.**

புல்லறிவுடையவர்கள் தாம் கற்றறியாத நூல்களையும் கற்றவர்களாகச் சொல்லிக் கொண்டு நடத்தல், அவர்கள் குற்றமறக் கற்றதொரு நூலுண்டாயின், அதனிடத்தும் மற்றவர்களுக்கு ஐயத்தினை உண்டாக்கும்.

கல்லாத – தாம் கல்லாதவற்றையும், மேற்கொண்டு – கற்றவராக மேற்கொண்டு, ஒழுகல் - நடந்து கொள்ளுதல், கசடு – குற்றம், அற – நீங்க, வல்லதூஉம் - கற்றிருக்கும் நூலிருக்குமேயானால், (அதைப் பற்றியும்) ஐயம் தரும் - சந்தேகத்தினை மற்றவர்களுக்கு உண்டாக்கிவிடும்.

**6. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்**
**குற்றம் மறையா வழி.**

புல்லறிவாளர்கள் தம்மிடத்தில் நிகழும் குற்றங்களை நீக்காவிட்டால், ஆடைகளினால் மறைக்க வேண்டிய உறுப்புக்களை மறைத்ததாக எண்ணுவதும் அற்ப அறிவேயாகும்.

தம்வயின் - தம்மிடத்திலிருக்கும், குற்றம் - குற்றங் குறைகளை, மறையா வழி – நீக்கா விட்டால், அற்றம் - மறைவாக வேண்டிய உறுப்புக்களை, மறைத்தலோ – உடைகளினால் மறைத்து விட்டதாக எண்ணுவதும், புல் - கீழ்மையான, அறிவு – அறிவேயாகும்.

**7. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்**
**பெருமிறை தானே தனக்கு.**

பெறுதற்கரிய மறை மொழிப் பொருள்களைக் கற்றாலும் அதனை மனத்திற் கொள்ளாமல் போக்கும் புல்லறிவாளன், தானே தனக்கு மிகுந்த, இறை செய்து கொள்ளுவான்.

அரு – அரிய, மறை – மறை மொழிப் பொருளை, சோரும் - மனத்திற் கொள்ளாமல் விட்டு விடுகின்ற, அறிவிலான் - புல்லறிவாளன், தானே தனக்கு – அவனே தனக்கு, பெரும் - மிகுந்த, இறை – துன்பத்தினை, செய்யும் - செய்து கொள்ளுவான்.

**8. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்**
**போஒம் அளவும்ஓர் நோய்.**

புல்லறிவாளன் அறிவுடையவர்கள் சொல்லியபடியும் செய்யமாட்டான். தானாகவும். செய்வனவற்றை அறியான். அவன் உயிர் நீங்கும்வரை இது அவனுக்கு ஒரு நோயாகும்.

ஏவவும் - அறிவுடையார் நல்லன சொன்னாலும், செய்கலான் - செய்யமாட்டான், தான் தேறான் - தானாகவும் அறியமாட்டான், அவ்வுயிர் - அவனுடைய அந்த உயிர் போமளவும் - அவனை விட்டு நீங்கும் வரை, ஓர் - ஒரு, நோய் - பெரிய நோயாகும்.

**9. காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்**
**கண்டானாம் தான்கண்ட வாறு.**

தன்னை எல்லாம் அறிந்தவனாக மதித்தலால் பிறர் அவனுக்கு அறிவிக்கப் புகுந்தால் அவனால் பழிக்கப்படுவதுடன் அப்படிச் சொல்லப்

போனவன் ஒன்றும் அறியாதவனாக முடிவான். இனி அறியும் தன்மை இல்லாத அவன் தான் அறிந்தபடியே அறிந்தவனாகச் செய்து கொள்ளுவான்.

காணாதான் - புல்லறிவால் அறியமாட்டாதவனுக்கு, காட்டுவான் - அறிவிக்கச் செல்லும் ஒருவன், தான் - அறிந்த தான், காணான் - அறியாதவனாக முடியநேரும், காணாதான் - அறியும் தன்மையில்லாத புல்லறிவாளன், தான் - அவன், கண்டவாறு – கண்டறிந்தபடியே, கண்டானாம் - அறிந்தவனென்னறு முடியும்.

**10. உலகத்தார் உண்டுஎன்பது இல்என்பான் வையத்து**
**அலகையா வைக்கப் படும்.**

உலகில் அறிந்தோர் பலரும் உண்டு என்பதைப் புல்லறிவாளன் இல்லையென்று சொல்லுவான். அவன் மகன் என்று கருதப்பட்டான். உலகில் சொல்லப்படுவதோர் பேய் என்று கருதப்படுவான்.

உலகத்தார் - உலகத்தில் உயர்ந்த பெரியோர், உண்டு – உண்டு, என்பது – என்று சொல்லப்படுகின்ற ஒன்றினை, இல் - இல்லை, என்பான் - என்று சொல்லப்படுகின்ற ஒருவன், வையத்து - இந்த உலகில், அலகையா – ஒரு பேயாக, வைக்கப்படும் - கருதப்படுவான்.

## 48.இகல்

## (பகைமை உள்ளத்தால் உண்டாகும் மனவேறுபாடுகள்)

**1. இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்**
**பண்புஇன்மை பாரிக்கும் நோய்.**

எல்லா உயிர்களுக்கும், மற்ற உயிர்களோடு சேராமை என்கின்ற தீக்குணத்தினை வளர்க்கின்ற குற்றத்தினை இகல் என்று சொல்லுவார் நூலோர்.

எல்லா – எல்லா, உயிர்க்கும் - உயிர்களுக்கும், பகல் - பிற உயிர்களோடு சேராமை, என்னும் -என்கின்ற, பண்பின்மை – தீமையான குணத்தினை, பாரிக்கும் - வளர்க்கின்ற, நோய் - குற்றமானது, இகல் - மாறுபாடு, என்ப –என்று நூல்வல்லார் கூறுவர்.

**2. பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி**
**இன்னாசெய் யாமை தலை.**

தம்முடன் கூடாமை கருதி ஒருவன் வெறுப்பன செய்தாலும், அவனுடன் மாறுபடுதலைக் கருதித் தாம் அவனுக்குத் துன்பம் செய்யாதிருத்தல் உயர்ந்த பண்பாகும்.

பகல் - ஒன்று பட்டுக் கூடாமை, கருதி - நினைத்து, பற்றா – வெறுப்பான செயல்களை, செயினும் - செய்தான் என்றாலும், இகல் - மாறுபாட்டினை, கருதி – நினைத்து, இன்னா – துன்பம் தரும் தீமையினை, (மற்றவனுக்கு) செய்யாமைதலை - செய்யாதிருத்தல் சிறந்ததாகும்.

**3. இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்**
**தாவில் விளக்கம் தரும்.**

மாறுபாடு என்கின்ற துன்பம் செய்யும் நோயினை ஒருவன் நீக்கி விடுவானாகில், அவனுக்கு அது எப்போதும் இருப்பதற்குக் காரணமான புகழினைக் கொடுக்கும்.

இகல் - மாறுபாடு, என்னும் - எனப்படுகின்ற, எவ்வம் - துன்பம் உண்டாகும், நோய் - நோயினை, நீக்கின் - விலக்கி விடுவானாகில், தவல் - அழிவு, இல்லா - இல்லாததற்குக் காரணமான, தாவில் - கெடுதவில்லாத, விளக்கம் தரும் - புகழினைத் தருவதாகும்.

**4. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்**
**துன்பத்துள் துன்பம் கெடின்.**

மாறுபாடு எனப்படுகின்ற துன்பங்களுக்கெல்லாம் துன்பமான ஒன்று இல்லை யென்றால் அது அவனுக்கு இன்பங்கள் எல்லாவற்றிலும் மிக்க இன்பத்தினைக் கொடுக்கும்.

இகல் - மாறுபாடு, என்னும் - எனக் கூறப்படும், துன்பத்துள் - துன்பங்கள் எல்லாவற்றிலும், துன்பம் - மிக்க துன்பமானது, கெடின் - இல்லை யென்றால், இன்பத்துள் - இன்பங்கள் எல்லாவற்றினும், இன்பம் பயக்கும் - சிறந்த இன்பத்தினைத் தருவதாகும்.

**5. இகல்எதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே**
**மிகல்ஊக்கும் தன்மை யவர்.**

மனதில் மாறுபாடு தோன்றிய போது அதனை எதிர்த்து நடந்து கொள்ளும் வல்லவர்களை வெல்லக் கருதும் தன்மையுடையவர்கள் யாவர்?

இகல் - மாறுபாடு மனத்தில் உண்டான போது, எதிர் சாய்ந்து – அதனை ஏற்காமல் எதிர்த்து, ஒழுக வல்லாரை - நடந்து கொள்ளும் வல்லர்களை, மிகல் ஊக்கும் - வெல்வதற்கு எண்ணும், தன்மையவர் - இயல்புடையவர்கள், யாரே – யாவர் உண்டு.

**6. இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை**
**தவலும் கெடலும் நணித்து.**

பிறருடன் மாறுபாடு கொள்வதில் மிகுந்திருத்தலை இனிமை என்று நடப்பவனுடைய வாழ்க்கையானது துன்பப்படுதலும் கெட்டு விடுதலும் சிறிது நேரத்தில் உண்டாகி விடும்.

இகலின் - மாறுபாடு கொள்ளுவதில், மிகல் - மிகுந்திருத்தலை, இனிது - இனிமை, என்பவன் - என்று நடப்பவனுடைய, வாழ்க்கை – உயிர் வாழ்க்கையானது, தவலும் - துன்பப்படுதலும், கெடலும் - கெட்டு விடுதலும், நணித்து – சிறிது நேரத்தில் உண்டாகி விடும்.

**7. மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்**
**இன்னா அறிவி னவர்.**

இகலோடு சேர்ந்து ஒழுகுகின்ற துன்பமான அறிவினையுடையார் வெற்றியினைத் தருகின்ற நீதி நூற்பொருள்களை அறிந்துகொள்ள மாட்டார்கள்.

இகல் - மாறுபாடு என்பதோடு, மேவல் - ஒன்றுபட்டு, இன்னா – துன்பத்தினை உண்டாக்கும், அறிவினவர் - அறிவினையுடையவர், மிகல் மேவல் - வெற்றி தரக்கூடிய, மெய்ப்பொருள் - நீதிநூற் கருத்துக்களை, காணார் - அறிந்துகொள்ள மாட்டார்கள்.

**8. இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை**
**மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.**

மனத்தில் மாறுபாடு தோன்றியபோது அதனை நீக்குதல் ஒருவனுக்கு ஆக்கம் தரும். அதனைச் செய்யாமல் அதனை மேற்கொள்ளுவானானால் கேடும் தனக்கு வந்து சேரும்.

இகலிற்கு – மனத்தின்கண் மாறுபாடு தோன்றியபோது, எதிர்சாய்தல் - அதனை எதிர்த்து நீக்குதல், ஆக்கம் - ஒருவனுக்கு ஆக்கத்தினைத் தரும், அதனை – அந்த மாறுபாடு என்பதனை, மிகல் ஊக்கின் - மிகுதியாக்குவதை

மேற்கொண்டு நடப்பானாகில், கேடு –தீமையும், ஊக்குமாம் - அவனிடம் வருவதை மேற்கொள்ளுமாம்.

**9. இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை**
**மிகல்காணும் கேடு தரற்கு.**

தனக்கு ஆக்கம் உண்டான காலத்தில் இகல் என்பதனை நினையாதான், தனக்குக் கேடு செய்வதற்கு இகலின்கண் மிகுந்து நிற்பான்.

ஆக்கம் - தனக்குச் செல்வம், வருங்கால் - வருவதாகின்ற போது, இகல் - மாறுபாடு என்பதனை, காணான் - நினைக்க மாட்டான், கேடுதரற்கு – கெடுதி செய்து கொள்வதற்கு, அதனை – அந்த இகலினிடத்தில், மிகல்காணும் - மிகுந்திருத்தலை நினைத்திருப்பவன் ஆவான்.

**10. இகலான்ஆம் இன்னாத எல்லாம் நகலான்ஆம்**
**நன்னயம் என்னும் செருக்கு.**

ஒருவனுக்கு மாறுபாடு என்னும் இகல் ஒன்றினாலே துன்பமானவைகள் எல்லாம் உண்டாகும். நட்பு என்ற ஒன்றினாலேயே நல்ல நீதி என்ற பெருஞ்செல்வம் உண்டாகும்.

இகலான் - மாறுபாடு என்ற ஒன்றினாலேயே, இன்னாத – துன்பம் தருவன, எல்லாம் - எல்லாம், ஆம் - உண்டாவதாகும், நகலான் - நட்பு ஒன்றினாலேயே, நன்னயம் - நல்ல நீதி, என்னும் - எனப்படுகின்ற, செருக்குஆம் - பெரிய செல்வம் உண்டாவதாகும்.

## 49.படைமாட்சி

## (அறிவின்மையால் பகையினை மாட்சிமைப்படுத்துதல்)

**1. வலியார்க்கு மாறுஏற்றல் ஓம்புக ஓம்பா**
**மெலியார்மேல் மேக பகை.**

தம்மைவிட வலிமையுடையவர்களிடத்தில் பகையாய் இருப்பதை நீக்குதல் வேண்டும். தம்மைவிட மெலியவர்களுக்குப் பகையாய் இருப்பதை ஒழியாமல் விரும்புதல் வேண்டும்.

வலியார்க்கு – தம்மைவிட வலிமை உள்ளவர்களுக்கு, மாறு – பகைமையாய், ஏற்றல் - நின்று எதிர்ப்பதை, ஓம்புக – நீக்குதல் வேண்டும், மெலியார்மேல் - மற்ற மெலியவர்கள் மேல், பகை – பகையாக இருப்பதை, ஓம்பா – நீக்காமல், மேக – விரும்புதல் வேண்டும்.

**2. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்**
**என்பரியும் எதிலான் துப்பு.**

ஒருவன், தனது சுற்றத்தின் மீது அன்பில்லாமலும், வலிமையான துணையில்லாமலும், தானும் வலிமையில்லாமலும் இருப்பானானால் தன்மீது வந்த பகைவன் வலியினை எவ்வாறு தொலைப்பான்?

அன்பு – சுற்றத்தாரிடம் அன்பு, இலன் - இல்லாதவனாகவும், ஆன்ற - வலிமையான, துணையிலன் - துணையில்லாதவனாகவும், தான் - தானும், துவ்வான் - வலிமை இல்லாதவனாகவும், (இருக்கும் ஒருவன் ) ஏதிலான் - பகைவனுடைய, துப்பு – வலிமையினை, என் - எவ்வாறு, பரியும் - தொலைப்பவனாவான்?

**3. அஞ்சும் அறியான் அமைவுஇலன் ஈகலான்**
**தஞ்சம் எளியன் பகைக்கு.**

ஒருவன் அஞ்ச வேண்டாததற்கு அஞ்சுபனாகவும் அறிய வேண்டுவனவற்றை அறியாதனாகவும், பிறரோடு பொருந்துதல் இல்லாதவனாகவும், யாரிடத்தும் ஈகைத் தன்மை இல்லாதவனாகவும் இருப்பானேயானால், அவன் பகைவர்க்கு மிகவும் எளிமையானவன் ஆவான்.

அஞ்சும் - அஞ்ச வேண்டாதபோது அஞ்சுபவன், அறியான் - அறியாமையுள்ளவன், அமைவு –மற்றவரோடு பொருந்துதல், இலன் - இல்லாதவன், ஈகலான் - ஈகைக் குணம் இல்லாதவன், பகைக்கு – பகைவர்களுக்கு, தஞ்சம் - மிகவும், எளியன் - எளிமையானவனாகி விடுவான்.

**4. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்**
**யாங்கணும் யார்க்கும் எளிது.**

ஒருவன் கோபத்தினின்று நீங்காதவனாயும், நிறைகுணம் இல்லாதவனாயும், இருப்பானானால் அவன்மேல் பகை செல்லுதல் எக்காலத்தும் எவ்விடத்தும் எளிமையானதாகும்.

வெகுளி – கோபம் கொள்ளுவதிலிருந்து, நீங்கான் - நீங்காதவனாயும், நிறை – நிறைகுணம், இலன் - இல்லாதவனாயும், (இருந்தால்) எஞ்ஞான்றும் - எக்காலத்தும், யாங்கணும் - எந்த இடத்திலும், யார்க்கும் - எவர்க்கும், எளிது – அவன் எளியவனாகிவிடுவான்.

**5. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்**
**பண்பிலன் பற்றார்க்கு இனிது.**

ஒருவன் நீதி நூல்களைக் கற்காமலும், அவை விதித்த நெறிமுறைகளைச் செய்யாமலும் தனக்கு வரும் பழிகளைப் பாராமலும் தான் பண்புடையவன் அல்லாமலும் இருந்தால் அவனுடைய பகைவர்க்கு அவனது பகைமை இனிதாகும்.

வழி – நீதி நூல் வழிகளை, நோக்கான் - கற்கமாட்டான், வாய்ப்பன – நூல்களில் விதிக்கப்பட்ட செயல்களை, செய்யான் - செய்யமாட்டான், பழி – தனக்கு வரும் பழிகளை, நோக்கான் - கருதமாட்டான், பண்பு – நற்குணம், இலண் - உடையவனல்லன்,(அப்படிப்பட்டவன்) பற்றார்க்கு – பகையாயினோர்க்கு, இனிது - இன்பமானவனாவான்.

**6. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்**
**பேணாமை பேணப் படும்.**

தன்னையும் பிறனையும் அறிந்துகொள்ள முடியாத பெருங் கோபத்தினைக் கொண்டவனும் மிகுந்து வளரும் காமத்தினையும் உடையவன் எவனோ அவனுடைய பகைமையினைப் பகைவர்கள் விரும்பிக் கொள்ளுவார்கள்.

காணா – அறியாமைக்குக் காரணமான, சினத்தான் - மிகுந்த கோபமுடையவன், கழி பெரும் - மிகுந்து வளருகின்ற, காமத்தான் - காமத்தினையுடையவன் யாவனோ (அவனுடைய) பேணாமை – பகைமை, பேணப்படும் - விரும்பி கொள்ளப்படும்.

**7. கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்துஇருந்து**
**மாணாத செய்வான் பகை.**

தொழிலினைத் தொடங்கியபின் அதற்குப் பொருந்தாதனவற்றைச் செய்பவனுடைய பகைமையினைச் சில பொருள் கொடுத்தாயினும் கொள்ளுதல் ஒருதலையாக வேண்டும்.

அடுத்து இருந்து – ஒரு தொழிலினைத் தொடங்கிய பின், மாணாத – அதற்குப் பொருந்தாதவைகளை, செய்வான்பகை – செய்கின்றவனுடைய பகைமையினை, கொடுத்தும் - பொருள் கொடுத்தாகிலும், மன்ற – உறுதியாக, கொளல் - கொள்ளுதல், வேண்டும் - வேண்டப்படுவதாகும்.

**8. குணன்இலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்கு**

**இனன்இலனாம் ஏமாப்பு உடைத்து.**

ஒருவன் நற்குணம் ஒன்றும் இல்லாதவனாகி குற்றங்கள் பலவாகியபோது அவன் யாதொரு துணையும் இல்லாதவனாவான். அதனால் அவன் பகைவர்க்கு எளியவனாவான்.

குணம் - நற்குணம் ஏதும், இலனாய் - இல்லாதவனாகி, குற்றம் - குற்றங்கள், பலவாயின் - பலவாகியபோது, இனன் - துணை, இலனாம் - இல்லாதவனாவான், (ஆதலால்) மாற்றார்க்கு – பகைவர்களுக்கு, ஏமாப்பு – துணையாதலை, உடைத்து – உடைய தென்பதாம்.

**9. செறுவார்க்குச் சேண்இகவா இன்பம் அறிவுஇலா**
**அஞ்சும் பகைவர்ப் பெறின்.**

நீதியை அறிந்திராத அஞ்சுகிற பகைவரைப் பெற்றால் அவரை வெல்லுபவர்களுக்கு உயர்வான இன்பங்கள் நீங்காமல் இருக்குமாம்.

அறிவு – நூல்களை அறிதல், இலா - இல்லாதவனாகவும், அஞ்சும் - அஞ்சுகின்ற தன்மையும் உடைய, பகைவர்ப் பெறின் - பகைவர்களைப் பெற்று விட்டால், செறுவார்க்கு – அவரை வெல்லுபவர்களுக்கு, சேன் - மேலான, இன்பம் - இன்பம், இகவா - நீங்காவாம்.

**10. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்**
**ஒல்லானை ஒல்லாது ஒளி.**

நீதி நூல்களைக் கல்லாதவனோடு பகைத்தலால் வருகின்ற எளிய பொருள்களை மேற்கொள்ளாதவனை எக்காலத்திலும் புகழ் வந்து சேராது.

கல்லான் - அறநூல்களைக் கல்லாதவனுடன், வெகுளும் - பகைத்தலால் வருகின்ற, சிறு – எளிமையான, பொருள் - பொருள்களை, ஒல்லானை – அடைந்து கொள்ளாதவனை, எஞ்ஞான்றும் - எக்காலத்தும், ஒளி ஒல்லாது – புகழ் அடையாது.

## 50.பகைத்திறம் தெரிதல்

## (பகைவர்களை ஆராய்ந்தறிந்து நடந்து கொள்ளுதல்)

**1. பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்**
**நகையேயும் வேண்டற்பாற் றன்று.**

பகையென்று சொல்லப்படும் தீமை பயப்பது ஒருவன் விளையாட்டிற்காகவும்கூட விரும்புகின்ற தன்மையுடையதன்று.

பகை – பகை, என்னும் - என்று கூறப்படுகின்ற, பண்பு – பண்பு, இலதனை - இல்லாமல் தீங்கு உண்டாக்குவதனை, ஒருவன் - ஒருவன், நகையேயும் - விளையாட்டிற்காகவேனும், வேண்டல் - விரும்புகின்ற, பாற்று – தன்மை, அன்று – அல்லாததாகும்.

**2. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க**
**சொல்லேர் உழவர் பகை.**

ஒருவன், வில்லினை ஏராகவுடைய உழவரோடு பகை கொண்டானாயினும், சொல்லினை ஏராகவுடைய உழவரோடு பகை கொள்ளாதிருத்தல் வேண்டும்.

வில் - வில்லினை, ஏர் - ஏராகவுடைய, உழவர் - உழவருடன், பகை – பகைமை, கொளினும் - கொண்டாலும், சொல் - சொல்லினை, ஏர் - ஏராகவுடைய, உழவர் - உழவரோடு, பகை கொள்ளற்க – பகைமையினைக் கொள்ளாதிருப்பானாக.

**3. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்**
**பல்லார் பகைகொள் பவன்.**

தான் தனியாக இருந்து பலருடன் பகை கொள்ளுபவன் பித்துப் பிடித்தவர்களைவிட அறிவில்லாதவனாவான்.

தமியனாய் - தன்னந் தனியனாக இருந்து, பல்லார் - பலரிடமும், பகை – பகையினை, கொள்பவன் - கொள்ளுபவன், ஏமுற்றவரினும் - பித்துக் கொண்டவர்களைவிட, ஏழை – அறிவில்லாதவனாவான்.

**4. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்**
**தகைமைக்கண் தங்கிற்று உலகு.**

வேண்டியபோது பகையினையும் நட்பாகவே கொண்டு நடந்து கொள்ளுகின்ற தன்மையுடைய மன்னனது சிறப்பினுள்ளே உலகமானது அடங்கி இருப்பதாகும்.

பகை – பகையினையும், நட்பா – நட்பாகவே, கொண்டு – செய்து கொண்டு, ஒழுகும் -நடந்து ஒழுகுகின்ற, பண்புடையாளன் - தன்மையுடைய மன்னனது, தகைமைக்கண் - சிறப்பினுள்ளே, உலகு தங்கிற்று – உலகமானது அடங்கி இருப்பதாகும்.

**5. தன்துணை இன்றால் பகைஇரண்டால் தான்ஒருவன்**
**இன்துணையாக் கொள்கஅவற்றின் ஒன்று.**

தனக்கு உதவியாக இருக்கும் துணை இல்லாமல், துன்பம் கொடுக்கும் பகை இரண்டாக இருந்தால் ஒருவனாக இருக்கும் தான் அப்பகை இரண்டினுள் பொருத்தமான ஒன்றினை அப்போதைக்கு இனிய துணையாகச் செய்து கொள்ளவேண்டும்.

தான் - தனக்கு உதவி செய்கின்ற, துணை – துணை, இன்றால் - இல்லாமல், பகை இரண்டு – பகைமை இரண்டாக இருந்தால், தானொருவன் - ஒருவனாக இருக்கும் தான், அவற்றின் - அப்பகைகளுள், இன்துணையா – ஒன்றினை அந்த நேரத்திற்குத் தனக்குத் துணையாக, கொள்க - கொள்ளுதல் வேண்டும்.

**6. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்**
**தேறான் பகாஅன் விடல்,**

பகைவனை முன்பு தெளிந்து அறிந்து இருந்தாலும் அல்லது தெளிந்து அறியாமல் இருந்தாலும் தனக்கு அழிவு வந்துற்றபோது அப்பகைவனைக் கூடாமலும் நீக்கி வைக்காமலும் இடையே விட்டு வைக்க வேண்டும்.

தேறினும் - பகைவன் முன்பு தெளியப்பட்டவனானாலும், தேறாவிடினும் - தெளியப்படாதவனானாலும், அழிவின்கண் - தனக்குத் தாழ்வு வந்துற்றபோது, தேறான் - அவனுடன் கூடாதவனாயும், பகாஅன்விடல் - பகைத்து நீங்காமலும் நடுவாக விட்டு வைத்திருத்தல் வேண்டும்.

**7. நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க**
**மென்மை பகைவா் அகத்து.**

தான் நொந்திருதப்பதனைத் தாமாக அறியாதவா்களுக்குச் சொல்லாதிருத்தல் வேண்டும். தனது வலிமையினைப் பார்த்திருக்கும் பகைவரிடத்தில் மேலிட்டுக் கொள்ளாதிருத்தல் வேண்டும்.

நொந்தது அறியாா்க்கு – தான் நொந்து இருப்பதனை அறிந்திராதவா்களுக்கு, நோவற்க – தனது துன்பத்தினைச் சொல்லாதிருத்தல் வேண்டும், மென்மை – வலிமையில்லாத் தன்மையினை, பகைவா் அகத்து – அதனை எதிா் நோக்கியிருக்கும் பகைவரிடத்தில், மேவற்க – மேலிட்டுத் தெரியப்படுத்தாதிருத்தல் வேண்டும்.

**8. வகைஅறிந்து தன்செய்து தன்காப்ப மாயும்**

**பகைவர்கண் பட்ட செருக்கு.**

தான் தொழில் செய்யும் வகையினை அறிந்து அது முடித்தற் கேற்றபடி தன்னைப் பெருக்கிக் காத்துக் கொண்டால் தனது பகைவரிடத்தில் உள்ள செருக்கு கெட்டுவிடும்.

வகை – தொழிலினைச் செய்யும் வகையினை, அறிந்து – அறிந்து தெரிந்து, தன்செய்து – தன்னைப் பெருக்கிக் கொண்டு, தன் காப்ப – தன்னைக் காத்துக் கொண்டால், பகைவர் கண் - தனது பகைவரிடத்தில், பட்ட செருக்கு – உண்டான செருக்கு, மாயும் - அழிந்து விடும்.

**9. இளைதாக முள்மரங் கொல்க களையுநர்**
**கைகொல்லும் காழ்த்த இடத்து.**

களைய வேண்டிய முள் மரத்தினை இளையதாக இருக்கும் போதே களைந்து விடுதல் வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் முதிர்ந்தபோது களைபவர் கையினை அது தானே கொடுக்கும்.

முள் - முள்ளாகிய, மரம் - மரத்தினை, இளைதாக - இளையதாக இருக்கும்போதே, கொல்க – களைதல் வேண்டும், காழ்த்தவிடத்து - முதிர்ந்துவிட்டபோது, களையுநர் - களைபவருடைய, கை கொல்லும் - கையினைக் கொடுக்கும்.

**10. உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்**
**செம்மல் சிதைக்கலா தார்.**

தம்முடன் பகைப்பவரது தருக்கினைக் கெடுக்கக் கூடியவராய் இருந்து, இகழ்ச்சியால் அது செய்யாத அரசர், பிறகு மூச்சுவிடும் அளவிற்கும் உயிருடன் இருப்பவராக மாட்டார்.

செயிர்ப்பவர் - தம்முடன் பகைக்கும் பகைவருடைய, செம்மல் - தருக்கினை, (அழிக்கும் நிலையில் இருந்தும்) சிதைக்கலாதார் - இகழ்ச்சியால் அழிக்காத வேந்தர், உயிர்ப்ப - மூச்சு விடுகின்ற அளவிற்கும், மன்ற – உறுதியாக, உளர் - இருப்பவர், அல்லர் - அல்லர் என்பதாகும்.

## 51.உட்பகை

**(உடனிருந்துகொண்டே தீமை செய்யும் பகைவர்கள்)**

**1. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்**
**இன்னாவாம் இன்னா செயின்.**

நிழலும் நீரும் முன்னர் இனியவைபோல் இருந்தாலும் பின்னர் நோய் செய்வனவாகும். அதுபோல உட்பகையினர் முன்னர் இனியவரே யானாலும் பின்னர் தீங்கு பயப்பவராவார்கள்.

நிழலும் - நுகரப்படுவனவாகிய நிழலும், நீரும் - நீரும், இன்னாத — பின்பு நோய் செய்யுமாம், இன்னா - இனிமையானவையல்ல, தமர் - தம்மவர் (உட்பகையாயினோர்), நீரும் - தன்மைகளும் , இன்னாசெயின் - முன்னர் இன்பம் செய்தாலும் பின்னர் துன்பம் தருபவையாகும் (ஆதலால்), இன்னாவாம் - இனிமையானவை யல்ல.

**2. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக**
**கேள்போல் பகைவர் தொடர்பு.**

வாள் போல வெளிப்பட்டு நிற்கும் பகைவர்களுடைய பகைமைக்கு அஞ்சாதிருத்தல் வேண்டும். உறவு போலவே மறைந்து நிற்கும் பகைவர்களின் நட்பினை அஞ்சுதல் வேண்டும்.

வாள் - வெட்டுகின்ற வாளினை, போல — போன்து வெளிப்பட்டிருக்கும், பகைவரை — பகைவர்களுக்கு, அஞ்சற்க — அஞ்சாதிருக்க வேண்டும், கேள்போல் - உறவினர்கள் போல்காட்டி (பகைமையினை மறைத்து வைத்திருக்கும்), பகைவர் - பகைவருடைய (உட்பகை), தொடர்பு அஞ்சுக — நட்பினை அஞ்சியிருத்தல் வேண்டும்.

**3. உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து**
**மட்பகையின் மாணத் தெறும்.**

உட்பகைக்கு அஞ்சித் தன்னைக் காத்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், குயவன் மட்கலத்தினை அறுக்கும் கருவிபோல மறைவாக இருந்தே கெடுத்து விடுவர்.

உட்பகை — உட்பகைக்கு, அஞ்சி — அச்சப்பட்டு, தற்காக்க — தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும், (அப்படி நடக்காவிட்டால்) உலைவிடத்து — தமக்கு ஒரு சோர்வு வந்தபோது, மட்பகையின் - குயவன் மட்கலத்தினை அறுக்கின்ற கருவிபோல, மாண — தப்பாமல், தெறும் - உட்பகையினர் கெடுத்துவிடுவர்

**4. மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா**
**ஏதம் பலவும் தரும்.**

புறத்தில் திருந்தியபோல இருந்து உள்ளுக்குள்ளே திருந்தாத உட்பகை உண்டாகிவிட்டால் அது அவனுக்குத் தனது சுற்றத்தார் தனது வசப்படாமைக்குக் காரணமான குற்றம் பலவற்றையும் கொடுக்கும்.

மனம் - மனம், மாணா – திருந்தாத, உட்பகை – உள்ளுக்குள்ளான பகை, தோன்றின் - உண்டாகிவிட்டால், இனம் - சுற்றம், மாணா – தனது வசம் இல்லாமைக்குக் காரணமான, ஏதம் - குற்றம், பலவும் - பலவற்றையும், தரும் - தந்துவிடும்.

**5. உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்**
**ஏதம் பலவும் தரும்.**

புறத்தில் உறவு முறைத் தன்மையோடு கூடிய உட்பகை வேந்தனுக்கு உண்டாகி விட்டால் அது அவனுக்கு இறத்தல் முதலிய குற்றங்களையெல்லாம் தந்துவிடும்.

உறல் - உறிவின், முறையான் - முறையினா் இயல்போடு சோ்ந்த, உட்பகை – உட்பகையானது, தோன்றின் - தோன்றிவிட்டால், இறல் - இறத்தல், முறையான் - தன்மையோடு கூடிய, ஏதம் - குற்றங்கள், பலவும் - பலவற்றையும், தரும் - தந்துவிடும்.

**6. ஒன்றாமை ஒன்றியாா் கண்படின் எஞ்ஞான்றும்**
**பொன்றாமை ஒன்றல் அரிது.**

பகைமை தனக்கு உள்ளாயினாரிடத்திலேயே உண்டாகி விடுமானால் அரசனுக்கு இறவாமை என்பது முடியாததாகிவிடும்.

ஒன்றாமை – பகை என்பது, ஒன்றியாா் கண்படின் - உள்ளுக்குள்ளே இருப்பவரிடத்தில் உண்டாகிவிடுமானால், பொன்றாமை - இறவாதிருத்தல், ஒன்றல் - முடியும் என்பது, எஞ்ஞான்றும் அரிது – எந்த நாளிலும் அருமையானதாகும்.

**7. செப்பின் புணா்ச்சிபோல் கூடினும் கூடாதே**
**உட்பகை உற்ற குடி.**

செப்பு ஒன்றுகூடி இருப்பதுபோலப் புறத்தில் வேற்றுமை தெரியாமல் கூடினாராயினும் உட்பகை உண்டான குடியிலுள்ளவா்கள் மனத்தால் தம்முள் கூட மாட்டாா்கள்.

செப்பின் - செப்பினுடைய, புணா்ச்சி போல் - சோ்ந்திருக்கும் தன்மை போல், கூடினும் - (வெளித் தோற்றத்திற்குக்) கூடிக் காணப்பட்டாலும், உட்பகை

– உள்ளாகிய பகை, உற்றகுடி – உண்டாகியிருக்கும் குடியிலுள்ளவர்கள், கூடாதே – மனத்தால் கூடமாட்டார்கள்.

**8. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது**
**உட்பகை உற்ற குடி.**

உட்பகை உண்டாகியிருக்கும் குடியானது அரத்தினால் தேய்க்கப்பட்ட இரும்பினைப் போலத் தேய்க்கப்பட்டுத் தனது வலிமை தேய்ந்துவிடுவதாகும்.

உட்பகை – உட்பகையானது, உற்ற – உண்டாகியிருக்கும், குடி குடியானது, அரம் - அரத்தினால், பொருத – தேய்க்கப்பட்ட, பொன் போல் - இரும்பினைப் போல, பொருது – தேய்க்கப்பட்டு, உரம் தேயும் - தனது வலிமை தேய்ந்துவிடும்.

**9. எட்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்**
**உட்பகை உள்ளதாம் கேடு.**

உட்பகை எள்ளின் அளவுபோன்று சிறுமையுடையதே ஆனாலும், பெருமையெல்லாம் அழிக்கக் கூடிய கேடு அதனுள்ளே இருப்பதாகும்.

உட்பகை – உட்பகையானது, எட்பகவு – எள்ளினது பிளவினை, அன்ன – ஒத்திருக்கும், சிறுமைத்தே – சிறுமையுடையதே, ஆயினும் - ஆனாலும், கேடு உள்ளதாம் - அதனால் வரும் கெடுதி அதனுள்ளே இருப்பதாகும்.

**10. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்**
**பாம்போடு உடன்உறைந் தற்று.**

உள்ளத்தில் பொருத்தம் இல்லாதவரோடு கூடிவாழும் வாழ்க்கை ஒரு குடிசையினுள்ளே பாம்புடன் கூடிவாழ்வதைப் போன்றதாகும்.

உடம்பாடு – மனப் பொருத்தம், இலாதவர் - இல்லாதவருடன், வாழ்க்கை - கூடி வாழ்கின்ற வாழ்க்கையானது, குடங்கருள் - ஒரு குடிசையினுள், பாம்போடு – பாம்புடன் உடன் - சேர்ந்து, உறைந்தற்று – வாழ்வதைப் போன்றதாகும்.

## 52. பெரியாரைப் பிழையாமை

**(ஆற்றல்களினால் பெரியாராயினோரை அவமதித்து நடக்காதிருத்தல்)**

**1. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்**
**போற்றலுள் எல்லாம் தலை.**

எடுத்ததை முடிக்கும் ஆற்றல் படைத்தவர்களுடைய வல்லமைகளை அவமதியாது நடந்து கொள்ளுதல் என்பது, தமக்குத் தீங்கு வராமல் செய்யும் காவல்கள் எல்லாவற்றிலும் மிக்கதாகும்.

ஆற்றுவார் - சிறந்த ஆற்றல்மிக்கவர்களின் , ஆற்றல் இகழாமை – வல்லமைகளை இகழாதிருத்தல், போற்றுவார் - தமக்குத் தீமை வராமல் காப்பவருடைய, போற்றலுள் - போற்றிக் காக்கும் காவல்கள், எல்லாம் தலை – எல்லாவற்றினும் சிறந்ததாகும்.

**2. பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்**
**பேரா இடும்பை தரும்.**

ஆற்றல்களினால் பெரியாராயினோரைப் போற்றாமல் அவமதித்து நடப்பானானால் அப்பெரியாரால் எக்காலத்திலும் அவனுக்கு நீங்காத துன்பங்கள் உண்டாகும்.

பெரியாரை – ஆற்றல்களினால் பெரியார்கள் ஆனவர்கள், பேணாது – நன்கு போற்றி மதியாமல், ஒழுகின் - நடப்பாராகில், பெரியாரால் - அப்பெரியார்களால், பேரா – நீங்காத, இடும்பை – துன்பங்கள், தரும் - உண்டாவதாகும்.

**3. கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்**
**ஆற்று பவர்கண் இழுக்கு.**

பிறரை அழிக்க வேண்டியபோது அதனை அப்பொழுதே செய்யவல்ல ஆற்றல் படைத்தவர்களிடத்தில், தான் கெட்டுவிட விரும்பினால் நீதி நூல்களையும் கடந்து குற்றங்களைச் செய்வானாக.

அடல் - மாற்றாரைக் கொல்ல, வேண்டின் - வேண்டியபோது, ஆற்றுபவர்கண் - அதனைச் செய்யவல்ல மன்னரிடத்தில், இழுக்கு – குற்றத்தினை, கெடல் - தான் கெட்டுப் போக, வேண்டின் - விரும்பினால், கேளாது – நீதி நூல்களில் கூறியவற்றையும் கேளாமல் செய்க - செய்வானாக.

**4. கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்கு**
**ஆற்றாதார் இன்னா செயல்.**

ஆற்றல் மிக்கவர்களுக்கு அவ்வாற்றல் இல்லாதார் தாம் முற்பட்டுத் துன்பத்தினைச் செய்தல், தானே வரக்கூடிய கூற்றுவனை அதற்கு முன்னதாகவே கையால் அழைத்தது போன்றதாகும்.

ஆற்றுவார்க்கு – ஆற்றல் மிக்கவர்களுக்கு, ஆற்றாதார் - ஆற்றல் இல்லாதார், இன்னா செயல் - துன்பங்களைச் செய்தல், கூற்றத்தை – உயிர் கொள்ளும் கூற்றுவனை, கையால் விளித்தற்று – கையினைக் காட்டி அழைத்ததற்குச் சமமாகும்.

**5. யாண்டுச்சென்று யாண்டும் உளராகார் வெந்துப்பின்**
**வேந்து செறப்பட் டவர்.**

வலிமை மிகுந்த வேந்தனால் கோபிக்கப்பட்டவர்கள் அவனிடமிருந்து தப்பி எங்கே சென்றாலும் உயிர் வாழமாட்டார்கள்.

வெந்துப்பின் - மிக்க வல்லமை நிறைந்த, வேந்து – வேந்தனால், செறப்பட்டவர் - கோபிக்கப்பட்டவர்கள், யாண்டு – அவனிடமிருந்து தப்பி எங்கே, சென்று – போய் இருப்பவர், யாண்டும் - எந்த இடத்திலும், உளர் - இருப்பவர், ஆகார் - ஆகமாட்டார்கள்.

**6. எரியாற் சுடப்படினும் உய்வுஉண்டாம் உய்யார்**
**பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.**

தீயாற் சுடப்பட்டாலும் ஒரு வழியில் உயிர்த் தப்புதல் முடியும். பேராற்றல் கொண்ட பெரியோர்களுக்குக் குற்றம் செய்து நடந்து கொள்பவர்கள் எவ்விதத்திலும் உயிர்தப்புதல் முடியாததாகும்.

எரியால் - (காட்டிற்குச் சென்றவன்) அவ்விடத்தில் நெருப்பினால், சுடப்படினும் - சுடப்பட்டாலும், உய்வு உண்டாம் - ஒரு வழியில் உயிர் தப்புதல் உண்டாகும். பெரியார் - ஆற்றல் மிக்க பெரியார்களுக்கு, பிழை – குற்றம் செய்து, ஒழுகுவார் - நடப்பவர்கள், உய்யார் - எவ்வழியிலும் உயிர் தப்பிக்க மாட்டார்கள்.

**7. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்**
**தகைமாண்ட தக்கார் செறின்.**

மாட்சிமைப்பட்டுப் பெருமை நிறைந்தவர்கள், அருந்தவத்தோர் கோபிப்பாராயின் மிகச் சிறப்பான அவர்களுடைய வாழ்வும் பெரும் பொருளும் என்னவாகும்?

தகைமாண்ட – ஆற்றல் மிக்க பெருமையால் சிறப்படைந்த, தக்கார் - அருந்தவத்தோர், செறின் - சினம் கொள்ளுவாரானால், வகைமாண்ட – பலவகை உறுப்புக்களால் பெருமைப்பட்ட, வாழ்க்கையும் - உயர்ந்த அரச வாழ்க்கையும்,

வான் - ஈட்டி வைத்த மிகப் பெரிய, பொருளும் - பொருளும், என்னாம் - என்னவாகும்.?

**8. குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு**
**நின்றன்னார் மாய்வர் நிலத்து.**

குன்றினையொத்த அருந்தவத்தோர் கெட்டுப் போகுமாறு நினைப்பவராயின் அப்போதே இப்பபூமியில் நிலைபெற்றுள்ள செல்வந்தர் தம் குடியோடும் அழிவார்.

குன்று – மலைக்குன்றினை, அன்னார் - ஒத்த அருந்தவப் பெரியார்கள், குன்ற மதிப்பின் - ஒருவன் கெட்டுவிட நினைப்பாரானால், நிலத்து – பூமியில், நின்றன்னார் - நிலைத்து இருப்பதைப் போன்ற செல்வந்தர், குடியொடு மாய்வர் - தமது குடியுடன் அப்போதே மடிந்துவிடுவர்.

**9. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து**
**வேந்தனும் வேந்து கெடும்.**

காத்தற்கு அருமையான உயர்ந்த நோன்புகளையுடையார் கோபிப்பாராயின் அவர் ஆற்றலால் வேந்தனும் தனது நிலைகெட்டு அழிவான்.

ஏந்திய – உயர்ந்த, கொள்கையார் - நோன்பு கொண்ட கொள்கையாளர்கள், சீறின் - சினம் கொள்ளுவாரானால், இடை – நடுவே, வேந்து முரிந்து – தனது ஆட்சி நிலைகெட்டு, வேந்தனும் கெடும் - சிறந்த அரசன் தானும் கெட்டுப் போவான்.

**10. இறந்துஅமைந்த சார்புடைய ராயினும் உய்யார்**
**சிறந்துஅமைந்த சீரார் செறின்.**

மிக்க தவத்தினையுடையார் கோபிப்பாராயின் அவரால் கோபிக்கப்பட்டவர் மிகப் பெரிய படைபலம் முதலியன உடையவராயினும் தப்பிக்க மாட்டார்.

சிறந்து – மிகவும் சிறப்பாக, அமைந்த – அமைந்த, சீரார் - தவஆற்றல் பெற்றவர், செறின் - சினம் கொண்டுவிட்டால், இறந்து – மிகவும் பெரியதாக, அமைந்த – அமைந்த, சார்புடையார் - சார்பாகிய துணைகள் பலவும் உடையவர்கள், ஆயினும் உய்யார் -தப்பித்துவிட மாட்டார்கள்.

## 53.பெண்வழிச் சேறல்

**(மிகுந்த காமத்தால் மனைவிக்கு ஏவல் செய்து அவன் வழி நடத்தல்)**

**1. மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்**
**வேண்டாப் பொருளும் அது.**

மிகுந்த பெண்ணின்பம் காரணமாக மனையாளை விரும்பி அவள் தன்மையராக நடப்பவர்கள் தமக்குத் துணையான அறத்தினை அடையமாட்டார்கள். பொருள் சம்பாதிக்க முயல்வோரை அப்பொருளில் செல்லவொட்டாமல் தடுப்பதும் அவ்வின்பமேயாகும்.

மனை - இன்பம் காரணமாக மனையாளை, விழைவார் - விரும்பி அவள் வழி நடப்பவர், மாண் - மாட்சிமைப்பட்ட, பயன் - அறமாகிய பயனை, எய்தார் - அடையமாட்டார்கள். வினை விழைவார் - பொருள் ஈட்ட முயல்பவர்கள், வேண்டா – தடையானதென்று இகழும், பொருளும் - பொருளும், அது – அவ்வின்பமேயாகும்.

**2. பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்**
**நாணாக நாணுத் தரும்.**

தனது ஆண்மையினை விட்டு மனையாளது பெண்மையினை விரும்புவான் எய்தி நின்ற செல்வம் இவ்வுலகத்து ஆண்பாலர்க்கெல்லாம் நாணுதலைக் கொடுக்கும்.

பேணாது – தனது ஆண் தன்மையினைப் போற்றி விரும்பாமல், பெண் - மனையாளது பெண் தன்மையினை, விழைவான் - விரும்பி இருப்பவன், ஆக்கம் - பெற்ற செல்வம், பெரியதோர் - பெரிதானதொரு, நாண் ஆக – ஆடவர்களுக்கெல்லாம் நாணம் உண்டாக்கி, நாணுத்தரும் - தனக்கும் நாணத்தினைக் கொடுக்கும்.

**3. இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்**
**நல்லாருள் நாணுத் தரும்.**

ஒருவன் தனது இல்லாளிடத்தில் தாழ்ந்திருப்பதற்குக் காரணமான அச்சம், அது இல்லாதவராகிய நல்லாரிடம் செல்லுங்கால் நாணுதலை எக்காலத்திலும் அவனுக்குக் கொடுக்கும்.

இல்லாள்கண் - மனைவியினிடத்தில், தாழ்ந்த – தாழ்ந்து பயந்து கிடக்கும், இயல்பின்மை - இயல்பல்லாத தன்மை, நல்லாருள் - நல்லவரிடத்தில் (செல்லும் போது) நாணு – நாணம் அடைதலை, எஞ்ஞான்றும் தரும் - எக்காலத்தில் அவனுக்குத் தருவதாகும்.

**4. மனையாளை அஞ்சும் மறுமையி லாளன்**
**வினையாண்மை வீறுஎய்தல் இன்று.**

மனையாளை அஞ்சும்(அஞ்சி நடக்கும்) மறுமைப் பயன் இல்லாதவனுக்குத் தொழிலை ஆளும் தன்மை உண்டான போதும் நல்லோரால் பாராட்டப்பட மாட்டாது.

மனையாளை – தனது மனைவிக்கு, அஞ்சும் - பயந்து ஒழுகுகின்ற, மறுமை – மறுமைப்பயன், இலாளன் - இல்லாதவனுக்கு, வினை – தொழிலில், ஆண்மை – ஆளும் தன்மை (இருந்த போதும்), வீறு – நல்லோரால் கொண்டாடப்படுதலை, எய்தல் - பெறுதல், இன்று - இல்லையாகும்.

**5. இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்மற்று எஞ்ஞான்றும்**
**நல்லார்க்கு நல்ல செயல்.**

தனது மனையாளுக்கு அஞ்சி நடப்பவன் தான் தேடிய பொருளேயானாலும் நல்லவர்களுக்கு எப்போதும் நல்லன செய்தற்கு அஞ்சி இருப்பவனாவான்.

இல்லாளை – மனைவிக்கு, அஞ்சுவான் - அஞ்சுகின்றவன், நல்லார்க்கு – நல்லவர்களுக்கு, நல்ல – நல்லனவற்றை, செயல் - செய்தற்கு, எஞ்ஞான்றும் அஞ்சும் - எந்நாளிலும் அஞ்சுபவனாவான்.

**6. இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்**
**அமைஆர்தோள் அஞ்சு பவர்.**

தம் இல்லாளுடைய மூங்கில் போன்ற தோள்களுக்கு அஞ்சி நடப்பவர் இமையவர்கள் போல இவ்வுலகில் வாழ்ந்தாலும் ஆண்மை இல்லாதவராவார்.

இல்லாள் - இல்லாளுடைய, அமையார் - மூங்கில் போன்ற, தோள் - தோள்களுக்கு, அஞ்சுபவர் - அஞ்சுகிறவர்கள், இமையாரின் வாழினும் - இமையவர்களைப் போல வாழ்ந்தாலும், பாடு – பெருமை, இலரே - இல்லாதவர்களேயாவார்கள்.

**7. பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாண்உடைப்**
**பெண்ணே பெருமை உடைத்து.**

நாணம் இல்லாமல் இல்லாளுக்கு ஏவல் தொழில் செய்து திரிகின்றவனுடைய ஆண் தன்மையினைவிட நாணமுடைய பெண் தன்மையே பெருமையுடையதாகும்.

பெண் - மனைவிக்கு, ஏவல் செய்து – அவள் கட்டளையிட்ட தொழிலினைச் செய்து கொண்டு, ஒழுகும் - நடக்கின்ற, ஆண்மையின் - ஆண்தன்மையினைக் காட்டிலும், நாண் - நாணத்தினை, உடை – உடைய, பெண்ணே – பெண்தன்மையே, பெருமை உடைத்து – பெருமையினை உடையதாகும்.

**8. நட்டார் குறைமுடியார் நன்றுஆற்றார் நல்நுதலாள்**
**பெட்டாங்கு ஒழுகு பவர்.**

தன் விருப்பப்படி அல்லாமல் தனது மனையாள் வேண்டியவாறு நடப்பவர் தம்முடன் நட்பு கொண்டவர் குறையினை முடிக்க மாட்டார். நல்ல அறச் செயலையும் செய்ய மாட்டார்.

நல் - அழகுள்ள, நுதலாள் - நெற்றியினையுடைய இல்லாள், பெட்டாங்கு – வேண்டியபடி, ஒழுகுபவர் - நடப்பவர்கள், நட்டார் - நண்பர்களது, குறை முடியார் - குறைபாட்டினைச் செய்து முடிக்க மாட்டார்கள், நன்று ஆற்றார் - நல்ல அறத்தினையும் செய்து முடிக்க மாட்டார்கள்.

**9. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்**
**பெண்ஏவல் செய்வார்கண் இல்.**

அறச் செயலும் அது முடித்தற்குக் காரணமான பொருட்செயலும், இன்பச் செயல்களும் மனையாளுக்கு ஏவல் தொழில் செய்பவர்களிடத்தில் உண்டாவதில்லையாம்.

அறவினையும் - அறமான செயலும், ஆன்ற பொருளும் - அது முடித்தற்கான பொருட் செயலும், பிற – மற்ற, வினையும் - இன்பச் செயல்களும், பெண் - மனையாளுக்கு, ஏவல் - ஏவல் தொழில், செய்வார்கண் - செய்பவர்களிடத்தில், இல் - உண்டாவதில்லையாம்.

**10. எண்சேர்ந்த நெஞ்சத்து இடன்உடையார்க்கு எஞ்ஞான்றும்**
**பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.**

தொழிலினிடத்தில் ஆலோசனையுள்ள நெஞ்சத்தினையும் அதனாலாய செல்வத்தினையும் உடைய வேந்தர்க்கு மனையாளைச் சேர்தலால் விளையும் பேதைமை எக்காலத்திலும் உண்டாகாது.

எண் - செயல் சிந்தனையில், சேர்ந்த - சென்ற, நெஞ்சத்து – நெஞ்த்தினையும், இடன் உடையார்க்கு – அதனாலான செல்வத்தினையும்

உடையவர்களுக்கு, பெண் - மனையாளை சேர்ந்தாம் - சார்ந்தாம் - சார்ந்தே நடப்பதால் உண்டாகும், பேதைமை – அறியாமை, எஞ்ஞான்றும் இல் - எக்காலத்திலும் உண்டாகாது.

## 54.வரைவின் மகளிர்

### (ஆவார், ஆகாதார் என்ற வரையில்லாத பொதுமகளிர்)

**1. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்**
**இன்சொல் இழுக்குத் தரும்.**

ஒருவனை அன்புபற்றி விரும்பாமல் பொருள்பற்றி விரும்புகிற மகளிருடைய இனிய சொற்கள் துன்பத்தினைக் கொடுக்கும்.

அன்பின் - யாரையும் மனத்தில் அன்பு கொண்டு, விழையார் - விரும்பாமல், பொருள் - பொருளைக் கருதியே, விழையும் - விரும்புகின்ற, ஆய் தொடியார் - ஆய்ந்தவளையல்களையுடைய வரைவின் மகளிர், இன் - இனிய, சொல் - சொற்கள், இழுக்குத் தரும் - துன்பத்தினைக் கொடுப்பதாகும்.

**2. பயன்தூக்கிப் பண்புஉரைக்கும் பண்புஇல மகளிர்**
**நயன்தூக்கி நள்ளா விடல்.**

ஒருவனுக்கு உள்ள பொருளை அளந்தறிந்து அதனை அடையும் வரையில் பண்புடைமை பேசும் பண்பில்லாத மகளிரது நடத்தையினை ஆராய்ந்தறிந்து அவர்களைப் பொருந்தாது விடுதல் வேண்டும்.

பயன் - தமக்கு வரும் பொருளை, தூக்கி – அளந்தறிந்து, பண்பு – தமது பண்புடைமையினை, உரைக்கும் - சொல்லும், பண்புஇல் - நற்குணம் இல்லாத, மகளிர் - பொது மகளிரது, நயன் - நடத்தையினை, தூக்கி – ஆராய்ந்தறிந்து, நள்ளாவிடல் - அவர்களைப் பொருந்தாமல் விட்டுவிடுதல் வேண்டும்.

**3. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்**
**ஏதில் பிணந்தழீஇ யற்று.**

பொருளையே விரும்பும் பொது மகளிரது பொய்ம்மையுடைய முயக்கம் இருட்டறையொன்றில் பிணத்தினைத் தழுவினது போன்றதாகும்.

பொருட் பெண்டிர் - கொடுப்பவர்களை இச்சிக்காமல் பொருளையே விரும்பும் பொது மகளிரது, பொய்ம்மை – பொய்ம்மையுடைய, முயக்கம் -

தழுவுதல் என்பது, இருட்டு - இருண்ட, அறையில் - அறையில், ஏதில் - அறிந்திராத, பிணம் தழீஇ யற்று – பிணத்தினைத் தழுவியது போன்றதாகும்.

**4. பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்**
**ஆயும் அறிவி னவர்.**

அருளோடு கூடிய பொருளை ஆராயும் அறிவினையுடையார், இன்பமாகிய பொருளை இழந்து, பொருளாகிய பொருளையே விரும்பும் மகளிரது அற்ப இன்பத்தினைத் தீண்டமாட்டார்கள்.

பொருட் பொருளார் - பொருளையே பொருளாக விரும்பி இன்பத்தினை விரும்பாத மகளிரது, புன்னலம் - புல்லிய அற்பமான இன்பத்தினை, அருள் - அருளுடன் பொருந்திய, பொருள் - மெய்ப் பொருளினை, ஆயும் - ஆராய்ந்து சேர்க்கும், அறிவினவர் தோயார் - அறிவினையுடையவர்கள் தீண்டமாட்டார்கள்.

**5. பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்**
**மாண்ட அறிவி னவர்.**

இயற்கையான மதி நன்மையினால் மாட்சிமைப்பட்டு செயற்கை அறிவினையும் உடையவர்கள், பொருள் கொடுப்பார்க்கெல்லாம் பொதுவான ஆசையுடைய மகளிரது புல்லிய நலத்தினைத் தீண்டார்கள்.

மதி - இயற்கையான மதி, நலத்தின் - நன்மையால், மாண்ட – சிறப்புடன் கூடிய, அறிவினவர் - செயற்கை அறிவினையுடையவர்கள், பொது – எல்லோரிடத்திலும் பொதுவாகிய, நலத்தார் - ஆசையுடைய மகளிரது, புன்னலம் - புல்லிய இன்பத்தினை, தோயார் - தீண்டமாட்டார்கள்.

**6. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்**
**புன்னலம் பூரிப்பார் தோள்.**

ஆடல் பாடல், அழகு முதலியவைகளினால் களிப்புற்றுத் தமது புல்லிய நலத்தினை விலை கொடுப்பார்க்கு அளிக்கும் மகளிர் தோளினைத் தம் புகழினை உலகில் பரப்பும் உயர்ந்தோர் தீண்டமாட்டார்.

தகை – ஆடல் பாடல் அழகு போன்றவைகளால், செருக்கி – களிப்பெய்தி, புன்னலம் - புல்லிய இன்பத்தினை, பாரிப்பார் - விலை கொடுப்பார்க்குப் பரப்புகின்ற (மகளிரது), தோள் - தோள்களை, தம் - தமது, நலம் - புகழினை, பாரிப்பார் - உலகில் பரப்பும் மேலானவர்கள், தோயார் - தீண்டமாட்டார்கள்.

**7. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சில்**
**பேணிப் புணர்பவர் தோள்.**

நிறைகுணத்தினால் திருந்திய நெஞ்சம் இல்லாதவர்களே நெஞ்சினால் பிறவற்றை விரும்பி உடன்பால் பொருள் கொடுப்பாரை விரும்பும் மகளிர் தோள்களைத் தோய்வார்கள்.

நெஞ்சின் - மனத்தினால், பிற – வேறொன்றினை, பேணி – ஆசைப்பட்டு, புணர்பவர் - பொருள் கொடுப்பாரை உடம்பால் புணருகின்ற மகளிரது, தோள் - தோள்களை, நிறை – நிறை குணத்தால் திருந்திய, நெஞ்சம் - நெஞ்சம், இலாதவர் - இல்லாதவர்கள், தோய்வர் - புணரச் செய்வார்கள்.

**8. ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்குஎன்ப**
**மாய மகளிர் முயக்கு.**

மயக்கி வஞ்சிக்க வல்ல மகளிரது முயக்கத்தினை, அவ்வஞ்சகத்தினை ஆராய்ந்தறியும் அறிவுடையார், அல்லாதார்க்கு அணங்கு என்று சொல்லுவர்.

மாய – வஞ்சனை நிறைந்த, மகளிர் - பொது மகளிர், முயக்கு – தழுவிப் புணர்தலை, ஆயும் - ஆராய்ந்தறியும், அறிவினர் - அறிவினையுடையவர், அல்லார்க்கு - அல்லாதவர்களுக்கு, அணங்கு – தெய்வமகள், என்ப – என்று கூறுவர்.

**9. வரைவுஇலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்**
**பூரியர்கள் ஆழும் அளறு.**

விலை கொடுப்பார் யாவரையும் முயங்கும் மகளிரது மெல்லிய தோள்கள், அக்குற்றத்தினை அறியும் அறிவில்லாத கீழ்மக்கள் புகுந்து அழுந்தும் நரகமாகும்.

வரைவு இலா – உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற அளவு இல்லாமல் (விலை கொடுப்போர் யாரையும் சேர்கின்ற), மாண் - சிறப்பான, இழையார் - ஆபரணத்தையுடைய மகளிரது, மென் - மெல்லிய, தோள் - தோள்கள், புரையிலா – அக்குற்றத்தினையறியும் அறிவில்லாத, பூரியர்கள் - கீழ்மக்கள், ஆழும் அளறு – அழுந்துகின்ற நரகமாகும்.

**10. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்**
**திருநீக்கப் பட்டார் தொடர்பு.**

இருவித மனத்தினையுடைய மகளிரும், கள்ளும், சூதும் என்ற இம்மூன்றும் செல்வத்தால் நீக்கப்பட்டவர்களுக்கு நட்புடையவையாகும்.

இரு – ஒருவரோடு கூடுதலும் கூடாமையுமான இரண்டுவித, மனப்பெண்டிரும் - மனத்தினையுடைய மகளிரும், கள்ளும் - கள்ளும், கவறும் - சூதாட்டமும், திருநீக்கப்பட்டார் - திருமகளால் துறக்கப்பட்டவர்களுக்கு, தொடர்பு – நட்பு என்பதாகும்.

**55.கள் உண்ணாமை**

**(கள்ளினை உட்கொள்ளாதிருத்தல்)**

**1. உட்கப் படாஅர் ஒளியிழப்பார் எஞ்ஞான்றும்**
**கட்காதல் கொண்டொழுகு வார்.**

கள்ளின் மீது காதல் கொண்டு ஒழுகுபவர்கள் எக்காலத்திலும் பகைவரால் அஞ்சப்பட மாட்டார்கள். அதுவேயல்லாமல் தங்கள் புகழினையும் இழப்பார்.

கள் - கள்ளின்மீது, காதல் கொண்டு – காதலினைக் கொண்டு, ஒழுகுவார் - நடப்பவர்கள், எஞ்ஞான்றும் - எந்த நாளிலும், உட்கப்படார் - பகைவர்களால் அஞ்சப்படமாட்டார்கள், (அதுவுமல்லாமல்) ஒளி இழப்பர் - புகழையும் இழப்பார்கள்.

**2. உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரால்**
**எண்ணப் படவேண்டா தார்.**

அறிவுடையோர்கள் கள்ளினை உண்ணாதிருக்கக் கடவர், நல்லவர்களால் மதிக்கப்பட, விரும்பாதவர்கள் உண்ணுவார்களாக, என்பதாம்.

கள்ளை – கள்ளினை, உண்ணற்க – அறிவுடையோர் உண்ணாதிருக்கக் கடவர், உணில் - உண்ணுவதை விரும்புபவர்களானால், சான்றோரால் - சான்றாண்மை நிறைந்தவர்களால், எண்ணப்பட – மதித்து எண்ணப்பட, வேண்டாதார் - விரும்பாதவர்கள், உண்க – உண்ணுவார்களாக.

**3. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்**
**சான்றோர் முகத்துக் களி.**

பெற்ற தாயின் முன்பும் கள்ளுண்டு களித்தல் துன்பமாகும். அப்படியானால், குற்றத்தினைப் பொறுத்துக் கொள்ள முடியாத சான்றோர் முன்பு கள்ளுண்டு களித்தல் என்னவாகும்?

ஈன்றாள் - என்ன செய்தாலும் பொறுத்துக் கொள்ளும் ஈன்ற தாயானவள், முகத்தேயும் - முன்னேயும், களி – கள்ளுண்டு களித்தல், இன்னாது – துன்பம் செய்வதாகும், (அப்படியிருக்க) மற்று – மற்ற, சான்றோர் - பெருந்தகைமை கொண்ட சான்றோர், முகத்து – முன்பாகக் கள்ளுண்டு களித்தல், என் - எப்படி இருக்கும்? (ஆல் - அசை).

**4. நாண்என்னும் நல்லான் புறங்கொடுக்கும் கள்என்னும்**
**பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.**

கள் குடித்தல் என்று சொல்லப்படுகின்ற மிக்க குற்றத்தினை யுடையாரை, நாண் என்று சொல்லப்படுகின்ற மிக்க உயர்ந்தவள் விட்டு நீங்குவாள்.

கள் - கள் குடித்தல், என்னும் - என்கின்ற, பேணா – யாவரும் இகழ்கின்ற, பெரும் - மிகப்பெரிய, குற்றத்தார்க்கு – குற்றத்தினையுடையவர்க்கு. நாண் - நாணம், என்னும் - எனப்படும், நல்லாள் - நல்ல பெண்ணானவள், புறம் கொடுக்கும் - அவனை விட்டு நீங்குவாள்.

**5. கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து**
**மெய்யறி யாமை கொளல்.**

பொருள் கொடுத்து ஒருவன் கள்ளினால் தனக்கு மெய்ம் மறப்பினைத் தேடித் கொள்ளுதல், செய்வது இன்னது என்ற அறியாமையினைக் காரணமாகக் கொண்டதாகும்.

பொருள் - விலைப் பொருளினை, கொடுத்து – கொடுத்து, மெய் - தன்னைத்தானே, அறியாமை – மறந்து விடுதலை, கொளல் - கொள்ளுதல், கையறியாமை – செய்வது இன்னதென்ற அறியாமையினை, உடைத்து – உடையதால் வந்த செயலாகும்.

**6. துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்உண் பவர்.**

உறங்கினவர்கள் அந்த நேரத்தில் செத்தாரின் வேறாகக் கருதப்பட மாட்டார்கள். அது போலக் கள்ளுண்போர் நஞ்சு உண்பவரினின்றும் வேறாகக் கருதப்பட மாட்டார்கள்.

துஞ்சினார் - தூங்கியவர்கள், செத்தாரின் - இறந்து போனவரின், (அப்போதைக்கு) வேறு – வேறு, அல்லார் - என்பவராக மாட்டார், கள் -

கள்ளினை உண்பவர் - குடிப்பவர், எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், நஞ்சு – நஞ்சினை, உண்பார் - உண்பவரினும் வேறாகக் கருதப்படுவர்.

**7. உள்ஒற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்**
**கள்ஒற்றி கண்சாய் பவர்.**

கள்ளினை மறைந்துண்டு அக்களிப்பால் தம் அறிவு தளர்பவர் உள்ளூரில் வாழ்பவரால் உள் நிகழ்வது உய்த்துணரப்பட்டு எப்போதும் நகுதல் செய்யப்படுவார்.

கள் - கள்ளினை, ஒற்றி - மறைந்துக் குடித்து, கண் - அக்களிப்பினால் அறிவு, சாய்பவர் - தளர்பவர், உள்ளூர் - உள்ளூரில் வாழ்பவரால், உள்ளொற்றி – உள்ளே நடப்பது தெரிந்து கொள்ளப்பட்டு, எஞ்ஞான்றும் - எப்போதும், நகப்படுவர் - நகுதல் செய்யப்படுவர்.

**8. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து**
**ஒளித்தும் ஆங்கே மிகும்.**

கள்ளினை மறைந்துண்டு, உண்ணாத போது ‘யான் கள்ளுண்டறியேன் என்று கூறுதலை நீக்குதல் வேண்டும். கள்ளுண்டபோது நெஞ்சத்தில் ஒளித்த குற்றமும் மிகுந்து வெளிப்பரவுவதாகும்.

களித்து – கள்ளினை மறைத்துண்டு அறியேன் - உண்ணாத போது கள்ளுண்டறியேன் என்பது – என்று கூறுவதை கைவிடுக – நீக்குக நெஞ்சத்து – மனத்தில் ஒளித்தது – மறைத்து வைத்த குற்றமும் ஆங்கே – முன்னைய அளவில் மிகும் - பன்மட ங்கு மிகுந்து வெளிப்படும்.

**9. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்**
**குளித்தானைத் தீத்துரீஇ யற்று.**

கள்ளுண்டு களிப்பவனிடம் ‘இது ஆகாது’ என்று காரணங் காட்ட முற்படுதல், நீரினுள் மூழ்கி ஒருவனை விளக்கினால் தேடுவது ஒக்கும்.

களித்தானை – கள்ளுண்டு களிப்பவனுக்கு, காரணம் - ஆகாதென்று காரணம், காட்டுதல் - காட்ட முற்படுதல், கீழ்நீர் - நீரினுள்ளே, குளித்தானை - மூழ்கிய ஒருவனை, (மற்றவன்) தீத்துரீஇயற்று – விளக்கினால் தேடுவதை ஒக்கும்.

**10. கள் உண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்**

**உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.**

கள்ளுண்பான் ஒருவன் தான் உண்ணாதிருந்தபோது கள்ளுண்டு களிப்பவன் நிலைமையினைக் கண்டு, தான் உண்டபோதும், ‘இவ்வாறு இருந்திருப்பான்’ என்று கருத மாட்டான் போலும்!

கள் - கள்ளினை, உண்ணா – உண்ணாதிருந்த, போழ்தில் - சமயத்தில், களித்தானை – கள்ளுண்டவனை, காணுங்கால் - காணும்போது, உண்டதன் சோர்வு – தான் உண்ட போதிருக்கும் மயக்கத்தினை, உள்ளான்கொல் - நினைத்துப் பார்க்கமாட்டான் போலும்!

## 56.சூது

### (சூதாட்டத்தின் தீமைகளும் விளைவுகளும்)

**1. வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்**
**தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.**

தான் வெல்லும் ஆற்றல் உடையவனாக இருந்தாலும் சூதாடலை விரும்பாதிருத்தல் வேண்டும். வென்று பொருளீட்டினாலும் அது இரையில் மறைந்திருக்கும் தூண்டி விரும்பினை இரையென எண்ணி மீன் விழுங்கியதாகும்.

வென்றிடினும் - வெற்றியடைந்தாலும், சூதினை - சூதாடலை, வேண்டற்க – விரும்பா தொழிக, வென்றதூஉம் - வென்று அடைந்த பொருளும், தூண்டில் - (இரையினால் மறைந்து) தூண்டிலிலிருக்கும், பொன் - இரும்பினை, மீன் - மீன், விழுங்கியற்று - இரையெனக் கருதி விழுங்கியது போன்றதாகும்.

**2. ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கு உண்டாங்கொல்**
**நன்றுஎய்தி வாழ்வதோர் ஆறு.**

ஒன்றனை முன்னர் வென்று பிறகு நூற்றினை இழக்கும் சூதர்க்கும் பொருளால் அறமும் இன்பமும் எய்தி வாழ்வதொரு வழி உண்டாகுமோ?

ஒன்று – ஒன்றனை, எய்தி – முன்னதாக அடைந்து, நூறு – நூற்றினை, இழக்கும் - பிறகு இழந்துவிடும், சூதர்க்கும் - சூதாட்டக்காரர்களுக்கும், நன்று – அறமும் இன்பமும், எய்தி – பெற்று, வாழ்வதோர் - வாழ்வதொரு, ஆறு – நல்வழி, உண்டாங்கொல் - உண்டாகுமோ?

**3. உருள்ஆயம் ஓவாது கூறின் பொருள்ஆயம்**
**போஒய்ப் புறமே படும்.**

உருளும் கவற்றின் (சூதாடும் கருவி) கண்பட்ட ஆயத்தினை ஓயாது சொல்லிச் சூதாடுவானானால் அவன் ஈட்டிய பொருளும் வருவாயும் அவனைவிட்டு நீங்கிப் பகைவரிடத்தே தங்கும்.

உருள் - உருளுகின்ற, ஆயம் - சூதாட்ட ஆயத்தினை, ஓவாது கூறின் - இடைவிடாமல் சொல்லிச் சூதாடுவானானால், பொருள் - அவனுடைய பொருளும், ஆயம் - அவனுடைய பொருள்வரும் நெறியும், போஒய் - அவனைவிட்டுப் போய், புறமேபடும் - பகைவரிடத்தில் தங்கும்.

**4. சிறுமை பலசெய்து சீர்அழிக்கும் சூதின்**
**வறுமை தருவதுஒன்று இல்.**

தனக்குத் துன்பங்கள் பலவற்றையும் கொடுத்துப் புகழையும் கெடுக்கின்ற சூதினைப் போல வறுமையினைக் கொடுக்க வல்லது பிறிதொன்றும் இல்லையாகும்.

சிறுமை – துன்பங்கள், பல – பலவற்றையும், செய்து – உண்டாக்கி, சீர் அழிக்கும் - உள்ள புகழினையும் அழிக்கின்ற, சூதின் - சூதினைப் போல, வறுமை தருவது – வறுமையினைக் கொடுக்க வல்லது. ஒன்றுஇல் - வேறொன்றும் இல்லை.

**5. கவறும் கழகமும் கையும் தருக்கி**
**இவறியார் இல்லாகி யார்.**

இருந்தும் இல்லாதவராயினோர் யாரென்றால், சூதினையும் அது ஆடப்படும் இடத்தினையும் ஆடுதற்கேற்ற தொழிலினையும் மேற்கொண்டு கைவிடாதிருந்த - வர்கள் ஆவார்கள்.

இல்லாகியார் - இருந்தும் இல்லாதவரானவர்கள் (யாரென்றால்), கவறும் - சூதாட்டத்தினையும், கழகமும் - சூதாடும் இடத்தினையும், கையும் - அதற்குரிய கைத் தொழிலினையும், தருக்கி – மேற்கொண்டு, இவறியார் - கைவிடாமல் இருந்தவர்கள் ஆவார்கள்.

**6. அகடுஆரார் அல்லல் உழப்பர்சூது என்னும்**
**முகடியான் மூடப்பட் டார்.**

சூது என்று சொல்லப்படும் முகடியால் விழுங்கப்பட்டவர்கள் வயிறார உண்ணப் பெறார். துன்பத்திலேயே உழன்றுகொண்டிருப்பார்கள்.

சூது – சூதாட்டம், என்னும் - என்று சொல்லப்படுகின்ற, முகடியான் - முகடி(மூதேவி) யாலே, மூடப்பட்டார் - விழுங்கப்பட்டவர், அகடு –வயிறு, ஆரார் உண்டு நிறையப் பெறார், அல்லல் - நீங்காத் துன்பத்தில், உழப்பர் - வருந்திக் கொண்டிருப்பர்.

**7. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்**
**கழகத்துக் காலை புகின்.**

நற்பணி செய்யவேண்டிய காலமானது சூதாடும் இடத்தில் கழியுமானால் நெடுங்காலமாக வந்த செல்வத்தினையும் நற்குணங்களையும் அது அழிக்கும்.

காலை – நற்பணி புரிய வேண்டிய காலத்தினை, கழகத்து - சூதாடுமிடத்தில், புகின் - புகுந்து கழிப்பானானால், (அச்செயல்) பழகிய செல்வமும் - தொன்று தொட்டு வந்த செல்வத்தினையும், பண்பும் கெடுக்கும் - நற்குணத்தினையும் கெடுத்துவிடும்.

**8. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து**
**அல்லல் உழப்பிக்கும் சூது.**

சூதானது, பொருளையும் கெடுத்துப் பொய்யினை மேற்கொள்ளச் செய்து மனத்தில் எழுகின்ற அருளையும் கெடுத்துத் துன்பத்திலேயே உழல வைக்கும்.

சூது - சூதாடுதல், பொருள் - ஒருவனுடைய பொருளையும், கெடுத்து – அழித்து, பொய் - பொய்யினை, மேற் கொளீஇ - மேற்கொள்ளச் செய்து, அருள் - அருளான எண்ணத்தினையும், கெடுத்து – கெடுத்து, அல்லல் - துன்பத்தில், உழப்பிக்கும் - உழலவைத்துவிடும்.

**9. உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்**
**அடையாவாம் ஆயம் கொளின்.**

சூதாட்டத்தினையே ஒருவன் விரும்பி மேற்கொள்ளுவானாகில் அவனிடத்தில் புகழும் கல்வியும் செல்வமும் ஊணும் உடையும் ஆகிய இவ்வைந்தும் சேராவாம்.

ஆயம் கொளின் - சூதாட்டத்தினை ஒருவன் விரும்பி மேற்கொள்ளுவானானால், (அவனிடம்) ஒளி – புகழும், கல்வி – கல்வியும், செல்வம் - செல்வமும், ஊணும் - உணவும், உடை - உடையும், என்றைந்தும் - என்ற இந்த ஐந்தும், அடையாவாம் - அவனிடம் போய்ச் சேராவாம்.

**10. இழத்தொறுஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்**
**உழத்தொறூஉம் காதற்று உயிர்.**

இழக்குந்தோறும் அச்சூதின் மேல் காதல் செய்யும் சூதனைப் போல உடம்பால் துன்பம் அனுபவிக்குந்தோறும் அதன்மேல் உயிர் காதலை உடைத்தாகும்.

இழத்தொறூஉம் - பொருளினை இழக்கின்ற போதெல்லாம், காதலிக்கும் - அதன் மேல் ஆசை கொள்ளுகின்ற, சூதே போல் - சூதனைப் போல, உயிர் - உயிரானது, துன்பம் - துன்பத்தினை, உழத்தொறூஉம் - உடம்பினால் அனுபவிக்கும் போதெல்லாம், காதற்று – அவ்வுடம்பின்மீது ஆசை கொள்ளுவதாகின்றது.

## 57. மருந்து

### (பிணி தீர்க்கும் மருந்து பற்றியன கூறல்)

**1. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று.**

உணவும் செயல்களும் ஒருவனுடைய அளவுக்கு மிகுமாயினும் குறையுமாயினும் வாதம் முதலாகக் கூறப்பட்ட மூன்று நோயும் துன்பத்தினைக் கொடுக்கும்.

மிகினும் - ஒருவனுடைய அளவிற்கு மிகுந்தாலும், குறையினும் - குறைந்தாலும், நூலோர் - மருத்துவ நூலோரால், வளி – வாதம், முதலா – முதலாக, எண்ணிய – எண்ணிக் கூறப்பட்ட, மூன்று - மூன்றும், நோய் செய்யும் - அவனுக்கு நோயினை உண்டாக்கும்.

**2. மருந்துஎன வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்.**

ஒருவன், தான் முன்னதாக உண்ட உணவு அற்ற நிலையை (சீரணித்ததை) அறிந்து பின் உண்ணுவானானால் அவனுடைய உடம்புக்கு மருந்து என்று வேறு வேண்டாவாம்.

அருந்தியது – முன்னர் உண்ணப்பட்ட உணவு, அற்றது – செரிந்து விட்டதை, போற்றி – தெளிய அறிந்து கொண்டு, உணின் - பின்பு உண்பானானால், யாக்கைக்கு – அவனுடைய உடம்புக்கு, மருந்து – மருந்து, என – என்ற வேறொன்று, வேண்டாவாம் - வேண்டியதில்லையாம்.

**3. ஆற்றல் அளவறிந்து உண்க அ∴துஉடம்பு**
**பெற்றான் நெடிதுஉய்க்கும் ஆறு.**

முன்பு உண்டது அற்றதையறிந்து பின்பு உண்பதனைச் சீரணிக்கும் அளவறிந்து உண்ணுதல் வேண்டும். அப்படிச் செய்தால், அது உடம்பினை நெடுங்காலம் கொண்டு செலுத்தும் வழியாகும்.

ஆற்றல் - முன்பு உண்ட உணவு செரித்த பிறகு, அளவு – செரிக்கும் அளவினை, அறிந்து – அறிந்து தெரிந்து, உண்க – உண்ணுவானாக, உடம்பு பெற்றான் - உடம்பினைப் பெற்றவன், நெடிது – நீண்டகாலம், உய்க்கும் - அவ்வுடம்பினைக் காப்பாற்றி வைக்கும், நெறி- வழி, அ∴து – அதுவேயாகும்.

**4. அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல**
**துய்க்க துவரப் பசித்து.**

முன் உண்டது அற்றதையறிந்து, பிறகு நன்றாகப் பசித்து உண்ணுங்கால், தம்முள் மாறுபாடு இல்லாத உணவுகளைக் குறிக்கொண்டு உண்ணுதல் வேண்டும்.

அற்றது - முன்பு உண்ணப்பட்டது செரித்ததை, அறிந்து – அறிந்து கொண்டு, துவர – மிக நன்றாக, பசித்து – பசித்து, மாறு – தமக்குள் குணமாறுபாடு, அல்ல - இல்லாத (உணவினை), கடைப்பிடித்து – குறியாகக் கொண்டு, துய்க்க – உண்ணுதல் வேண்டும்.

**5. மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்**
**ஊறுபாடு இல்லை உயிர்க்கு.**

மாறுபட்ட தன்மைகள் இல்லாத உணவினை மனம் விரும்பிய அளவு உண்ணாமல் அளவறிந்து உண்பானானால் அவன் உயிர்க்குப் பிணிகளால் துன்பம் விளைதல் உண்டாகாது.

மாறுபாடு - குணமாறுபாடுகள், இல்லாத - இல்லாத, உண்டி - உணவினை, மறுத்து – (மனம் விரும்பிய அளவு உண்ணாமல்) மறுத்து, உண்ணின் - சீரணிக்கும் அளவு உண்டால், உயிர்க்கு – அவனுடைய உயிர்க்கு, ஊறுபாடு - நோய்களினால் துன்பம் உண்டாதல், இல்லை - இல்லையாகும்.

**6. இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**
**கழிபேர் இரையான்கண் நோய்.**

குறைவாக உண்பதை நல்லதென்று அறிந்து உண்பவனிடம் இன்பம் நீங்காமல் நிற்பதைப் போல, மிகப் பெரிய இரையை விழுங்குகிறவனிடம் நோய் நீங்காமல் நிலைத்து நிற்கும்.

இழிவு – குறைவாக உண்ணுவதை நல்லதென்று, அறிந்து –அறிந்து கொண்டு, உண்பான்கண் - உண்பவனிடத்தில், இன்பம் போல் - இருக்கின்ற இன்பத்தினைப் போல, கழி- மிகவும், பேர் - பெரிய, இரையான்கண் - இரையினைத் தின்பவனிடத்தில், நோய் - நோய், நிற்கும் - நீங்காது.

**7. தீயள வன்றித் தெரியான் பெரிதுஉண்ணின்**
**நோய்அள வின்றிப் படும்.**

பசியினளவும் சீரணிக்கும் அளவும் தெரியாதபடி மிகுதியாக உண்ணுவானேயானால் அவனிடத்தில் நோய்கள் எல்லையற்று வளரும்.

தெரியான் - (தனது உடம்பின் தன்மையினையும் உணவின் அளவும் காலமும்) தெரியாதவனாகி, தீயளவின்றி – வயிற்றுப் பசியினளவுக்கு மீறி பெரிது – அதிகமாக, உண்ணின் - உண்ணுவானானால், (அவனிடம்) நோய் - நோய்கள், அளவு – அளவு, இன்றி - இல்லாமல், படும் - உண்டாகும்.

**8. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்.**

மருத்துவன் குறிகளால் நோயினை இன்னதென்று அறிந்து, பின் அது வருதற்குக் காரணத்தினை ஆராய்ந்தறிந்து அதனை நீக்கும் வழியினையறிந்து அதனைச் செய்யும் முறை பிழையாமல் செய்தல் வேண்டும்.

நோய் - பிணியுற்றோன் பிணியினை, நாடி – குறிகளால் அறிந்து, நோய் - நோய் வருவதற்கு, முதல் - அடிப்படைக் காரணத்தினை, நாடி – ஆராய்ந்தறிந்து, அது அந்த நோயினை, தணிக்கும் - தீர்க்கும், வாய் - வழியினை, நாடி – அறிந்து, வாய்ப்ப – அதனைச் செய்யும் வழியினைப் பிழைபடாமல், செயல் - செய்தல் வேண்டும்.

**9. உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்.**

மருத்துவ நூல்களைக் கற்ற மருத்துவன் நோயுற்றோன் அளவினையும், நோயின் அளவினையும், செய்தற்கு ஏற்ற காலத்தினையும் நூல் நெறியால் அறிந்து அவற்றொடு பொருந்தச் செய்தல் வேண்டும்.

கற்றான் - நூல்களைக் கற்ற மருத்துவன், உற்றான் - நோயுற்றான், அளவும் - அளவினையும், பிணி – நோயினுடைய, அளவு – அளவினையும், காலமும் - தன் செயலுக்கு ஏற்ற காலத்தினையும், கருதிச் செயல் - நூல் நெறியால் நோக்கி அவற்றிற்கு ஏற்பச் செய்தல் வேண்டும்.

**10. உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான்என்று**
**அப்பால்நாற் கூற்றே மருந்து.**

பிணிக்கு மருந்தென்பது நோயுற்றவன், அதனைத் தீர்க்கும் மருத்துவன், மருந்து, அதனைப் பிழைபடாமற் செய்வோன் என்று சொல்லப்பட்ட நான்கு பகுதியினையுடையதாகும்.

மருந்து – நோய்க்கு மருந்தாவது, உற்றவன் - நோயுற்றவன், தீர்ப்பான் - நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து – மருந்து, உழைச்செல்வான் - மருந்தினைப் பிழைபடாமல் செய்பவன், என்று – என்பதாகச் சொல்லப்பட்ட, அப்பால் நாற்கூற்றே – அப்பகுதிகளையுடைய நான்கு வகைப்பட்டதாகும்.

## III. ஒழிபு இயல்

### 58. குடிமை

### (உயர்ந்த நற்குடியில் பிறந்தாரது தன்மைகள்)

**1. இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாகச்**
**செப்பமும் நாணும் ஒருங்கு.**

நடுவு நிலைமையாகிய தன்மையும், நாணம் என்பதும் ஒன்று சேர்ந்து, உயர்ந்த குடியில் பிறந்தவர்களிடம் அல்லாமல் மற்றவர்களிடம் இயற்கையாகவே உண்டாகாது.

செப்பமும் - நடுவு நிலைமையாகிய தன்மையும், நாணும் - நாணம் என்பதும், ஒருங்கு – ஒன்று சேர்ந்து, இற்பிறந்தார்கண் - உயர்ந்த குடியில் பிறந்தவர்களிடம், அல்லது – அல்லாமல், இயல்பாக - இயற்கையாகவே, இல்லை – மற்றவர்களிடம் உண்டாகாது.

**2. ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந் தார்.**

ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் ஆகிய இம்மூன்றினிடத்தும் உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் தாமாகவே தவற மாட்டார்கள்.

குடி — உயர்ந்த குடியின்கண், பிறந்தார் - பிறந்த பெரியோர்கள், ஒழுக்கமும் - நல்லொழுக்கமும், வாய்மையும் - மெய்மையும், நாணமும் - நாணமும் (எனப்பட்ட) இம்மூன்றும் - இந்த மூன்றும் தன்மைகளிலும் இழுக்கார் - தவற மாட்டார்கள்.

**3. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்**
**வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.**

எக்காலத்திலும் திரிவில்லாத நற்குடியில் பிறந்தார்க்கு முகமலர்ச்சியும், உள்ளன கொடுத்தலும் இனிய சொல் சொல்லலும், இகழாமையும் ஆகிய இந்நான்கும் உரியவை என்று கூறுவர்.

வாய்மைக் குடிக்கு — எக்காலத்திலும் மாறுபடாத நற்குடியில் பிறந்தவர்க்கு, நகை — முகமலர்ச்சியும், ஈகை - ஈகைக் குணமும், இன் - இனிய, சொல் - சொற்கள் பேசுதலும், இகழாமை - பிறரை இகழாதிருத்தலும், (ஆகிய) நான்கும் - இந்த நான்கு பண்புகளும், வகை என்ப — உரிமையானவைகளாக இருக்கும் என்று கூறுவர்.

**4. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்**
**குன்றுவ செய்தல் இலர்.**

பலவாக அடுக்கிய கோடி அளவினதாகிய பொருளைப் பெற்றாலும் உயர்ந்த குடியின்கண் பிறந்தவர்கள் தம் ஒழுக்கம் குன்றும் தொழில்களைச் செய்யமாட்டார்கள்.

அடுக்கியகோடி - கோடிக் கணக்கில் அடுக்கிய பொருளை, பெறினும் - பெறுவதானாலும், குடி — உயர்ந்த குடியிலே, பிறந்தார் - பிறந்தோர்கள், குன்றுவ — ஒழுக்கம் குன்றும் தொழில்களை, செய்தல் - செய்வதில், இலர் - இருக்க மாட்டார்கள்.

**5. வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி**
**பண்பின் தலைப்பிரிதல் இன்று.**

தொன்று தொட்டு வருகின்ற நற்குடியில் பிறந்தவர்கள் தம்முடைய ஈகைத் தன்மையின் அளவு முன்னையதைவிட சுருங்கியபோதும் தம்முடைய பண்புடைமையினின்றும் நீங்க மாட்டார்கள்.

பழம் - தொன்று தொட்டு வந்த, குடி — நற்குடியில் பிறந்தவர்கள், வழங்குவது — தமது ஈகைக் குணத்தின் (தன்மையின்) அளவு, உள்வீழ்ந்தக்

கண்ணும் - முந்தியதை விடக் குறைந்த போதும், பண்பின் - தமது உயர்ந்த தன்மையிலிருந்து, தலைப்பிரிதல் - நீங்குதல், இன்று - இல்லையாகும்.

**6. சலம்பற்றிச் சால்பில செய்யார்மாசு அற்ற**
**குலம்பற்றி வாழ்தும் என்பார்.**

குற்றமின்றி வருகின்ற தமது குடி மரபினோடு ஒத்து வாழக் கடவோம் என்று வாழ்பவர்கள் வறுமையுற்ற காலத்திலும் வஞ்சனையால் தமக்குப் பொருந்தாத செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

மாசு – குற்றம், அற்ற - இல்லாத, குலம்பற்றி –தமது குடியின் பரம்பரைத் தன்மையில் நின்று, வாழ்தும் - வாழ்ந்து வருவோம், என்பார் - என்பார்கள், சலம் பற்றி – வஞ்சனைத் தன்மை கொண்டு, சால்பு - பெருந்தன்மைக்கு, இல – பொருந்தாத தொழில்களை, செய்யார் - செய்யமாட்டார்கள்.

**7. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்**
**மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.**

உயர்ந்த குடியில் பிறந்தவரிடம் காணப்படும் குற்றம் சிறிதாக இருந்தாலும் வானத்தில் மதியினிடம் தோன்றும் மறுப்போல ஓங்கித் தோன்றும்.

குடி - உயர்ந்த (மேலானவர்கள் பிறந்திருக்கும்) குடியில், பிறந்தார்கண் - பிறந்தவர்களிடத்தில், குற்றம் - காண்ப்படுகின்ற குற்றமானது, (சிறிதாக இருந்தாலும்) விசும்பின் - வானத்தில் தோன்றும், மதிக்கண் - சந்திரனிடத்தில் காணப்படும், மறுப்போல் - களங்கத்தினைப் போல, உயர்ந்து விளங்கும் - ஓங்கித் தோன்றுவதாகிவிடும்.

**8. நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்**
**குலத்தின்கண் ஐயப் படும்.**

நற்குடியில் பிறந்தவனாக வருபவனிடத்தில் அன்பில்லாமை காணப்படுமானால் அவனை அக் குலப் பிறப்பின்கண்ணே இவ்வுலகம் ஐயப்படும் என்பதாம்.

நலத்தின்கண் - நற்குடிப் பிறந்தவனாக வருபவனிடத்தில், நார் - அன்பு, இன்மை - இல்லாமை, தோன்றின் - காணப்படுமாகில், அவனை – அப்படிப்பட்டவனை, குலத்தின்கண் - அந்தக் குலப்பிறப்பின்கண்ணே, ஐயப்படும் - உலகம் சந்தேகப்படும்.

**9. நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்**

**குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.**

நிலத்தின் தன்மையினை அதனிடத்து முளைத்த முளைகாட்டும். அதுபோல் நற்குடியின் இயல்பினை அக்குலத்தில் பிறந்தார் வாய்ச் செற்கள் காட்டும்.

நிலத்தில் கிடந்தமை – நிலத்தினுடைய தன்மையினை, கால் காட்டும் - அங்கே முளைத்த முளையானது காண்பித்துவிடும், (அது போல) குலத்தில் - நற்குலத்தின் தன்மையினை, பிறந்தார் - அக்குலத்தில் பிறந்தாருடைய, வாய்ச்சொல் - வாயில் வரும் சொற்கள், காட்டும் - காட்டுவதாகும்.

**10. நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்**

**வேண்டுக யார்க்கும் பணிவு.**

ஒருவன் தனக்கு நன்மையினை விரும்புவானாயின் அவன் நாணமுடைமையினை விரும்புதல் வேண்டும். நற்குலமுடைமையினை விரும்புவானாயின் பணியப்படுவார் எல்லோரிடமும் பணிதல் வேண்டும்.

நலம் - ஒருவன் நன்மையுடைமையினை, வேண்டின் - விரும்புவானாகில், நாணுடைமை – நாணம் உடையவனாக இருத்தல், வேண்டும் - வேண்டும், குலம் - நற்குலமுடைமையினை, வேண்டின் - விரும்புவானாகில், யார்க்கும் - வணங்குதற்குரிய யாவரிடத்திலும், பணிவு வேண்டுக – வணங்கி நடத்தலை விரும்பவேண்டும்.

## 59.மானம்

## (எக்காலத்திலும் தனது நிலையிலிருந்து தாழாமை)

**1. இன்றி அமையாச் சிறப்பின் ஆயினும்**

**குன்ற வருப விடல்.**

செய்யாதபோது உயிர் வாழ முடியாத நிலை ஏற்படுவதாக இருந்தாலும் தம் குடிப்பிறப்புத் தாழ வரும் செயல்களைச் செய்யாதிருத்தல் வேண்டும்.

இன்றி – செய்யாதபோது, அமையா – உயிர் வாழ முடியாத, சிறப்பின் - சிறப்பினையுடையதே, ஆயினும் - ஆனாலும், குன்ற வருப – தனது குடிப்பிறப்புத் தாழ வருவதான செயல்களை, விடல் - விட்டுவிடுதல் வேண்டும்.

**2. சீரினும் சீர்அல்ல செய்யாரே சீரொடு**

**பேராண்மை வேண்டு பவர்.**

புகழுடனே மானத்தினை நிலை நாட்டுதலை விரும்புகிறவர்கள் புகழினை நாடும்போதும் தம் குடிமைக்கு இழிவான செயல்களைச் செய்யமாட்டார்கள்.

சீரொடு – புகழ் என்பதுடனே, பேராண்மை – தமது மானத்தினையும், வேண்டுபவர் - காப்பாற்ற விரும்புகின்றவர்கள், சீரினும் - புகழ் தேடும் காலத்திலும், சீர் - தமது குடியின் பெருமைக்கு, அல்ல – தகாத இழிதொழில்களை, செய்யார் - செய்யமாட்டார்கள்.

**3. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய**
**சுருக்கத்து வேண்டும் உயர்வு.**

நற்குடியில் பிறந்தார்க்கு நிறைந்த செல்வம் உண்டானபோது யாவரிடத்தும் பணிவு வேண்டும். செல்வம் குறைந்து வறுமையுண்டானபோது உயர்ச்சி வேண்டுவதாகும்.

பெருக்கத்து – நற்குடிப் பிறந்தார்க்கு நிறைந்த செல்வம் உண்டானபோது, பணிதல் வேண்டும் - யாவரிடத்தும் பணிவு வேண்டும், சிறிய – குறைந்த, சுருக்கத்து – செல்வம் சுருங்கி வறுமையுண்டானபோது, உயர்வு வேண்டும் - உயர்ச்சியான தன்மை வேண்டுவதாகும்.

**4. தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்**
**நிலையின் இழிந்தக் கடை.**

நற்குடியில் பிறந்த மக்கள் தம்முடைய உயர்ந்த நிலையைவிட்டுத் தாழ்ந்தபோது தலையை விட்டு நீங்கி வீழ்ந்த மயிரினை ஒப்பர்.

மாந்தர் - நற்குடியில் பிறந்த மாந்தர், நிலையின் - உயர்வான தமது நிலையிலிருந்து, இழிந்தக்கடை – தாழ்ந்துவிட்டபோது, தலையின் - தலையிலிருந்து, இழிந்த – வீழ்ந்த, மயிர் - மயிரினை, அனையர் - ஒப்பவராவர்.

**5. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ**
**குன்றி அனைய செயின்.**

குடிப்பிறப்பால் குன்றினைப் போல உயர்ந்தோரும் தாழ்தற்குக் காரணமான செயல்களை ஒரு குன்றிமணி அளவு செய்வாராயின் தாழ்ந்துவிடுவர்.

குன்றின் - குன்றினை, அனையாரும் - போன்று உயர்ந்தோரும், குன்றி – ஒரு குன்றிமணி, அனைய – அளவினதாக, குன்றுவ – தாழ்தற்குக் காரணமான செயல்களை, செயின் - செய்தாலும், குன்றுவர் - தாழ்ந்துவிடுவார்கள்.

**6. புகழ்இன்றால் புத்தேள்நாட்டு உய்யாதால் என்மற்று**
**இகழ்வார்பின் சென்று நிலை.**

மானத்தை விட்டுத் தன்னை அவமதிப்பார் பின்னே ஒருவன் சென்று நிற்கின்ற நிலை இவ்வுலகில் புகழினையும் கொடுக்காது. புத்தேள் உலகத்தும் செலுத்தாது.இனி, அவன் அப்படி நடப்பது ஏன்?

இகழ்வார் - தன்னை அவமதிப்பார், பின் - பின்னே, சென்றுநிலை – (மானத்தை விட்டு) சென்று நிற்கின்றநிலை, புகழ் - இவ்வுலகிலும் புகழினை, இன்றால் - தராது, புத்தேள் நாட்டு – புத்தேளிர் நாட்டிலும், உய்யாது – அவனைச் செலுத்தாது,(அப்படியிருக்க) மற்றுஎன் - அவன் அவ்வாறு நடந்து கொள்வது ஏன்?

**7. ஒட்டார்பின் சென்றுஒருவன் வாழ்தலின் அந்நிலையே**
**கெட்டான் எனப்படுதல் நன்று.**

தன்னை இகழ்வார் பின்னே சென்று ஒருவன் வாழ்வதைவிட அப்படிச் செய்யாமல் இறந்தான் என்று சொல்லப்படுதல் அவனுக்கு நன்று.

ஒட்டார் - தன்னை இகழ்பவர், பின் - பின்னே, சென்று – போய், ஒருவன் - ஒருவன், வாழ்தலின் - உயிர் வாழ்வதைவிட , அந்நிலையே – தனது நிலையில் நின்றே, கெட்டான் - இறந்தான், எனப்படுதல் நன்று – என்று சொல்லப்படுதல் நல்லதாகும்.

**8. மருந்தோமற்று ஊன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை**
**பீடுஅழிய வந்த இடத்து.**

உயர் குடிப்பிறப்புத் தன்மையாகிய மானம் அழிய வந்தபோது இறவாமல் இவ்வுடம்பினைக் காக்கும் வாழ்க்கை பின்னும் இறவாமைக்கு மருந்தாகுமோ?

பெருந்தகைமை – உயர் குடிப் பிறப்பின் தன்மையான, பீடு – பெருமையாகிய மானம், அழிய – அழிந்து போக, வந்தஇடத்து – வந்த காலத்தில் (இறவாமல்), ஊன் - உடம்பினை, ஓம்பும் - காப்பாற்றும், வாழ்க்கை – வாழ்க்கையானது, மற்று மருந்தோ – பின்னும் இறவாதிருப்பதற்கு மருந்தாகுமோ?

**9. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்**
**உயிர்நீப்பர் மானம் வரின்.**

தன்னுடைய மயிர்த்திரளில் ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாத கவரிமாவைப் போன்றவர்கள் தங்கள் (உயிர் நீங்குவதற்கான) மானம் கெடவரின் தாங்காது இறப்பர்.

மயிர் - தனது மயிர்த்திரளில் ஒரு மயிர், நீப்பின் - நீங்கினாலும், வாழா - உயிர் வாழாத, கவரிமா – கவரிமாவை அன்னார் போன்றவர்கள், மானம் வரின் - மானம் கெடவரின், உயிர் நீப்பர் - தாங்காது இறப்பர்.

**10. இளிவரின் வாழாத மானம் உடையார்**
**ஒளிதொழுது ஏத்தும் உலகு.**

தமது மானத்திற்கு இழிவு வந்துற்றபோது உயிர் வாழாமல் அதனை நீத்த, மானமுடையாரது புகழ் வடிவினை எப்போதும் உலகத்தார் தொழுது துதிப்பர்.

இளிவரின் - ஓர் இழிவு வந்தபோது, வாழாத – உயிர் வாழாமல் (உயிர் நீத்த) மானம் - மானத்தினை, உடையார் - உடையவர்களது, ஒளி – புகழினை, உலகு – உலகத்தார், தொழுது – வணங்கி, ஏத்தும் - துதிப்பர்.

## 60.பெருமை

### (மிகச்சிறந்த நற்குணங்களால் பெரியாராயினோரது தன்மைகள்)

**1. ஒளிஒருவற்கு உள்ள வெறுக்கை இளியொருவற்கு**
**அ.்.துஇறந்து வாழ்தும் எனல்.**

ஒருவனுக்குப் புகழாவது பிறரால் செயற்கரிய செய்வோம் என்று கருதும் ஊக்க மிகுதியேயாகும். ஒருவனுக்கு இழிவாவது அச்செயலை யொழித்து வாழக்கடவோம் என்று கருதுதலாகும்.

ஒருவற்கு – ஒருவனுக்கு, ஒளி – புகழ் என்பது, உள்ள – செயற்கரிய செய்வோம் என்று கருதும், வெறுக்கை – ஊக்க மிகுதியேயாகும், ஒருவற்கு – ஒருவனுக்கு, இளி – குற்றமாவது, (என்ன வென்றால்) அ.்.து – அச்செயலை, இறந்து – நீக்கி, வாழ்தும் - வாழ்ந்திருப்போம், எனல் - என்று நினைப்பதாகும்.

**2. பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**

எல்லா மக்களுயிர்க்கும் பொதுவாகிய பிறப்பின் தன்மை ஒத்ததேயென்றாலும், பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒவ்வா. ஏனெனில், அவை அவரவர் செய்யும் தொழில்களது வேறுபட்டால் என்பதாம்.

எல்லா – எல்லா, உயிர்க்கும் - மக்கள் உயிர்க்கும், பிறப்புஒக்கும் - பொதுவாக இருக்கும் பிறப்பின் தன்மை ஒரு தன்மையாகத்தான் இருக்கும், (ஆனால்) செய் - அவரவர் செய்கின்ற, தொழில் - நல்லன தீயனவாகிய தொழில்களது, வேற்றுமையான் - வேறுபாட்டால், சிறப்பு – பெருமை சிறுமை என்று கூறப்படும் சிறப்புத் தன்மைகள், ஒவ்வா – ஒத்திருக்காவாம்.

**3. மேல்இருந்தும் மேலல்லார் மேல்அல்லர் கீழ்இருந்தும்**
**கீழ்அல்லார் கீழல் லவர்.**

செயற்கரிய செய்யாமல் சிறியராயினோர் உயர்ந்த நிலைகளில் இருந்தாராயினும் பெரியராகார். அச்செயல்களைச் செய்து பெரியராயினோர் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் சிறியராகார்.

மேல் - மேலான செயல்களை, அல்லர் - செய்யாமல் சிறியராயினார், மேல் - உயர்ந்த நிலையில், இருந்தும் - இருந்தாலும், மேல் - மேலான பெரியோர், அல்லர் - ஆகமாட்டார்கள், கீழ் அல்லவர் - அரிய செயல் புரிந்து பெரியராயினோர், கீழ் - தாழ்ந்த நிலையில், இருந்தும் - இருந்தாலும், கீழ் அல்லார் - சிறியராகமாட்டார்கள்.

**4. ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டுஒழுகின் உண்டு.**

மாறுபடாத மனத்தினையுடைய மகளிர் நிறைகுணத்தில் வழுவாமல் தம்மைக் காத்துக்கொண்டு ஒழுகுதல் போல, பெருமைக் குணமும் ஒருவன் நிறைகுணத்தில் வழுவாமல் தன்னைத்தான் காத்துக் கொண்டு நடப்பானாகில், உண்டாவதாகும்.

ஒருமை – உறுதிப்பாடான ஒரு மனங் கொண்ட, மகளிரேபோல – கற்புள்ள பெண்களைப் போல, பெருமையும் - பெருஞ் சிறப்பும், தன்னைத்தான் - நிறைகுணத்தில் வழுவாமல் தன்னைத் தானே, கொண்டு – நிறை குணத்திலிருந்து காத்துக் கொண்டு, ஒழுகின் - நடப்பானாகில், உண்டு – உண்டாகும்.

**5. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்.**

பெருமையுடையார் தாம் வறுமையிலிருந்தாலும் பிறரால் செய்தற்கு அருமையான செயல்களை விடாமல் அவைகளைச் செய்யும் நெறியில் முடிவு பெறச் செய்வதில் வல்லவராவர்.

பெருமை – பெருமைக்குணம், உடையவர் - உடைய பெரியோர்கள், அருமையுடைய – செயற்கரியவையான, செயல் - செயல்களை, ஆற்றின் - செய்து முடிக்க வேண்டிய நல்ல நெறியில், ஆற்றுவார் - செய்து முடிப்பதில் வல்லவராவார்.

**6. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்**
**பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.**

ஆற்றல் மிகுந்த பெரியோரை வழிபட்டு அவர் இயல்பினைக் கைக்கொள்ளுவோம் என்னும் கருத்து, மற்றைச் சிறியோர் மனத்தில் உண்டாகாது.

பெரியாரை – பெரியாரை, பேணி – போற்றி அவர் வழி நின்று, கொள்வேம் - அவர் இயல்பினைக் கொள்ளுவோம், என்னும் - என்கின்ற, நோக்கு – சிந்தனை, சிறியார் - சிறியவர்களுடைய, உணர்ச்சியுள் - மனத்தில், இல்லை - இருக்காது.

**7. இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்**
**சீரல் லவர்கண் படின்.**

சிறப்பானவை, தகாத சிறியவர்களிடத்தில் இருந்துவிடுமானால் அவை செருக்கு மிகுந்து செய்யும் தொழில்களையே செய்யும் என்பதாம்.

சிறப்புந்தான் -- சிறப்பானவை என்று கருதப்படுபதையும், சீர் - பெருமைக்கு, அல்லவர் கண் - தகுதியற்ற சிறியவர்களிடத்தில், படின் - இருந்து விடுமானால், இறப்பே புரிந்த – அமைதியின்றிச் செருக்கு மிகுந்து செய்யும், தொழிற்றாம் - தொழில்களையே செய்யுமாம்.

**8. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து.**

பெருமையுடையவர்கள் சிறப்பு உண்டானபோதும் பணிவுடன் அமைந்து ஒழுகுவார்கள். மற்றைச் சிறுமையுடையார் அது இல்லாதபோதும் தம்மை மெச்சிக்கொண்டு சிறப்பித்துக் கொள்வர்.

பெருமை – பெருமையுடையவர்கள், என்றும் - சிறப்புண்டானபோதும், பணியும் - பணிவாக நடந்து கொள்ளுவார்கள், சிறுமை – சிறுமையுடையவர்கள், தன்னை – தம்மை, வியந்து – தாமே புகழ்ந்து கொண்டு, அணியுமாம் - சிறப்பித்துக் கொள்ளுவார்கள்.

**9. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை**
**பெருமிதம் ஊர்ந்து விடல்.**

பெருமைக்குணம் என்பதாவது காரணம் உண்டானபோதும் தருக்கின்றி இருத்தலாகும். சிறுமைக் குணமாவது காரணமின்றியே தன்னைச் செருக்கின்கண் நிறுத்திக் கொள்ளுவதாகும்.

பெருமை – பெருமைக் குணம் என்பதாவது, பெருமிதம் - செருக்கு, இன்மை - இல்லாதிருத்தலாகும், சிறுமை – சிறுமைக்குணம் என்பது, பெருமிதம் - காரணம் இல்லாதபோதும் செருக்குடன், ஊர்ந்து விடல் - அச்செருக்கினை ஏற்றுக்கொண்டு நடத்தலாகும்.

**10. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்**
**குற்றமே கூறி விடும்.**

பெருமையுடையவர்கள் பிறருடைய சிறப்பினையே கூறி அவமானத்தை மறைந்து விடுவார்கள். மற்றைச்சிறுமையுடையார் பிறருடைய நற்குணத்தை மறைத்துக் குற்றத்தினையே கூறிக்கொண்டிருப்பார்.

பெருமை – பெருமையுடைய பெரியோர்கள், அற்றம் - பிறருடைய குறைபாடான குற்றத்தினை, மறைக்கும் - மறைத்துப் பேசுவர், சிறுமை – சிறுமைக் குணம் படைத்தோர், குற்றமே – பிறர் நற்குணத்தை மறைத்துக் குற்றத்தினையே, கூறிவிடும் - சொல்லிக் கொண்டிருப்பர்.

## 61.சான்றாண்மை

## (நற்குணங்கள் பலவும் நிறைந்தவர்கள்)

**1. கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.**

தமக்குச் சிறந்தது என்று அறிந்து சான்றாண்மையினை மேற்கொண்டு நடப்பவர்களுக்கு நல்ல குணங்கள் எல்லாம் இயல்பாய் இருக்கும் என்று நூலோர் சொல்லுவர்.

கடன் - தமக்குக் கடமையாக இது நல்லது என்று, அறிந்து – நன்கு அறிந்து, சான்றாண்மை – சால்பு என்ற பல நற்குணங்களும் நிறைந்த பண்பினை, மேற்கொள்பவர்க்கு – மேற்கொண்டு ஒழுகுபவர்களுக்கு, நல்லவை – நற்பண்புகள், எல்லாம் - அனைத்தும், கடன் என்ப - இயற்கையாகவே இருக்கும் என்று நூலோர் கூறுவர்.

**2. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**
**எந்நலத்து உள்ளதுஉம் அன்று.**

சான்றோர்க்கு அழகாவது குணநலன்களாலாகிய அழகேயாகும். அது நீங்கி ஏனைய உறுப்பு முதலியனவற்றால் உண்டான அழகு எந்த அழகிலும் உள்ளதாகாது.

சான்றோர் - சான்றோர்களுக்கு, நலம் - நலமாவது (அழகு), குண – நற்குணங்களினாலான, நலனே – நலமேயாகும், பிற – மற்றைய, நலம் - உறுப்புக்கள் முதலியவற்றாலான நலம், எந்நலத்து – எந்த நலத்திலும், உள்ளதூஉம் அன்று – உள்ளது ஆகாது.

**3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**
**ஐந்துசால்பு ஊன்றிய தூண்.**

அன்பும், நாணமும், ஒப்புரவும், கண்ணோட்டம் வாய்மையும் என்ற ஐந்தும் சால்பு என்கின்ற பாரத்தினைக் தாங்கும் தூண்களாகும்.

அன்பு – அன்புடைமையும், நாண் - பழிபவங்கட்கு நாணுதலும், ஒப்புரவு – யாவரிடத்தும் ஒப்புரவு செய்தலும், கண்ணோட்டம் - பழைய நண்பர்களிடத்தில் கண்ணோட்டம் காட்டலும், வாய்மையோடு – எவ்விடத்தும் மெய்ம்மை கூறலும், (என) ஐந்தும் - ஐந்தும், சால்பு – சான்றாண்மை என்பதனை, ஊன்றிய தூண் - தாங்கிய தூண்களாகும்.

**4. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு.**

தவம் செய்கின்ற நோன்பு என்பது ஓர் உயிரையும் கொல்லாத அறத்தின்கண்ணதாகும். அது போல, சால்பு என்பது பிறர் குற்றத்தினைச் சொல்லாத குணத்தின்கண்ணதாகும்.

நோன்மை – நோன்பு நோற்கும் தவமானது, கொல்லா - ஓர் உயிரையும் கொல்லாத, நலத்தது – அறத்தினது ஆகும், சால்பு – சால்பு என்பது, பிறர் -

மற்றவர்களுடைய, தீமை – குற்றங்களை, சொல்லா – சொல்லாத, நலத்தது – குணத்தினையுடையதாகும்.

**5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

ஒரு செயலினைச் செய்து முடிப்பவரது வலிமை என்னவென்றால் அதற்குத் துணையாவாரைப் பணிந்து கூட்டிக் கொள்ளுதலாகும். சால்புடையார் தம் பகைவரின் பகைமை யொழிக்கும் கருவியும் அதுவேயாகும்.

ஆற்றுவார் - செயலைச் செய்து முடிப்பவரது, ஆற்றல் - வலிமையாவது (யாதெனில்), பணிதல் - அதற்கானவர்களைத் தாழ்ந்து பணிந்து துணையாக்கிக் கொள்ளுதல், சான்றோர் - சான்றோர்கள், மாற்றாரை – பகைவரின், மாற்றும் - பகைமையை யொழிக்கும், படை – கருவியும், அது – அதுவேயாகும்.

**6. சால்பிற்குக் கட்டளை யாதுஎனின் தோல்வி**
**துலைஅல்லார் கண்ணும் கொளல்.**

சால்பாகிய பொன்னினை அளந்தறியும் உரைகல்லாகிய செயல் யாது என்றால், தம்மைவிட உயர்ந்தாரிடம் கொள்ளுவதாகிய தோல்வியை இழிந்தார் மாட்டும் கொள்ளுதலாகும்.

சால்பிற்கு – சால்பாகிய பொன்னினை அளந்தறிவதற்கு, கட்டளை – உரைகல் என்னும் செயல், யாது – எது, எனின் - என்றால், தோல்வி – தோல்வியினை, துலை – தமக்குச் சமமாக, அல்லார் கண்ணும் - இல்லாதவர்களிடத்திலும், கொளல் - ஏற்றுக் கொள்ளுதலாகும்.

**7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.**

தனக்குத் துன்பத்தினைச் செய்தார்க்கும் சால்புடையார் இனியவற்றைச் செய்யாமற்போனால் அச்சால்பு வேறு என்ன பயனை உடைத்து?

இன்னா செய்தார்க்கும் - துன்பம் செய்தவர்களுக்கும், இனியவே - இனியவற்றையே, செய்யாக்கால் - செய்யாமற் போனால், சால்பு – சான்றாண்மை என்பது, என்ன –வேறு என்ன, பயத்ததோ – பயனை உடையதாகும்?

**8. இன்மை ஒருவதற்கு இளிவன்று சால்புஎன்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின்.**

சான்றாண்மை என்று சொல்லப்படும் வலிமையானது உண்டாகப் பெற்றால், ஒருவனுக்கு வறுமையானது இழிவுடையதாகாது.

சால்பு – சான்றாண்மை, என்னும் - என்று சொல்லப்படும், திண்மை – வலிமையானது, உண்டாகப் பெறின் - உண்டாகி இருந்துவிட்டால், ஒருவற்கு – ஒருவனுக்கு, இன்மை – வறுமையானது, இளிவு - இழிவுடையது, அன்று – ஆகாது.

**9. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்.**

சான்றாண்மை என்கின்ற கடலுக்குக் கரை என்று சொல்லப்படுவோர், அக்கடலும் கரையுள் நில்லாமல் காலம் திரிந்தாலும் தாம் திரியமாட்டார்கள்.

சான்றாண்மைக்கு – சான்றாண்மையாகிய கடலுக்கு, ஆழி – கரை, எனப்படுவார் - என்று சொல்லப்படுவோர், ஊழி பெயரினும் - (அந்தக் கடலும் கரை கடந்து) காலம் வேறுபட்டாலும், தாம் - சான்றாண்மைகொண்ட தாம், பெயரார் - வேறுபட மாட்டார்கள்.

**10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்**
**தூங்காது மன்னோ பொறை.**

சான்றோர்கள் தங்களுடைய சான்றாண்மை என்னும் தன்மையில் குன்றிவிடுவாராயின் மற்றைய இப்பூமியும் தன் பாரத்தினைத் தாங்காததாக முடியும்.

சான்றவர் - சான்றாண்மையாளர்கள், சான்றாண்மை – சால்பு என்கின்ற தன்மையில், குன்றின் - குன்றிவிடுவாராயின், இரு - இப்பெரிய, நிலந்தான் - பூமியும், பொறை – தனது பாரத்தினை, தாங்காது – பொறுத்துக் கொள்ள முடியாததாகிவிடும் (மன்னோ – அசைநிலை).

## 62.பண்பு உடைமை

## (பெருமை, சான்றாண்மைகளால் நிறைந்த நற்குணம்)

**1. எண்பதத்தால் எய்தல் எளிதுஎன்ப யார்மாட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

யாரிடத்திலும் எளியதன்மையராய் இருத்தல் பண்புடைமையென்னும் அரியதான நல்வழியை அடைதற்கு எளிது என்று நூலோர் சொல்லுவர்.

யார்மட்டும் - யாவரிடத்திலும், எண்பதத்தால் - எளிமையாகப் பழகுபவராக இருத்தல், பண்புடைமை – பண்பு உடைமை, என்னும் - எனப்படுகின்ற, வழக்கு – நல்ல நெறியினை, எய்தல் - அடைவதற்கு, எளிதுஎன்ப – எளிதானதென்று நூலோர் கூறுவர்.

**2. அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புஉடைமை என்னும் வழக்கு.**

பிறர்மேல் அன்புடையவராதலும், தொன்றுதொட்டு வந்த நற்குடிப்பிறத்தலும் ஆகிய இவ்விரண்டும் ஒருவனுக்குப் பண்புடைமை என்று உலகத்தார் சொல்லும் நன்னெறியாகும்.

அன்புடைமை – அன்புடையவனாக இருத்தலும், ஆன்ற – உலகத்தோடு அமைந்து ஒழுகும், குடி – நற்குடியில், பிறத்தல் - பிறந்திருத்தலும், இவ்விரண்டும் - ஆகிய இந்த இரண்டும், பண்புஉடைமை – பண்பு உடைமை, என்னும் - என்று கூறப்படும், வழக்கு – நன்னெறியாகும்.

**3. உறுப்புஒத்தல் மக்கள்ஒப்பு அனறால் வெறுக்கதக்க**
**பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு.**

உடம்பின் உறுப்புக்களால் ஒத்திருத்தல் ஒருவனுக்கு தன் மக்களோடு ஒப்பாகாமையினால் அது பொருத்துவதன்று. இனிப் பொருந்துவதாகிய ஒப்பாவது பண்புடைமையால் ஒத்திருத்தலாகும்.

உறுப்பு – உடம்பு உறுப்புக்களால், ஒத்தல் - பிறருடன் ஒத்திருத்தல், மக்கள் - மக்களோடு ஒப்பு அன்று - அன்று பொருந்திய ஒப்பாகாது, ஒப்பதாம் - பொருந்துவதாகிய, ஒப்பு – ஒத்திருத்தலாவது, வெறுத்தக்க - நிலை பெறுதலுடைய, பண்பு – பண்புடைமையால், ஒத்தல் - ஒத்திருத்தலேயாகும்.(ஆல்-அசைநிலை).

**4. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு.**

நீதியையும் அறத்தினையும் விரும்பி பிறர்க்கும் தமக்கும் பயன் படுதலை உடையவரது பண்பினை உலகத்தார் கொண்டாடி நிற்பர்.

நயனொடு நீதியுடன், நன்றி – அறத்தினையும், புரிந்த – விரும்புபவர்களாகி பயனுடையார் - தமக்கும் பிறர்க்கும் பயனுடைய மக்களது, பண்பு – பண்பினை, உலகு பாராட்டும் - உலக மக்கள் பாராட்டுவார்கள்.

**5. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புஉள பாடறிவார் மாட்டு.**

தன்னை இகழ்தல் என்பது ஒருவருக்கு விளையாட்டின் கண்ணும் துன்பம் தருவதாகும், ஆதலால் பிறருடைய தன்மையறிந்து நடப்பவரிடத்தில் பகையுள்ள போதும் இனியமையான நற்பண்புகள் இருப்பனவாகும்.

இகழ்ச்சி – தன்னை இகழ்தல் என்பது, நகையுள்ளும் - விளையாட்டின்கண்ணும், இன்னாது – துன்பத்தினைத் தருவதாகும், பாடறிவார் மாட்டு – பிறர் தன்மையறிந்து நடப்பவரிடத்து, பகையுள்ளும் - பகைமையுண்டான காலத்திலும், பண்புஉள - இனிமையான பண்புகள் இருப்பனவாகும்.

**6. பண்புஉடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
**பண்புக்கு மாய்வது மன்.**

பண்புடையவர்கள் இந்த உலகின்கண்னே உள்ளதால் உலகியல் எந்நாளும் இருந்து வருவதாகின்றது. அவ்வாறு இல்லையாயின் அது மண்ணில் புகுந்து மாய்ந்து போவதாகும்.

பண்புஉடையார் - பண்பு நிறைந்த மக்களிடத்திலே, பட்டு - இருந்துவருவதால், உலகம் உண்டு – உலகியல் நடப்பு எப்போதும் நிலை பெற்று நடந்து வருவதாகின்றது, இன்றேல் - அவ்வாறு பண்புடையார் மாட்டு இல்லையானால், அது – அந்த உலகியல், மண் - மண்ணிலே, புக்கு – புகுந்து, மாய்வது – மாய்ந்து போவதாகும்.

**7. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்.**

நன் மக்களுக்குரிய பண்பில்லாதவர்கள் அரத்தினைப் போன்று கூர்மையுடைய புத்தியுடையவரானானும் ஓர் அறிவினையுடைய மரத்திற்கு ஒப்பாவார்கள்.

மக்கள் - நன்மக்களுக்கு இருக்க வேண்டிய, பண்பு – நற்குணம், இல்லாதவர் - இல்லாதவர்கள், அரம் போலும் - பொருள்களைத் தேய்க்கின்ற அரத்தினைப் போன்று, கூர்மையை ரேனும் - கூர்மையான புத்தியுடையவராக இருந்தாலும், மரம் - ஓர் அறிவினையுடைய மரத்தினை, போல்வர் - போன்றவர்களேயாவார்கள்.

**8. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன்று இருள்.**

பண்பில்லாததால் ஒருவரோடும் கலந்து மனமகிழும் தன்மை இல்லாதவர்களுக்கு மிகப் பெரிய இந்த ஞாலம் இருளில்லாத பகல் பொழுதிலும் இருளின்கண் இருந்ததாகும்.

நகல் - வல்லர் - நற்பண்பு இல்லாததால் எவரிடத்தும் கலந்து மகிழ்தல், அல்லார்க்கு – அல்லாதவர்களுக்கு, மா – மிகவும், இரு – பெரிய, ஞாலம் - பூமியானது, பகலும் - பகற் பொழுதிலும், இருள்பாற்பட்டன்று - இருளிலேயே கிடந்ததாகும்.

**9. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யால்திரிந் தற்று.**

பண்பில்லாதவன் பெற்ற பெரிய செல்வம் பயன்படாமல் கெடுதலால் பகலின் நல்ல பால் பாத்திரத்தின் குற்றத்தினால் இன்சுவையின்றிக் கெட்டது போன்றதாகும்.

பண்பு - நற்பண்பு, இலான் - இல்லாத ஒருவன், பெற்ற – பெற்றிருக்கின்ற, பெரும் - பெரிய, செல்வம் - செல்வமானது, நன்பால் - பகலின் நல்ல பால், கலம் - வைக்கப்பட்ட பாத்திரத்தின், தீமையால் - குற்றத்தால், திரிந்தற்று – கெட்டு விட்டது போன்றதாகும்.

## 63.நன்றியில் செல்வம்

## (சேர்ந்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படாமல் போகும் செல்வம்)

**1. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுஉண்ணான்**
**செத்தான் செயக் கிடந்தது இல்.**

தனது வீடு நிறைய பெருஞ்செல்வத்தினைத் தேடிவைத்து உலோப குணத்தினால் உண்ணாதவன். உயிரோடிருப்பினும் செத்தவனே யாவான். அச்செல்வத்தின்கண் அவன் செய்வதோடு உரிமை இல்லாத காரணத்தினால், என்பதாம்.

வாய் - தனது மனை அகலமெல்லாம், சான்ற - நிறையும், பெரும் - பெரிய, பொருள் - செல்வத்தினை, வைத்தான் - சேர்ந்து வைத்தான், அஃது – அச் செல்வத்தினை, உண்ணான் (உலோபத் தன்மையால்)

அனுபவிக்காதவன், செயக் கிடந்தது – அச்செல்வத்தினைத் தான் நுகரும் உரிமை, இல் - இல்லாத காரணத்தால், செத்தான் - செத்தவனேயாவான்.

**2. பொருளான்ஆம் எல்லாம்என்று ஈயாது இவறும்**
**மருளான்ஆம் மாணாப் பிறப்பு.**

பொருளொன்றினால்தான் எல்லாம் உண்டாகும் என்றறிந்து அதனைச் சேர்த்துப் பிறர்க்கு யாதொன்றும் ஈயாது உலோபத்தனம் செய்யும் மயக்கத்தினாலே ஒருவனுக்கு நிறைதலில்லாத இழிபிறப்பு உண்டாகும்.

பொருளான் - செல்வம் ஒன்றினாலேதான், எல்லாம்ஆம் - எல்லாம் உண்டாகும், என்று – என்று அறிந்து (அதனைச் சம்பாதித்து). ஈயாது – பிறர்க்கும் ஈதல் செய்யாமல், இவறும் - உலோபியாக வாழும், மருளான் - மயக்கம் என்பதனாலே, மாணாப் பிறப்பு - இழிவான பிறப்பு, ஆம் - உண்டாவதாகும்.

**3. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்**
**தோற்றம் நிலக்குப் பொறை.**

பொருள் மிகுதியாகச் சேர்ப்பதையே விரும்பி அதன் பயனான புகழினை விரும்பாத மக்களது பிறப்பு, இப்பூமிக்குப் பாரமேயாகும்.

ஈட்டம் - பொருள் மிகுதியும் சேர்ப்போம் என்று, இவறி - பொருள் ஈட்டுவதில் மட்டுமே விரும்பப்பட்டு, (அப்பொருளினால்) இசை – புகழினை, வேண்டா – விரும்பாத, ஆடவர் - மக்களுடைய, தோற்றம் - பிறப்பானது, நிலக்குப் பொறை - இப்பூமிக்குப் பாரமேயாகும்.

**4. எச்சம் என்று என்எண்ணுங் கொல்லோ ஒருவரால்**
**நச்சப் படாஅ தவன்.**

ஈதல் தன்மை இல்லாததால் ஒருவராலும் விரும்பப்படாதவன், தான் இறந்த பிறகு எஞ்சி நிற்பது என்பதாக எதனை எண்ணுவானோ?

ஒருவரால் - ஒருவனாலும், நச்சப்படாதவன் - விரும்பப்படாதவன், எச்சம் - தனக்குப் பிறகு எஞ்சி நிற்பது, என்று – என்பதாக, என் - எதனை, எண்ணுங் கொல்லோ – எண்ணுவானோ?

**5. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய**
**கோடிஉண் டாயினும் இல்.**

பிறர்க்கு ஈகை செய்வதும் தாம் நுகர்வதும் ஆகிய இரண்டு செய்கையும் இல்லாதவர்களுக்குப் பலவாக அடுக்கிய கோடிப் பொருள் உண்டாயினும் பயன் ஒன்றும் இல்லையாம்.

கொடுப்பதூஉம் - பிறர்க்கு ஈகையினைச் செய்வதும், துய்ப்பதூஉம் - தான் நுகர்வதும், இல்லார்க்கு – ஆகிய இரண்டும் இல்லாதார்க்கு, அடுக்கிய – பற்பலவாக அடுக்கிய – பற்பலவாக அடுக்கிச் சேர்த்த, கோடி – கோடியளவான பொருள், உண்டாயினும் - உணடாகி இருந்தாலும், இல் - பயன்ஒன்றும் இல்லையாகும்.

**6. ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்குஒன்று**
**ஈதல் இயல்பிலா தான்.**

தானும் நுகர்ந்து அனுபவியானாகி தகுதியுடையவர்களுக்குக் கொடுப்பதென்னும் ஈகையும் செய்யாதவனானால், அவன் அந்த இரண்டும் செய்வதற்குரிய செல்வத்திற்கு ஒரு நோய் ஆவான்.

தான் - செல்வம் படைத்த தானும், துவ்வான் - நுகராதவனாகி, தக்கார்க்கு – தகுதியான நல்லவர்களுக்கு, ஒன்று – ஒரு பொருளினை, ஈதல் - கொடுக்கும், இயல்பிலாதான் - ஈகைத் தன்மை இல்லாதவன், பெரும் - பெரிய, செல்வம் - செல்வத்திற்கு, ஏதம் - ஒரு நோயாவான்.

**7. அற்றார்க்குஒன்று ஆற்றாதான் செல்வம் மிகுநலம்**
**பெற்றாள் தமியள்மூத் தற்று.**

ஒரு பொருளும் இல்லாதவர்களுக்கு அவர் வேண்டியதொன்றனைக் கொடுக்காதவனுடைய செல்வம் வீணாகக் கழிதல், பெண்களில் மிக்க அழகினைப் பெற்றாள் ஒருத்தி மணமாகாமல் கொழுநன் இன்றித் தனியளாய் மூத்தத் தன்மை அடைந்தது போன்றதாகும்.

அற்றார்க்கு – பொருளேதும் இல்லாதார்க்கு, ஒன்று – அவர் வேண்டிய ஒரு பொருளினை, ஆற்றாதான் - கொடுத்தறியாதவனுடைய, செல்வம் - செல்வம் (பயனின்றி கழிதல்) மிகு – சிறந்த, நலம் - அழகினை, பெற்றாள் - பெற்றிருக்கும் பெண்ணொருத்தி, தமியள் - மணமாகாமல் தனித்திருந்தே, மூத்தற்று – முதமையடைந்தது போன்றதாகும்.

**8. நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்**
**நச்சு மரம்பழுத் தற்று.**

நகைத் தன்மை இல்லாததால் ஒருவராலும் விரும்பப்படாத ஒருவன் செல்வம் பெற்றிருத்தலானது, ஊரின் நடுவில் இருக்கும் நச்சுமரம் பழுத்ததைப் போன்றதாகும்.

நச்சப்படாதவன் - ஈகைக் குணமே இல்லாததால் பிறரால் சிறிதும் விரும்பப்படாதவன், செல்வம் - செல்வம் பெற்றிருத்தல், நடுஊருள் - ஊர் நடுவில் இருக்கும், நச்சு – நஞ்சாகிய, மரம் - நச்சுமரம், பழுத்தற்று போன்றதாகும்.

**9. அன்புஒரீஇத் தற்செற்று அறம்நோக்காது ஈட்டிய**
**ஒண்பொருள் கொள்வார் பிறர்.**

நண்பர்கள் சுற்றத்தார் முதலியவர்களிடம் அன்பில்லாமல் வேண்டியவற்றை நுகராமல் தன்னையும் வருத்திக் கொண்டு வறியார்க்கு ஈதல் முதலிய அறத்தினையும் செய்ய நினையாமல் சேர்த்த சிறந்த பொருளினைப் பிறர் கொண்டுபோய்ப் பயன் அடைவார்கள்.

அன்பு - அன்பு செய்வதனை, ஒரீஇ - ஒழித்து, தற்செற்று – நுகராமல் தன்னையும் வருத்தி, அறம் நோக்காது – அறம் செய்தவனையும் நினைக்காமல், ஈட்டிய – சேகரித்த ஒண் - சிறப்பானதாகிய, பொருள் - பொருளினை, பிறர் - மற்றவர், கொள்வார் - எடுத்துக் கொண்டு போய்ப் பயன் பெறுவர்.

**10. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி**
**வறங்கூர்ந் தனையது உடைத்து.**

புகழினை உடைத்தாகிய செல்வத்தினைப் பெற்றுவரது சிறிதுகால வறுமை, உலகத்தினைக் காப்பாற்றுகிற மேகம் வறுமை மிகுந்தது போல்வதோர் தன்மையினை உடையது.

சீர் - புகழுடையதான், உடைச்செல்வர் - செல்வத்தினையுடையவரது, சிறு – சிறிது காலமே நிற்கின்ற, துனி – வறுமையானது, மாரி – மேகம், வறங்கூர்ந்த அனையது – வறுமை மிகுந்தது போன்றதோர் தன்மையினை, உடைத்து – உடையதாகும்.

## 64.நாண் உடைமை

## (இழி செயல்களைச் செய்ய நாணுதல்)

**1. கருமத்தான் நாணுதல் நாணுத் திருநுதல்**
**நல்லவர் நாணுப் பிற.**

நன்மக்களுடைய நாணம் என்பதாவது இழிந்த செயல்கள் செய்ய நாணுதலாகும். அப்படி இன்றி மனம், மொழி, மெய்கள் ஆகின்ற பிற அடக்கத்தினால் வருகின்ற நாணம் என்றால் அது அழகிய நுதலினையுடைய குலமகளிர் நாண வேண்டிய தன்மைகள் ஆகும்.

நாணு – நன்மக்களின் நாணம் என்பது என்னவென்றால், கருமத்தால் - இழிவான செயல்கள் செய்வதற்கு, நாணுதல் - நாணம் அடைதலாகும், பிற – அவ்வாறல்லாமல், (மனம், மொழி, மெய்களால் வரும் நாணங்கள்) திரு – அழகிய, நுதல் - நுதலினையுடைய, நல்லவர் - நல்ல குலமகளிர், நாணு – நாணங்கள் என்பதாகும்.

**2. ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறல்ல**
**நாண்உடைமை மாந்தர் சிறப்பு.**

உணவும் உடையும் மற்றவைகளும் எல்லா உயிர்களுக்கும் பொதுவேயாகும். நன்மக்களுக்குச் சிறப்பாவது நாணமுடைமையேயாகும்; மற்றவை யல்ல என்பதாம்.

ஊண் - உண்ணும் உணவும், உடையும் - உடையும், எச்சம் - மற்றவைகளும், உயிாக்கெல்லாம் - எல்லா உயிரினங்களுக்கும், வேறு – வேறானதாக, அல்ல – அல்லவாம் (பொதுவாக அமைந்திருப்பனவாகும்). மாந்தர் நன்மைகளுக்கு, சிறப்பு – சிறப்பாக இருக்க வேண்டியது ( என்னவென்றால்), நாணுடைமை – நாணம் உடைமை என்பதேயாகும்.

**3. ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்**
**நன்மை குறித்தது சால்பு.**

எல்லா உயிர்களும் உடம்பினைத் தமக்கு நிலைக்களானாகக் கொண்டு அதை விடாதிருப்பனவாகும். அதுபோல சால்பு என்ற உயர்ந்த தன்மை நாணம் என்பதனை நிலைக்களனாகக் கொண்டு அதனை விடாது.

உயிர் - உயிரினங்கள், எல்லாம் - எல்லாம், ஊனைக் குறித்த – உடம்பினை இருப்பிடமாகக் கொண்டு அதனைவிடாமல் இருக்கின்றன, சால்பு – நிறைகுணம் என்னும் சான்றாண்மை, நாண் - நாணம், என்னும் - என்கின்ற, நன்மை – நற்குணத்தினை, குறித்தது – தனக்கு இருப்பிடமாகக் கொண்டிருப்பதாகும்.

**4. அணியன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அஃது இன்றேல்**

**பிணியன்றோ பீடு நடை.**

சான்றோர்களுக்கு நாணுடைமை என்பது ஆபரணமாகும். அந்த ஆபரணம் இல்லையானால், அவருடைய பெருந்தன்மையான நடை கண்டார்க்குப் பிணியாவதொன்றாம்.

சான்றோர்க்கு – சான்றாண்மை நிறைந்த பெரியோர்களுக்கு, நாண் - நாணம் என்கின்ற குணம், உடைமை – உடைமையாய் இருப்பது, அணி – அணிகலன், அன்றோ – அல்லவோ? அ∴து – அந்த அணிகலன், இன்றேல் - இல்லையென்றால், (அவர்களுடைய) பீடு – பெருமிதமான, நடை – நடத்தல் என்பது, பிணி – கண்டார்க்கு நோய், அன்றோ – அல்லவா?

**5. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு**
**உறைபதி என்னும் உலகு.**

பிறர்க்கு வரும் பழியையும் தமக்கு வரும் பழியையும் ஒரு சமமாக மதித்து நாணுவரை, உலகத்தார் நாணம் என்பதற்கு உறைவிடம் என்று கூறுவர்.

பிறர் - மற்றவர்களுக்கு உண்டாகும், பழியும் - பழியினையும், தம் - தமக்கு வரும், பழியும் - பழியினையும், நாணுவார் - ஒப்ப மதித்து நாணுகின்றவரை, உலகு – உலகத்தார், நாணுக்கு – நாணம் என்பதற்கு, உறைபதி - இருப்பிடம், என்னும் - என்று கூறுவர்.

**6. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்**
**பேணலர் மேலா யவர்.**

உயர்ந்த மக்கள் தமக்குப் பாதுகாப்பாக நாணத்தினைக் கொள்ளுவதல்லாமல் அகன்ற ஞாலத்தினைக் கொள்ள விரும்பமாட்டார்கள்.

மேலாயவர் - பண்பு நிறைந்த பெரியோர், வேலி – தமக்குப் பாதுகாப்பாக, நாண் கொள்ளாது – நாணம் என்பதனைக் கொள்ளுவதன்றி, வியன் - அகன்ற, ஞாலம் - இந்தப் பூமியினை, பேணலர் -(பாதுகாப்பாகச் கொள்ள) விரும்பமாட்டார்கள் (மன், ஓ – அசைநிலை).

**7. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்**
**நாண்துறவார் நாண்ஆள் பவர்.**

நாணத்தினது சிறப்பினை அறிந்து அதன்வழி நிற்பவர்கள் அந்த நாணமும் உயிரும் தம்முள்மாறுபட்டபோது நாணத்தினைக் காக்க உயிரை விடுவார்களே தவிர, உயிரைக் காப்பாற்ற நாணத்தினை விட்டுவிட மாட்டார்கள்.

நாண் - நாணத்தினை, ஆள்பவர் - விடாமல் காப்பவர்கள், நாணால் - நாணத்தினைக் காப்பாற்ற வேண்டி, உயிர் துறப்பர் - உயிரினையும் விடுவார்கள், உயிர்ப் பொருட்டால் - உயிரைக் காக்கக் கருதி, நாண் துறவார் - நாணத்தினை விட்டுவிட மாட்டமார்கள்.

**8. பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்**
**அறம்நாணத் தக்கது உடைத்து.**

பிறர் நாணமடையக் கூடிய பழியை ஒருவன் நாணமின்றிச் செய்வானாயின் அச்செயல் அவனைவிட்டு அறம் நீங்கிவிடுகின்ற குற்றத்தினை உடையதாகும்.

பிறர் - மற்றவர்கள், நாண – நாணமுற, தக்கது – காரணமாக பழியினை, தான் - தான் ஒருவன், நாணான் - செய்ய நாணப்படாதவன், ஆயின் - ஆனால்,(அச்செயல்) அறம் - அறமானது, நாணத்தக்கது – அவனைவிட்டு நீங்கும்படியான குற்றத்தினை, உடைத்து – உடையதாகும்.

**9. குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்**
**நாண்இன்மை நின்றக் கடை.**

ஒருவனுக்கு ஒழுக்கம் கெடுமாயின் அப்படிக் கெடுதல் அவனுடைய குடிப்பிறப்பொன்றினை மட்டுமே கெடுக்கும். அவன் நாணமின்றி இருப்பானானால், அது அவன் நலம் - நண்மைகள் - யாவற்றையும் கெடுக்கும்.

கொள்கை – ஒருவனுடைய ஒழுக்கம் , பிழைப்பின் - கெட்டு விட்டால், (அது) குலம் சுடும் - குலப்பிறப்பினைக் கெடுப்பதாகும், நாண் - நாணம் என்பது, இன்மை - இல்லாமை, நின்றக்கடை – அவனிடம் இருந்துவிட்டால்,(அது) நலன் - நன்மை யாவையினையும், சுடும் - அழித்துவிடுவதாகும்.

**10. நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை**
**நாணால் உயிர்மருட்டி யற்று.**

மனத்தில் நாணமில்லாதவர்கள் உயிருடையார் போன்று வாழ்ந்து வருவது, மரத்தால் செய்யப்பட்ட மரப்பாவை இயந்திரக் கயிற்றினால் உயிருடையது போல இயங்கிக் கொண்டு இருத்தல் போன்றதாகும்.

அகத்து – மனத்தின்கண், நாண்இல்லார் - நாணம் இல்லாதவர்கள், இயக்கம் - உயிருள்ளவர்கள்போல வாழ்கின்ற வாழ்க்கை, மரப்பாவை – மரத்தினால் செய்யப்பட்ட பாவையானது, நாணால் - இயந்திரக் கயிற்றின்

ஆட்டத்தினால், உயிர் மருட்டியற்று – உயிருள்ளதுபோல மயக்கியது போன்றதாகும்.

## 65.குடிசெயல் வகை

## (குடிமக்களை உயரச் செய்யும் திறம்)

**1. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்**
**பெருமையின் பீடுடையது இல்.**

தன் குடி உயர எண்ணிய செயல் செய்தற்குத் தான் தொடங்கிய பணியினைக் கைவிடமாட்டேன் என்று கூறும் முயற்சிப் பெருமையினைப் போல ஒருவனுக்குச் சிறந்த பெருமை பிறிதொன்றும் இல்லை.

கருமம் - குடிமக்கள் உயரும் செயல், செய – புரிவதென்பதனை, கைதூவேன் - கைவிட மாட்டேன், என்னும் - என்கின்ற, பெருமையின் - முயற்சி செய்கின்ற பெருமையினைப் போல, பீடு – மேம்பாடு, உடையது – உடையதென்பது, ஒருவன் - ஒருவனுக்கு, இல் - பிறிதொன்றும் இல்லை.

**2. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்**
**நீள்வினையான் நீளும் குடி.**

முயற்சியும் நிறைந்த அறிவும் என்ற இரண்டினையும் கொண்டு ஓய்வின்றிச் செய்கின்ற செயலால் ஒருவனுடைய குடி உயரும்.

ஆள்வினையும் - முயற்சியும், ஆன்ற – நிறைந்த, அறிவும் - அறிவும், என – என்ற, இரண்டின் - இரண்டினையும் கொண்ட, நீள்வினையால் - ஓய்வின்றிச் செய்கின்ற செயலால், குடி நீளும் - ஒருவனடைய குடி உயரும்.

**3. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்.**

'என் குடியினை உயரச் செய்வேன்' என்று முயன்று செயல்புரியும் ஒருவனுக்குத் தெய்வம் ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு தான் முன் நின்று துணை செய்யும்.

குடிசெய்வல் - குடிமக்களை உயரச் செய்வேன், என்னும் - என்று முயன்று செயல் புரியும், ஒருவற்கு – ஒருவனுக்கு, தெய்வம் - தெய்வமானது, மடிதற்று – ஆடையினை இறுகக்கட்டிக் கொண்டு, தான் முந்துறும் - தான் துணை புரிய முன் வந்து நிற்கும்.

**4. சூழாமல் தானே முடிவுஎய்தும் தம்குடியைத்**

**தாழாது உஞற்று பவர்க்கு.**

தம் குடிமக்கள் உயரும் செயல்களைக் காலம் தாழ்த்தாமல் விரைந்து முயல்கின்றவர்களுக்கு, செயலினை முடிக்க ஆலோசிக்காமலேயே அத்தொழில் தானாகவே முடிவுறும் என்பதாம்.

தம் - தம்முடைய, குடியை – குடிமக்கள் உயரும் செயல்களை, தாழாது - காலம் தாழ்த்தாமல் விரைந்து, உஞற்றுபவவர்க்கு – முயல்கின்றவர்களுக்கு, சூழாமல் - செயலினை முடிக்க சிந்திக்காமலேயே, தானே – அத்தொழில் தானாகவே, முடிவு – முடிவுறுதலை, எய்தும் - அடைதலாகும்.

**5. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைக்**
**சுற்றமாச் சுற்றும் உலகு.**

குற்றம் யாதும் செய்யாமல் தன் குடியை உயரச் செய்து ஒழுகுவானை உலகத்தார் தாமே சென்று சூழ்ந்து கொள்வார்கள்.

குற்றம் - குற்றம் யாதும், இலனாய் - இல்லாதவனாகி, குடி – தனது குடிமக்களை, செய்து - உயரச் செய்து, வாழ்வானை – வாழ்கின்றவனை, சுற்றமாய் - அப்படிப்பட்டவனுக்குச் சுற்றமாக இருக்க வேண்டி, உலகு சுற்றம் - உலகத்தார் தாமே சென்று சூழ்ந்து கொள்வார்கள்.

**6. நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த**
**இல்லாண்மை ஆக்கிக் கொளல்.**

ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று உயர்த்திச் சொல்லப்படுவது எது வென்றால் தான் பிறந்த குடியிலுள்ள மக்களைத் தன்வயப்படுத்தி ஆளும் தன்மையினைத் தனக்கு உள்ளதாக்கிக் கொள்ளுதலாகும்.

ஒருவற்கு – ஒருவனுக்கு, நல் - நல்ல, ஆண்மை ஆண்மைத் தன்மை, என்பது – என்று உயர்த்திச் சொல்லப்படுவது, (எதுவென்றால்) தான் - தான், பிறந்த – பிறந்துள்ள, இல்லாண்மை – குடிமக்களைத் தன் வசப்படுத்தி ஆளும் தன்மையினை, ஆக்கிக் கொளல் - தனக்கு உள்ளதாக ஆக்கிக் கொள்ளுதலாகும்.

**7. அமரகத்து வன்கண்ணார் போலத் தமரகத்தும்**
**ஆற்றுவார் மேற்றே பொறை.**

போர்க் களத்திற்குக் சென்றவர்களில் போரைத்தாங்கும் தன்மை, மிகுந்த வீரம் செறிந்தவர் மேலாகுதல் போலக் குடியில் பிறந்தார் பலராயினும் அதன் பாரதம் தாங்குதல் வல்லவர் மேலதாகும்.

அமரகத்து - போர்க்களத்தில் (போரினைத் தாங்கி நடத்துதல்), வன்கண்ணார்போல - வீரம் மிகுந்தவர் மேல்ஆகுதல் போல, தமரகத்தும் - குடியின்கண்ணும், பொறை – அதனைத் தாங்குதல், (பலருள்ளும்) ஆற்றுவார் - தாங்கி நடத்தவல்லவர், மேற்றே - மேலதேயாகும்.

**8. குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து**
**மானம் கருதக் கெடும்.**

தம் குடிமக்களை உயரச் செய்வார் காலத்தினைக் கருதிக்கொண்டு மானத்தைப் பற்றியும் நினைத்துக்கொண்டு இருப்பாரானால் குடிகெட்டுவிடும். ஆதலால் அவர்களுக்குக் காலக்கட்டுப்பாடும், மனத்தினை நினைத்துக் கொண்டிருப்பதும் இல்லையாகும்.

மடி – சோம்பலினை, செய்து – செய்து கொண்டு, மானம் - மானத்துனையும், கருத – நினைத்துக் கொண்டு, (இருப்பாரானால்) கெடும் - குடிகெட்டு விடும், (ஆதலால்) குடி செய்வார்க்கு – குடிமக்களை உயரச் செய்வார்க்கு, பருவம் இல்லை – காலக் கட்டுப்பாடு இல்லை என்பதாம்.

**9. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்**
**குற்றம் மறைப்பான் உடம்பு.**

தன் குடிமக்களுக்குத் துன்பம் வராமல் குற்றத்தினை மறைக்க முயற்சிப்பவனுடைய உடம்பு துன்பத்திற்கே இடமாக இருக்குமோ? இன்பத்திற்கு ஆதல் இல்லையோ?

குடும்பத்தை - தனது குடிமக்களை, குற்றம் - துன்பம் வராமல், மறைப்பான் - காப்பாற்ற முயற்சிப்பவனது, உடம்பு – உடம்பானது, இடும்பைக்கே – துன்பத்திற்கே, கொள்கலம் கொல்லோ — கொண்டிருக்கும் இடமாகுமே

**10. இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்துஊன்றும்**
**நல்லான் இலாத குடி**

துன்பம் உற்றபோது தக்க காலத்தில் பற்றுக்கோடு கொடுத்துத் தாங்கவல்ல ஆண்மகன் பிறவாத குடியாகிய மரம், துன்பமாகிய கோடரி வெட்டிச் சாய்க்க பற்றின்றி விழுந்து விடும்.

அடுத்து – தாங்குவதைக் கொடுத்து, ஊன்றும் - தாங்குவதற்குவல்ல, நல் - நல்ல, ஆள் - ஆண்மகன், இலாதகுடி – பிறக்காத குடி, இடுக்கண் - துன்பமாகிய ஒன்று, கால் - அடிப்படையான முதலினை (மரம்), கொன்றிட – வெட்டி ச்சாய்க்கின்றபோது, விழும் - வீழ்ந்துவிடும்.

## 66.உழவு

## (உழவுத் தொழிலின் சிறப்பு)

**1. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை.**

பிற தொழில்களைச் செய்து திரிந்தும் முடிவில் ஏருடையார் வழியாயிற்று இந்த உலகம். ஆதலால் எல்லா வருத்தமுற்றாலும் தலைமையான தொழில் உழவேயாகும்.

சுழன்றும் - பிற தொழில்களைச் செய்து திரிந்தும், ஏர் - ஏரின் (உழவர்), பின்னது - வழியில் நிற்பது, உலகம் - உலகமானது, அதனால் - ஆகையினால், உழந்தும் - எல்லாவருத்தும் அடைந்தும், உழவே தலை – உழவே முதன்மையான தொழில் ஆகும்.

**2. உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ∴து ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து.**

உழவுத் தொழிலினை மேற்கொள்ளாமல் பிற தொழில்களை மேற்கொண்டுள்ள எல்லோரையும் தாங்கிக் கொண்டிருப்பதால், உழவர்கள் உலக மக்களாகிய தேருக்கு அச்சாணி எனப்படுவார்கள்.

அ∴து – அந்த உழவுத் தொழிலினை, ஆற்றாது – செய்யாமல், எழுவாரை – பிற தொழில்களை மேற்கொண்டுள்ள, எல்லாம் - எல்லோரையும், பொறுத்து – தாங்கிக் கொண்டிருப்பதால், உழுவார் - உழவர்கள், உலகத்தார்க்கு – உலக மக்களாகிய தேருக்கு ஆணி – அச்சாணி எனப்படுவார்கள்.

**3. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர்.**

உழுதலைச் செய்து தாமும் உண்டு பிறரையும் வாழவைத்து வாழ்பவர்களே தமக்கு உரியராய் வாழ்பவராவார். மற்றவரெல்லாரும் பிறரைத் தொழுது தாம் உண்டு அவருக்குப் பின் செல்லுகின்றவராவார்.

உழுது – உழவுத் தொழிலினைச் செய்து, உண்டு – உண்டு, வாழ்வாரே – வாழ்பவர்களே, வாழ்வார் - தமக்கு உரியவராய் வாழ்பவராவார், மற்றெல்லாம் - மற்றவர்கள் எல்லாரும், தொழுதுஉண்டு – பிறரைத் தொழுது தாம் உண்டு, பின் - அவர்களுக்குப் பின்னே, செல்பவர் - செல்லுபவர்கள் ஆவார்கள்.

**4. பலகுடை நீழலும் தங்குடைக்கீழ் காண்பர்**
**அலகுஉடை நீழ லவர்.**

உழவுத் தொழிலால் நெல்லினை உடையவராகி ஈகைத் தன்மையுடையார் பல மன்னர்களின் குடை நிழலாகிய பூமி முழுவதையும் தமது மன்னர் குடைக்கீழ் காண்பவராவார்.

அலகு – நெற்கதிரினை, உடை – உழவுத் தொழிலால் உடையராகி, நீழலவர் - ஈகைத் தன்மையுடையோர், பலகுடை நீழலும் - பல மன்னர்களது குடை நிழலாகிய பூமி முழுதும், தம் - தமது, குடைக்கீழ் - வேந்தனுடைய குடையின்கீழ், காண்பர் - காண்பார்கள்.

**5. இரவார் இரப்பார்க்கு ஒன்றுஈவர் கரவாது**
**கைசெய்தூண் மாலை யவர்.**

தம் கையால் உழுது உண்ணுதலை இயல்பாக உடையவர்கள் பிறரிடம் போய் யாசிக்க மாட்டார்கள். தம்மிடம் வந்து யாசிப்போர்க்கு வேண்டியதை மறைக்காமல் கொடுப்பார்கள்.

கைசெய்து – தம் கையால் உழுதலைக் செய்து, ஊண் - உண்ணுவதை, மாலையவர் - இயல்பாக உடைய உழவர்கள், இரவார் - பிறரிடம் போய் யாசிக்க மாட்டார்கள், இரப்பார்க்கு – தம்மிடம் வந்து யாசிப்பவர்களுக்கு, ஒன்று – அவர் விரும்பியதொன்றினை, கரவாது ஈவர் - மறைக்காமல் தருவார்கள்.

**6. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டோம் என்பார்க்கு நிலை.**

உழவர்களின் கை உழுதல் தொழிலைச் செய்யாது மடங்குமானால் யாவரும் விரும்பும் உணவையும் (யாம் துறந்தோம்) என்பார்க்கு அவ்வறத்திலேயே நிற்றலும் உளவாகாதாம்.

உழவினார் - உழுதலை உடையார், கை – கையானது, மடங்கின் - உழவினைச் செய்யாமல் மடங்குமானால், விழைவதூஉம் - மக்கள் விரும்பும் உணவையும், விட்டோம் - துறந்து விட்டோம், என்பார்க்கு - என்பார்க்கு, நிலை – தம் நிலையில் நிற்றலும், இல்லை - இல்லாமற் போகும்.

**7. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
**வேண்டாது சாலப் படும்.**

உழுபவன், நிலத்தின் ஒரு பலப்புழுதி காற்பலம் ஆகுமாறு அதனை உழுது காய விடுவானாகில் அந்நிலத்தில் விளையும் பயிர் ஒரு பிடி எருவும் இடவேண்டாமல் தழைத்து விளையும்.

தொடிப்புழுதி – அளவில் ஒரு பலப்புழுதி, கஃசா – காற்பலம் ஆகுமாறு, உணக்கின் - உழுது காய விடுவானானால், பிடித்து – ஒருபிடி அளவாகிய, எரு – எருவும், வேண்டாது – போட வேண்டியதின்றி, சாலப்படும் - பயிர் தழைத்து வளரும்.

**8. ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றுஅதன் காப்பு.**

பயிர்க்கு உழுதலைவிட எருப் போடுதல் நல்லதாகும். களை எடுத்த பிறகு அப்பயிரினைக் காப்பாற்றுதல் நீர்ப்பாய்ச்சுதலைவிட நல்லதாகும்.

ஏரினும் - உழுதலைவிட, எரு – எருவினை, இடுதல் - போடுதல், நன்று – நல்லதாகும். கட்டபின் - களை எடுத்தபின், அதன் - அப்பயிரினை, காப்பு – காப்பாற்றுதல், நீரினும் - நீர்ப்பாய்ச்சுவதைவிட, நன்று – நல்லதாகும்.

**9. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும்.**

நிலத்திற்கு உரியவன் நாள்தோறும் சென்று நிலத்தினைப் பார்த்துத் தக்கவை செய்யாதிருப்பானானால், அந்த நிலம் தனது மனைவியைப்போலத் தன்னுள்ளே வெறுத்து அவனுடன் பிணங்கிவிடும்.

கிழவன் - நிலத்திற்கு உரியவன், செல்லான் இருப்பின் - நாள்தோறும் சென்று நேரில் பார்க்காமலும் தக்கவை செய்யாமலும் சோம்பலாக

இருந்துவிட்டால், நிலம் - அவனுடைய நிலம், இல்லாளின் - மனைவியைப் போல, புலந்து – தன்னுள்ளே சினந்து வெறுத்து, ஊடிவிடும் - அவனுடன் பிணங்கிக் கொள்ளும்.

**10. இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம்என்னும் நல்லாள் நகும்.**

‘ஒன்றுமில்லாத வறியரானோம்’ என்று சொல்லிக்கொண்டு சோம்பலாக இருப்பவர்களைக் கண்டால் நிலமடந்தை என்று சொல்லப்படுகின்ற நல்ல பெண்ணானவள் தனக்குள்ளே சிரிப்பாள்.

இலம் - ஒன்றுமில்லாமல் வறியவார்னோம், என்று – என்று சொல்லிக் கொண்டு, அசைஇ - சோம்பலாக, இருப்பாரைக் - இருப்பவர்களை, காணின் - பார்த்தால், நிலம் - நிலமடந்தை, என்னும் - என்று சொல்லப்படுகின்ற நல்லாள் - நல்ல பெண்ணானவள், நகும் - தனக்குள்ளே சிரிப்பாள்.

## 67.நல்குரவு

## (அனுபவிக்கப்படும் எதுவும் இல்லாமை)

**1. இன்மையின் இன்னாதது யாதுஎனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது.**

ஒருவனுக்கு வறுமையினைப் போல் துன்பம் தருவது யாது என்று வினவினால், வறுமை போலத் துன்பம் தருவது வறுமையேயாகும். பிறிது யாதும் இல்லை எனலாம்.

இன்மையின் - வறுமையினைப் போல, இன்னாதது – துன்பத்தினைத் தருவது, யாது – எது, எனின் - என்று வினவின், இன்மையின் - வறுமையினைப் போல, இன்னாதது – துன்பத்தினைத் தருவது, இன்மையே – வறுமையேயாகும்.

**2. இன்மை எனஒரு பாவி மறுமையும்**
**இம்மையும் இன்றி வரும்.**

ஒருவனுக்கு வறுமையென்று சொல்லப்படுகின்ற பாவி வந்தபோது அவனுக்கு இம்மை - மறுமை இன்பங்கள் இல்லாதவாறு வரும்.

இன்மை – வறுமை, என - எனப்படுகின்ற, ஒருபாவி – ஒருபாவியானவன், மறுமையும் - மறுமை இன்பமும், இம்மையும் - இம்மை இன்பமும், இன்றிவரும் - அவனுக்கு இல்லையாகும்படி வருவான்.

**3. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக**
**நல்குரவு என்னும் நசை.**

வறுமை என்று சொல்லப்படுகின்ற ஆசையானது பழங்குடிப் பெருமையினையும் அதற்கேற்ற சொல்லினையும் ஒரு சேரக் கெடுக்கும்.

நல்குரவு – வறுமை, என்னும் - என்று சொல்லப்படுகின்ற, நசை – ஆசையானது, தொல் - பழங்குடியின், வரவும் - சிறப்பினையும், தோலும் - சொற்களையும், தொகையாக – ஒருங்கே, கொடுக்கும் - அழித்து விடும்.

**4. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த**
**சொற்பிறக்கும் சோர்வு தரும்.**

நற்குடிப் பிறந்தாரிடத்திலேயும் வறுமையானது இழிவான சொற்கள் பிறப்பதற்குக் காரணமான சோர்வினை உண்டாக்கும்.

இற்பிறந்தார் கண்ணேயும் - உயர்ந்த நற்குடியில் பிறந்தோரிடத்திலும், இன்மை – வறுமையானது, இளிவந்த - இழிவான, சொல் - சொற்கள், பிறக்கும் - உண்டாவதற்குக் காரணமான, சோர்வுதரும் - தளர்ச்சியினை உண்டாக்கிவிடும்.

**5. நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்**
**துன்பங்கள் சென்று படும்.**

வறுமை என்று சொல்லப்படுகின்ற துன்பம் ஒன்றனுள் பலவாகிய துன்பங்கள் எல்லாம் வந்து சேர்ந்து விளையும்.

நல்குரவு – வறுமை, என்னும் - என்று சொல்லப்படுகின்ற, இடும்பையுள் - துன்பம் ஒன்றுக்குள்ளே, பல்குரை – பல திறப்பட்ட, துன்பங்கள் - துன்பங்கள் எல்லாம், சென்று படும் - வந்து சேர்ந்து விளையும்.

**6. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்**
**சொற்பொருள் சோர்வு படும்.**

நல்ல நூல்களின் பொருள்களை நன்கு அறிந்துணர்ந்து சொன்னாலும் வறுமையில் இருப்பவரது சொல்லானது பொருள் இல்லாது பயனின்றிப் போகும்.

நற்பொருள் - நல்ல நூல்களின் பொருளினை, நன்கு - தெளிவாக, உணர்ந்து – அறிந்துணர்ந்து, சொல்லினும் - சொன்னாலும், நல்கூர்ந்தார் -

வறுமையில் இருப்பவரது, சொல் சொல்லானது, பொருள் சோர்வுபடும் - பொருள் இல்லாத் தன்மையாகிப் பயனில்லாது போகும்.

**7. அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்**
**பிறன்போல நோக்கப் படும்.**

அறத்தொடு பொருந்தாத வறுமையினையுடையவன் தன்னைப் பெற்றெடுத்த தாயாராலும் யாரோ ஒருவனைப் போல நோக்கப்படுவான்.

அறம் - அறத்தொடு, சாரா – பொருந்தாத, நல்குரவு – வறுமையினை உடையவன், ஈன்ற – தன்னைப் பெற்றெடுத்த, தாயானும் - தாயாராலும், பிறன் போல - யாரோ ஒருவனைப் போல, நோக்கப்படும் - நோக்கப்படுவான்.

**8. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்**
**கொன்றது போலும் நிரப்பு.**

நேற்றும் கொன்றதைப் போன்று துன்பத்தினைச் செய்த நல்குரவு இன்றும் என்பால் வருகின்றதோ? வந்தால் யாது செய்வேன்?

நெருநலும் - நேற்றைய தினமும், கொன்றது – கொன்றதை, போலும் - போன்று எனக்குத் துன்பத்தினைச் செய்த, நிரப்பு – வறுமை, இன்றும் வருவதுகொல்லோ - இன்றைய தினமும் என்னிடம் வருவதாகுமோ?

**9. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**
**யாதொன்றும் கண்பாடு அரிது.**

ஒருவனுக்கு நெருப்பின் மேல் படுத்துத் தூங்குதலும் முடியும்; வறுமை வந்துவிட்டபோது யாதொன்றினாலும் தூங்குதல் முடியாத தாகும்.

நெருப்பினுள் - நெருப்பின்மேல் படுத்து, துஞ்சலும் - தூங்குதலும், ஆகும் - மருந்து வகைகளினால் முடியக்கூடும், நிரப்பினுள் - வறுமை வந்துற்ற போது, யாதொன்றும் - எந்த வகையிலும், கண்பாடு அரிது - தூங்குதல் முடியாததாகும்.

**10. துப்புரவு இல்லார் துவரத் துறவாமை**
**உப்பிற்கும் காடிக்கும் கூற்று.**

நுகரப்படும் பொருள்கள் எதுவும் இல்லாதவர்கள் செய்ய வேண்டியது முற்றத் துறத்தலேயாகும். அவ்வாறு செய்யாதிருத்தல், பிறர் வீட்டிலிருக்கும் உப்பிற்கும் காடிக்கும் கூற்றுவனாக முடியும்.

துப்புரவு – அனுபவிக்கப்படும் பொருள்கள், இல்லார் - இல்லாதவர்கள், துவர – முழுதுமாக, துறவாமை - துறந்து விடாதிருத்தல், உப்பிற்கும் - பிறர் வீட்டிலுள்ள உப்பிற்கும் - பிறர் வீட்டிலுள்ள உப்பிற்கும், காடிக்கும் - புளித்த கஞ்சிக்கும், கூற்று - கூற்றுவனாவான்.

## 68.இரவு

### (வறுமையால் பிறரிடம் சென்று யாசித்தல்)

**1. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்**
**அவர்பழி தம்பழி அன்று.**

வறுமையுற்றவர்கள் யாசிப்பதற்குப் பொருத்தமனவர்களைக் கண்டால், அவர்களிடம் யாசித்தல் வேண்டும். அவர்கள் கொடுக்காமல் மறைத்தாரானால், அது அவர்களுக்குப் பழியாகுமே தவிர யாசிப்பவருக்குப் பழியாகாது.

இரத்தக்கார் - யாசித்துக் கேட்பதற்குப் பொருத்தமானவரை, காணின் - கண்டால், இரக்க – யாசித்தல் வேண்டும், கரப்பின் - அவர் கொடாமல் மறைத்தாரானால், (அப்படிச் செய்வது) அவர் - அவருக்கு, பழி – பழியாகும், தம் - யாசித்தவருக்கு, பழி அன்று – பழியாகாது.

**2. இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை**
**துன்பம் உறாஅ வரின்.**

யாசிக்கப்பட்ட பொருள்கள் தான் துன்புறாமல் வருமானால், ஒருவனுக்கு யாசித்தல்கூட இன்பம் தருவதாகும்.

இரந்தவை - யாசித்த பொருள்கள், துன்பம் - தான் துன்பம், உறாஅ – அடையாமல், வரின் - வருமேயானால், ஒருவற்கு – ஒருவனுக்கு, இரத்தல் - யாசித்தலும், இன்பம் - இன்பம் தருவதாக இருக்கும்.

**3. கரப்பில நெஞ்சின் கடனறிவார் முன்நின்று**
**இரப்பும்ஓர் ஏஎர் உடைத்து.**

மறைத்தல் அறியாத நெஞ்சினையுடையவராகி, கடமை உணர்வுடையார் முன் நின்று யாசித்தலும், வறுமையாளர்களுக்கு ஓர் அழகினை உடையதாகும்.

கரப்பிலா – மறைத்தலில்லாத, நெஞ்சின் - மனத்தினையுடையராகி, கடன் - கடமையினையும், அறிவார்முன் - உணர்வார் முன்னே, நின்று -

நின்று, இரப்பும் - இரத்தலும் (யாசித்தலும் யாசிப்பவர்க்கு),ஓர் - ஓர், ஏளர் - அழகினை, உடைத்து - உடையதாகும்.

**4. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்**
**கனவிலும் தேற்றாதார் மாட்டு.**

தம்மிடம் இருப்பதைக் கனவிலும் மறைத்தலை அறியாதரிடம் சென்று ஒன்றனை யாசித்தல், வறியவர்க்கு ஈதலே போன்றதாகும்.

சுரத்தல் - மறைத்தல் என்பதனை, கனவிலும் - கனவிலும்கூட, தேற்றாதார்மாட்டு – அறியாதவரிடத்தில் சென்று, இரத்தலும் - இரத்தலும், ஈதலே – வறியவர்க்கு ஈகையினைச் செய்வதே, போலும் - போன்றதாகும்.

**5. கரப்பிலார் வையகத்து உண்மையான் கண்ணின்று**
**இரப்பவர் மேற்கொள் வது.**

உள்ளதை மறைக்காமல் கொடுப்பவர்கள் சிலர் உலகத்தில் இருந்து வருவதால்தான், முன்னின்ற மாத்திரத்தில் யாசிப்பவர் உயிர் காத்தற் பொருட்டு இரத்தலை மேற் கொண்டுள்ளார்கள்.

கண் - (கொடுப்பவர்) கண்முன்னே, நின்று – நின்று, இரப்பவர் - யாசிப்பவர்கள் (உயிரினைப் பாதுகாக்க), மேற்கொள்வது – யாசிப்பதை மேற்கொள்ளுவதற்குக் காரணம் என்னவென்றால், கரப்புஇலார் - மறைக்காமல் கொடுப்பவர்கள், வையகத்து – உலகத்தில், உண்மையான் - சிலர் இருப்பதனால்தான் என்க.

**6. கரப்புஇடும்பை இல்லாரைக் காணின் நிரப்புஇடும்பை**
**எல்லாம் ஒருங்கு கெடும்.**

உள்ளது மறைத்தலாகிய நோய் இல்லாதவர்களைக் கண்டால், மானம் விடாமல் இரப்பார்க்கு வறுமையால் வரும் துன்பங்கள் எல்லாம் ஒரு சேரக் கெடும்.

கரப்பு – மறைத்தல் என்கின்ற, இடும்பை – துன்பமான நோய், இல்லாரை - இல்லாதவர்களை, காணின் - கண்டால், நிரப்பு – வறுமையாய்வரும், இடும்பை - துன்பங்கள், எல்லாம் - எல்லாம், ஒருங்கு – ஒருசேர, கெடும் - அழிந்து போகும்.

**7. இகழ்ந்துஎள்ளாது ஈவாரைக் காணின் மகிழ்ந்துஉள்ளம்**
**உள்ளுள் உவப்பது உடைத்து.**

தம்மை அவமதித்துப் பேசாமல் பொருள் கொடுப்பாரைக் கண்டால், இரப்பவரது உள்ளம் மகிழ்ந்து உள்ளுக்குள்ளே உவக்கும் தன்மை உடையதாகும்.

இகழ்ந்து - இழிவாகப்பேசி, எள்ளாது - ஏளனம் செய்யாமல், ஈவாரைக் காணின் - கொடுப்பவரைக் கண்டால், உள்ளம் - இரப்பவர் மனம், மகிழ்ந்து – மகிழ்ச்சியடைந்து, உள்ளம் - உள்ளுக்குள்ளே, உவப்பது உடைத்து – உலகை கொள்ளும் தன்மை உடையதாகும்.

**8. இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்**
**மரப்பாவை சென்றுவந் தற்று.**

வறுமையுற்று இரப்பார் இல்லையானால் குளிர்ந்த இடத்தினையுடைய பெரிய ஞாலத்துள்ளார்களின் வாழ்க்கை, உயிரில்லாத மரப்பாவை இயந்திரக் கயிற்றினால் சென்று வந்தது போன்றதாகும்.

இரப்பார் - யாசிக்கும் வறுமையாளர்கள், இல்லாயின் - இல்லாமற்போனால், ஈர்ங்கண் - குளிர்ந்த, மா – பெரிய, ஞாலம் - பூமி (பூமியில் உள்ளவர்கள் வாழ்க்கை), மரப்பாவை – உயிரற்ற மரப்பாவை, (இயந்திரக் கயிற்றல்) சென்று வந்தற்று - செல்லுவதும் வருவதும் போன்றதாகும்.

**9. ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்**
**மேவார் இலாஅக் கடை.**

வறுமையாளர்கள் சென்று ஒன்றனை யாசித்துக் கொள்ள விரும்புதல் இல்லாதபோது, கொடுப்பவரிடத்தில் என்ன புகழுண்டாகும்.

இரந்து – யாசித்து, கோள் - வாங்கிக் கொள்ளுதலை, மேவார் - விரும்புவார், இலாக்கடை - இல்லாமற்போனால், ஈவார்கண் - கொடுப்பவரிடத்தில், என்தோற்றம் - என்ன புகழ், உண்டாம் - உண்டாகக்கூடும்?

**10. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்புஇடும்பை**
**தானேயும் சாலும் கரி.**

வறுமையால் இரப்பவன் கோபிக்காதிருத்தல் வேண்டும். ஏனெனில் அவன் இரத்தல் தொழில் செய்வதற்குக் காரணம் அக்கோபமே என்பது சான்றாக அமையும்.

இரப்பான் - இரப்பவன் (யாசிப்பவன்), வெகுளாமை – கோபங்கொள்ளாதிருத்தல், வேண்டும் - வேண்டுவதாகும், (கோபத்தினால் வந்த இந்த நிலைமையினை) நிரப்பு – வறுமையால் வந்த, இடும்பை – துன்பம், தானேயும் - தானாகவே, கரி – சான்றாக இருத்தலை, சாலும் - போதுமானதாகக் காட்டும்.

## 69.இரவு அச்சம்

**(இரத்தற்கு – யாசிப்பதற்கு – அஞ்சுதல் வேண்டும்)**

**1. கரவாது உவந்துஈயும் கண்ணன்னார் கண்ணும்**
**இரவாமை கோடி யுறும்.**

தமக்கு உள்ளதை மறைக்காமல் கொடுக்கும் கண்போன்று சிறந்தவரிடத்தும் வறுமையால் இரவாதிருத்தல், கோடிமடங்கு நல்லதாகும்.

கரவாது – மறைக்காமல், உவந்து – மனமகிழ்ந்து, ஈயும் - ஈதல் செய்கின்ற, கண் - கண்கள், அன்னார் கண்ணும் - போன்ற சிறந்தவரிடத்திலும், இரவாமை – யாசிக்காமல் இருப்பது, கோடி – கோடிமடங்கு, உறும் - நல்லதாகும்.

**2. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகுஇயற்றி யான்.**

உலகத்தினை உண்டாக்கியவன் வாழ்வார்க்கு முயற்சி செய்து வாழ்வதல்லாமல் யாசித்தும் உயிர் வாழ்தலை விரும்பி விதித்தானாயின் அக்கொடியோன் தானும் அவரைப் போன்று எங்கும் திரிந்து கெடக்கடவன்.

உலகு – உலகத்தினை, இயற்றியான் - உண்டாக்கியவன் என்பான், இரந்தும் - (உலகில் வாழ்வோர்) யாசித்தும், உயிர் - உயிரினைக் காத்து, வாழ்தல் - வாழ்வதை, வேண்டின் - விரும்பி விதித்திருப்பானாகில், பரந்து – தானும் அவர்களைப் போல எங்கும் திரிந்து, கெடுக – அழியக் கடவானாக.

**3. இன்மை இடும்பை இரந்துதீர் வாம்என்னும்**
**வன்மையின் வன்பாட்டது இல்.**

வறுமையால் வரும் துன்பத்தினை முயற்சியால் நீக்கக் கருதாமல், யாசித்தே நீக்குவோம் என்று நினைக்கும் முரட்டுத் தன்மை போல, வன்மையுடையது பிறிதொன்றும் இல்லை.

இன்மை – வறுமையால் உண்டாக்கும், இடும்பை – துன்பத்தினை(முயன்று நீக்க எண்ணாமல்), இரந்து – யாசித்தே, தீர்வாம் - நீங்குவோம், என்னும் - என்று எண்ணும், வன்மையின் - முரட்டுத் தன்மையைப் போன்ற, வன்பாட்டது – வலிமையினையுடையது, இல் - வேறு எதுவும் இல்லை.

**4. இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடம்இல்லாக்**
**காலும் இரவுஒல்லாச் சால்பு.**

நுகர வேண்டுவன இல்லாமல் வறுமையுற்ற போதும் பிறரிடம் சென்று இரத்தலுக்கு உடன்படாத பெருந்தன்மை, எல்லா உலகும் ஒருங்கு சேர்ந்தாலும் கொள்ளாத பெருமை உடைத்து.

இடம் - அனுபவிக்க வேண்டியவை, இல்லாக்காலும் - இல்லாமல் வறுமைப்பட்ட காலத்திலும், இரவு – யாசிப்பதனை, ஒல்லா – மேற்கொள்ளாத, சால்பு – நிறைகுணம், இடமெல்லாம் - உலகமெல்லாம் ஒன்று சேர்ந்தாலும், கொள்ளா – கொள்ளாத, தகைத்தே – சிறப்பினையுடையதாகும்.

**5. தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது**
**உண்ணலின் ஊங்குஇனியது இல்.**

முயற்சி கொண்டுவந்து தந்தது தெளிந்த நீர் போன்ற கூழேயாயினும் அதனை உண்பதைவிட இன்பம் தருவது வேறு எதுவும் இல்லை.

தாள் - தனது முயற்சியானது, தந்தது – கொண்டு வந்து கொடுத்தது, தெள் - தெளிந்த, நீர் - நீரினைப் போன்ற, அடுபுற்கை – சமைத்த கூழே, ஆயினும் - ஆனாலும், உண்ணலின் ஊங்கு – அதனை உண்பதை விட, இனியது இல் - இனியதாக இருப்பது வேறு எதுவும் இல்லை.

**6. ஆவிற்கு நீர்என்று இரப்பினும் நாவிற்கு**
**இரவின் இளிவந்தது இல்.**

தண்ணீரின்றித் தவிக்கும் பசுவிற்குத் தண்ணீர் தரல் வேண்டும் என்று இரந்து கேட்கும் போதும், அவ்வாறு யாசிப்பது போல ஒருவன் நாவிற்கு இழிவினைத் தருவது வேறில்லையாம்.

ஆவிற்கு – பசுவுக்கு, நீர் - தாகம் நீக்க நீர் வேண்டும், என்று – என்று கேட்டு, இரப்பினும் - யாசித்துக் கேட்கும் போதும், இரவின் - அவ்வாறு இரத்தலினைப் போல, நாவிற்கு – நாவினுக்கு, இளி - இழிவு, வந்ததுஇல் - தருவது வேறு எதுவும் இல்லை.

**7. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பிற்**
**கரப்பார் இரவன்மின் என்று.**

'நீங்கள் யாசிக்க வேண்டுமென்றால், உள்ளது மறைப்பவர்களிடம் யாசிக்காதிருங்கள்' என்று சொல்லி, யாசிப்பவர்களிடமெல்லாம் யான் சென்று யாசிப்பேன்.

இரப்பின் - யாசிக்க வேண்டுமானால், கரப்பார் - வைத்திருப்பதை மறைப்பவரிடம், இரவன்மின் என்று - இரவாதிருப்பீர்களாக என்று, இரப்பாரை – யாசிப்பவர்கள், எல்லாம் - எல்லோரிடமும், இரப்பன் - இரந்து கேட்டுக் கொள்வேன்.

**8. இரவுஎன்னும் ஏமாப்புஇல் தோணி கரவுஎன்னும்**
**பார்தாக்கப் பக்கு விடும்.**

இரத்தல் என்னும் பாதுகாப்பில்லாத தோணி, மறைத்தல் என்னும் வன்னிலத்தில் தாக்குமாயின் பிளந்து போகும்.

இரவு – யாசித்தல், என்னும் - எனப்படும், ஏமாப்பு – பாதுகாப்பு, இல் - இல்லாத, தோணி – மரக்கலம், கரவு – மறைத்தல், என்னும் - எனப்படும், பார்தாக்க – வன்னிலத்துடன் தாக்கிவிடுமானால், பக்குவிடும் - பிளந்து போவதாகும்.

**9. இரவுஉள்ள உள்ளம் உருகும் கரவுஉள்ள**
**உள்ளதூஉம் இன்றிக் கெடும்.**

உடையவர்களின் முன் வறியவர்கள் நின்று யாசிக்கும் கொடுமையினை நினைத்தால், உள்ளம் கரைந்து உருகுகின்றது. ஊடையவர் இல்லையென்னும் கொடுமையினை நினைத்தால், உருகிய அளவும் இல்லாமல் அழிந்துவிடும்.

இரவு - இரந்து கேட்கின்ற கொடுமையினை, உள்ள – நினைக்கும்போது, உள்ளம் உருகும் - மனம் கரைந்து உருகுகின்றது, கரவு – மறைத்துவைத்து 'இல்லை' என்பதனை, உள்ள – நினைக்க, உள்ளதூஉம் - உருகுகின்ற அந்த அளவும், இன்றிக் கெடும் - இல்லாமல் அழிந்து போவதாகும்.

**10. கரப்பவர்க்கு யாங்குஒளிக்கும் கொல்லோ இரப்பவர்**
**சொல்லாடப் போஒம் உயிர்.**

உள்ளதை மறைத்துவைத்து இல்லை யென்றபோதே இரப்பார்க்கு உயிர்போகும் நிலையாகின்றது. இனி உள்ளதை மறைந்து இல்லை என்பவர்க்கு உயிர் போகாதிருத்தலால், அது எங்குச் சென்று மறைந்திருக்குமோ?

சொல்லாட - இரப்பவர்க்கு இல்லையென்று சொல்லியவுடனே, இரப்பவர் - யாசிப்பவருக்கு , உயிர்போஒம் - உயிரானது, போகின்றது (அவ்வாறாயின்) கரப்பவர்க்கு – மறைத்து வைத்து இல்லையென்பார்க்கு உயிர் பின்னும் இருத்தலால், யாங்கு – அவர் உயிர் எங்குப் புகுந்து, ஒளிக்குங்கொல்லோ – மறைந்திருக்குமோ?

## 70.கயமை

## (மனிதத்தன்மை எதுவுமே இல்லாத கீழோர் இயல்பு)

**1. மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
**ஒப்பாரி யாம்கண்டது இல்.**

கீழ்மக்கள் வடிவத்தால் முழுதும் மக்களைப்போலவே இருப்பர். அவர்களைப்போல ஒப்பு நாம் வேறு எங்கும் கண்டது இல்லை.

கயவர் - கீழ்மக்கள், மக்களே போல்வர் - தோற்றத்தால் முழுதும் மக்களைப் போலவே இருப்பர், அவர் - அவர்களை, அன்ன – போல, ஒப்பாரி – ஒப்பு, யாம்கண்டது – நாம் வேறெங்கும் கண்டது, இல் - இல்லை.

**2. நன்றுஅறி வாரின் கயவர் திருவுடையர்**
**நெஞ்சத்து அவலம் இலர்.**

நல்லவைகளை அறிந்திருப்பவர்களைவிட அதனை அறியாத கீழ்மக்களாகிய கயவர்கள், அவை காரணமாகத் தம் நெஞ்சத்தில் கவலை இல்லாதவர்களாதலால் நன்மையுடையவராவர்.

நன்று அறிவாரின் - தமக்கு இருக்க வேண்டிய நல்லவைகளை அறிந்திருப்பவர்களைவிட கயவர் - கீழ்மக்கள், நெஞ்சத்து – நெஞ்சத்தில், அவலம் -(நல்லவைகளை நினைத்து) கவலை, இலர் - இல்லாதவர்கள் ஆனபடியால், திருவுடையர் - (அவர்கள்) நன்மையுடையவர்களாவார்கள்.

**3. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்**

**மேவன செய்தொழுக லான்.**

கயவரும் தாம் விரும்பியவாறு தேவரைப் போலத் தம்மை நியமிப்பாரின்றி விரும்பியவற்றைச் செய்வதால், கயவரும் தேவரும் ஒரு தன்மையராவர்.

அவரும் - அக்கயவரும் (தேவர்களைப் போலத் தம்மை நியமிப்பாரின்றிய) தாம் - தாம், மேவன – விரும்புனவற்றை, செய்து – செய்து, ஒழுகலான் - நடந்து கொள்ளுவதனால், கயவர் - கயவரும், தேவர் - தேவரும், அனையர் - ஒரு தன்மையர் ஆவர்.

**4. அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்**
**மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.**

கீழ்மகன் தன்னிற் சுருங்கிய பட்டியாய் நடப்பவரைதக் கண்டால் அப்படிப்பட்ட நடத்தையில் அவரைவிட மேம்பட்டு தன் மிகுதியினைக் காட்டி இறுமாப்படைவான்.

கீழ் - கீழ்மகனான கயவன், அகப்பட்டி – தன்னை விடச் சுருங்கிய பட்டியாய், ஆவாரை – நடப்பவரை, காணின் - கண்டானானால், அவரின் மிகப்பட்டு – அவரைவிடத் தான் மேம்பாடு காட்டி, செம்மாக்கும் - இறுமாப்புக் கொள்ளுவான்.

**5. அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்**
**அவாஉண்டேல் உண்டாம் சிறிது.**

கயவர்களிடம் ஆசாரம் இருக்கக் கண்டால் அதற்குக் காரணம் மேலாக உள்ளவரால் துன்பம் வருமென்ற அச்சமேயாகும். அதுவேயன்றித் தம்மால் விரும்பப்படும் பொருள் கிடைக்குமென்றாலும் ஆசாரம் காட்டுபவனாவான்.

கீழ்களது – கீழ்மக்களது, ஆசாரம் - ஆசாரத்திற்குக் காரணம், அச்சமே – துன்பம் வருமென்ற அச்சமேயாகும், எச்சம் - அந்தக் காரணம் இல்லையானால், அவா – விரும்பிய பொருள், உண்டேல் - அதனால் வருமேயானால், சிறிது உண்டாம் - அப்போதும் சிறிது ஆசாரம் உண்டாகும்.

**6. அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட**
**முறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்.**

கயவர் தாம் கேட்டறிந்த மறை பொருள்களைப் போகும் இடமெல்லாம் தாங்கிக் கொண்டு போய் மற்றவர்களுக்குச் சொல்லுதலால், அக்கயவர் அடிக்கப்படுகின்ற பறையினை ஒப்பவராவார்.

தாம் - கயவர் தாம், கேட்ட – கேட்டறிந்த, மறை – மறைபொருள்களை, உய்த்து – போகுமிடமெல்லாம் தாங்கிக் கொண்டு போய், பிறர்க்கு – மற்றவர்களுக்கு, உரைக்கலான் - சொல்லுதலால், கயவர் - கயவர், அறை – அடிக்கப்படுகின்ற, பறை – பறையினை, அன்னர் - ஒப்பவராவர்.

**7. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுஉடைக்கும்**
**கூன்கையர் அல்லா தவர்க்கு.**

முறுக்கிய கையினால் தமது கன்னத்தினை நெரிப்பவர்க்கு அல்லாமல் கீழ்மக்கள் தாம் உணவு உண்டு பூசிய ஈரக் கையினையும் யாசிப்பவர்களுக்குத் தெறிக்க மாட்டார்கள்.

கயவர் - கயவர்கள், கொடிறு – கன்னத்தினை, உடைக்கும் - உடைக்கின்ற, கூன் - வளைத்து முறுக்கிய, கையர் அல்லாதவர்க்கு – கையினையுடையவர் அல்லாதவர்க்கு, ஈர்ங்கை – உணவு சாப்பிட்டுப் பூசிய ஈரத் கையினையும், விதிரார் - தெறிக்க மாட்டார்கள்.

**8. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்.**

மெலியார் தமது குறையினைச் சொல்லியவுடனேயே சான்றோர் பயன்படுவர். மற்றைய கயவர் கரும்பு போல நைய நெருக்கியபோதுதான் பயன்படுவர்.

சொல்ல – சொல்லிய அளவிலேயே, சான்றோர் - மேலான சான்றோர், பயன்படுவர் - பிறர்க்குப் பயன்படுவார்கள், கீழ் - கயவர்கள், கரும்பு போல் - கரும்பினை நசுக்குவது போல, கொல்லப் பயன்படும் - நைய நெருக்கிய போதுதான் பயன்படுவார்கள்.

**9. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண வற்றாகுங் கீழ்.**

மற்றவர்கள் செல்வத்தால் நன்கு உடுத்திக் கொள்ளுவதையும் உண்ணுவதையும் கயவன் கண்டு விட்டால், அவற்றைப் பொறாமல் அவர்மீது குற்றம் இல்லையென்றாலும் உண்டாக்கிச் சொல்லுவதில் வல்லவனாவான்.

உடுப்பதூஉம் - பிறர் நன்கு உடுத்திக் கொள்ளுவதையும், உண்பதூஉம் - உண்ணுவதையும் கீழ் - கயவன், காணின் - காண்பானானால், (மனம் பொறாமல்) பிறர் மேல் - அத்தகைய மற்றவர்கள் மீது, (குற்றம்

இல்லையென்றாலும்) வடு – குற்றத்தினை, காண – தானே உண்டாக்கிக் காட்டுவதில். வற்றாகும் - வல்லவனாவான்.

**10. எற்றிற்கு உரியர் கயவர்ஒன்று உற்றக்கால்**
**விற்றற்கு உரியர் விரைந்து.**

கயவர் தமக்கு யாதானுமொரு துன்பம் வந்தபோது தம்மைப் பிறர்க்கு விரைவாக விற்றற்கு உரியர்; அதுவன்றி வேறு எத்தொழிலுக்கு உரியர்?

கயவர் - கீழ்மக்கள், ஒன்று உற்றக்கால் - யாதானுமொரு துன்பம் தமக்கு வந்துவிட்டால், விரைந்து – விரைவாகச் சென்று, விற்றற்கு – தம்மைப் பிறரிடம் விற்பதற்கு, உரியர் - உரியவராவர், (அதனையன்றி) எற்றிற்கு – வேறு எத்தொழிலுக்கு, உரியர் - உரியவராவர்?

## திருக்குறள் வினாக்கள்

## பகுதி - I.

1. அரசர்களுள் ஏறுபோன்றவன் யார்?
2. வேந்தர்க்கு இயல்பாக இருக்க வேண்டிய பண்புகள் எவை?
3. அரசனுக்கு எம்மூன்று குணங்கள் நீங்காது இருக்க வேண்டும்?
4. அரசாள்பவன் எவற்றை நீக்கி, எவற்றைக் காத்து ஆள வேண்டும்?
5. எச்செயலால் மன்னன் இறைவனாகக் கருதப்படுவான்?
6. அரசர்களுக்கெல்லாம் ஒளிதரும் விளக்கு போன்றவன் யார்?
7. கண் உடையர் யார்?
8. புண் உடையர் யார்?
9. புலவர் தொழில் எது?
10. உயர்ந்தோர், இழிந்தோர் என யாரை கல்வி அதிகாரத்தில் கூறப்படுகிறது?
11. கல்லாதார் எப்போது மிகவும் நல்லவர்கள் ஆவர்?
12. விளையாத களர்நிலம் என்று யாரை கூறுவர்?
13. ஒருவருக்கு மிகப்பெரிய செல்வம் எது?
14. செவிக்கு உணவு இல்லாதபோது எவற்றிற்கு உணவு இடப்படும்?
15. தேவர்களோடு ஒப்பாவார் யார்?
16. செவிடான காதுகள் என்று எதனைக் கூறுகிறார் வள்ளுவர்?
17. மாந்தர் இறந்தாலும், வாழ்ந்தாலும் ஆகும் பயன் யாது?
18. எது அறிவாகும்?

19. உண்மையான கருத்தின் பயனைக் காணும் வல்லமை உள்ளது எது?
20. ஒருவனுக்கு எது அறிவுடைமையாகும்?
21. நடுங்கும்படியான துன்பம் யாருக்கு இல்லை?
22. உடையார் யார்?
23. அறிவுடைமையால் வரும் நன்மைகள் குறித்து எழுதுக.
24. யாருடைய செல்வம் மேன்மையானது?
25. அரசனுக்கு எது குற்றமாகும்.
26. ஒருவன் எதனைக் காத்துக்கொள்ளல் வேண்டும்?
27. தலைவனுக்கு நேரக்கூடிய குற்றம் யாது?
28. எது மிகுந்த குற்றாமகும்.?
29. யாரைத் துணையாகக் கொள்ளுதல் வேண்டும்.?
30. உறுதியான நிலை யார்க்கு இல்லையாகும்?
31. யார் நட்பினை கொள்ளாமல் விட்டுவிடுதல் பத்து மடங்கு தீமை பயக்கும்?
32. ஒருவனுக்கு எது எல்லாப் புகழினையும் தரும்?
33. இழிந்த குணம் உடையவருடைய நட்பு எத்தகைய துன்பத்தினைத் தரும்?
34. தொழில் செய்வோர் எதனைச்சீர்தூக்கிப் பார்த்துச் செய்தல் வேண்டும்?
35. எவற்றை ஆராய்ந்து செய்யாமற்போனால் குற்றம் உண்டாகும்?
36. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை எவ்வாறு கெடும்?
37. பகைவரை வெல்லக் கருதும் அரசருக்கு எது இன்றியமையாததாகும்?
38. உலகு முழுவதையும் ஒருவன் ஆள எந்த செயலைச் செய்தல் வேண்டும்.
39. கொக்கினைக் கொண்டுக் கூறும் கருத்து யாது?
40. எவை கடலில் ஓடமாட்டா? எவை நிலத்தில் ஓடமாட்டாவாம்?
41. எவை சேற்று நிலத்தில் அகப்பட்டுக் கொண்டால் நரிகள் கொல்லும்?
42. எந்த நான்கில் அடிப்படையின் அரசன் தெளியப்படுவான்?
43. எவற்றைத் தேர்ந்து அமைத்துக் கொள்ளுவதே தலைவனுக்குத் தெளிவாகும்?
44. யாரிடம் அறியாமையென்பது இல்லாதிருப்பது அருமையாகும்?
45. எவ்வெவற்றை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும்?
46. ஒருவனுடைய பெருமைக்கும் சிறுமைக்கும் காரணமான செயல் யாது?
47. அரசனின் எச்செயல் தீராத துன்பத்தைத் தரும்?
48. தேறுக தேறும் பொருள் எவ்வாறு?

49. அரசனுக்கும் எவை தீராத் துன்பத்தைத் தரும்?
50. நன்மையும் தீமையும் எத்தன்மையான் ஆளப்படும்?
51. மன்னனுக்குத் தொழில் செய்வோன் திறம் எது?
52. மன்னனுக்குத் தொழில் செய்வோன் எவ்வாறு இருத்தல் வேண்டும்?
53. எவையெல்லாம் உடையவனிடத்தில் தொழிலினை ஒப்படைக்க வேண்டும்.
54. தொழிலால் வேறுபடும் மாந்தர் யார்?
55. எப்பண்பு உள்ளவன் என்று நினைத்து ஒருவனைத் தொழிலில் அமர்த்தக் கூடாது?
56. யாரிடம் ஒரு தொழிலினை ஒப்படைக்க வேண்டும்?
57. யாரை விட்டுத் திருமகள் நீங்குவாள்?
58. மன்னர் நாள்தோறும் எதனைக் கவனித்துச் செய்தல் வேண்டும்?
59. எத்தகைய இயல்புகள் சுற்றத்தாரிடம் இருப்பனவாகும்?
60. கரையில்லாமல் நீர்நிறைந்த வாழ்க்கையை உடையவன் யார்?
61. ஒருவன் எவ்வாறு சுற்றத்தாரால் சூழப்படுவான்?
62. எத்தகைய குணம் உடையவருக்கும் உறவுகள் அதிகமிருப்பர்?
63. எத்தன்மை உடையவர்களுக்குச் செல்வம் உண்டாகும்?
64. அரசன் யாரை ஆராய்ந்து தழுவிக் கொள்ள வேண்டும்?
65. அரசனுக்கு அளவு கடந்த கோபத்தினை விடவும் எது தீமையாகும்?
66. ஒருவனுடைய புகழினை எது கொன்றுவிடும்?
67. யாருக்குப் புகழுடைமை இல்லை?
68. மறதியுடையவர்களுக்கு எதனால் பயனில்லை?
69. யார் தனது பிழையினை நினைத்து இரங்கிக் கவலைப்படுவான்?
70. மறதியினால் வரும் தீமைகள் குறித்து எழுதுக.
71. மறதியின்மையினால் வரும் நன்மைகள் குறித்து எழுதுக.
72. செங்கோண்மை என்றால் என்ன?
73. உலக உயிர்கள் எவற்றை நோக்கி வாழும்?
74. குடிமக்கள் யாரை நோக்கி வாழ்பவர்கள்?
75. மறையாகிய நூலுக்கும் அறத்திற்கும் முதற்காரணமாக நிலை பெற்றது எது?
76. செங்கோல் கொண்டு ஆட்சி புரியும் நாடு எவ்வாறு காணப்படும்?
77. ஆராய்ந்து முறை செய்யாத மன்னன் எவ்வாறு கெடுவான்?

78. அரசனும், உழவனும் எவ்வகையில் ஒப்பர்?
79. கொலை செய்யும் தொழிலை மேற்கொண்டவர்களை விடவும் கொடியவன் யார்?
80. நாள்தோறும் நாட்டினை இழப்பவன் யார்?
81. அரசனின் செல்வத்தினைக்குறைக்கும் கருவி எது?
82. அருளில்லாத வேந்தன் நாட்டில் வாழும் மக்களுக்கு ஏற்படும் துன்பம் யாது?
83. எப்பொழுது மேகம் மழைபொழிதலைச் செய்யாது?
84. காவலன் காவான் எனின் எவையெல்லாம் நசிந்துவிடும்.
85. வேந்தன் என்பவன் யார்?
86. அரசன் எச்செயலால் விரைவில் கெடுவான்?
87. எத்தகைய அரசனுக்கு ஆயுளும், செல்வமும் அற்றுவிடும்? (அல்லது)
    அரசனின் ஆயுள் குறைந்து, செல்வத்தை இழப்பது எப்போது?
88. யாருடைய செல்வம் நாள்தோறும் சுருங்கும்?
89. அரசனின் தகாத செயலால் அடையும் துன்பத்தினை பட்டியலிடுக.
90. இவ்வுலகம் ஏன்இருந்து வருகின்றது?
91. எது இல்லாதவர்கள் இருப்பது இந்நிலத்திற்கு பாரமாகும்?
92. அறிவுடையோர் எதனைப் புண் எனக் கூறுவர்?
93. கண்ணோட்டம் இல்லாதார் எதனோடு ஒப்பர்?
94. மன்னன் எவற்றைத் தனது இரண்டு கண்களாகக் கொள்ளுதல் வேண்டும்?
95. ஒற்றன் என்பவன் யார்?
96. ஒற்றர்கள் தரும் செய்தியை எவ்வாறு ஆராய வேண்டும்?
97. உடையவர் என்று சொல்லச் சிறந்தது எது?
98. ஒருவருக்கு நிலையான உடைமை எது?
99. பொருள் யாரிடத்தில் தானே வழிதேடிக் கொண்டுபோகும்?
100. ஒருவனது நினைவு எவ்வாறு இருத்தல் வேண்டும்?
101. கெட்டுப்போகும் தன்மையுடையவர்கள் விரும்பி ஏறும் மரக்கலம் எவை?
102. சோம்பல் எத்தன்மையினை உண்டாக்கிவிடும்?
103. ஒருவன் குடியுள்ளும் ஆண்மையுள்ளும் வந்த குற்றங்கள் எங்ஙனம் நீங்கிவிடும்?
104. முயற்சியால் எது வளரும்?
105. முயற்சி உடையவரிடத்தில் யார் தங்கி இருப்பாள்?

106. எவை செய்யாமை பழியாகும்?
107. ஊழை வெல்பவர் யார்?
108. துன்பம் வரும் வேலையில் ஒருவன் எப்படி இருக்க வேண்டும்?
109. யாருடையத் துன்பம் நினைத்தபோதே கெடும்?
110. துன்பங்களுக்குத் துன்பங்களை உண்டாக்குவார் யார்?
111. யாரைக்கண்டு துன்பம் விலகிப் போகும்?
112. மனதால் வருத்தப்படாதவர் யார்?
113. பகைவரும் மதிப்பர் எப்போது?
114. அமைச்சருக்கு உரிய தகுதிகள் யாவை?
115. எத்தகைய ஐந்தும் சிறப்பாக உடையவன் அமைச்சன் யார்? அல்லது
116. மன்னனுக்குச் சிறந்த அமைச்சர் யார்?
117. அமைச்சனுக்கு எது முறைமையாகும்?
118. அரசனுக்கு எது முறைமையாகும்?
119. அரசனுக்கு ஓர் எழுபது கோடி பகைவர்களை விடவும் கொடியவர் யார்? அல்லது
120. அரசனுக்கு கொடியவன் யார்?
121. அமைச்சர்களுடைய கடமைகள், ஆற்றல்கள் குறித்துக் கட்டுரை வரைக.
122. அமைச்சனுக்கு எல்லா நலத்தையும்விட எது மேலானதாகும்?
123. எதன்கண் சோர்வு இல்லாதிருத்தல் வேண்டும்?
124. சொல்வன்மை விளக்குக.
125. சொல்லின் திறம் யாது?
126. குற்றமற்றவரின் துணிவு யாது?
127. சொல்லால் யாரை வெல்ல முடியாது?
128. உலகம் யாரை ஏற்றுக்கொள்ளும்?
129. மணமில்லாத மலர் யார்?
130. ஒருவனுக்கு வினைநலம் யாவற்றைத் தரும்?
131. எக்காலத்திலும் எவற்றை ஒழித்து நீக்குதல் வேண்டும்?
132. ஒருவன் எத்தொழில் செய்வதை விடுதல் வேண்டும்?
133. யார் இழிவானச் செயல்களைச் செய்ய மாட்டார்கள்?
134. அமைச்சருக்கு ஒருவகையில் எச்செயல் துன்பத்தினைத் தரும்?
135. தீயவழியில் சேர்த்த பொருள் எவ்வாறு அழியும்?

136. நல்வழியில் ஈட்டிய பொருள் எப்பயனைக் கொடுக்கும்?
137. எது மனத்திண்மை ஆகும்?
138. ஒருவன் செய்தொழிலை எவ்வாறு செய்தல் வேண்டும்?
139. யார்க்கும் அரியதாகும் தொழில் எது?
140. அமைச்சரது தொழில் மன்னனுக்கு எவ்வகையில் நன்மையினை உண்டாக்கும்?
141. தொழிலில் வலிமையுடையவர் எதனை அடைய முடியும்?
142. உருவுகண்டு இகழாதிருத்தல் வேண்டும் ஏன்?
143. உயர்ந்தோர் யாரை நன்கு மதிக்கமாட்டார்கள்?
144. எது குற்றமுடையதாகிவிடும்?
145. தீ, பகை மீதியாக வைத்தால் வரும் கேடு யாது?
146. தொழில் செய்யும்போது எந்த ஐந்திணையும் மயக்கம் நீங்கச் செய்தல் வேண்டும்?
147. தொழில் செய்யும்பொழுது எவைகளைச் சீர்தூக்கிப் பார்த்துச் செய்தல் வேண்டும்?
148. யானையைக் கொண்டு விளக்கும் செய்தி யாது?
149. தொழில் செய்பவன் யாரை நட்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.
150. தூது செல்வோர்க்குரிய இலக்கணம் கூறுக.
151. தூதுரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று குணங்களை எழுதுக.
152. வேற்றரசரிடம் தூது செல்லகத்தகுதியானவன் யார்?
153. அரசனுக்குத் தூதானவன் யார்?
154. தூதுவர்களில் சிறந்தவன் யார்?
155. அரசரிடம், அமைச்சர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?
156. அமைச்சனானவன் எந்தப்பிழைகள் தம்மிடம் வராமல் காத்தல் வேண்டும்?
157. பெரியோர் அருகில் தாம் இருக்கும்போது எவை நீக்கி நடந்து கொள்ளுதல் வேண்டும்?
158. அரசருக்குள்ள உயர்ந்த நிலைமைக்குப் பொருந்த அமைச்சரானவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?
159. அமைச்சருக்கு எது கேட்டினைத் தரும்?
160. வையகத்தில் வாழ்பவர்களுக்கு ஓர் ஆபரணம் ஆவான் யார்?
161. தெய்வத்தோடு ஒப்ப நன்கு மதித்தல் வேண்டும் யாரை?

162. அரசர் யாரைத் துணையாக வைத்துக் கொள்ளுதல் வேண்டும்?
163. அறிவால் வேறுபடுபவர் யார்?
164. கண்களினால் அடையும் பயன் என்ன?
165. ஒருவனின் முகக்கண்ணாடி எதனைக் காட்டும்?
166. பிறர் கருத்தினை அளக்கும் கோலாக இருப்பது எது?
167. அவையில் ஒருவன் எவ்வாறு பேசுதல் வேண்டும்?
168. கற்றுவல்ல கலையும் யாருக்கு இல்லையாம்?
169. புல்லர்கள் சபையில் எவ்வாறு இருத்தல் வேண்டும்?
170. வல்லவன் ஒருவன் சொற்குற்றத்திற்கு ஆளானால் அவனின் நிலை யாது?
171. வல்லவர் சபையில் யார் பேசும்போது பிழைபடச் சொல்ல மாட்டார்கள்?
172. வாளுடன் தொடர்பு, கற்ற நூலோடு தொடர்பு விளக்கம் தருக.
173. பேடி பிடித்த கூர்வாளினை ஒக்கும் எது?
174. கற்றிருந்தாலும் பயனில்லாதவர்கள் யார்?
175. உலகத்தாரால் கடையர் என்று சொல்லப்படுபவர்கள் யார்?
176. யார் இறந்தவரோடு ஒப்பாவார்?
177. யார் ஒருங்கு வாழ்வதே நாடாகும்?
178. எத்தகைய தீயோர் இல்லாததே நாடாகும்?
179. நூலோர் கூறும் நாடு எது?
180. ஒரு நாட்டின் உறுப்புகள்எவை?
181. எவை ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகாகும்?
182. யாருடைய நாடு பயனுடையதல்ல?
183. யார்க்கெல்லாம் அரண் சிறந்ததாகும்?
184. எவை உடையதே அரணாகும்?
185. எந்த நான்கினையுடைய மதிலை அரண் என்று சொல்லுவர் நூலோர்?
186. யாருடைய எழுச்சியினைக் கெடுப்பது அரண்?
187. எத்தன்மை உடையது அரணாகும்?
188. எத்தகைய வீரரை உடையதே அரணாகும்?
189. எது அரிதானதே அரணாகும்?
190. எவ்வாறு போர் செய்து வெல்வதே அரணாகும்?
191. எத்தகைய ஆட்சியினையுடையதே அரணாகும்?
192. சிறப்புடைய வீரர்களால் ஒருநாடு அடையும் நன்மை யாது?

193. நல்வழியில் உண்டான பொருள் வெற்றியினைக் கொடுக்கும்.
194. வேந்தனுக்குரிய பொருள்கள் யாவை?
195. பகைவா் செருக்கினை அறுக்கும் படைக்கலம் எதுவாகும்?
196. வேந்தனுடைய செல்வங்கள் எல்லாவற்றுக்கும் தலையான செல்வம் எது?
197. நாகம் மூச்சுவிட்டால் எவை கெட்டழியும்?
198. படையின் ஆற்றல் எவ்வாறு இருத்தல் வேண்டும்?
199. எந்த நான்கு குணங்கள் சேனைக்குப் பாதுகாப்பாகும்?
200. எச்சேனை பகைவரை வெல்லும்?
201. நூலோர் ஆண் தன்மை என்று யாரைக் கூறுவர்?
202. கழிந்தாநாட்களாக வீரன் எதனை நினைப்பான்?
203. நட்பு என்றால் என்ன?
204. அறிவுடையார்களுடன் கொண்ட நட்பு எவ்வாறு வளரும்?
205. பேதமையுடையார் நட்புஎவ்வாறு தேயும்?
206. யாருடைய நட்பு இன்பம் தரும்?
207. நட்பு எதை சொல்லுவதற்கேயாகும்?
208. எவை நட்பு என்கிற உரிமையைக் கொடுப்பதாகும்?
209. எது நட்பாகாது? எது நட்பாகும்?
210. எது சிறந்த நட்பாகும்?
211. “நட்பு” சான்று தருக.
212. நட்புக்கு எது சிறுமையுடையதாகும்?
213. ஆராயாமல் நட்புச் செய்தால் வரும் கேடு யாது?
214. ஒருவனோடு நட்புகொள்வதற்குமுன் எதனை ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும்?
215. யாரை ஆராய்ந்து நட்புகொள்ள வேண்டும்.
216. தீயோரின் நட்பை விலக்கினால் வரும் நன்மை யாது?
217. யார் நட்பு உள்ளத்தினைச் சுடும்?
218. யார் நட்பை விட்டுவிடுதல் வேண்டும்?
219. பழைமை என்று சொல்லப்படுவது யாது?
220. நட்பிற்கு உறுப்புக்காளனவை எவை?
221. பழைமையான நட்பு என்ன பயனைச்செய்யும்?
222. நட்பில் எது செய்த நாள் பயன்பட்ட நாளாகும்?

223. உலகம் எந்த நட்பை விரும்பும்?
224. பகைவர்களாலும் விரும்பப்படுபவர்கள் யார்?
225. யாருடைய நட்பு, தேய்வது நல்லதாகும்?
226. யாருடைய நட்பினை விட்டுத் தனிமையாக இருப்பதே சிறப்பு?
227. யார் நட்பு உண்டாகாமல் இருப்பது நல்லது?
228. யாருடைய பகைமை கோடி மடங்கு நல்லதாகும்?
229. யாருடைய நட்பைச் சொல்லாமலேயே கைவிடுதல் வேண்டும்?
230. எவருடைய நட்பைச் சிறிதளவேனும் தம்மைச் சாராமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும்?
231. பகைமை உள்ளம் படைத்தவர்களுக்கு நட்பாதல் இல்லை. ஏன்?
232. யாரைப் பார்த்து நாம் அஞ்சுதல் வேண்டும்?
233. யாருடைய வணக்கத்தைத் தீமையுண்டாக்குவதாகவே கருத வேண்டும்?
234. பகைவரின் கண்ணீர் எதை ஒத்ததாகும்?
235. பகைவரின் நட்பினை எவ்வாறு தவிர்த்தல் வேண்டும்?
236. பேதைமைக்களுக்கெல்லாம் மிகுந்த பேதமை எது?
237. பேதைமையினுடைய தொழில் எது?
238. ஒருவனுக்கு எது இல்லாமை இல்லாமையாகும்?
239. புல்லறிவுடைமை என்பது யாது?
240. புல்லறிவானுக்கு எது நோயாகும்?
241. இகல் என்று எதனைச் சொல்லுவர்?
242. எது உயர்ந்த பண்பாகும்?
243. எப்போதும் புகழினை எது கொடுக்கும்?
244. மிகுந்த இன்பத்தினைக் கொடுப்பது எது?
245. மனதில் தோன்றும் மாறுபாடினை வெல்லும் தன்மையுடையவர் யாவர்?
246. ஒருவனுக்கு எது ஆக்கம் தரும்?
247. ஒருவனுக்கு எது கேடு தரும்?
248. நல்ல நீதி என்ற பெருஞ்செல்வம் எதனால் உண்டாகும்?
249. ஒருவன் தன்மீது வந்த பகைவர் வலியினை எவ்வாறு தொலைப்பான்?
250. பகைவர்க்கு மிகவும் எளிமையானவன் யார்?
251. யாருடைய பகைமையினைப் பகைவர்கள் விரும்பிக் கொள்வார்கள்?
252. யாருக்கு புகழ் வந்து சேராது?

253. சொல்லினை ஏராக வுடைய உழவரோடு ஏன் பகைத்தல் கூடாது?

254. எப்பகைமைக்கு அஞ்சாதிருத்தல் வேண்டும்?

255. யாருடைய நட்பினை அஞ்சுதல் வேண்டும்?

256. எப்போது காவல்கள் எல்லாவற்றிலும் மிக்கதாகும்?

257. நீங்காத துன்பங்கள் ஒருவனுக்கு எப்போது உண்டாகும்?

258. எப்போது செல்வந்தர் குடியோடு அழிவர்?

259. வேந்தன் ஏன் நிலைக்கக்கெட்டு அழிவான்?

260. உட்பகையைக்காக்காவிட்டால் வரும் துன்பம் யாது?

261. வேந்தனுக்கு உட்பகை உண்டாகிவிட்டால் எத்தகைய குற்றங்களையெல்லாம் தந்துவிடும்?

262. ஆண்பாலர்க்கெல்லாம் எது நாணுதலைக் கொடுக்கும்?

263. யார் நல்லோரால் பாராட்டப்படமாட்டார்?

264. யார் ஆண்மையில்லாதவர்?

265. ஆண் தன்மையைவிட பெண் தன்மைகள் எவ்வகையில் மேலானதாகும்?

266. எம்மகளிருடைய இனிய சொற்கள் துன்பத்தினைக் கொடுக்கும்?

267. உயர்ந்தோர் யாரைத் தீண்டமாட்டார்?

268. வரைவின் மகளிர் குறித்து வரும் தீமையினைத் தொகுத்துரைக்க.

269. புகழினை எதனால் இழப்பர்?

270. சூதாட்டத்தினால் வரும் வறுமை எது?

271. துன்பத்தில் உழன்றுகொண்டிருப்பார்கள் யார்?

272. நற்குணங்களை எது அழிக்கும்?

273. சூதாட்டத்தினால் எவ்வைந்தும் சேராது?

274. எந்த மூன்று நோய்கள் துன்பத்தினைக் கொடுக்கும்?

275. உடம்பினை நெடுங்காலம் கொண்டு செலுத்துவது எது?

276. யார் உயிர்க்குப் பிணிகளால் துன்பம் விளைதல் உண்டாகாது?

277. யாரிடத்தில் நோய்கள் எல்லையற்று வளரும்?

278. மருத்துவன் எவ்வாறு நோயினை அறிந்து மருத்துவம் பார்த்தல் வேண்டும்?

279. மருந்தென்பது எந்த நான்கு பகுதியினையுடையது?

280. உயர்ந்த குடியில் பிறந்தவர்கள் எம்மூன்று குணங்களில் இருந்து வழுவமாட்டார்கள்?

281. நற்குடியில் பிறந்தோர் எந்த நான்கு குணங்களைப் பெற்றிருப்பர்?
282. யார் ஒழுக்கம் குன்றிய தொழில்களைச் செய்ய மாட்டார்கள்?
283. எவர் பண்புடைமையிலிருந்து நீங்க மாட்டார்கள்?
284. எக்குடியில் பிறந்தவரின் குற்றம் பெரிதாக ஓங்கித் தோன்றும்?
285. இவ்வுலகம் எதனால் ஐயப்படும்?
286. தம்குடிமைக்கு யார் இழிவானச் செயல்களைச் செய்ய மாட்டார்கள்?
287. நற்குடியில் பிறந்தவருக்கு எப்பொழுது பணிவும், எப்பொழுது உயர்ச்சியும் வேண்டும்?
288. நற்குடியில் பிறந்தோர் எச்செயலால் தாழ்ந்துவிடுவர்?
289. பெருமை, சிறுமை எத்தொழில்களது வேறுபாட்டால் தோன்றும்?
290. பெரியராகார், சிறியராகார் யார்?
291. யார் வல்லராவார்?
292. சிறியோர் மனத்தில் எவை உண்டாகாது?
293. பெருமையுடையவர்கள் சிறப்பு என்ன?
294. சான்றோர்களின் நலம் என்பது யாது?
295. சால்பு என்பது எந்த அறத்தோடு ஒக்கும்?
296. யாருக்கு வறுமையானது இழிவுடையதாகாது?
297. பண்புடைமையை நூலோர் எவ்வாறு கூறுவர்?
298. உலகத்தார் கூறும் இரண்டு நன்னெறிகள் எவை?
299. உலகத்தார் எதனைக் கொண்டாடி நிற்பர்?
300. நற்பண்பின் இயல்பு யாது?
301. மரத்திற்கு ஒப்பாவார் யார்?
302. அறிவுடையார்க்கு எது குற்றமாகும்?
303. யார் உயிரோடிருப்பினும், செத்தவனாவான்?
304. யாருக்கு இழிபிறப்பு உண்டாகும்?
305. யார் பிறப்பு இப்பூமிக்குப் பாரமாகும்.?
306. எவரிடம் கோடிப்பொருள் இருப்பினும் பயன் இல்லை?
307. யார் ஒருவன் செல்வத்திற்கு நோய் ஆவான்?
308. நாணம் என்றால் என்ன?
309. எவை ஏ்லலார்க்கும் பொதுவாகும்?
310. நன்மக்களுக்கு எது சிறப்பு?

311. சான்றோர்க்கு எது ஆபரணம்?
312. உலகத்தார் நாணம் என்பதற்கு எதை உறைவிடம் என்பர்?
313. எதனைக் காப்பாற்ற நாணத்தை விடமாட்டார்கள்?
314. ஒருவன் குடி எச்செயலால் உயரும்?
315. யாருக்குத் தெய்வம் துணை செய்யும்?
316. யாருக்குத் தொழில் தானாகவே முடியும்?
317. உலகத்திற்கு அச்சாணி போன்றோர் யார்?
318. பயிர் விளைச்சலுக்கு எவையெல்லாம் நன்றாகும்?
319. நிலமகள் எச்செயலைக் கண்டு சிரிப்பாள்?
320. ஒருவனுக்கு வறுமை போலத் துன்பம் தருவது எது?
321. எப்போது ஒருவனுக்கு இம்மை, மறுமை இல்லாததாகிவிடும்?
322. ஒரு சேரக்கொடுப்பது எது?
323. தாயாலும் வெறுக்கப்படுபவன் யார்?
324. வறுமையாளருக்கு எது அழகாகும்?
325. துன்பங்கள் எல்லாம் ஒரு சேரக் கெடும் யாருக்கு?
326. வறுமையில் வாடுபவன் யாரைக்கண்டு யாசித்தல் வேண்டும்?
327. வறுமையால் பிறரிடம் சென்று யாசித்தல் குறித்துத் தொகுத்துரைக்க.
328. யாரிடம் இரவாமல் இருத்தல் கோடி மடங்கு நல்லதாகும்?
329. வன்மையுடையது போல் பிரிதொன்றும் இல்லை எது?
330. உலகைவிட பெருமை உடையது எது?
331. கயவரும் தேவரும் ஒரே தன்மை யாவர் ஏன்?
332. கயவர்களிடம் ஏன் ஆசாரம் உண்டாகும்?
333. கயவர் எதற்கு ஒப்பாவார்?
334. கயவன் யார் மீது குற்றம் உண்டாக்குவான்?

## பகுதி - II.

1. மக்களுக்கு எந்த அளவுதான் அறிவு சுரக்கும்?
2. ஒருவனுக்கு அழியாத செல்வம் எது?
3. கல்வி இல்லாமையின் இழிவு குறித்துத் தொகுத்து எழுதுக.
4. கல்வி கற்காதவருக்கு ஏற்படும் துன்பநிலையினை கட்டுரைக்க.
5. அறவழியில் பொருளினை ஈட்டி நல்லவனவற்றையே செய்தால் அடையும்

நன்மைகள் குறித்து எழுதுக.

6. தீயவழியில் பொருள் சேர்த்தால் அவை எவ்வாறெல்லாம் அழியும் என விளக்குக.
7. தூது செல்வோரின் தன்மைகள் குறித்து எழுதுக.
8. தகுதியான தூதுவர்கள் யார் விளக்கம் தருக.
9. தூது செல்வோன் அரசனுக்கு எவ்வாறு நன்றிக்கடன்பட்டவனாக இருத்தல் வேண்டும்?
10. தூதானவன் யார் விரிவான விளக்கம் தருக.
11. குறிப்பு அறிந்து செயல்படும் அமைச்சனால் அரசன் பெறும் நன்மை குறித்து எழுதுக.
12. எத்தகைய அமைச்சனை அரசர் தம்மிடம் வைத்துக் கொள்ளல் வேண்டும்?
13. ஒருவன் பார்வையால் எதனையெல்லாம் மற்றவர் அறிந்து கொள்ள முடியும்?
14. ஒருவன் மனதில் உள்ள கருத்தினை எது பளிங்கு போல் பிரதிபலித்துக் காட்டும்?
15. பிறர் கருத்தினை அளக்கும் கோலாகக் கண்கள் உரைக்கும் கருத்தினை விளக்குக.
16. பலர் கூடியிருக்கும் சான்றோர் சபையில் அறிவுடைய ஒருவன் எவ்வாறு இருத்தல் வேண்டும். குறள் வழிநின்று விளக்குக.
17. ஒரு நாடு எத்தன்மை உடையதாய் இருந்தால் சிறப்புடையதாக இருக்கும்.
    விளக்குக.
18. கேடு இல்லாத நாடு, குன்றாத நாடு விளக்குக.
19. எது அரண், எது அழகு என்பதை குறள்வழி நின்று எழுதுக.
20. ஒருவன் மானத்தை விட்டு அவ்வாறு நடந்து கொள்வது ஏன்?
21. மானம் கெடவரின் தாங்காது இறப்பர் யார்?
22. உலகத்தார் யாரைத் தொழுது துதிப்பர்?
23. மிகச்சிறந்த நற்குணங்களால் பெரியாராயினோரது தன்மைகளைக் கூறுக.

24. சிறியோரின் குணங்கள் குறித்து எழுதுக.

25. பண்பு உடையாரின் நற்குணங்களை விளக்குக.
26. பண்பில்லார் பெற்ற செல்வம் எக்குறைபாட்டினை ஒத்ததாம்?
27. நற்குடியில் பிறந்தவர் இழிச் செயல்கள் செய்ய நாணுதல் குறித்து எழுதுக.
28. இழிச்செயல்கள் செய்ய நாணாதார் குறித்து விளக்குக.
29. யாசிப்பதற்கு அஞ்சுதல் வேண்டும் விளக்கம் தருக.
30. பொருளை வைத்துக்கொண்டு மறைப்பவரைப் பற்றிக்குறள்வழி விளக்குக.
31. யாசிப்பவருக்குக் கொடுக்காமல் தம்மிடம் உள்ள பொருளை மறைப்பதினால் நேரும் கேடுகள் குறித்து எழுதுக.

## பகுதி - III.

1. நாட்டிற்கு தலைவனான மன்னனைப் பற்றி தொகுத்துரைக்க.
2. கல்வியின் சிறப்பும், பயனும் பற்றித் தொகுத்துரைக்க.
3. கல்வியை எவ்வாறு கற்க வேண்டும்?
4. ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வி எத்தனை பிறவிகளில் பயனுடையது?
5. கேள்விச் செல்வத்தினால் அடையும் நன்மைகள் குறித்து எழுதுக.
6. அறிவுடைமைப் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
7. குற்றங்கள் யாவை என்பதும் வராமல் காத்தலின் வழிகள் பற்றியும் கட்டுரைக்க.
8. பெரியாரைத் துணையாக வைத்துக் கொள்வதினால் நாம் அடையும் நன்மைகளை பட்டியல் இடுக.
9. மனத்தூய்மையால் வரும் நன்மைகள் குறித்து எழுதுக.
10. ஒருவன் தான் மேற்கொள்ளும் தொழிலினை எவ்வாறு செய்தல் வேண்டும், செய்தல் கூடாது என்பதனை வள்ளுவர் வழிநின்று விளக்குக.
11. வலியறிதல் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.
12. காலத்தின் தன்மையறிந்து அதன்படி நடந்தால் ஒருவனுக்கு வரும் நன்மைகள் குறித்து எழுதுக.
13. இடனறிந்து தொழிலினைச் செய்யாதவன் எவ்வாறு கெடுவான் எனக் கட்டுரைக்க.

14. அமைச்சர் முதலியவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகள் பற்றி வள்ளுவர் வழிநின்று தொகுத்துரைக்க.
15. தெளியப்பட்டவர்களை ஆளும் திறம் குறித்து கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
16. சுற்றத்தைப் பேணுதல் (காத்தல்) குறித்து விவரிக்க.
17. செங்கோண்மையின் சிறப்புக்களைத் தொகுத்துரைக்க.
18. அரசனின் கொடுங்கோண்மை பற்றி விவரிக்க.
19. கண்ணோட்டத்தின் சிறப்பு மற்றும் கண்ணோட்டம் இன்மையால் வரும் இழிவு விளக்குக.
20. ஒற்றர்களின் ஆற்றல் கடமை முதலியனவற்றைப் பட்டியலிடுக.
21. ஊக்கம் உடைமையால் ஒருவன் அடையும் நன்மைகள் குறித்து எழுதுக.
22. ஒருவன் சோம்பலினால் அடையும் துன்பத்தையும் இவை நீங்கி வாழ்ந்தால் அடையும் நன்மை குறிதது எழுதுக.
23. தொடர் உழைப்பால் அடையும் நன்மைகள் குறிதது எழுதுக.
24. இடுக்கண் அழியாமையால் அடையும் நன்மைகள் யாவை?

அங்கஇயல்

25. மதிநுட்பம் இல்லாத அமைச்சனால் வரும் கேடுகள் யாவை?
26. சொல்வன்மை குறித்துத் தொகுத்துரைக்க.
27. தொழில் செய்தற்கு வேண்டிய மனத்திண்மை குறித்துத் தொகுத்துரைக்க.
28. ஒருவன் தொழில் செய்யும் திறம் குறித்து விரிவான செய்திகளைத் தொகுத்துரைக்க.
29. அமைச்சர் அரசரைப் பொருந்தி நடந்து கொள்ளுதல் குறித்து எழுதுக.
30. அவை அஞ்சாமை குறிதது குறள்வழி கருத்துக்களை விவரித்துக் எழுதுக.
31. நாட்டினுடைய இயல்புகளும், சிறப்புகளும் குறித்துத் தொகுத்துரைக்க.
32. நாட்டிற்குச் சிறப்பான அரண் - கோட்டை விரிவான விளக்கம் தருக.
33. பொருள் செய்தலின் திறம், சிறப்புகள், குறித்துக்கட்டுரைக்க.
34. படையினுடைய சிறப்பும் நன்மையும் குறித்துத் தொகுத்து எழுதுக.
35. படையானது வீரமிகுதியினைக்குறள் வழிநின்று தொகுத்துரைக்க.

36. நண்பர்களைப் பற்றிய விளக்கமும், சிறப்பும், பயனும் பற்றித் தொகுத்துரைக்க.

37. நட்பு ஆராய்தல்,ஆராயாமல் நட்பு, நல்ல நட்பு, தீயநட்பு குறள்வழி விவரிக்க.

38. நட்பின் உரிமைகள், வரம்பு, நட்பின் சிறப்பு குறித்துதொகுத்துரைக்க.

39. தீயக்குணமுடையவர்களுடைய நட்புப்பற்றி ஆராய்க.

40. மனத்தால் கூடாமல் இருக்கும் பகைவர் நட்புக்குறித்து விளக்கம் தருக.

41. பேதைமையால் வரும் துன்பங்களைப் பட்டியலிடுக.

42. அற்ப அறிவுள்ளவன் தன்னைச் சிறந்த அறிஞனாக எண்ணி நடந்தால் வரும் துன்பத்தினைத் தொகுத்துரைக்க.

43. பகைமை உள்ளத்தால் உண்டாகும் மன வேறுபாடு குறித்து தொகுத்துரைக்க.

44. அறிவின்மையால் நேரும் பகையினை மாட்சிமைப்படுத்துதல் குறித்து விரித்துரைக்க.

45. பகைத்திறம் அதிகாரத்திலுள்ள குறட்கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

46. ஒருவனுக்கு உட்பகையினால் நேரும் துன்பங்களைப் பட்டியலிடுக.

47. தமது ஆற்றல்களினால் பெரியாரை அவமதித்து நடந்தால் என்னென்ன அழிவுகள் நேரிடும் விரித்துரைக்க.

48. மிகுந்த காமத்தால் மனைவிக்கு ஏவல் செய்து அவள்வழி நடப்பதினால் ஆண் தன்மைக்கு ஏற்படும் இழிவுகளை எடுத்துரைக்க.

49. ஏன் கள்ளுண்ணக்கூடாது, கள் உண்பதால் ஏற்படும் தீமைகளைத் தொகுத்துரைக்க.

50. சூதாட்டத்தின் தீமைகளும் விளைவுகளும் விரித்துரைக்க.

51. பிணிதீர்க்கும் மருந்து பற்றியும் நோய்தீர்க்கும் மருத்துவன் பற்றியும் கட்டுரைக்க.

52. உயர்ந்த குடியில் பிறந்தவரின் குணங்கள் குறித்துத் தொகுத்துரைக்க.

53. எக்காலத்திலும் தனது நிலையிலிருந்து தாழாமை தாழ்ச்சி ஏற்பட்டால் உயிர் வாழாமை விவரிக்க.

54. நற்குணம் நிறைந்த சால்புடையவர்கள் குறித்துக் கட்டுரைக்க.

55. சர்த்தவனுக்கும் பிறர்க்கும் பயன்படாமல் போகும் செல்வத்தினைக் கொண்டு குறள் வலியுறுத்தும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

56. குடிமக்களை உயரச் செய்யும் திறம் குறித்துத் தொகுத்துரைக்க.
57. உழவுத்தொழிலின் இன்றியமையாமை குறித்துக் கட்டுரைக்க.
58. ஒருவன் வறுமையினால் அடையும் துன்பங்களைத் தொகுத்துரைக்க.
59. மனிதத்தன்மை எதுவுமே இல்லாத கீழோா் இயல்பு குறித்துத் தொகுத்துரைக்க.

அலகு-1

## நாலடியாா் - அறத்துப்பால்

## (செல்வம் நிலையாமை, இளைமை நிலையாமை)

பதிணென்கீழ்க்கணக்கு நூல்களுள் முதலாவதாக வைத்து எண்ணப்படுவது நாலடியாா். வுாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைச் செய்திகளை மிகவும் எளிமையான சொற்களைக்கொண்டு நீதிபுகட்டும் நூலாகத் திகழ்கிறது. நீதிக்கருத்துக்களை உவமானங்கள் வழி வெளிப்படுத்துவதில் சிறந்து விளங்குகிறது.

கடவுள் வாழ்த்து குறிப்பிட்ட எந்தவொரு தெய்வத்தையும் சுட்டாமல் பொதுமையாக அமைந்துள்ளது. இந்நூல் சமண முனிவா்கள் பலரால் பாடப்பட்டுத் தொகுக்கப்பட்டது. பிற்காலத்தில் பதுமனாா் என்ற புலவா் திருக்குறளைப் பின்பற்றி இந்நூலைப் பாகுபாடு செய்துள்ளாா். மூன்று பால்கள், 11 இயல்கள், 40 அதிகாரங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. ஒவ்வொரு அதிகாரமும் பத்துப்பத்து வெண்பாக்களைக் கொண்டுள்ளன.

‘நாலடி’ என்பது நான்காகிய அடிகளை உடையது. பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப்பெயரோடு கருவியாகுப் பெயராக அமைந்துள்ளது.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய முப்பாலில் அறத்துப்பாலிலுள்ள செல்வம் நிலையாமை, இளை நிலையாமை என்னும் இரண்டு அதிகாரங்கள் பாடப்பகுதியாகவுள்ளன.

‘அறன்’ எனப்பட்டது ஆன்றோா்கள் விதித்தன செய்தாலும் விலக்கியன ஒழித்தலுமாம். இவ்வறத்தைப் பின்பற்றுதலால் இம்மை, மறுமை, வீடு என்னும் முப்பொருளையும் அடையலாம். அறத்துப்பாலில் நிலையாமை கருத்துக்கள் செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்ற வரிசையில் வைக்கப்பட்டுள்ளன. யாக்கைக்கு ஆயுசு நூறு வயதென்றும்

இளமைப்பருவத்திற்கு முப்பத்திரண்டு வயதென்றும் நியமங்களுண்டு. செல்வத்திற்கு இத்தனை நாள் என்ற உறுதி இல்லாமையால், வந்தபொழுது மறுமைக்கு உறுதியான அறங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காகச் செல்வம் நிலையாமையை முதலில் வைத்து, அவ்வாறு நிலையாத செல்வத்தை அனுபவிப்பதற்கு 32 வயதிற்குள் உள்ள இளமைப்பருவம் நிலையில்லாததால், இப்பருவத்தில் துறவறம் மேற்கொண்டு அறம் செய்க என்பதாலும் இளமை நிலையாமை, அதன்பின்பு வைக்கப்பட்டுள்ளது.

## I செல்வம் நிலையாமை

(செல்வத்தின் நிலையில்லாத் தன்மையை உணர்த்துகிறது.)

செல்வம் நிலையில்லாததால் செல்வங்கொண்டு அறம் செய்யும்போது இம்மைக்குப் புகழும், மறுமைக்குப் பயனும் அடைவதால் செல்வம் நிலையாமை முதலில் உணர்த்தப்பட்டுள்ளது.

### 1. செல்வரும் வறிஞராக மாறுதல்

அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்எனின், செல்வம்ஒன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று."

கார்த்தல், துவர்த்தல், தித்தித்தல், கைத்தல், புளித்தல், உவர்த்தல், ஆகிய அறுசுவையுள்ள உணவை மனையாள் மனம் விரும்பி உண்ணவைக்க,செல்வக்களிப்பில் தவிர்த்து உண்ட செல்வரும், ஒரு காலத்தில் வறுமையாளராகி, எங்கேனும் ஓரிடத்தில் போய்க் கூழை யாசிப்பர். அதனால் செல்வம் என்பது தனக்கென எப்போதும் நிலையென்று வைக்கக்கூடியதல்ல.

### 2. வண்டிச்சக்கரம் போன்றது செல்வம்

துகள்நீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க:
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்."

குற்றமில்லாது தன் முயற்சியால் உழைத்து ஈட்டிய செல்வத்தால் உண்டான உணவைப் பலரோடுங்கூடி உண்ணுக. ஏனென்றால் செல்வம் உறுதியாக யாரிடத்திலும் நிலைத்திராது. வண்டிச்சக்கரம் போல் மேல் கீழாக மாறிப்புரளும்.

### 3.படை அரசம் வறியராவர்

யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்

சேனைத் தலைவராய்ச் சென்றோரும் - ஏனை
வினைஉலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள."

பட்டாலும் மாலையாலும் சில ஆரவாரத்தாலும் யானையின் கழுத்து பொலிவுற வெண்கொற்றக் குடையின் நிழலில், பல சேனைகளுக்குத் தலைவராக உலாச் சென்ற அரசர்களும் தன் நல்வினை முடிந்து தீவினை வந்து சூழந்தபோது மணம் செய்த மனையாளையும் மண்மகளையும் பகைவர்கள் கவர்ந்து கொள்ள வறுமைக்கு ஆளாக நேரிடும்.

**4. இளமையிலே அறம் செய்க**

நின்றன நின்றன நில்லா எனவுணர்ந்
தொன்றின ஒன்றின வல்லே செயின்செய்க:
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று."

நிற்கும் நிற்கும் என்று தாம் விரும்பியிருந்த செல்வங்கள் பலவும் நம்மிடம் நிலைத்து நில்லாதவை என்பதை உணர்ந்து, தன் வலிமைக்கு ஏற்ற அறங்களை விரைந்து செய்ய வேண்டும். கூற்றுவன் சினந்து விரைந்து வருவதால் நம் வாழ்நாட்கள் செல்கின்றன. ஆதலால் நிலையில்லாத செல்வங்களைக்கொண்டு விரைவில் அறம் செய்க.

**5) இளமையில் அறம் செய்தவர் புண்ணிய உலகம் புகுவர்**

என்னானும் ஒன்றுதம் கையுறப் பெற்றக்கால்
பின்னாவ தென்று பிடித்திரா-முன்னே
கொடுத்தார் உயப்போவர் கோடில்தீக் கூற்றம்
தொடுத்தாறு செல்லும் சுரம்."

யாதாயினும் ஒரு சிறிய பொருள் தன் கைக்குள் கிடைத்தாலும் பின்னாளிற்கு ஆகுமென்று சேர்த்து வைத்திருத்தல் கூடாது. யாக்கையும் பொருளும் அழிவதற்கு முன்னே அறத்தைச் செய்தவர்கள் அருளில்லாத கூற்றுவன் பாசக்கயிற்றால் கட்டிக்கொண்டு போகின்ற காட்டு வழியிலிருந்து தப்பிப் புண்ணிய உலகம் புகுவார்.

**6. குறித்த ஆயுளுக்குள் அறம் செய்தல் வேண்டும்.**

இழைத்தநாள் எல்லை இகவா: பிழைத்தொரீஇக்
கூற்றம் குதித்துய்ந்தார் ஈங்கில்லை: ஆற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமின், நாளைத்

தழீஇம்தழீஇம் தண்ணம் படும்."

ஒருவருக்குக் குறித்த ஆயுள்நாட்கள் தம் எல்லையைக் கடவாது. அந்நாட்களுக்குள் தவறு நீங்கி, கூற்றுவனிடத்திலிருந்து தப்பி உயிர் வாழ்ந்தவர் எவரும் இவ்வுலகில் இல்லை. நாளையே தழீஇம் தழீஇம் என்று ஓசையுடன் சாக்காட்டுப் பறையொலிக்கும். ஆதலால் பெரும்பொருளைத் தேடி வைத்தவரே! குறித்த நாளுக்குள் அறம் செய்தல் வேண்டும்.

**7. அருளுடையராதலே பிறவிப் பயன்**

தோற்றம்சால் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்றம் அளந்துநும் நாளுண்ணும்:-ஆற்ற
அறஞ்செய் தருளுடையீர் ஆகுமின்: யாரும்
பிறந்தும் பிறவாதா ரில்."

பகலவனின் தோற்றம் மறைவையே நாளாகக்கொண்டு கூற்றுவனானவன் நும்முடைய வாழ்நாட்களை அளந்துண்ணும் ஆதலால் நீர்பெற்ற பெருஞ்செல்வத்தை மிகுதியாகப் பிறருக்கு விருப்பத்துடன் அறஞ்செய்து அருளைப் பெற்றவராவீர். பிறருக்கு அறஞ்செய்யவில்லையாயின் பிறந்தும் பயன்கொள்ளாத பிறவாதாரில் வைத்து எண்ணப்படுவர்.

**8. மறுமை எண்ணாதார் செல்வம் மின்னலைப் போன்றது.**

செல்வர்யாம் என்றுதாம் செல்வுழி எண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வம்-எல்லில்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி
மருங்கறக் கெட்டுவிடும்."

நாம் மிகுந்த செல்வமுடையவர் என்று களித்து இனிதாம் செல்லக்கூடிய மறுமையுலகத்தை நினையாத, சிறிய அறிவுடையவரது மிகுந்த செல்வம் இரவில் கரிய மேகம் வாய்திறந்து மின்னுவது போலத் தோன்றி, இருந்த இடம் தெரியாமல் அழிந்துபோகும்.

**9. அறஞ்செய்யாத செல்வம் இழந்ததாகக் கருதப்படும்**

உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்-கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல், அஆ
இழந்தான்என றெண்ணப் படும்."

இன்றியமையாத உணவுகளை உண்ணாமலும், தன் மதிப்பை நிலைக்கச் செய்யாமலும், பெருகுகின்ற புகழைச் செய்துகொள்ளாமலும், நெருங்கிய உறவினர்களின் துன்பங்களை நீக்காமலும், யாசிப்பவர்களுக்கு உதவாமலும், செல்வத்தைக் காத்துக் கொண்டிருந்தாலும் அச்செல்வத்தை இழந்தவனே என்று கருதப்படுவான்.

**10. அறஞ் செய்யாத செல்வம் தேனீயைப் போல இழக்க நேரிடும்**

உடாஅதும் உண்ணாதும் தம்உடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமும் செய்யார்-கொடாஅது
வைத்தீட்டி னார்இழப்பர், வான்தோய் மலைநாட!
உயத்தீட்டும் தேனீக் கரி."

வானத்தைத் தோய்கின்ற அளவிற்கு உயர்ந்த மலை நாட்டுத் தலைவனே! நல்ல ஆடைகள் அணியாமலும், உணவுகள் உண்ணாமலும் தம் உடம்பை வருத்தியும் நல் அறச்செயல்கள் செய்யாமலும் ஒருவருக்கும் ஒன்றும் கொடுக்காமல் தேடி வைத்த செல்வமானது, தேனீக்கள் பல பூக்களிலிருந்து தொகுத்து வைத்த தேனைப் போன்று இழக்க நேரிடும்.

## II இளமை நிலையாமை

இளமை நிலையில்லாத் தன்மையை உணர்த்துவதாகும். (16 வயதுக்கு மேல் 32 வயதுக்குள் இளமைப்பருவம் எனப்பட்டது)

**1. இளமைப் பருவத்தை அறவழியில் பயன்படுத்துதல்**

நரைவரும் என்றெண்ணி நல்லவறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார் - புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே கோல்ஊன்றி
இன்னாங் கெழுந்திருப் பார்."

மூப்பு வருமென்று எண்ணி, மிகுந்த அறிவுடையவர்கள் இளமைப்பருவத்திலே பற்றற்ற நிலை அடைவர். குற்றம் நீங்காத, நிலையில்லாத இளமைக் காலத்தை அறவழியில் பயன்படுத்தாதவர்கள் கோல் ஊன்றி, பிறப்பால் பயன்கொள்ளப்படாத மூப்பு நிலை எய்துவர்.

**2. இளமையைப் பொருட்படுத்தினால் உறவுகள் அறுந்துபோகும்.**

நட்புநார் அற்றன நல்லாரும் அஃகினார்
அற்புத் தளையும் அவிழ்ந்தன: - உட்காணாய்:
வாழ்தலின் ஊதியம் என்னுண்டாம்? வந்ததே

ஆழ்கலத் தன்ன கலி.”

இளமையைப் பொருளாக நினைத்து மகிழ்ந்து வாழ்வதனால், நட்புகள் அறுந்தன. சான்றோர்களின் அணுக்கம் குறைந்தன. பொதுமக்களிடம் உண்டான அன்பு நெகிழ்ந்தன. அதனால் கடலில் மூழ்கிவிடுகின்ற மரக்கலத்தை ஒத்த துன்பமானது வந்து சேரும்.

**3. காமநோக்கமுடையவர் பேரின்பம் எய்துவில்லை.**

சொல்தளர்ந்து கோல்ஊன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பல்கழன்று  பண்டம் பழிகாறும்-இல்செறிந்து
காம நெறிபடருங் கண்ணினார்க் கில்லையே
ஏம நெறிபடரு மாறு.”

சொல் தடுமாறி, கையில் கோல் ஊன்றித் தள்ளாடிய நடையை உடையவராய், பற்கள் உதிர்ந்து, இந்த உடம்பு பழிக்கப்படும் அளவும் மனைவியோடு பற்றுக் கொண்டிருந்து காமவழியில் செல்லும் சிற்றறிவுடையவருக்கு நன்னெறியாகிய பேரின்பம் எய்த வழியில்லை.

**4. இளமையில் காமத்தில் ஆழ்ந்தவர்களுக்கு வருத்தம் வந்து சேரும்**

தாழாத் தளராத் தலைநடங்காத் தண்டூன்றா
வீழா இறக்கும் இவள்மாட்டும்-காழ்இலா
மம்மர்கொள் மாந்தர்க் கணங்காரும் தன்கைக்கோல்
அம்மனைக்கோல் ஆகிய ஞான்று.”

முதுகு தாழ்ந்து, நடைதளர்ந்து, தலை நடுங்க தண்டூன்றி மூப்பில் கழிக்கின்ற பெண்ணின் கையிலிருக்கும் கோலானது அவளுடைய தாயின் கையிலிருக்கும் காலத்தில் இவள் இளமையுடன் இருந்தாள். அப்போது இவளிடம் நன்மையில்லாத மயக்கத்தைக் கொண்ட ஆடவர்க்குத் தெய்வப் பெண் போல வருத்தம் உண்டாகும்.

**5. இன்று இளமை, நாளை முதுமை இயல்பாதல்**

எனக்குத்தாய் ஆகியாள் என்னைஈங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள்:-தனக்குத்தாய்
ஆகி  யவளும் அதுவானால் தாய்த்தாய்க்கொண்
டேகும் அளித்திவ் வுலகு.”

இளமை கழந்து எனக்குத் தயாகியவள் என்னை இவ்விடத்தில் இருத்திவிட்டுத் தனக்குத் தாயை நாடவேண்டி இறந்து போயினாள், தனக்குத்

தாயாகியவளும் இளமை கழிந்து தாயை நாடிக்கொண்டு போகின்றது இவ்வேழை உலகம்.

### 6. இளமையிலுள்ள நிலையா மகிழ்ச்சி அறிவுடையாரிடமில்லை

வெறியயர் வெங்களத்து வேல்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
அறிவுடை யாளர்கண் இல்.

வெறியாடல் செய்யும் பலிக்களத்தில், வெறியாடுவோனுடைய கையில் தளிர்கள் இடையே மலர் வைத்துக் கட்டப்பட்டிருக்கும் மலர் மாலை அணிந்தருப்பான். அதைக் கண்ட பலி ஆடு, மாலையிலுள்ள தளிரைத் தனக்கு உணவாகக் கருதி மகிழும். அது போல இளமையில் வரும் நிலையில்லாத மகிழ்ச்சியை உணர்ந்த அறிவுடையார்களுக்குத் துன்பமில்லை.

### 7. இளமைப் பருவம் பழம் உதிர்வது போன்றது

பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை:-நனிபெரிதும்
வேல்கண்ணன் என்றிவளை வெ.ஃ.கன்மின் மற்றிவளும்
கோல்கண்ண ளாரும் குனிந்து."

இளமைப் பருவமானது, குளிர்ச்சியுடைய சோலையிலுள்ள மரங்களிலிருந்து பழங்கள் உதிர்ந்து விழுவது போன்றதாகும். இளமையுடையவரும் மூப்பினால் கூனாகி ஊன்றுகோலையே கண்ணாகப் பயன்படுத்தக்கூடியவளாவாள். அதனால் இளம்பெண்களை வேல்போலும் கண்ணுடையாள் என்று மிகப் பெரிதும் விரும்ப வேண்டாம்.

### 8. உடம்பின் இளமையை அறிவுடையோர் பொருட்படுத்தமாட்டார்.

பருவம் எனைத்துள பல்லின்பால் ஏனை
இருசிகையும் உண்டீரோ என்று-வரிசையால்
உண்ணாட்டம் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோள்
எண்ணார் அறிவுடை யார்.

வயது எவ்வளவு ஆகின்றன? பல்லின் தன்மை எப்படி இருக்கின்றன? இரண்டு பிடி அளவு உணவேனும் உண்கின்றீர்களா? என்று ஒன்றன்பின் ஒன்றாகப் பிறரைப் பற்றி நலம் அறிந்து கொள்பவர்கள் இளமை முதுமையாகும் என்று

உணர்ந்தவர்கள் ஆவார். அத்தகைய அறிவுடையோர் இளமையை ஒருபொருட்டாகக் கருதமாட்டார்கள்.

### 9. இளமையிலேயே அறம் செய்க

மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்:
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு."

யாம் இளமைப் பருவமுடையவர்கள். அதனால் நற்செயல்களைப் பின்னாள் செய்து கொள்ளலாம் என்று கருதாமல், கையில் பொருள் உள்ளபோதே ஒளியாமல் அறஞ் செய்ய வேண்டும். ஏனென்றால், பழுத்த பழங்கள் மட்டும் உதிர்வதில்லை. கோடைக் காற்றினால் நல்ல காய்களும் மரங்களிலிருந்து உதிர்ந்து விழுவதுண்டு. அதனால் மூத்தோர்களுக்கு மட்டும் இறப்பு இல்லை. இளையோருக்கும் இறப்பு உண்டு என்பதால் அறம் செய்க.

### 10. இளமையில் இறப்பு உண்டென்பதால் மறுமைக்குப் புண்ணியம் செய்க.

ஆடபார்த் துழலும் அருளில்கூற் றுண்மையால்
தோட்கோப்புக் காலத்தால் கொண்டுய்ம்மின்-பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாய் அலறக் கோடலான் மற்றதன்
கள்ளம் கடைப்பிடித்தல் நன்று."

உயிரைப் பிரிக்கும் இரக்கம் இல்லாத கூற்றுவன் ஒருவன் இருக்கின்றான். அவன் முற்றாத இளங்கருவையும், குழந்தையையும் தாய் அலறியழும்படி உயிரைக்கொள்ளும் கடுமையைச் செய்வான். இதை நினைவில் இருத்தி, வழிப்பயணத்திற்குக் கட்டுச்சோறு உதவுவதுபோல மறுமைக்குப் புண்ணியக் காரியங்களைச் செய்தல் நன்று.

### நாலடியார் - வினாக்கள்

### பகுதி I

1. செல்வக்களிப்பில் உணவைத் தவிர்த்தவர், எதையாசிப்பர்?
2. வண்டிச் சக்கரம் போன்றது எது?
3. தீவினை சூழ்ந்தபோது வறிஞராகக் கூடியவர் யார்?
4. கூற்றுவன் ஆயுள் நாளைக் குறைக்க வருவதால் எப்போதிருந்தே அறம் செய்ய வேண்டும்?
5. இளமையில் அறம் செய்தால் பாசக்கயிற்றிலிருந்து தப்பிச் செல்லும் இடம் எது?
6. அறம் செய்யாதவருக்கச் சாக்காட்டுப் பறை எவ்வாறு ஒலிக்கும்?
7. பிறவிப்பயன் அடைபவர் யார்?

8. கூற்றுவனன் எவ்வாறு ஒரு நாளை அளப்பான்?
9. யாருடைய செல்வம் மின்னலைப் போன்றது?
10. அறஞ்செய்யாத செல்வம் எவ்வாறு கருதப்படும்?
11. தேனீக்களின் தேனைப் போன்றது எது?
12. மூப்பு வருவதால் இளையோர் என்ன செய்ய வேண்டும்?
13. இளமையைப் பொருட்படுத்தினால் எது அறுந்துபோகும்?
14. காமநோக்கமுடையவர் _____ எய்துவதில்லை?
15. இளமைக்காலத்தில் மயக்கத்தைக் கொண்ட ஆடவர்க்குத் _____ உண்டாகும்.
16. பழம் உதிர்வது எதைப் போன்றது?
17. இளமைக்கு இறப்பு உண்டு என்பதால் மறுமைக்கு ______ செய்க

### பகுதி II

1. கடலில் மரக்கலம் மூழ்குவது போன்ற துன்பம் எப்போது வரும்?
2. இளமைப்பருவ ஏழை உலகம் எத்தகையது?
3. பலி ஆடு எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?
4. பிறரைப் பற்றிய நலம் அறிவது ஏன்?
5. 'தீ வளியால் நற்காய் உதிர்தலும் உண்டு' இவ்வுவமையை விளக்குக.
6. இளமை நிலையாமையில் கூறப்பட்ட கூற்றுவனின் கொடுஞ்செயல்கள் யாவை?
7. மூப்பின் தன்மைகளாக 'இளமை நிலையாமை' அதிகாரம் கூறுவன யாவை?

### பகுதி III

1. நாலடியார் கூறும் 'செல்வம் நிலையாமை' என்ற அதிகாரத்தின் பாடல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
2. நாலடியார் கூறும் 'இளமை நிலையாமை' எனும் அதிகாரத்தின் பாடற்கருத்தினை விளக்குக.

## அலகு : 2 இன்னா நாற்பது (1-20 பாடல்கள்)

'இன்னா நாற்பது' கடைச்சங்கப் புலவர்கள் இயற்றிய கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஒழுக்கத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட நீதிநூல். உலகிலுள்ள இன்னாதவை இவை இவை என்று பட்டியலிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாட்டிலும் நான்கு இன்னாதவை கூறி, நாற்பது பாட்டிலும் 160 இன்னாதவை எடுத்தியம்பப்பட்டுள்ளன. இந்நூலின் ஆசிரியர் கபிலர். கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவன், பலராமன், மாயோன், முருகன் என நால்வரும் வணங்கப்பட்டுள்ளனர். இதிலிருந்து சமயக்கொள்கையில் இவர் பொது நோக்குடையவர் என்பது புலனாகிறது.

இந்நூலிலுள்ள இன்னாதவை ஊர், வீடு, பெற்றோர், மனைவி, கல்வி, சொல், கொடை, தற்காப்பு, நட்பு, இழியாமை, அரசியல், தொழில், பண்பாடு, துறவு, இயற்கை முதலிய பொருள்களில் வகைப்படுத்தலாம்.

1. முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா
   பொற்பனை வெள்ளையை யுள்ளா தொழுகின்னா
   சக்கரத் தானை மறப்பின்னா வாங்கின்னா
   சத்தியான் றாடொழா தார்க்கு.

மூன்று கண்களையுடைய இறைவனாகிய சிவபெருமானின் திருவடிகளை வணங்காதவர்களுக்குத் துன்பம் உண்டாகும். அழகிய பனைக்கொடியை உடையவனாகிய பலராமனை நினைக்காமல் இருந்தால் துன்பத்திற்கு ஆளாகுவார். திகிரிப்படையை உடையவனாகிய மாயோனை மறத்தல் இன்னா துன்பமாகும். வேற்படையை உடைய முருகக்கடவுளின் திருவடிகளை வணங்காதவர்களுக்கும் துன்பம் உண்டாகும்.

2. பந்தமில் லாத மனையின் வனப்பின்னா
   தந்தையில் லாத புதல்வ னழகின்னா
   அந்தண ரில்லிருந் தூணின்னா வாங்கின்னா
   மந்திரம் வாயா விடின்.

சுற்றமில்லாத இல்வாழ்க்கையின் அழகானது துன்பமாகும். தந்தையில்லாத பிள்ளையினது அழகானது துன்பமாகும். துறவோர் வீட்டிலிருந்து உண்ணுதல் துன்பமாகும். அவ்வாறே மறைமொழியாகிய மந்திரங்கள் பயனளிக்காவிட்டால் துன்பமாகும்.

3. பார்ப்பாரிற் கோழியு நாயும் புகலின்னா
   ஆர்த்த மனைவி யடங்காமை நன்கின்னா
   பாத்தில் புடைவை யுடையின்னா வாங்கின்னா
   காப்பாற்ற வேந்த னுலகு.

பார்ப்பனர் வாழும் வீட்டில் கோழியும், நாயும் நுழைதல் துன்பமாகும். திருமணம் செய்துகொண்ட மனைவி அடங்கி நடக்காமல் இருப்பது மிகவும் துன்பமாகும். பகுப்பு இல்லாத புடவையை உடுத்துவது துன்பமாகும். அவ்வாறே குடிகளைக் காக்காமல் இருக்கும் அரசனுடைய நாடு துன்பமாகும்.

4. கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
   நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
   கடுமொழி யாளர் தொடர்பின்னா வின்னா

தடுமாறி வாழ்த லுயிர்க்கு.

கொடுங்கோல் செலுத்தும், கொலைத் தொழிலையுடைய, அரசரது ஆட்சியின் கீழ் வாழ்வது துன்பமாகும். மிகுந்த நீரையுடைய ஆற்றில் தெப்பமில்லாமல் கடந்து செல்லுதல் துன்பமாகும், வன்மையான சொற்களைக் கூறுபவரின் நட்பு துன்பமாகும், உயிர்கள் மனத்தடுமாற்றமடைந்து வாழ்வது துன்பமாகும்.

5. எருதி லுழவர்க்குப் போகீர மின்னா
கருவிகண் மாறிப் புறங்கொடுத்த லின்னா
திருவுடை யாரைச் செறலின்னா வின்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

உழவுக்குரிய எருது இல்லாத உழவர்க்கு உழவுத் தொழிலாளர்க்கு ஈரமில்லாத மண் துன்பமாகும், படைக்கருவியின் நிலையழிந்து புறங்கொடுத்தல் மிகுந்த துன்பத்தை தருவதாகும்; மிகுந்த செல்வமுடையவரிடம் செற்றங்கொள்ளல் துன்பம் தருவதாகும் ; பெரும் வலிமையுடையவர்க்குத் தீமை செய்தல் துன்பம் தருவதாகும்.

6. சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா
உறைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா
முறையின்றி யாளு மரசின்னா வின்னா
மறையின்றிச் செய்யும் வினை.

வேலியில்லாத கரும்பினைப் பாதுகாத்தல் துன்பமாகும். மழைத்துளி ஒழுகும் பழைய கூரையையுடைய மனையில் சேர்ந்து வாழ்தல் துன்பமாகும் ; நீதியில்லாமல் ஆளுகின்ற அரசரது ஆட்சி துன்பமாகும் ; மறை சூழ்ச்சியில்லாமல் செய்யும் விலை கருமம் துன்பம் தருவதாகும்.

7. அறமனத்தார் கூறுங் கடுமொழியு மின்னா
மறமனத்தார் ஞாட்பின் மடிந்தொழுக லின்னா
இடும்பை யுடையார் கொடையின்னா வின்னா
கொடும்பா டுடையார்வாய்ச் சொல்.

அறத்தை விரும்பும் நெஞ்சத்தினர் சொல்லுகின்ற கடுஞ்சொல்லும் துன்பமாகும் ; வீரத் தன்மையையுடைய நெஞ்சத்தினர் போரின்போது சோம்பி இருத்தல் துன்பமாகும் ; வறுமை உடையவரது ஈகைத் தன்மை துன்பமாகும் ; கொடுமை உடையவரது வாயிற் சொல்லும் துன்பமாகும்.

8. ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா
நாற்ற மிலாத மலரி னழகின்னா

தேற்ற மிலாதான் றுணிவின்னா வாங்கின்னா
மாற்ற மறியா னுரை.

வலியில்லாதவன் கையில் பிடித்த படைக்கலம் துன்பமாகும் ; மணமில்லாத மலரின் அழகானது துன்பமாகும் ; தெளிவு இல்லாதவன் துணிந்து ஒரு செயலைச் செய்தால் துன்பமாகும் ; அவ்வாறே, சொல்லின் கூறுபாட்டினை அறியாமல் சொல்வது துன்பமாகும் ; பேசும் முறைமை என்றும், எதிர்க்கும் மொழி என்றும் கூறுவர்.

9. பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா
நகையாய நண்பினார் நாரின்மை யின்னா
இகலி னெழுந்தவ ரோட்டின்னா வின்னா
நயமின் மனத்தவர் நட்பு.

ஞாயிறு போன்ற மனமுடையவர் பண்பில்லாதிருத்தல் துன்பமாகும் ; நகுதலையுடைய நண்பர் அன்பில்லாமல் இருத்தல் துன்பமாகும் ; போரின்போது எதிர்த்து எழுந்தவர் புறங்காட்டி ஓடுதல் துன்பமாகும் ; நீதியில்லாத மனத்தை உடையவரது நட்பு துன்பமாகும்.

10. கள்ளில்லா மூதூர் களிகட்கு நன்கின்னா
வள்ளல்க ளின்மை பரிசிலர்க்கு முன்னின்னா
வண்மை யிலாளர் வனப்பின்னா வாங்கின்னா
பண்ணில் புரவி பரிப்பு.

கள் இல்லாத பழமையான ஊரில் கள்ளுண்டு களிப்பார்க்கு மிகவும் துன்பமாகும் ; வள்ளல்கள் இல்லாமல் இருத்தல் இரவலர்க்கு மிகவும் துன்பமாகும் ; ஈகைக் குணமில்லாதவர்களுடைய அழகு துன்பமாகும் ; அவ்வாறே, கலணையில்லாத, குதிரை மேல்ஏறிச் செல்லுதல் துன்பமாகும்.

11. பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா
இருள்கூர் சிறுநெறி தாந்தனிப்போக் கின்னா
அருளில்லார் தங்கட் செலவின்னா வின்னா
பொருளில்லார் வண்மை புரிவு.

பாட்டின் பொருளை அறியும் அறிவுடையார் இல்லாத இடத்தில் பாட்டு உரைத்துக் கூறியது துன்பமாகும் ; இருள் மிகுந்த சிறிய வழியிலே தனியாகப் போவது துன்பமாகும் ; அருள் இல்லார் தண்ணளி இல்லாதவரிடத்திற்குச் செல்லுதல் துன்பமாகும் ; பொருளில்லாதவர் ஈதலை விரும்புதல் துன்பமாகும்.

12. உடம்பா டில்லாத மனைவிதோ ளின்னா
இடனில் சிறியாரோ டியாத்தநண் பின்னா

இடங்கழி யாளர் தொடர்பின்னா வின்னா
கடனுடையார் காணப் புகல்.

உள்ளம் பொருந்தல் இல்லாத மனைவியின் தோளைச் சேர்வது துன்பமாகும் ; விரிந்த உள்ளமில்லாத சிறுமை உடையாருடன் தொடர்ந்த நட்பு துன்பமாகும் ; மிகுந்த காமத்தினை உடையவரது சேர்க்கை துன்பமாகும் ; கடன் கொடுத்தவர் பார்க்குமாறு அவர்க்கெதிரே செல்வது துன்பமாகும்.

13. தலைதண்ட மாகச் சுரம்போத லின்னா
வலைசுமந் துண்பான் பெருமித மின்னா
புலையுள்ளி வாழ்த லுயிர்க்கின்னா வின்னா
முலையில்லாள் பெண்மை விழைவு.

தலை அறுபடும்படி காட்டிற்குச் செல்லுதல் துன்பமாகும் ; வலையைச் சுமந்து அதனால் உண்டு வாழ்பவனது செருக்குத் துன்பமாகும் ; புலால் உண்ணுவதை விரும்பி வாழும் மக்கள் உயிர்க்குத் துன்பமாகும் ; முலை இல்லாதவள், பெண் தன்மையை விரும்புதல் துன்பமாகும்.

14. மணியிலாக் குஞ்சரம் வேந்தூர்த லின்னா
துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை யின்னா
பணியாத மன்னர்ப் பணிவின்னா வின்னா
பிணியன்னார் வாழு மனை.

ஓசையினால் தன் வருகையைப் பிறர்க்கு அறிவிக்கும் மணியை அணியப் பெறாத யானையில் அரசன் ஏறிச் செலுத்துதல் துன்பமாகும்.பகையை வெல்லும் துணிவில்லாதார் சொல்லும் வீர மொழிகள் துன்பமாகும் ; வணங்கத்தகாத அரசரைப் பணிந்து வணங்குதல் துன்பமாகும் ; கணவர்க்குப் பிணி போலும் மனைவி வாழ்கின்ற வீடு துன்பமாகும்.

15. வணரொலி யைம்பாலார் வஞ்சித்த லின்னா
துணர்தூங்கு மாவின் படுபழ மின்னா
புணர்பாவை யன்னார் பிரிவின்னா வின்னா
உணர்வா ருணராக் கடை.

குழற்சியான தழைத்த கூந்தலையுடைய மகளிர் தம் கணவரை வஞ்சித்தொழுகுதல் துன்பமாகும் ; கொத்தாகத் தொங்குகின்ற மாவினது நைந்து விழுந்த கனி துன்பமாகும் ; வேற்றுமையின்றிப் பொருந்திய பாவை போலும் மகளிரைப் பிரிதல் துன்பமாகும் ; அறியும் தன்மையர் அறியாதபோது துன்பமாகும்.

16. புல்லார் புரவி மணியின்றி யூர்வின்னா

கல்லா ருரைக்குங் கருமப் பொருளின்னா
இல்லாதார் நல்ல விருப்பின்னா வாங்கின்னா
பல்லாரு ணாணப் படல்.

புல்லை உண்கின்ற குதிரையை மணியில்லாமல் ஏறிச் செலுத்துதல் துன்பமாகும் ; கல்வியில்லாதார் கூறும் காரியத்தின் பயன் துன்பமாகும் ; பொருளில்லாதவர் நல்லவற்றை விரும்பும் விருப்பம் துன்பமாகும் ; அவ்வாறே, பலரின் நடுவே நாணப்படுதல் துன்பமாகும்.

17. உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணி லொருவன் வனப்பின்னா வாங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு.

உண்ணாமல் வைக்கும் பெரிய பொருள் துன்பமாகும் ; உளம் பொருந்தாத பகைவரது சேர்க்கை மிகவும் துன்பமாகும் ; விழியில்லாத ஒருவனது அழகு துன்பமாகும் ; அவ்வாறே, எண் நூல் பயிலாதவன் இயற்றும் கணக்கு துன்பமாகும்.

18. ஆன்றவிந்த சான்றோருட் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா வாங்கின்னா
ஈன்றாளை யோம்பா விடல்.

கல்வியால் நிறைந்து அடங்கிய பெரியோர் நடுவே அறிவில்லாதவன் செல்லுதல் துன்பமாகும் ; மயங்கி இருண்டுள்ள காலத்தில் வழிச் செல்லுதல் மிகவும் துன்பமாகும் ; துன்பங்களைப் பொறுத்து மனம் அடங்கி வாழமாட்டாதவர்கள் நோன்பு இருத்தல் துன்பமாகும் ; அவ்வாறே, பெற்ற தாயைக் காப்பாற்றாமல் விடுவது துன்பமாகும்.

19. உரனுடையா னுள்ள மடிந்திருத்த லின்னா
மறனுடை யாளுடையான் மார்பாத்த லின்னா
சுரமரிய கானஞ் செலவின்னா வின்னா
மனவறி யாளர் தொடர்பு.

திண்ணிய அறிவுடையவன் உள்ளத்தில் மனஉளைச்சலுடன் இருத்தல் துன்பமாகும்; வீரமுடைய ஆட்களை உடையவன் மார்பு தட்டிக் கொள்ளுதல் துன்பமாகும் ; அறநெறியாகிய இயங்குதற்கரிய காட்டிற்குச் செல்லுதல் துன்பமாகும்; மன வறுமையுடையாரது சேர்க்கை துன்பமாகும்.

20. குலத்துப் பிறந்தவன் கல்லாமை யின்னா

நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா
நலத்தகையார் நாணாமை யின்னாவாங் கின்னா
கலத்தல் குலமில் வழி.

நற்குடியில் பிறந்தவன் கல்லாமல் இருப்பது துன்பமாகும்; பூமியில் விதைத்த நல்ல விதைகள் முளையாமல் போன்ற துன்பமாகும் ; நன்மையாகிய அழகினையுடைய மகளிர் நாணமின்றி ஒழுகுதல் துன்பமாகும் ; அவ்வாறே, ஒவ்வொரு குலத்திலே மணஞ் செய்து கொள்வது துன்பமாகும்.

21. மாரிநாட் கூவுங் குயிலின் குரலின்னா
வீர மிலாளர் கடுமொழிக் கூற்றின்னா
மாரி வளம்பொய்ப்பி னூர்க்கின்னா வாங்கின்னா
மூரி யெருத்தா லுழவு.

மழைக்காலத்தில் கூவுகின்ற குயிலினது குரலோசை துன்பமாகும் ; அன்பில்லாதவரது கடுமையாகிய சொல் துன்பமாகும் ; மழை வளம் பொய்க்குமாயின் உலகிற்குத் துன்பமாகும் ; அவ்வாறே, கட்டுக்கடங்காத எருதால் உழுவது துன்பமாகும்.

## இன்னா நாற்பது - வினாக்கள்

### பகுதி I

1. இன்னா நாற்பது ஆசிரியர் _________
2. வள்ளல்கள் இல்லாமை யாருக்கு இன்னா?
3. அறமனத்தார் கூறும் __________ இன்னா
4. யாரைப் பேணாமல் கைவிடுதல் துன்பமாகும்.
5. பொருந்தாப் பகைவர் _________ இன்னா
6. குடிமக்களைக் காப்பாற்றாத _________ இன்னா
7. மழை வளம் பொய்த்துப் போனால் _________ இன்னா
8. இன்னா நாற்பது நூலில் _________ இன்னாதவை கூறப்பட்டுள்ளன.
9. அறிவும் அடக்கமும் உடைய சான்றோர் இடையே ________ புகல் இன்னா
10. கல்லார் உரைக்கும் _________ இன்னா

### பகுதி II

1. கல்விக் கலை குறித்துக் கூறப்பட்ட இன்னாதவை எவை?
2. கொடைத்தன்மை பற்றிய இன்னாதன யாவை?
3. எவ்வகை நட்பு துன்பம் தரக்கூடியது?
4. எத்தகைய அரசியல் துன்பம் விளைவிப்பன?
5. இயற்கையில் இன்னாதவை எவை?

### பகுதி III

1. மக்களுக்குப் பயன் விளைவிக்கும் பொருட்டுக் கூறப்பட்ட இன்னாதவை எவை?

## அலகு : 2 இனியவை நாற்பது (1-20 பாடல்கள்)

சங்கம் மருவிய காலப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று, இனியவை நாற்பது. இதன் ஆசிரியர் பூதஞ்சேந்தனார். இந்நூல் கடவுள் வாழ்த்தில் சிவன், திருமால், பிரம்மன் ஆகிய மும்மூர்த்திகள் வணங்கப்படுகின்றனர். இனிய பொருட்களை 40 பாடல்களில் விரிப்பதால் ‘இனியவை நாற்பது’ என அன்மொழித்தொகையாய் நூலுக்குக் காரணக்குறிப்பெயரால் அமைந்துள்ளது. இன்னா நாற்பதை அடுத்து இனியவை எவை என்பது பற்றி இந்நூல் பேசுகின்றது. கடவுள் வாழ்த்து சேர்த்து 41 வெண்பாக்கள் பாடப்பெற்றுள்ளன. பெரும்பான்மையான வெண்பாக்களில் மூன்று கருத்துகளும் சிலவற்றில் நான்கு கருத்துகளும் கொண்டுள்ளன. மொத்தம் 124 இனியவை கூறப்பட்டுள்ளன. நீதிகள் சொற்சுவையுடன் சோர்வு தட்டாமல் கூறப்பட்டுள்ளன.

இந்நூலிலுள்ள இனியவைகளைக் குடும்பம்-உறவுகள், கல்வி, சொல், கொடை, அரசியல், நட்பு, தொழில், பண்பாடு, துறவு, இயற்கை ஆகிய பொருட்களில் வகைப்படுத்திக் கூறலாம்.

1. கண்மூன்று உடையான்தான் சேர்தல் கடிதுஇனிதே;
தொன்மாண் துழாய்மாலை யானைத் தொழல்இனிதே;
முந்துறப் பேணிமுகம் நான்கு உடையானைச்
சென்றமர்ந்து ஏத்தல் இனிது.

மூன்று கண்களையுடைய சிவபெருமானது திருவடிகளை அடைதல் மிக இனிது; பழைமையாகிய மாட்சிமை பெற்ற திருத்துழாய் மாலையை அணிந்த திருமாலைக் கைதொழுதல் இனிது; நான்கு முகங்களையுடைய பிரமதேவனை (அவன் திருமுன்) சென்று மேவி இருந்து விரும்பி வாழ்த்தல் முற்பட இனிது.

2. பிச்சைபுக்கு ஆயினும் கற்றல் மிகஇனிதே;
நற்சவையில் கைகொடுத்தல் சாலவும் முன்இனிதே;
முத்துஏர் முறுவலார் சொல்இனிது; ஆங்குஇனிதே;
தெற்றவும் மேலாயார்ச் சேர்வு.

பிச்சை எடுத்து உண்டாயினும் கற்பனவற்றை கசடறக் கற்றல் மிக இனிது; அவ்வாறு கற்ற கல்வியை நல்லஅவையின் முன்னர்த் தமக்க வந்து உதவுதல் மிகவும் முற்பட்ட இனிது; முத்தை ஒக்கும் நகையினையுடைய மகளிரது மெல்லிய

சொல் இனிது; அதுபோலப் பெரியாரைத் துணைக்கொள்ளுதல் தெளியளவும் இனிது.

3. உடையான் வழக்குஇனிது; ஒப்ப முடிந்தால்
மனைவாழ்க்கை முன்இனிது; மாணாதாம் ஆயின்
நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்
தலையாகத் தான்இனிது நன்கு.

பொருளுடையானது ஈகை, இனிது; மனைவி உள்ளமும், கணவன் உள்ளமும் மாறுபாடின்றி ஒன்றுபடக் கூடுமாயின் இல்வாழ்க்கையானது முற்பட்ட இனிது.அவ்வாறு மாட்சியமைப்படாதெனின், யாக்கை முதலியன நில்லாமையை ஆராய்ந்து, காலங்கடந்தவராய், அகம், புறமாகிய இருவகைப் பற்றுகளையும் விடுதல், தலைப்பட மிகவும் இனிது.

4. ஏவது மாறா இளங்கிளைமை முன்இனிதே;
நாளும் நவைபோகான் கற்றன் மிகஇனிதே;
ஏருடையான் வேளாண்மை தான்இனிது; ஆங்குஇனிதே
தேரில்கொள் நட்புத் திசைக்கு.

ஏவலை மாறாமல் செய்யும் மக்கள் உடைமை, முற்பட இனிது; குற்றங்களில் செல்லாதவனாய், நாடோறும் கற்றல் மிக இனிது; தனதென உழுகின்ற மாடுகளை உடையானது பயிர்த்தொழில், இனிது; அதுபோல, ஆராயின் தான் செல்லும் திசையில் ஆராய்ந்து நட்புக் கொள்ளுதல் இனிது.

5. யானை உடைப்படை காண்டல் மிகஇனிதே;
ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன்இனிதே;
கான்யாற்று அடைகரை ஊர்இனிது; ஆங்குஇனிதே
மானம் உடையார் மதிப்பு.

யானைகளுடைய சேனையை, அரசன் வைத்துக் கொள்ளுதல் முற்பட இனிது; பிறிதோர் உயிரின் தசையைத் தின்று, தன் உடம்பை வளர்க்காமல் இருப்பது முன் இனிது; முல்லை நிலத்து ஆற்றினது நீரடை கரைக்கண் உள்ள ஊரில் வாழ்தல் இனிது; அவை போல மானமுடையவரது கொள்கை இனிதாகும்.

6. கொல்லாமை முன்இனிது; கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்இனிது; செங்கோலன் ஆகுதல்
எய்தும் திறத்தால் இனிதுஎன்ப யார்மாட்டும்
பொல்லாங்கு உரையாமை நன்கு.

ஓர் உயிரைக் கொல்லாமை, மிக இனிது; அரசன் நடுவு நிலைமை தவறித் தன்கண் வினை செய்வார்க்குச் சிறப்புச் செய்யாமை மிக இனிது; அவன் முறை செலுத்துவோனாதல் மிக இனிது; யாவரிடத்தும் குற்றம் கூறாமை மிக இனிது என்பர்.

7. ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்இனிதே;
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பு இனிதே;
வாய்ப்புஉடைய ராகி வலவைகள் அல்லாரைக்
காப்புஅடையக் கோடல் இனிது.

கூடிய மட்டும் அறம் செய்தல் மிக இனிது; நன்னெறிப் பட்டார் சொல்லும் பயனுடைய சொல்லின் மாட்சிமை இனிது; கல்வி, செல்வம், அதிகாரம், ஆண்மை முதலிய யாவற்றிலும் பொருத்தம் உடையவராக, நாணிலிகள் அல்லாதவரைக் காப்பாகப் பொருந்திக் கொள்ளுதல் இனிது.

8. அந்தணர் ரோத்துடையமை யாற்ற மிகவினிதே
பந்த முடையான் படையாண்மை முன்னினிதே
தந்தையே யாயினுந் தானடங்கா னாகுமேற்
கொண்டடை யானா லினிது.

பார்ப்பனர்க்கு, வேதத்தினை மறக்காமல் இருப்பது மிக இனிது; மனைவி மக்கள் முதலியோர் மாட்டுப் பற்றுடையவன் சேனையை ஆளுந்தன்மை முற்பட இனிது; தன்னைப் பெற்ற தந்தையே ஆனாலும் அவன் மனமொழி மெய்கள் தீநெறிகளுக்குச் செல்லாமல் அடங்கான் எனின் அவன் சொற்கொண்டு அதன்வழி நில்லாதான் ஆதல் இனிது.

9. ஊருங் கலிமா உரனுடைமை முன்இனிதே;
தார்புனை மன்னர் தமக்குஉற்ற வெஞ்சமத்துக்
கார்வரை யானைக் கதங்காண்டல் முன்இனிதே;
ஆர்வ முடையவர் ஆற்றவும் நல்லவை
பேதுறார் கேட்டல் இனிது.

தான் ஏறிச் செலுத்துகின்ற குதிரைமிக்க வலியுடையதாக இருத்தல் மிக இனிது; மாலையணிந்த அரசர்களுக்குப் போர் வாய்த்த களத்தில் கரியமலை போன்ற யானைகள் வெகுண்டு செய்யும் போரைக் காணுதல் முன் இனிது; மிகவும் அன்புடையார் நல்ல கேள்விகளை மயக்கம் அடையாதவர்களாய்க் கேட்பது இனிது.

10. தங்கண் அமர்புடையார் தாம் வாழ்தல் முன் இனிதே;
அங்கண் விசும்பின் அகல்நிலாக் காண்புஇனிதே;

பங்கம்இல் செய்கையர் ஆகிப் பரிந்து யார்க்கும்
அன்புடையர் ஆதல் இனிது.

தம்மிடத்தே சோர்வுடையார் தாம் செல்வமுடையராக வாழ்தல் மிக இனிது; அழகிய இடமகன்ற வானத்தில் விரிந்த நிலாவைக் காணுதல் இனிது; குற்றமில்லாத நடையுடையராக யாவர்க்கும் இரங்கி அன்புடையராக இருத்தல் இனிது.

11. கடம்உண்டு வாழாமை காண்டல் இனிதே;
நிறைமாண்புஇல்பெண்டிரை நீக்கல் இனிதே;
மனமாண்பு இலாதவரை அஞ்சி யகறல்
எனைமாண்புந் தான்இனிது நன்கு.

கடன்கொண்டு உண்டு வாழாமல் இருத்தலைக் காணுதல் இனிது; கற்பு மாட்சிமை இல்லாத மனைவியரை விலக்கி விடுதல் இனிது; மனத்தின்கண் மாட்சிமை இல்லாதவரை அஞ்சி நீங்குதல் எல்லா மாட்சிமையினும் மிக இனிதாகும்.

12. அதர்சென்று வாழாமை ஆற்ற இனிதே;
குதர்சென்று கொள்ளாத கூர்மை இனிதே;
உயிர்சென்று தாம்படினும் உண்ணார்கைத்து உண்ணாப்
பெருமைபோல் பீடுடையது இல்.

வலியப்போய், வாழாமல் இருத்தல் மிக இனிது; தப்பு வழியில் சென்று நூற்கும் பொருள் கொள்ளாத மதி நுட்பம் இனிது; பசியால் உயிர் இறந்தாலும் உண்ணத் தகாதார் கையில் உணவை உண்ணாத பெருமை போலப் பெருமையுடையது பிறிதொன்றும் இல்லை.

13. குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே;
மயரிகன் அல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவும்தீர்வு இன்றேல் இனிது.

குழந்தைகள் நோயில்லாமல் வாழ்வது இனிது; சொல்லுதற்குரிய அவை அறிந்து அதற்கேற்பச் சொல்லுகின்றவரின் கல்வியானது இனிது; மயக்கமுடையவர் அல்லராய் மாட்சிமை உடையாரை அடையும் செல்வமும் நீங்காதாயின் இனிது.

14. மானம் அழிந்தபின் வாழாமை முன்இனிதே;
தானம் அழியாமைத் தான்அடங்கி வாழ்வுஇனிதே;
ஊனம்ஒன்று இன்றி உயர்ந்த பொருளுடைமை

மானிடவர்க்கு எல்லாம் இனிது.

பெருமை கெட்டபின், உயிர் வாழாமை இனிது; தானிருந்து வாழும் வாழ்க்கை சிதையாதபடி தான் அடங்கி வாழ்தல் இனிது; குறைவு சிறிதுமில்லாமல் மிக்க பொருளுடையயராதல் எல்லா மக்களுக்கும் இனிது.

15. குழவி தளர்நடை காண்டல் இனிதே;
அவர்மழலை கேட்டல் அமிழ்தின் இனிதே;
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து
மனன்அஞ்சான் ஆகல் இனிது.

குழந்தையின், தளர்ந்த நடையைக் காணுதல் பெற்றோர்க்கு இனிது; அக்குழந்தையின் மழலைச் சொற்களைக் கேட்டல், அமுதத்தினும் இனிது; மாந்தர் ஒருவருக்கு உதவ நேரும்போது, அதன் பயனாகிய துன்பம் தன்பால் வந்து சேர்ந்து தான் துன்பமடையும் காலத்தும் மனம் அஞ்சாது நிற்றல் இனிது.

16. பிறன்மனை பின்னோக்காப் பீடுஇனிது ஆற்ற;
வறன்உழக்கும் பைங்கூழ்க்கு வான்சோர்வு இனிதே;
மறமன்னர் தம்கடையுள் மாமலைபோல் யானை
மதமுழக்கம் கேட்டல் இனிது.

பிறனுடைய மனைவியைக் காம உணர்ச்சிக்கு விரும்பாமையின் பெருமை இனிது; நீரின்மையால் வருத்தும் பசிய பயிர்க்கும் மழை பொழிவது இனிது; வீரத்தையுடைய அரசர் கடைவாயிலின்கண் பெரிய மலை போன்ற யானைகளின் மதத்தால் செய்யும் பிளிற்றொலியின் முழக்கம் கேட்டல் இனிது.

17. கற்றார்முன் கல்வி உரைத்தல் மிகஇனிதே;
மிக்காரைச் சேர்தல் மிகமாண முன்இனிதே;
எட்டுணை யானும் இரவாது தான்ஈதல்
எத்துணையும் ஆற்ற இனிது.

கற்றவர்க்கு முன்பு தம் கல்வியைச் சொல்லி ஏற்றுதல் மிக இனிது; அறிவாளன் மேம்பாட்டாரைப் பொருந்தல், மிக மாட்சிமைப்பட்ட முற்பவினிது:எள்ளளவாயினும் தான் பிறரிடம் இரந்து வாழாமல் தான் பிறர்க்குக் கொடுத்தல் மிக இனிது

18. நட்டார்க்கு நல்ல செயல்இனிது; எத்துணையும்
ஒட்டாரை ஒட்டிக் கொளல்அதனின் முன்இனிதே;
பற்பல தானியத்த தாகிப் பலர்உடையும்
மெய்த்துணையும் சேரல் இனிது.

தன்கண் நட்புடையார்க்கு இனியவற்றைச் செய்தல் இனிது; எள்ளளவும் தன் பகைவரோடு சேராத வரை நட்பாக்கிக் கொள்ளுதல் அதனின் மிக இனிது; பற்பல வகை உணவுப் பொருள்கள் உடையதாகப் புறத்தார் பலர் தோற்றத்துக்குக் கேதுவாகிய மெய்க்காப்பு வீரரொடும் அரண் பொருந்துதல் இனிதாகும்.

19. மன்றின் முதுமக்கள் வாழும் பதிஇனிதே;
தந்திரத்தின் வாழுந் தவசிகண் மாண்பினிதே;
எஞ்சா விழுச்சீர் இருமுது மக்களைக்
கண்டுஎழுதல் காலை இனிது.

அம்பலத்தின்கண் அறிவுடையோர் வாழ்கின்ற ஊர், இனிது; நூல் விதிப்படி வாழ்கின்ற தவத்தோரது மாட்சிமை இனிது; குறையாத மிக்க சிறப்பினையுடைய தாய்தந்தையாரைக் காலையில், அவர் இருக்குமிடம் சென்று கண்டு, அவர் பாதங்களில் வீழ்ந்து எழுதல் இனிது.

20. நட்டார்ப் புறங்கூறான் வாழ்தல் நனி இனிதே;
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகல் முன்இனிதே;
முட்டில் பெரும்பொருள் ஆக்கியக்கால் மற்றுஅது
தக்குழி ஈதல் இனிது.

தன்னிடம் நட்புக் கொண்டாரைப் புறங்கூறாதவனாய் வாழ்வது மிக இனிது; உண்மையைப் பாதுகாத்து யாவர்க்கும் அடங்கி நடத்தல் முற்பட இனிது; குறையில்லாத பெரும் பொருளைத் தேடினால், அப்பொருளைத் தக்க பாத்திரத்தில் கொடுத்தல் இனிது.

## இனியவை நாற்பது – வினாக்கள்

### பகுதி I

1. இனியவை நாற்பது ஆசிரியர் __________.
2. இனியவை நாற்பது நூலில் __________ இனியவை கூறப்பட்டுள்ளன.
3. ஆற்றுந்துணையால் __________ அறம் செய்கை முன் இனிதே.
4. ஏருடையான் __________ முன் இனிதே.
5. கழறு அவையஞ்சான் __________ இனிதே.
6. குழவி __________ வாழ்தல் இனிதே.
7. __________பெண்டிரை நீக்கல் இனிதே.
8. பிச்சை புக்காயினும் __________ மிக இனிதே.
9. யார் மாட்டும் __________ உரையாமை நன்கு இனிதே.

10. கற்றார் முன் _________ உரைத்தல் இனிதே.

### பகுதி II

11. கற்றோர் செயல்குறித்து இனியவை நாற்பது கூறும் கருத்துக்களைக் கூறுக.
12. குடும்பம், உறவுகள் பற்றி இனியவை நாற்பது கூறுவன யாவை?
13. இனியவை நாற்பது நட்பு குறித்துக் கூறுவன யாவை?
14. அரசியலில் இனியதாக இனியவை நாற்பது கூறுவன யாவை?
15. இனிதாகவுள்ள பண்பாடு பற்றி இனியவை நாற்பது கூறும் கருத்துக்களைக் கூறுக.

### பகுதி III

16. நும் பாடப்பகுதியிலுள்ள இனியவை நாற்பது கூறும் இனியவைகளைத் தொகுத்துரைக்க.

## அலகு: 3 திரிகடுகம் (1-10 பாடல்கள்)

பதிணென்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் நல்லாதனார். கடுகம் என்பது உறைப்பு,கார்ப்பு என்று பொருள்படும். கடுக்கும் பொருளாகிய சுக்கு, மிளகு, திப்பிலிகளில் ஒன்றையோ அல்லது இம்மூன்றையோ கடுகம் என்றும் குறிக்கலாம். இம்மூன்று மருந்துகள் உடல் நலனைக் காக்க உதவுவதுபோல் ஒவ்வொரு பாடலிலும் மக்களுக்கு நயம் பயக்கும் மூன்று உறுதிப் பொருட்களைக் கூறுவதால் திரிகடும் எனப்பட்டது. இந்நூலிலுள்ள நூறு பாடல்களிலும் மூன்றாவது அடியின் இறுதியில் 'இம்மூன்றும்' என்று 59 பாடல்களிலும் 'இவை மூன்றும்' என்று 7 பாடல்களிலும் 'இம்மூவர்' என்று 31 பாடல்களிலும் 'இவர் மூவர்' என்று 3 பாடல்களிலும் கூறி, ஒவ்வொரு பாடலிலும் மூன்று மூன்று கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

கடவுள் வாழ்த்தில் திருமாலின் திருவடியின் சிறப்புகளில் உலகம் அளந்ததும், குருந்த முறித்ததும் சகடை உதைத்ததும் ஆகிய மூன்று கூறிப் போற்றப்பட்டுள்ளன. இல்லறம் நல்லறம் ஆவதற்குக் கணவனும் மனைவியும் எவ்வாறு வாழ்தல் வேண்டும் என்பதை நூறு பாடல்களில் முப்பத்தைந்து இடங்கள் பேசுகின்றன. மழையைப் பற்றி மூன்று பாடல்கள் பாடப்பட்டுள்ளன. இவ்வாறாக,

நல்லாதனார் நூறு வெண்பாக்களில் நன்மையாயின அறுபத்தாறும் தீமை தருவனவாக முப்பத்து நான்கும் பாடியுள்ளார்.

திரிகடுகம் என்னும் மருந்து நூல் உலகில் நாம் சிறப்பாக வாழ்வதற்குக் கைக்கொள்ள வேண்டிய செயல்கள் இவை. தவிர்க்க வேண்டிய செயல்கள் இவை என்று வழிகாட்டுவதோடு, பிறவி நோய் அற்று வீடுபேறு ஆகிய அழியாப் பேரின்பப் பேற்றுக்கு வழிகள் இவை என்றும் தெளிவாக எடுத்தியம்புகின்றது.

**1.கடவுள் வாழ்த்து**

கண்ணகன் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம் - நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி.

இடம் அகன்ற பூமியை அளந்ததூஉம் விரும்பப்பட்ட சிறப்பையுடைய குளிர்ச்சியும் மணம் பொருந்திய மலர்களையுடைய குருந்த மரத்தை முறித்ததும்; கிட்டிவந்த வஞ்சகமான வண்டியை உதைத்தும் ஆகிய இம்மூன்றும் காயாம்பூவைப் போலும் நிறத்தினையுடைய திருமாலின் திருவடிகளாகும்.

எவ்வுலகத்தாரும் உய்யும்படி உலகளந்ததும் தமக்கும் தம்மவருக்கும் இடர் செய்யத் துணிந்த தீயவர்களை அழிக்கச் செய்ததும் ஆகிய அத்திருவடிகளைத் துதிக்க இந்நூலுக்கு நேரிடும் இடையூறுகள் நீங்கும்.

திரிகடுகம் என்னும் இந்நூலில் செய்யுள் தோறும் மும் மூன்று பொருளைச் சேர்த்து சொல்வது தோன்ற இக்காப்புச் செய்யுளினும் திருமாலின் திருவடிகள் செய்த மூன்று செயல்களைச் சேர்த்துக் கூறியுள்ளார்.

**2. திரிகடுகம் என்னும் மருந்துகள்**

அருந்ததிக் கற்பினார் தோளும் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும் - சொல்லின்
அரில்அகற்றுங் கேள்வியார் நட்புமிம் மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து.

அருந்ததி போலும், கற்பையுடைய மகளிரின் தோள்களும்; குற்றமற்ற பழமையான குடிப்பிறப்பில் தோன்றி மாட்சிமை அடைந்தவரோடு கொள்ளும் நட்பும்; சொற்களினிடத்தே குற்றங்களை நீக்கவல்ல கேள்வியை உடையவரோடு செய்யப்படும் நட்பும் இந்த மூன்றும் ஒருவனுக்குத் திரிகடுகம் போன்ற மருந்துகளாகும்.

நற்குண நற்செய்கைகளுமுள்ள பெண்ணை மணம் செய்திருப்பது முதலிய மூன்றும் இம்மை மறுமைகளில் நேரிடும் துன்பங்களைத் தீர்த்து இன்பம் கொடுப்பவாதலால் நோயைப் போக்கி நலத்தைக் கொடுக்கும் சுக்கு, திப்பிலி, மிளகுகளாகிய மருந்து போலும் என்பதாகும்.

**3. ஒழுக்கமுடையார் தொழில்கள்**

தன்குணங் குன்றாத் தகைமையும் தாவில்சீர்
இன்குணத்தார் ஏவின செய்தலும் - நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்செலவும் இம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில்.

தனது குடிப்பிறப்பின் குணம் குன்றாமல் ஒழுகுதலும்; ஏதுவாகிய அழிதல் இல்லாத பெரும்புகழைத் தருகின்ற இனிய குணத்தை உடையோர் ஏவிய தொழில்களைச் செய்தலும்; அறத்தின் இயல்பை அறியும் அறிவையுடைய நான்கு வகைப்பட்ட வேதங்களை ஓதிய பார்ப்பனர் கூறிய வழியில் நடத்தலும் ஆகிய இம்மூன்றும் மேன்மையாகிய ஒழுக்கத்தை ஆளுதல் உடையாரது தொழில்களாகும்.

தன்குலச் சிறப்புக் கெடாதவண்ணம் ஒழுகுதலும்; குணஞ் சான்றவர்க்கு ஆவன செய்தலும்; நான் மறையாளர் சொல் வழி நிற்றலும் மேலோர் செய்கையாகும்.

**4. அறியாமையினால் விளைகின்ற கேடுகள்**

கல்லார்க் கினனாய் ஒழுகலும் காழ்கொண்ட
இல்லாளைக் கோலாற் புடைத்தலும் - இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியாமை யான்வருங் கேடு.

கற்றறியாதவர்க்கு உறவினனாகி நடத்தலும் மனவுறுதி கொண்ட மனைவியைக் கோலினால் அடித்தலும்; தம் வீட்டிற்குள் சிற்றறிவினரை உடன்கொண்டு புகுதலும் இம்மூன்று செயல்களும் தன் அறியாமையினாலே விளைகின்ற கேடுகளாகும்.

மூடரோடு சேர்ந்திருப்பதும்; கற்புடை மனைவியை அடித்தலும்; புல்லிய அறிவினரை வீட்டுக்குள் அழைத்துச் செல்வதும் கேட்டைத் தருவனவாகும்.

**5. சாவதற்குரியவன் தொழில்கள்**

பகைமுன்னர் வாழ்க்கை செயலும் தொகைநின்ற
பெற்றத்துள் கோலின்றிச் சேறலும் - முன்தன்னைக்
காய்வானைக் கைவாங்கிக் கோடலும் இம்மூன்றும்

சாவ வுறுவான் தொழில்.

தன் பகைவர் முன்னே செல்வத்துடன் வாழ்தலைச் செய்வதும்; தொகுதியாக நின்ற மாடுகளின் நடுவே கோல் இல்லாமல் செல்வதும்; முன்னே நின்று தன்னை வருத்துபவனை முன்விட்டு நீக்கிப் பின் அவனை நட்புக் கொள்ளுவதும் ஆகிய இம்மூன்று செயல்களும் சாக வேண்டியவனுடைய செய்கைகளாகும்.

பகைவர்களுக்கு எதிரில் செல்வத்தைக் கொண்டால் அதற்கு அவர்கள் கேடு செய்வர்; கோல் இல்லாமல் மாட்டு மந்தைக்குப் போனால் ஏதாவது ஒரு மாடு முட்டும்; பகைவரோடு நட்புப் பாராட்டினாலும் கெடுதி உண்டாகும் என உணர்த்துகிறார்.

**6. அருந்துயரம் காட்டு நெறி**

வழங்காத துறையிழந்து நீர்ப்போக்கும் ஒப்ப
விழைவிலாப் பெண்டீர்தோள் சேர்வும் - உழந்து
விருந்தினனாய் வேற்றூர் புகலுமிம் மூன்றும்
அருந்துயரம் காட்டு நெறி.

யாவரும் இறங்கிப் பாராத துறையில் இறங்கிப் பெரும் நீரில் போவதும், தனக்கு ஒப்பாக விருப்பமில்லாத வேசியர் தோளைச் சேர்வதும், வருந்தப் பிறருக்கு விருந்தாளியாகி, அயலூரில் புகுதலும் ஆகிய இம்மூன்றும் ஒருவனுக்கு அரிய துன்பத்தைக் காட்டும் வழிகளாகும்.

ஆறு முதலியவற்றில் பழகாத துறையில் இறங்கிச் செல்வதும் தன்மேற் பற்றில்லாதவளைச் சேர்வதும் வயிற்றை நிரப்பும் பொருட்டு அடுத்த ஊர் செல்வதும் இன்பமன்றித் துன்பத்தையே செய்யும்.

**7. ஆண்மைச் செல்வங்கள்**

பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும் பேணார்
திறன்வேறு கூறிற் பொறையும் - அறவினையைக்
காராண்மை போல வொழுகலும் இம்மூன்றும்
ஊராண்மை என்னும் செருக்கு.

மற்றவர் தன்னை விரும்பி மேன்மைப்படுத்துமிடத்து நாணுதலும், விரும்பாதவராய்த் தகுதியை வேறுபடச் சொல்லுமிடத்து அதனைப் பொறுத்தலும், உதவிச் செய்கையை மேகம் ஆளுதல் போல ஆளுதல் செய்து நடத்தலும் இந்த மூன்றும் பிறர் மேற்பட்டுச் செல்லுகின்ற ஆண்மை என்கின்ற செல்வங்களாகும்.

பிறர் ஒருவர் தன்னை உயர்த்திப் பேசும்பொழுது தனக்கு இது தகாது என்று நாணுதலும்; தன்னை விரும்பாதவர் தன்னை இகழுமிடத்து வெகுளாமல் பொறுத்தலும்; மேகத்தைப் போல் கைம்மாறு கருதாமல் உதவி செய்தலும் சிறந்த செல்வமாகும்.

### 8. ஊமையானவன் கண்ட கனா

வாளைமீன் உள்ளல் தலைப்படலும் ஆளல்லான்
செல்வக் குடியுள் பிறத்தலும் - பல்லவையுள்
அஞ்சுவான் கற்ற அருநூலும் இம்மூன்றும்
துஞ்சூமன் கண்ட கனா.

வாளை என்னும் மீனை உள்ளான் என்னும் சிறு பறவை கொத்திப்பற்ற முயற்சிச் செய்தலும்; ஆளமாட்டாதவன் செல்வமுள்ள குடியில் பிறந்து அதனை ஆளக் கருதுதலும், கற்றார் பலர் கூடிய அவையில் அஞ்சும் இயல்புடையவன் படித்துள்ள அருமையான நூலுணர்ச்சியும் ஆகிய இம்மூன்று செயல்களும் தூங்குகின்ற ஊமையானவன் கண்ட கனவைப் போலாகும்.

எங்ஙனம் வாய்பேசாத ஊமையன் தான் கண்ட கனவைப் பிறருக்கு எடுத்துரைத்துப் பயன்படுத்தக் கூடாதவன் ஆவனோ அதுபோல உள்ளான் வாளை மீனைத் தாக்குதலும், திறமையில்லாதவன் செல்வக் குடியில் பிறந்து அதனைக் காப்பாற்றுதலும், சபைக்கு அஞ்சுகின்றவன் படித்த படிப்பும் இம்மூன்றும் பயன்படாதவைகள்.

### 9. பேசக்கூடாத இயல்புடையவை

தொல்லவையுள் தோன்றும் குடிமையும் தொக்கிருந்த
நல்லவையுள் மேம்பட்ட கல்வியும் - வெல்சமத்து
வேந்துவப்ப வட்டார்த்த வென்றியும் இம்மூன்றும்
தாந்தம்மைக் கூறாப் பொருள்.

பழமையை ஆராய வல்லோர் கூடியிருக்கும் அவையிடத்தில் தானாக விளங்கித் தோன்றும் குடிப்பிறப்பும்; பலவகை நூலோரும் கூடியிருந்த நல்ல அவையினிடத்தே மேன்மைப்பட்ட படிப்பும்; வெல்லும் போரிடத்தே வேந்தன் மகிழ, பகைவரைக் கொன்று நிறைந்த வெற்றியும் ஆகிய இம்மூன்றும் தாமே தன்னைக் குறித்துப் புகழ்ந்து வேண்டாத பொருள்களாகும்.

பேர்பெற்ற குடிப்பிறப்பு, சிறந்த கல்வி, வெற்றி மிகுந்த வீரம் இவைதாமே பிறர்க்கு விளங்குவன: இவற்றையுடையவர் தாமே எடுத்துரைத்தல் பேதைமை யுடைத்து ஆதலால் எடுத்துரைத்தல் ஆகாது.

### 10. மூடர் விரும்புபவை

பெருமை யுடையார் இனத்தின் அகறல்
உரிமையில் பெண்டீரைக் காமுற்று வாழ்தல்
விழுமிய வல்ல துணிதலிம் மூன்றும்
முழுமக்கள் காத லவை.

பெருந்தன்மை உடையவருடைய இனத்தினின்றும் நீங்குதலும்; தனக்கு உரியராதல் இல்லாத மாதரை விரும்பி அவரோடு வாழ்தலும்; சிறந்தவை அல்லாதவற்றைச் சிறந்தவையாகத் துணிதலும் ஆகிய இம்மூன்றும் மூடர் விரும்புபவையாகும்.

நல்லாரிணக்கம் விடுதலும்; தமக்கு மணஞ்செய்து கொடுக்காத பெண்களை விரும்புதலும்; பயனற்ற செயல்களைச் செய்தலும் அறிவற்ற மூடர்கள் செயல்களாகும்.

### திரிகடுகம் வினாக்கள்

#### பகுதி I

1. 'கடுகம்' என்பதன் பொருள் யாது?
2. 'திரிகடுகம்' என்று குறிப்பிடப்படும் மருந்துப்பொருள்கள் யாவை?
3. திரிகடுகம் கடவுள்வாழ்த்தில் எக்கடவுள் வாழ்த்தப்பட்டுள்ளார்?
4. திரிகடுகத்தின் ஒவ்வொரு பாடலிலும் எத்தனை நீதிக்கருத்துகள் இடம்பெற்றுள்ளன?
5. திரிகடுகத்தின் ஆசிரியர் ______
6. இல்வாழ்க்கை கருத்துகள் எத்தனை இடங்களில் பேசப்பட்டுள்ளன?
7. மழை பற்றி எத்தனை பாடல்களில் பாடப்பெற்றுள்ளன.
8. திரிகடுகத்தில் நன்மை தரும் செய்திகள் எத்தனை பாடல்களில் பாடப்பெற்றுள்ளன.?
9. தீமை தரும் செய்திகள் எத்தனை பாடல்களில் பாடப்பெற்றுள்ளன.
10. யாருக்கு உறவினனாகி நடத்தல் கூடாது?
11. பிறர் தன்னைப் புகழும்போது ______ வேண்டும்.

#### பகுதி II

1. ஒழுக்கமுடையார் தொழில்கள் யாவை?
2. அறியாமையினால் வரும் கேடுகளைப் குறிப்பிடுக.
3. சாக வேண்டியவனுடைய செய்கைகள் யாவை?

4. ஆண்மை என்கின்ற செல்வங்கள் யாவை?
5. ஊமை கண்ட கனவுகளாகக் குறிப்பிடுவன எவை?
6. தன்னைக் குறித்துப் புகழ்ந்து வேண்டாத பொருள்கள் யாவை?
7. மூடர் விரும்புபவை எவை?
8. நன்மை அளிக்காது தீமை விளைவிப்பன யாவை?

**பகுதி III**

1. நும் பாடப்பகுதியிலுள்ள திரிகடுகம் பாடற்கருத்தினைக் கட்டுரைக்க.

## அலகு - 3 ஆசாரக்கோவை ( 1-10 பாடல்கள்)

ஆசாரக்கோவை பதிணென்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் கயத்தூர்ப் பெருவாயின்முள்ளியார்.

'ஆசாரக்கோவை' என்பதனை ஆசாரம் + கோவை என்று பிரிக்கலாம். ஆசாரமானவது ஒழுக்கம். கோவையாவது கோர்க்கப்பட்டது எனப்பொருள்படும். ஒழுக்கவிதிகளை ஒருசேரக் கோர்க்கப்பட்ட நூல் ஆசாரக்கோவையாகும். ஆசாரக்கோவையின் மூலநூல் ஆரிடம் என்னும் வடநூலாகும். இந்நூலின் முதல்பாடலின் இறுதிச்சீரிலும் நூறாவது பாடலின் இறுதிச்சீரிலும் 'ஆசாரவித்து' என்று முடிவடைவதாலும் 'ஆசாரக்கோவை' எனக் கருதலாம். வடமொழிச் சொற்கள் அதிகம் கலக்கப்படாத நூல். இந்நூல் எல்லா வருணத்தாருக்கும் பொதுவான ஒழுக்கத்தையே வலியுறுத்தியுள்ளது.

ஆசாரக்கோவை ஸ்மிருதி போலவே இன்னின்ன செயல்கள் செய்யத்தக்கவை, இன்னின்ன செயல்கள் செய்யத் தகாதவை என்று உத்தரவு விடுவது போலக் காணப்படுகின்றன. இந்நூலை 'ஒரு பொதுச் சுகாதார நூல்' என்றே கூறலாம். காலையில் எழுந்தது முதல் இரவில் படுக்கையில் படுப்பது வரையில் என்னென்ன செய்ய வேண்டும் என்று கட்டளையிடுகிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த மக்கள் பின்பற்றிய ஒழுக்கம், இன்றைய விஞ்ஞான முறையோடு ஒத்திருப்பதைக் கண்டு வியப்பாகவுள்ளது.

எவை எவை ஆசாரவித்து, ஆசாரத்தைப் பின்பற்றுவோர் பெறும் பேறு, ஆசாரத்திற்கு விலக்கானவர்கள் என்பதும் இந்நூலில் பாடல்களின் வழி காணமுடிகிறது.

### 1. ஒழுக்கங்கட்குக் காரணம்

“நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புரவ ாற்ற வறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து.”

தனக்குப் பிறர் செய்த நன்றியை மறவாமையும் பொறுமையும் இன்சொல்லும் எல்லா உயிர்க்கும் துன்பந்தருவனவற்றைச் செய்யாமையும் கல்வியும் ஒப்புரவை அறிதலும் அறிவுடைமையும் நல்லியல்புடையாரிடம் நட்புச் செய்தலும் என்ற இவ்வெட்டு வகையும் அறிஞர்களாற் சொல்லப்பட்ட ஒழுக்கட்கு வித்தாகும்.

### 2. ஒழுக்கம் பிழையாதவர் அடையும் பயன்

“பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப என்றும்
ஒழுக்கம் பிழையாதவர்.”

எப்பொழுதும் ஒழுக்கம் பிழையாதவர் நற்குடிப்பிறப்பு, நீண்ட வாழ்நாள், பொருட்செல்வம் அழகுடைமை, நிலத்திற்கு உரிமை, சொல்லின் மேன்மை, கல்வி, பிணியின்மை, ஆகிய எட்டினையும் அவற்றிற்குரிய இலக்கணங்களுடன் அடைவர்.

### 3. தக்கணை முதலிய தவறாது நடத்தல்

“தக்கணை வேள்வி தவங்கல்வி யிந்நான்கும்
முப்பா லொழுக்கினாற் காத்துய்க்க-உய்க்காக்கால்
எப்பாலு மாகா கெடும்.”

ஆசிரியருக்குத் தட்சணை கொடுத்தலும், யாகம் பண்ணுதலும் தவம் செய்தலும் கல்வியும் ஆகிய நான்கினையும் மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் மாறுபடாது ஒருமுகப்படுத்ததிச் செய்து வரவேண்டும். மூன்றும் மாறுபடுமாயின் எவ்வுலகத்திலும் தனக்குப் பயனாகாமல் மேற்கூறிய நான்கும் கெடும்.

### 4. வைகறையில் செய்ய வேண்டியவை

“வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதில்
தந்தையுந் தாயுந் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை”.

விடியற் காலமாகிய பின் சாமத்திலே விழித்தெழுந்து, தான் மறுநாள் செய்ய வேண்டிய நல்ல அறச்செயல்களையும் அறத்தோடு பொருளீட்டுவதற்குரிய காரியத்தை ஆராய்ந்தும், தந்தை தாயை தொழுது, எந்தச் செயலையும் செய்ய வேண்டும் என்பதே முன்னோர் கண்ட முறையாகும்.

**5. எச்சிலுடன் தீண்டத்தகாதவை**

“எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்போர் தீத்தேவர்
உச்சந் தலையோ டிவையென்ப யாவருந்
திட்பத்தால் தீண்டாப் பொருள்”.

பசு, பார்ப்பார், நெருப்பு, தேவர், உச்சந்தலை ஆகியவற்றை எச்சிலையுடையவர் யாவரும் தீண்டமாட்டார்கள் எனலாம். திட்பமாக எச்சிலோடு தீண்டப்படாத பொருட்கள் இவையாகும்.

**6. எச்சிலுடன் காணத்தக்கவை**

“எச்சிலார் நோக்கார் புலைதிங்க ணாயிறுநாய்
தக்கவீழ் மீனோடே யிவ்வைந்துந் தெற்றென
நன்கறிவார் நாளும் விரைந்து”.

புலையவன், சந்திரன், சூரியன், நாய், எரிந்து விழும் விண்மீன் ஆகிய ஐந்தையும், நன்மை தீமை அறிந்த அறிவுடையோர் எச்சிலுடன் காணமாட்டார்கள். இவ்வைந்தும் எச்சிலுடன் காணத்தகாதவைகளாகும்.

**7. நால்வகை எச்சில்**

“எச்சில் பலவு முளமற் றவற்றுள்
இயக்க மிரண்டு மிணைவிழைச்சு வாயில்
விழைச்சிலை எச்சிலிந் நான்கு”.

எச்சில்கள் பல உள்ளன. அவற்றுள் மலம், மூத்திரம், இரண்டுடன் கூடிய புணர்ச்சி, வாயில் உமிழ்நீர் (அதரபானம்) ஆகிய இவை நான்கும் எச்சிலாகும்.

**8. எச்சிலுடன் செய்யத்தகாதவை**

“நால்வகை யெச்சிலும் நன்கு கடைப்பிடித்
தோதா ருரையார் வளராரே யெஞ்ஞான்றும்
மேதைக ளாகுறு வார்”.

எக்காலத்திலும் அறிவுடையவராக இருக்க வேண்டுமென்று விரும்புபவர்கள் நால்வகை எச்சில் உண்டானபோது ஒன்றனையும் ஓதார், வாயால் எதையும்

சொல்லார், கண்துயிலார். எனவே எச்சிலோடு மேதைகள் நல்லனவற்றைச் செய்யமாட்டார்.

### 9. காலை மாலை கடவுள் வணக்கம்

“நாளந்தி கோறின்று கண்கழீஇத் தெய்வத்தைத்
தானறியு மாற்றற் றொழுதெழுக அல்கந்தி
நின்று தொழுதல் பழி”.

விடியற்காலத்தில் ஒரு மரக்குச்சியால் பல் துடைத்து கண்கழுவி, தான் வணங்கும் கடவுளை அறிந்தவகையில் தொழுது, பின் ஒரு காரியத்தைத் தொடங்க வேண்டும். மாலைப்பொழுதில் தான் வணங்கும் கடவுளை நின்று வணங்காமல் அமர்ந்து வணங்க வேண்டும்.

### 10. நீராடுதல் இன்றியமையாமைத் தருணங்கள்

“தேவர் வழிபாடு தீக்கனா வாலாமை
உண்டது கான்றல் மயிர்களைதல் ஊண்பொழுது
வைகு துயிலோ டிணைவிழைச்சுக் கீழ்மக்கள்
மெய்யுறல் ஏனை மயலுறல் ஈரைந்தும்
ஐயுறா தாடுக நீர்.”

தன்னால் வணங்கப்படுந் தெய்வத்தை வணங்குவதற்காகவும், தீயக்கனாக் கண்டபொழுதும் தூய்மை குன்றியபோதும், உண்டதை வாந்தி செய்தபோதும், மயிர் களைந்தபொழுதும், உண்ணும்பொழுதும், பொழுதேறத் தூங்கிய பொழுதும்,புணர்ச்சியான காலத்தும் கீழ்மக்கள் உடம்பு தீண்டியபொழுதும் மலம் சலங் கழிந்தபொழுதும் ஆகிய பத்துச் செயல்களின் பொழுதும் சந்தேகம் கொள்ளாமல் நீராட வேண்டும்.

### ஆசாரக்கோவை வினாக்கள்

### பகுதி I

1. ஆசாரக்கோவையின் ஆசிரியர்-------------------------
2. பொதுச் சுகாதார நூல்----------------
3. எட்டு ஆசாரங்களும்------------------ வித்தாக அமைந்துள்ளது.
4. ஆசாரக்கோவையின் மூலநூல்---------------------
5. ஒழுக்கம் பிழையாதவர் அடையும் பயன்கள் எத்தனை?

### பகுதி II

1. ஆசாரக்கோவையின் பெயர்க்காரணம் கூறுக.

2. ஒழுக்கம் பிழையாதவர் அடையும் பயன்கள் யாவை?
3. வைகறைப்பொழுதில் செய்ய வேண்டுவன யாவை?
4. காலைமாலை கடவுள் வணக்கம் பற்றி எழுதுக.
5. நீராட வேண்டிய இன்றியமையாத தருணங்கள் யாவை.

**பகுதி III**

1. நால்வகை எச்சில்கள் எவை? எச்சிலுடன் தீண்டத்தகாதவை, காணத்தகாதவை, செய்யத்தகாதவை எவை?
2. நும்பாடப்பகுதியிலுள்ள ஆசாரக்கோவையின் பாடற்கருத்துகளைத் தொகுத்துரைக்க.

## அலகு:3 பழமொழி நானூறு (கல்வி, சான்றோர் இயல்பு)

பழமொழி நானூறு பதிணென்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஒரு நாட்டின் பண்பாட்டை உணர்வதற்கு அந்நாட்டில் வழங்கப்பெறும் பழமொழி பெரிதும் பயன்படுகின்றன. அந்நாட்டு மக்களின் மன இயல்புகளை எடுத்துக்காட்டுகின்றன. பழமொழிகளைப் படித்தவரும் பாமரரும் கையாள்வதால், இந்நூல் ஆசிரியர் பழமொழிகளின் விளக்கத்திற்கேற்ப இயைபுபடுத்தி, அறக்கருத்துக்களை உணர்த்தி 400 வெண்பாக்களை இயற்றியுள்ளார்.

இந்நூலின் சிறந்த கருத்துக்கள் பல உலகியலைப் பெரிதும் ஒட்டிச் செல்கிறது. பண்டை வரலாற்று நிகழ்ச்சிகள் பல காணப்படுகின்றன. மேலும் இராமாயண,பாரதக் கதைக்குறிப்புகளும் சில செய்யுட்களில் காணமுடிகின்றன.

இந்நூல் முன்றுறைஅரையனார் என்னும் சமணச் சமயத்தவரால் இயற்றப்பட்டது. அருகதேவனை வழிபட்டும் பல சமணச் சமயக் கருத்துகளும் காணப்படுகிறது.

ஒருசில பாடல்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. மொத்தம் 424 பழமொழிகள் காணப்படுகின்றன. இந்நூலின் 34 அதிகாரங்களில் கல்வி, சான்றோர் இயல்பு பாடப்பகுதியாக உள்ளன.

### 1. கல்வி

1. ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்
போற்றும் எனவும் புணருமோ – ஆற்றச்
சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே யில்லை

'மரம்போக்கிக் கூலிகொண் டார்'.

உரிய வழியைக் கடக்கவிட்டு ஆயப்பொருள் அடைபவர்களும் இல்லை, ஓடத்தைச் செலுத்தாமல் நிறுத்திவிட்டுக் கூலி பெறுபவர்களும் இல்லை. அவ்வாறே, கற்கவேண்டிய இளமைப் பருவத்தில் கற்காமல் இருந்துவிட்டு முதுமைப் பருவத்தில் கல்விகற்பதோ, கல்வியில் வல்லாராவதோ ஒருவருக்கும் கூடுதல் இல்லை. ஆகவே, கற்றலுக்கு உரிய இளமைப் பருவம் கடக்கும் முன் கல்வி கற்கவேண்டும்.

2. சொற்றொறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்
கற்றொறும் கல்லாதேன் என்று வழியிரங்கி
உற்றொன்று சிந்தித்து உழன்றொன்று அறியுமேல்
'கற்றொறுந்தான் கல்லாத வாறு'.

கல்வி கற்கும் ஒவ்வொரு பொழுதும் தான் கல்லாதவன் எனக்கருதியும், கல்வி கற்காத நாட்கள் வீணானதென நினைத்து மனம்வருந்தியும், சோர்வின்றி மனம் ஒருமைப்பட்டு இதுவரை அறிந்தராத ஒரு பொருளை, அறிகின்றவன் கற்குந்தோறும், தன்னைக் கல்லாதவனாகவே நினைத்துக் கற்க வேண்டும்.

3. விளக்கு விலைகொடுத்துக் கோடல் விளக்குத்'
துளக்கமின் றென்றனைத்தும் தூக்கி விளக்கு
மருள்படுவ தாயின் மலைநாட! என்னை
'பொருள்கொடுத்துக் கொள்ளார் இருள்'.

விளக்கேற்றலுக்காக நெய் முதலியவற்றைப் பெரும்பொருள் கொடுத்து வாங்கியபின், விளக்கில் ஒளியேற்றாது இருப்பாராயின், அதனால் என்ன பயன்? இச்செயல் இருளைப் பொருள் கொடுத்து வங்கினார் செயலுக்குச் சமம் ஆகும்.

4. ஆற்றவும் கற்றவும் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை – அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்
'ஆற்றுணா வேண்டுவ தில்'.

கற்கவேண்டிய நூல்களைக் கற்றுத் தேர்ந்தவ்கள் அறிவுடையார் ஆவர். இவ்வாறு கற்று அறிவுடையார்களது புகழ்பரவாத நாடுகளில்லை. பிற நாடுகள் அவர்களுக்கு வேறு நாடாகாது. அவர்களது நாடாகவே அமையும். ஆகவே, வழிப்பயணத்திற்குக் கட்டுச்சோறு கட்டிச் செல்ல வேண்டிய தேவையில்லை.

5. உணற்கினிய இன்னீர் பிறிதுழி இல்லென்றும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார் - கணக்கினை

முற்றப் பகலும் முனியா(து) இனிதோதிக்
'கற்றலின் கேட்டலே நன்று'.

குடிப்பதற்கு ஏற்ற இனிய நன்னீர் தான் வாழும் இடம்தவிர வேறு இடத்தில் இல்லையென நினைத்துக் கிணற்றில் வாழும் தவளையைப்போல் இல்லாமல், கற்கவேண்டிய நூல்களை நாள்தோறும் விரும்பிப்படித்து அறிதலைக் காட்டிலும் அறிஞர்களிடம் கேட்டு அறிதல் நன்று.

6. உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப – நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் 'குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்'.

சிறுவயதினன் என்ற போதும், முதியோர் மகிழும்படி முதிய வேடம் பூண்டு தன் சொல்லாற்றலால் வழக்கில் உண்மைப்பொருள் அறிந்து நீதிசொன்னவன், சோழன் கரிகால்பெருவளத்தான். அவன் கற்காமலே நீதி சொன்னான். காரணம் தத்தம் குலத்திற்குரிய அறிவு உரிய நூல்களைக் கல்லாமலே அமையும்.

7. புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம் - நலமிக்க
பூம்புனல் ஊர! பொதுமக்கட் காகாதே
'பாம்பறியும் பாம்பின் கால்'.

அழகிய நீர்வளம் கொண்ட ஊரினை உடையவனே! பாம்பினுடைய கால்களைப் பாம்புகள் நன்கறியும். அதுபோல் அறிவினில் சிறந்தவர்களின் திறம், அவர்களைப் போன்று அறிவிற் சிறந்தவர்களுக்கே தெரியும்.

8. நல்லார் நலத்தை உணரின் அவரினும்
நல்லார் உணர்ப பிறருணரார் - நல்ல
மயிலாடு மாமலை வெற்ப! மற்றொன்றும்
'அயிலாலே போழ்ப அயில்.

மயில்கள் தோகை விரித்து ஆடும் மலை நாடனே..! எப்போதும், இரும்பை இரும்பால் பிளப்பர். அதுபோல, கற்ற நற்குணமுடைய ஒருவரது கற்ற நற்குணமுடைய ஒருவரது அறிவினை அவரைப்போல், கல்வி அறிவுடைய அறிஞர்களே அறிவார்கள். அவரைப்போல் ஒத்த அறிவுடையாரும் பிறரும் அறியமாட்டார்கள்.

9. கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்

பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார் - தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட!
‘நிறைகுடம் நீர்தளும்பல் இல்’.

அருவிகள் அழகுசெய்யும் மலைநாடனே...! நீர்நிறைந்த குடம் தளும்புவது இல்லை: குறைகுடம் தளும்பும். அதுபோல கற்று அறிந்தோர் அடக்கத்துடனே இருப்பர். கற்று அறியாதாரோ தங்களைப் புகழ்ந்து பேசுவர்.

10. விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை இல்லார்
கதிப்பவர் நூலினைக் கையிகந்தா ராகிப்
பதிப்பட வாழ்வார் பழியாய செய்தல்
‘மதிப்புறத்துப் பட்ட மறு’.

நல்ல கருத்துக்கள் கொண்ட நூல்களைக் கற்று, அதன்படி வேற்றுமை இல்லாது வாழ்பவர்கள், தம் கருத்தோடு மாறுபட்டோரின் கொள்கைகளைத் தம் அறிவினால் வென்று புகழுடன் வாழும் அறிஞர்கள், கீழ்நிலைச் செயல்களைச் செய்தல் நிலவில் களங்கம் போல் தோன்றுவர்.

**2. சான்றோர் இயல்பு**

1. நீறூர்ந்தும் ஒட்டா நிகரில் மணியேபோல்
வேறாகத் தோன்றும் விளக்கம் உடைத்தாகித்
தாறாப்படினும் தலைமகன் தன்னொளி
நூறா யிரவர்க்கு நேர்’.

சிறப்பான ஒளிகொண்ட ஒப்பற்ற இரத்தினத்தைப் போன்றதாயினும் சான்றோர்களது பெருமை அதைப்போல் நூறு மடங்கு ஆயிரம் மடங்கிற்கு ஒப்பாகும்.

2. ஒற்கத்தாம் உற்ற இடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல் - வற்பத்தால்
தன்மேல் நலியும்’பசிபெரி தாயினும்
புன்மேயா தாகும் புலி’.

புலியானது பெரும்பசியினால் புல்லை உண்ணாது, அதுபோல, சான்றோர்கள் வறுமையிலும் தம்நிலை தாழாது நிற்பர்.

3. மாடம் அழிந்தக்கால் மற்றும் எடுப்பதோர்
கூடம் மரத்திற்குத் துப்பாகும் - அ∴தேபோல்
பீடிலாக் கண்ணும் பெரியோர் பெருந்தகையர்

'ஈடில் லதற்கில்லை பாடு'.

இடிந்த வீடாயினும் அதில் உள்ள மரங்கள் மீண்டும் வீடு கட்டப்பபயன்படும். அதுபோலவே, சான்றோர்கள் தம் செல்வம் அழிந்தபோதும் பெருமையுடனே வாழ்வர்.

4. இணரோங்கி வந்தாரை என்னுற்றக் கண்ணும்
உணர்பவர் அஃதே உணர்ப - உணர்வார்க்கு
அணிமலை நாட! 'அளறாடிக் கண்ணும்
மணிமணி யாகிவிடும்'.

மலை நாடனே! இரத்தினம் சேற்றிலே கிடந்து மாசுபட்ட போதும் இரத்தினமாகவே கருதப்படும். அதுபோல சான்றோர்களை எத்தகைய துன்பம் பீடித்தபோதும் உயர்குடியினராகவே கருதப்படும்.

5. கற்றதொன் றின்றி விடினும் குடிப்பிறந்தார்
மற்றொன றறிவாரின் மாணமிக நல்லால்
பொற்ப உரைப்பான் புகவேண்டா 'கொற்சேரித்
துன்னூசி விற்பவர் இல்'.

கற்றது ஒன்றுமில்லை என்றாலும், நற்குடிப்பிறந்தோர் நற்குணங்களில் மிகச் சிறந்தார்களே ஆவர். ஆகவே அவர்களுக்குக் கற்றோர் அறிவுரைக்க வேண்டியதில்லை. அது கொல்லன் சேரியில் தையல் ஊசியை விற்றலுக்குச் சமம்.

6. முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை அளித்தாரைக் கேட்டறிதும் - சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப!
'அறிமடமும் சான்றோர்க் (கு) அணி'.

தாழைகள் நிரம்பிய கடல்நாடனே!.. முல்லைக்கொடிக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும் கொடுத்ததை அறிவோம். ஆராய்ந்தால் அதுவும் சான்றோர்க்கு அழகாகும்.

7. பல்லார் அவைநடுவண் பாற்பட்ட சான்றவர்
சொல்லார் ஒருவரையும் உள்ளுன்றப் பல்லா
நிரைப்புறங் காத்த நெடியோனே யாயினும்
'உரைத்தால் உரைபெறுதல் உண்டு'.

பசுக்கூட்டத்தைக்காத்த திருமாலேயாயினும், அவையில் ஒருவனை இகழ்ந்துரைத்தால், அவனால் தாமும் இகழ்ச்சி அடையக்கூடும். ஆகவே, நல்லோர் கூடியிருக்கும் அவையில் சான்றோர் யார் மனதும் வருந்தும்படி இகழ்ந்து கூறார்.

8. எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானாய்த் - தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும் ‘காணார்
எனச் செய்தார் மாணா வினை’.

பாண்டியன் தனது தவறை நினைத்து, தன் கையைத் தானே வெட்டி வீழ்த்தினான். ஆகவே சான்றோர் பிறர் காணவில்லை எனக் கருதித் தீயச்செயல்களைச் செய்யார்.

9. தீப்பால் வினையினைத் தீரவும் அஞ்சாராய்க்
காப்பாரே போன்றுரைத்த பொய்குறளை – ஏய்ப்பார்முன்
சொல்லோ டொருப்படார் சோர்வின்றி மாறுபவே
‘வில்லோடு காக்கையே போன்று’.

கொடிய செயலுக்கு அஞ்சாது, பொய்யும் புரட்டுமாய்க் கூறித் தம்மை ஏமாற்றுகிறவர்களிடம், அவர் கூறிய இனிய சொற்களுக்கு மயங்காது, வில்லை விட்டு நீங்கும் காக்கையைப் போல் நீங்குதல் வேண்டும்.

10. மடங்கிப் பசிப்பினும் மாண்புடை யாளர்
தொடங்கிப் பிறருடைமை மேவார் - குடம்பை
மடலொடு புட்கலாம் மால்கடற் சேர்ப்ப!
‘கடலொடு காட்டொட்டல் இல்’.

நெய்தல்நிலத் தலைவனே...! கடலோடு துரும்பைப் பொருத்துதல் இல்லை. அதுபோல, உடல் ஒடுங்கும்படியான பசியாயினும் மாண்புடையாளர் பிறர் பொருளைத் தாம் கொள்ள மாட்டார்.

11. நிரைதொடி தாங்கிய நீள்தோள்மாற்(கு) ஏயும்
உரையொழியா வாகும் உயர்ந்தோர்கண் குற்றம்
மரையா கன்றூட்டும் மலைநாட! ‘மாயா
நரையான் புறத்திட்ட சூடு’.

மலைநாடனே...! நீண்ட தோளையுடைய திருமாலுக்குரிய குற்றங்கள் ஒருநாளும் அகலாது. ஆகவே, அனைத்து வகையினும் உயர்ந்தாரிடம் ஏற்பட்ட குற்றம், மாட்டின்மேல் இட்ட சூடுபோல் ஒருநாளும் மறையாது.

12. கன்றி முதிர்ந்த கழியப்பன் னாள்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்றாலும் - தோன்றாதாம்
ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்

'குன்றின்மேல் இட்ட விளக்கு'.

அளவுகடந்த தீயசெயல்களைப் பல நாட்கள் செய்யும் சிறியோரிடத்துப் பழியும் குற்றமும் எப்பொழுதும் தோன்றுதல் இல்லை. உயர்ந்தோரிடத்து உள்ள ஒரே ஒரு குற்றமாயினும், அது மலைமீது வைத்த விளக்குப் போல் யாவரும் அறியும்படி தோன்றும்.

**பழமொழி வினாக்கள்**

**பகுதி I**

1. பழமொழியின் ஆசிரியர் __________
2. நாட்டின் பண்பாட்டையும் மக்கள் இயல்புகளையும் உணர்த்துவது _____
3. பழமொழி நானூறு நூலில் மொத்தம் பழமொழிகள் ______ உள்ளன.. இந்நூலில் _________ அதிகாரங்கள் உள்ளன.
4. யாருக்கு ஆற்றுணா வேண்டுவதில்லை.
5. நரைமுடித்து நீதி கூறியவன் ________ .
6. கற்றறிந்தோர் அடக்கத்துக்குரிய பழமொழி ________.
7. சான்றோர் வறுமையிலும் தாழ்நிலை அடையார் என்பதற்குரிய பழமொழி __________ .
8. முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும் கொடுத்து சான்றோர்க்கு __________.
9. திருமாலேயாயினும் செய்யக்கூடாத செயல் எது?
10. உயர்ந்தோரிடம் ஏற்பட்ட குற்றம் ________ போல் மறையாது.

**பகுதி III**

1. பழமொழி நானூற்றிலுள்ள கல்வி என்னும் அதிகாரத்திலுள்ள கருத்துக்களை விவரி.
2. சான்றோர் இயல்புகளாகப் பழமொழி கூறுவதைத் தொகுத்துரைக்க.

## அலகு : 3 சிறுபஞ்சமூலம் (1-10 பாடல்கள்)

சிறுபஞ்சமூலம் பதினெண்கீழ்க்கணக்குகளுள் ஒன்று. இதன் ஆசிரியர் மாக்காயன் என்பார் மாணாக்கர் காரியாசான்.

‘மூலம்’ என்பது வேர், வித்து என்னும் பொருளுடையது. ஐந்து சிறு மூலங்களான கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சி வேர் ஆகியவை உடல் நோயை நீக்குவது போல் பாடற்கருத்துகள் ஐந்தும் மாந்தர்க்கு ஏற்படும் உள்ள நோயைப் போக்குகின்றன.

கொல்லாமை, பொய்யாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை நான்கையும் தனித்தனி அறமாகக்கொண்டு மற்ற அறங்களையெல்லாம் ஒன்றாக்கி இவ்வைந்தையும் சேர்த்துச் ‘சிறுபஞ்சமூலம் கடவுள் வாழ்த்தோடு 100 பாடல்கள் உள்ளன.’ எனக் கொண்டுள்ளன.

**1. கடவுள் வாழ்த்து**

முழுதுணர்ந்து மூன்றொழிந்து மூவாதான் பாதம்
பழுதின்றி யாற்றப் பணிந்து – முழுதேத்தி
மண்பாய ஞாலத்து மாந்தர்க் குறுதியா
வெண்பா உரைப்பன் சில.

முற்றும் உணர்ந்து ஒழிக்க வேண்டிய காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றையும் துடைத்து மூத்தாலும், மூவாதவனாக விளங்கும் அருக தேவனை முழுதுறப் பணிந்து, நிலவுலகத்து மக்கட்கெல்லாம் நலம் தரும் செய்திகளை உரைப்பேன்.

இச்செய்தியை காமாதி மூன்றையும் மொழித்து முற்றுணர்ந்து, மூப்பில்லாதவன் பாதம் மனக்குற்றம் நீக்கி மிகவும் வணங்கிப் பல குணங்களைப் புகழ்ந்து பரந்த உலகில் மக்களுக்கெல்லாம் நன்மையான சில வெண்பாக்களால் ஆகிய சிறுபஞ்சமூலம் என்னும் இந்நூலை உரைக்கின்றேன்.

**2. பஞ்சச் சீலங்கள்**

ஒத்த ஒழுக்கம் கொலைபொய் புலால்களவோடு
ஒத்த இவையல வோர்நாலிட்டு – ஒத்த
உறுபஞ்ச மூலந்தீர் மாரிபோல் கூறீர்
சிறுபஞ்ச மூலம் சிறந்து.

அறிவினரால் அகற்றப்பட்ட ஒழுக்கமாகிய கொலை, பொய், புலால் உண்ணல், களவுடன் பிற பொறாமை முதலாம் குற்றங்களும் ஆகிய ஐந்தையும் ஒழித்து வறண்ட பயிர்க்கு வான்மழை போல வருந்திய மக்களுக்கு வாய்த்த நல்லறங்களை வழங்குவேன்.

பஞ்சத்தின் காரணத்தை அகற்றும மழையைப் போல மானிடர்களின் தீமைகளை ஒழித்து நன்மைகளை உண்டாக்கும் இச்சிறுபஞ்ச மூலத்தைக் கல்வியாளரே! நீங்கள் எடுத்துக் கூறுங்கள் என்பதாகும்.

**3. பொருளும் அருளும் உடையவன் செயல்**

பொருளுடையான் கண்ணதே போகம் அறனும்
அருளுடையான் கண்ணதே ஆகும் - அருளுடையான்
செய்யான் பழிபாவம் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவிக்கு உய்த்து.

பொருளுடையவனிடத்துப் போகம் உண்டாகும் அருளுடையவன் பழியும் பாவமும் செய்ய மாட்டான் கேட்ட செய்தியைப் பிறரிடம் போய்ச் சொல்லவும் மாட்டான். பொருளுடையானுக்கு இன்பம் பெருகும்: அருளுடையான் பிறரால் பழிக்கப்படும் இழிவான செயல்களையும், பாவச்செய்கைகளையும், புறங்கூறுவதையும் அடையமாட்டான்.

**4. அமிழ்தம் போன்றவர்கள்**

கற்புடைய பெண்ணமிர்து கற்றடங்கி னானமிர்து
நுற்புடைய நாடமிர்தம் நாட்டுக்கு – நற்புடைய
மேகமே சேர்கொடி வேந்தமிர்து சேவகனும்
ஆகவே செய்யின் அமிர்து.

கற்புடைய பெண் தன் கணவனுக்கும், அறிவு நூல்களைக் கற்றடங்கனான் உலகத்திற்கும், நல்ல நாடு அரசனுக்கும், அந்நாட்டிற்கு நல்ல அரசனும், வேந்தனுக்கு நல்ல சேவகனும் முறையே அமிழ்தம் போல் நின்று உதவுவார்கள்.

**5. நல்லார் கேட்டு நகைக்கத் தக்கன**

கல்லாதான் தான்காணும் நுட்பமும் காதிரண்டும்
இல்லாதான் எக்கழுத்தம் செய்தலும் - இல்லாதான்
ஒல்லாப் பொருளில்லார்க்கு ஈத்தளியான் என்றலும்
நல்லார்கள் கேட்பின் நகை.

நூல்களைக் கல்லாதான் நுட்பமான பொருளை ஆராய்ந்து சொல்லுதலும் காது இரண்டும் இல்லாதான் அழகும் பொருளில்லாதவன் பிறருக்கு ஈந்தறியான் என்றலும் ஒருவன் தனக்கு முதலானவற்றை அறிவுடையோர் கேட்டால் இயன்ற பொருளன்றி இயலாத பொருளை ஈயாதான் என்றலும் நகைப்பையே விளைவிக்கும் என்பதாம்.

**6. ஒருவருக்கு வேண்டுபவை செய்வன**

உடம்பொழிய வேண்டின் உயர்தவம் ஆற்றீண்டு
இடம்பொழிய வேண்டுமேல் ஈகை – மடம்பொழிய
வேண்டின் அறிமடம் வேண்டேல் பிறா்மனை
யீண்டின் இயையும் திரு.

பிறவியொழிய வேண்டின் தவமும், புகழ்நிறைய வேண்டின் ஈகையும், உள்ளம் தூய்மையாய் நிரம்ப வேண்டின் அறிவினால் அடங்கி ஒழுகலும் பிறா்மனை நயவாமையும், வருவாய் நாடோறும் சிறிதாகச் சேர உண்டாகும் செல்வமும் ஒருவற்கு வேண்டியவையாம்.

**7. இன்னதற்கு இன்னது வனப்பு**

படைதனக்கு யானை வனப்பாகும் பெண்ணின்
இடைதனக்கு நுண்மை வனப்பா – நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக் கோற்கதுவே சேவகா்க்கு
வாடாத வன்கண் வனப்பு.

சேனைக்கு யானைப்படையும் பெண்கள் இடைக்குச் சிறுமையும், ஒழுக்கத்துக்கும் அரசன் செங்கோலுக்கும் நடுவுநிலை பிறழாத சொல்லும், படை வீரா்க்கு அஞ்சாமையும் அழகாகும்.

**8.நன்னெறி கடைப்பிடித்தலும் பயனும்**

பற்றினான் பற்றற்றான் நூல்தவசி எப்பொருளும்
முற்றினான் ஆகும் முதல்வன்நூல் - பற்றினால்
பாத்துண்பான் பாா்ப்பான் பழியுணா்வான் சான்றவன்
காத்துண்பான் காணான் பிணி.

பந்தமற்ற கடவுள் நூல் முறையை உணா்ந்து ஒழுகுபவன் தவசியாவான். எல்லாப் பொருள்களையும் உணா்ந்தவன் தலைவனாவான்.

தன் பொருளைப் பிறா்க்குப் பகுத்துக் கொடுத்து உண்பவன் பாா்ப்பானாவான். பழியை அறிந்து விலக்கி ஒழுகுபவன் உயா்ந்தோனாவான். கெட்ட பொருளை நீக்கி நல்லவை தெரிந்து உண்பவன் நோயறியானாவான்.

**9. இன்னதற்கு இன்னது அழகு**

கண்வனப்புக் கண்ணோட்டங் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் பண்வனப்புக்
கேட்டாா்நன் றென்றல் கிளா்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு.

கண்ணுக்கு அழகு கண்ணோட்டம், காலுக்கு அழகு இரந்து செல்லாமை, ஆராய்ச்சிக்கு அழகு ஒரு காரியத்தை ஆராய்ந்து பொருளைத் துணிந்து சொல்லுதல், இசைக்கு அழகு கேட்பவர் அதனைப் புகழ்தல், அரசனுக்கு அழகு குடிகள் அவனை நல்லவன் எனப் புகழ்தல் என்பர்.

### 10. நா செயலற்றுப் போதல்

கொன்றுண்பான் நாச்சாம் கொடுங்கரிபோ வானாச்சரம்
நன்றுணர்வார் முன்கல்லான் நாவுஞ்சாம் - ஒன்றானும்
கண்டுழி நாச்சாம் கடவான் குடிப்பிறந்தான்
உண்டுழி நாச்சாம் உணர்ந்து.

கொன்று அதனை உண்பவன் நா செத்த நாவாம். கொடிய பொய்ச்சான்று உரைப்பான் நாவும் செத்த நாவாம். நல்லவற்றை யெல்லாம் அறிந்தவன் முன்னிற்கும் கல்லாதவன் நாவும் செத்த நாவாம். எவ்வகையிலும் தகாதவனைக் கண்ட போது பேச்சற்ற நா செத்த நாவாம். சொன்ன சொல் தவறாத நல்லகுடியில் பிறந்தவன் பிறருடைய இல்லத்தில் உண்பதால் பழி உண்டாயின் அதனைச் சொல்லா நா செத்த நாவாம்.

## சிறுபஞ்சமூலம் வினாக்கள்

### பகுதி I

1. வேர், வித்து எனும் பொருளுடைய சொல் எது?
2. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர்
3. சிறுபஞ்சமூலத்திலுள்ள பாடல்கள் எத்தனை?
4. அரசனுக்கு அமிழ்து எது?
5. வறண்ட பயிருக்கு வான்மழை போல மக்களுக்கு சிறந்த மருந்து எது?
6. பிறவித் துயர் நீங்க ________ செய்ய வேண்டும்?
7. ஒழுக்கத்துக்கு அழகு ________ .
8. போர்வீரர்களுக்கு அழகு ________ .
9. சுவையடக்கம் கொண்டவன் ________ .
10. கண்ணுக்கு அழகு ________ .
11. அரசுக்கு அழகு ________ .
12. கொன்று உண்பவன் நா ________ .

### பகுதி II

1. சிறுபஞ்சமூலத்திலுள்ள சிறப்பாகக் கூறப்பட்டுள்ள ஐந்து அறக்கருத்துகள் யாவை?
2. பொருளும் அருளும் உடையவன் செயல்கள் எவை?
3. யாருக்கு யார் அமிழ்தமாகக் கருதப்படுகின்றது?
4. சிறுபஞ்சமூலம் கூறும் வெற்றிக்கு எவை வனப்பு?
5. நன்னெறிகளைக் கடைப்பிடிப்பதால் விளையும் பயன்கள் யாவை?
6. எவற்றுக்கு எவை அழகு?

**பகுதி III**

1. நும்பாடற் பகுதியிலுள்ள சிறுபஞ்சமூலம் பாடற்கருத்துகளை விவரி.

## அலகு-4 ஏலாதி (1-10 பாடல்கள்)

ஏலாதியின் ஆசிரியர் கணிமேதாவியார். ஏலம், இலவங்கம், பட்டை, சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் ஆறும் மருந்துகளும் உடம்பிற்கு நன்மை செய்வதைப் போல, உயிர்க்கு நன்மை செய்வன ஆறு பொருள்கள் ஒவ்வொரு செய்யுளிலும் அமைத்துப் பாடப்பெற்றுள்ளன.

ஏலாதி நூலும் ஒவ்வொரு பாடலிலும் ஆறு பொருள்களைப் பெற்று உயிருக்குத் துணையான அறநெறியை விளக்கி உரைக்கும் ஒப்புமை நீர்மையால் இப்பெயரைப் பெற்றுள்ளது இந்நூல். மருந்துப் பெயர் பெற்ற கீழ்க்கணக்கு நூல்கள் மூன்றனுள் ஏலாதி, சிறுபஞ்சமூலம் இவற்றோடு பெரிதும் ஒற்றுமையுடையது. சிறுபஞ்சமூலம் ஐந்து பொருள்களை உரைக்க, இது ஆறு பொருள்களைச் சுட்டுகின்றது. மேலும் சிறுபஞ்சமூலத்தின் கருத்துச் சாற்பொருள்களை இந்நூல் பல இடங்களில் அடியொற்றி உள்ளது.

கணிமேதை என்னும் புலவர், இல்லற ஒழுக்கம் கூறும் நூலையும், பொருத்தான துறவற ஒழுக்கங்கள் கூறும் நூலையும் ஏற்ற இடங்களை வீடெய்தும் நெறி பற்றி உரைக் கூறுகளையும் ஆராய்ந்து மேலான சொல்லால் பாராட்டப்படும் ‘ஏலாதி’ என்னும் நூல் சிறப்பு வாய்ந்ததாகும். நூலின் முதற்கண் அருகக்கடவுளுக்கு இவர் வாழ்த்துக் கூறியுள்ளமையினாலும், நூலுள் சமண சமயத்தார் என்று கொள்ளலாம்.

கொல்லாமை, புலால் உண்ணாமை, தானம், தவம், இன்சொல், ஐம்பொறி அடக்கம், பார்க்கக்கூடாத செயல்கள் முதலான பல வாழ்வியல் நெறிப்படுத்துதலைக் கணிமேதாவியார் கருத்துடன் விளக்கியுள்ளார். இந்நூலில் கடவுள் வாழ்த்து நீங்கலாக எண்பது பாடல்கள் உள்ளன. ஆறு பொருள்களை நான்கு அடிகளில் அடக்கும். சேர, சோழ, பாண்டியர்கள் பேரரசர்களாக விளங்கிய மூவேந்தர் காலத்தில் தோன்றியவை என்பதை இந்நூலில் எண்ணற்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

**1. ஒழுக்கம் உடையாரிடத்திலேயே அழகு பெறும்**

சென்ற புகழ்செய்ய மீக்கூற்றஞ் சேவகம்
நின்ற நிலைகல்வி வள்ளன்மை — என்றும்
வழிவந்தார் பூங்கோதா யாது மறையின்
வழிவந்தார் கண்ணே வனப்பு.

நிறைந்த பூவையணிந்த கூந்தலையுடையாய்! திசையெங்கும் பரந்த புகழ், செல்வம், மேன்மையாகக் கொள்ளும் சொல், வீரத்தில் அசையாது நின்ற நிலை, கல்வி, வரையாதுகொடுத்தல் ஆகிய இவ்வாறும் தொன்மையுடைய குடியில் பிறந்து

திருநான்மறை நெறியில் ஒழுகுவோரது இலக்கணம் ஆகும். கல்விதான் இன்றைய மிகப்பெரிய சொத்தாகும். கல்வியின் மேன்மை பெற்றவர்களுக்கு எங்குச் சென்றாலும் சிறப்பு பெறுவார்கள் என்பது உண்மை. புகழின் மேன்மையும், நிலையாத செல்வமும், கருத்தான சொற்களும், துணிவுடன் செயல்படும் திறமும் மனித வாழ்வில் நிலைத்தவையாகும். இவ்வாறும் நற்குடியில் பிறந்தவர்களிடத்தில் நிலைபெற்று நிற்கும் என்பதே திண்ணம்.

புகழ் முதலிய ஆறும் நற்குடியில் பிறந்த நான்மறையொழுக்கம் உடையாரிடத்திலேயே அழகு பெறும்.

**2.மக்கட்குந் தேவர்க்குந் தலைவனாவான்**

கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான் கூர்த்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும் - நிலைதிரியான்
மண்ணவர்க்கு மன்றி மதுமலிபூங் கோதாய்
விண்ணவர்க்கு மேலாய் விடும்.

தேன் பொழியும் பூவை யணிந்த கூந்தலையுடையாய்! பிறர் புரியுங் கொலைத் தொழிலை விரும்பாதவனும், கொல்லாதவனும், தசையை அறிவு மயங்கித் தின்னாதவனும், மிகுந்த வருத்துந் தொழிலைச் செய்யாதவனும், பொய்யொழுக்கமில்லாதவனும், யாது காரணம் பற்றியும் தன்னிலைமையினின்று விலகாதவனும், பூவுலகத்தாரது வணக்கத்துக்குரியவனாவதுடன் வானுலக்கத்தார் வணக்கத்துக்கும் உரியவனாவது திண்ணம்.

**3. துன்பத்தை நீக்கிக் கொள்ளுதல் அரிது.**

தவமெளிது தான மரிதுதக் கார்க்கேல்
அவமரி தாத லெளிதால் - அவமிலா
இன்பம் பிறழி னியைவெளிது மற்றதன்
துன்பந் துடைத்த லரிது.

யாவர்க்குந் தவஞ் செய்தல் எளிது. கைப்பொருள் வழங்கல் அரிது. பெரியோர்க்குக் குற்றத்துக்குள்ளாதல் அரிது நன்னெறியில் ஒழுகுதல் எளிது. கெடுதலில்லாத இன்பநெறி தடுமாறிச் சென்றால் பிறப்பில் பொருந்துதல் எளிது. அவ்வாறு பிறந்ததின் கண் உண்டாகும் துன்பத்தை நீக்கிக் கொள்ளுதல் அரிது.

**4. கற்றோர்க்கு ஒப்பானவன்**

இடர்தீர்த்த லெள்ளாமை கீழினஞ்சே ராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின் - நடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ்சொற் காணிற் கலவியின்கண்

விண்டவர்நூல் வேண்டா விடும்.

பிறர்க்கு நேரிட்ட துன்பந் துடைத்தலும், பிறரை இகழாமையும், கீழ்மக்களோடு பழகாமையும், யாவர்க்கும் பசித்துன்பம் போக்குதலும், உலகம் பழிக்கும் நடையினின்று நீங்குதலும், தன்னை யெதிர்ப்பட்டவர் விரும்பும் இன்சொல்லும் ஒருவன் தானே கண்டுகொண்டானெனில் கற்றறிந் தோரால் சொல்லப்பட்ட நூல்களைப் பார்த்து அறிய வேண்டிய பொருள் ஒன்றுமில்லாதவன் ஆவன்.

**5. நல்லியல்புகளும் தாமே வந்து நிரம்பும்**

தனக்கென்று மோர்பாங்கற் பொய்யான்மெய் யாக்கும்
எனக்கென் றியையான்யா தொன்றும் - புனக்கொன்றை
போலு மிழையார்சொற் றேறான் களியானேல்
சாலும் பிறநூலின் சார்பு.

தனக்கென்றும் தன்னைச் சார்ந்தவனுக்கென்றும் பொய்யுரையில்லாதவனாய், உண்மையையே உரைப்பவனாய், யாதொரு பொருளையும் எனக்குரியதென அன்பு வையாதவனாய், முல்லை நிலத்திலுள்ள கொன்றை மலரை ஒக்கும் அணிகளை அணியும் மாதர் சொல்லைப் பேணாதவனாய், செல்வச் செருக்கு இல்லாதவனாய் ஒருவன் வாழ்வானாயின், அவனிடத்து அறநூல்களில் கூறப்பட்ட மேன்மையான பொருள்களெல்லாம் வந்து நிரம்பும்.

**6. பல்லுயிர்க்கட்கும் நன்மை செய்பவனாவான்**

நிறையுடைமை நீர்மை யுடைமை கொடையே
பொறையுடைமை பொய்ம்மை புலாற்கண் - மறையுடைமை
வேயன்ன தோளா யிவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்ன னென்னத் தகும்.

மூங்கிலையொத்த தோளையுடையவளே! புலன்வழி போகாது தன்மனதை நிறுத்தலுடைமையும், நற்குணமுடையனாதலும் ஈதலும் பொறுமையோடிருத்தலும், பொய்கூற விடாது தன்னை அடக்குதலும், ஊன் தின்னவிடாது தன்னை அடக்குதலும் ஆகிய இவ்வாறும் பொருந்திய ஒருவன், பல உயிர்கட்கும் தாயினது அன்பு போலும் அன்பினை உடையவன் என்று யாவரும் சொல்லத் தகுந்தவன் ஆவன்.

**7. மறுமையில் இன்பமுண்டாம்**

இன்சொ லாளவ லிடமினிதூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல் - மென்சொல்

முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து.

மிருதுவாகிய சொல்லையும் மயிற்பீலியினது அடியையொத்து விளங்கும் கூரிய பல்லையுடையாய்! தன் மனை நோக்கி வரும் விருந்தினர் யாவரிடத்தும் இன்சொல் கூறலும், கலந்து உறவாடலும், இருக்கை உதவலும், அறுசுவை உணவளித்தலும் செய்து, கடுஞ்சொலொழித்து மென்சொல் வழங்கிச் சிறப்பிப்பானாயின் எக்காலமும் அவனை வானோர் விருந்தினனாய் ஏற்றுக்கொள்வர்.

விருந்தினனுக்கு இன்சொல் முதலிய வழங்குவானுக்கு மறுமையில் இன்பமுண்டாம்

**8. நல்லாரோடு இணங்குவார்க்கும் அந் நல்லன உண்டாக்கும்**

உடன்படான் கொல்லா னுடன்றார்நோய் தீர்த்து
மடம்படான் மாண்டார்நூன் மாண்ட - இடம்பட
நோக்கும்வாய் நோக்கி நுழைவானேன் மற்றவனை
யாக்குமவர் யாக்கு மணைந்து.

ஒன்றினைப் பிறர் கொல்ல உடன்படாது, தானுங் கொல்லாது, பிணியால் வருந்தினார் நோயைத் தீர்த்து பேதைமையின்கட்படாது, மாட்சிமைப்பட்டோர் நூல்களின்மாட்சிமைப்பட்ட குணங்களுள் தனக்குப் பெருகும்படி ஆராயுமாயின், தான் ஆராய்ந்தவற்றின்கண் ஒழுகுவனாயின், அவனை அணைத்தார்க்கு நெறியெல்லாம் கூடியாக்கும்.

**9. பண்டிதராய் வாழ்வார் பயின்று**

கற்றாரைக் கற்ற துணரா ரெனமதியார்
உற்றாரை யன்னண மோராமல் - அற்றார்கட்
குண்டி யுறையு ளுடுக்கை யிவையீந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று.

கற்றாரைக் கற்றிலரென்று மனதிற் கொள்ளாதே, உற்றாரையும் உற்றாரென்று கொள்ளாதே, பொருளற்றார்க்கு உணவும், மருந்தும், உறையிடமும், உடுக்கையும் பயின்று கொடுத்தால் அறிவுடை யாரென்று பிறரான் மதிக்கப்படுவர்.

பிறரெவரையும் தாழ்வென்று கருதாமல் அற்றார்க்கு வேண்டுவன உதவுவார், அறிவுடையராய்க் கருதப்படுவார்.

**10. எனைத்து மறியாமை யான்**

செங்கோலான் கீழ்க்குடிகள் செல்வமுஞ் சீரிலா
வெங்கோலான் கீழ்க்குடிகள் வீந்துகவும் - வெங்கோல்

அமைச்சர் தொழிலு மறியலமொன்றாற்ற
எனைத்து மறியாமை யான்.

செங்கோலானது செல்வமும், அவன் கீழ்வாழும் குடிகளது செல்வமும், வெங்கோலானது கேடும், அவன்கீழ் வாழும் குடிகளது கேடும், வெங்கோலமைச்சரது கேடும், அவர் தொடங்கிய வினை முடியாது கெடுதலும் ஆகும்.

அரசச் செல்வமும் அவன் கீழ் வாழும் மக்களின் செல்வமும் செங்கோலாட்சியில் சிறந்து ஒழுகும் வெங்கோலாட்சியாயின் அவனது குடிகளும் அழிந்து கெட்டுவிடும்.

**ஏலாதி வினாக்கள்**

**பகுதி I**

1. ஏலாதியின் ஆசிரியர் ________ .
2. ஏலம் ஆதியாகக் கொண்ட ஆறு மருந்துகள் யாவை?
3. ஒவ்வொரு பாடலிலும் எத்தனை கருத்துகள் உள்ளன.
4. ஏலாதியோடு ஒப்புமையுடைய நூல் எது?
5. ஒழுக்கம் உடையார் __________ பெறுபவர்
6. நல்லாரோடு இணங்குவார்க்கு __________ உண்டாகும்.
7. மறுமையில் ____________ உண்டாகும்.

**பகுதி II**

1. ஏலாதி பெயர்க்காரணம் கூறுக.
2. ஏலாதியில் கொல்லாமை எவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது?
3. மக்கள் எப்போது தேவர்களுக்கும் தலைவனாவான்?
4. கற்றோர்க்கு ஒப்பானவர் யார்?
5. தாயின் அன்பை ஒத்தவர் யார்?
6. யார் பண்டிதராய் வாழ்வார்?

**பகுதி III**

1. நும்பாடப்பகுதியில் ஏலாதிப்பாடற் கருத்துகளை விளக்குக.

## அலகு - 4 முதுமொழிக்காஞ்சி (சிறந்த பத்து, அறிவுப்பத்து)

முதுமொழிக்காஞ்சி என்பது காஞ்சித் திணையின் துறைகளில் ஒன்று. வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் சாற்றுவது

காஞ்சியாகும். சான்றோர் குற்றம் நீக்கி ஆராயும் உலகத்திலுள்ள முடிந்த பொருளாகிய அறம், பொருள், இன்பங்களை அறியச் சொன்ன முதுமொழிகளாகும்.

இந்நூல் செய்யுட்கள் வெண்செந்துறை என்னும் பா வகையைச் சார்ந்தன. இரண்டிகள் கொண்டது. ஒவ்வொரு அடியிலும் நான்கு சீர்கள் அமைந்திருப்பதுவே வெண் செந்துறையாகும். இந்நூலின் ஒவ்வொரு செய்யுளின் முதல் அடி 'ஆர்கலி உலகத்து மக்கட்கெலாம்' என்ற வரியுடன் தொடங்கப்பட்டு அறக்கருத்துக்களை வலியுறுத்தியுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் பத்துச் செய்யுட்களைக் கொண்டது. ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வொரு முதுமொழியை உட்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு அதிகாரத்திலும் செய்யுளில் உள்ள சிறப்பை வைத்துத் தலைப்பாக வைக்கப்பட்டுள்ளது.

1) சிறந்த பத்து, 2) அறிவுப்பத்து, 3) பழியாப்பத்து, 4) துவ்வாப்பத்து, 5) அல்லபத்து, 6) இல்லைபத்து, 7) பொய்ப்பத்து, 8) எளியபத்து, 9) நல்கூர்ந்த பத்து, 10) தண்டாப்பத்து என்னும் பத்துப் பிரிவுகளைக் கொண்டது.

இந்நூலை இயற்றியவர் பல்துறை முற்றிய கூடலூர்க்கிழார். இந்நூலிலுள்ள அறங்கள் மக்கள் பின்பற்ற வேண்டியவை எவை என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார். இவ்வாசிரியர் வலியுறுத்திச்சொல்லுவதே இந்நூலின் சிறப்பாகும்.

### 1. **சிறந்த பத்து**

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றெழுக்கமுடைமை"
"காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்."
"மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை"
"வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை."
"இளமையிற் சிறந்தன்று மெய்பிணி யின்மை"
"நலனுடை மையி னாணுச் சிறந்தன்று"
"குலனுடை மையிற் கற்புச் சிறந்தன்று"
"கற்றலிற் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று."
"செற்றாரைச் செறுத்தலிற் தற்செய்கை சிறந்தன்று"
"முற்பெரு கலிற்பின் சிறுகாமை சிறந்தன்று"

1. கடலால் சூழப்பட்ட உலகத்தில் வாழும் மக்கட்கு எல்லாம் கூறப்படும் சிறப்புகளாவன: கற்றலைவிட நன்னடத்தையோடிருப்பது சிறந்தது.

2. பிறர் அன்பு பாராட்டும்படி நடத்தையைவிட அவர் மதிக்கும்படி நடத்தல் சிறந்தது.
3. அறிவுநுட்பத்தைவிட கற்ற பொருளை மறவாதிருத்தல் சிறந்தது.
4. வளமையோடிருத்தலைவிட உண்மையோடிருத்தல் சிறந்தது.
5. இளமையைக் காட்டிலும் உடம்பு நோயில்லாமல் இருத்தல் சிறந்தது.
6. அழகுடைமையைவிட நாணம் சிறந்தது.
7. உயர்ந்த குலமுடைமையைவிட கல்வியுடைமை சிறப்புடைத்து.
8. கற்றலைவிடக் கற்றோரை வழிபட்டொழுதல் சிறந்தது.
9. பகைவரை ஒறுத்தலைவிடத் தன்னை மேம்படுத்திக் கொள்ளுதல் சிறந்தது.
10. செல்வம் முற்காலத்துப் பெருகிப் பின் அழிந்து சிறுகாமை சிறப்புடையது.

## 2. அறிவுப்பத்து

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரிற் பிறந்தமை ஈரத்தின் அறிப."
"ஈரமுடைமை ஈகையி னறிப."
"சோரா நன்னட் புதவியி னறிப."
"கற்ற துடைமை காட்சியி னறிப."
"ஏற்ற முடைமை எதிர்கோளி னறிப."
"சிற்றிற் பிறந்தமை பெருமிதத்தி னறிப."
"சூத்திரஞ் செய்தலிற் கள்வனாத லறிப."
"சொற்சோர் வுடைமையின் எச்சோர்வு மறிப."
"அறிவுசோர் வுடைமையிற் பிறிது சோர்வு மறிப."
"சீருடை யாண்மை செய்கையி னறிப."

கடலால் சூழப்பட்ட உலகத்திலுள்ள மக்கட்கெல்லாம் கூறப்பட்ட சிறந்தனவற்றை அறிய வேண்டிய இன்றியமையாமைகளை அறிவுப்பத்து என்னும் அதிகாரத்துள் வைத்துள்ளார்.

1. ஒருவன் பெருங்குடியில் பிறந்தமையை அவனுடைய அன்பும் அருளும் உடைய குணத்தினால் அறியலாம்.

2. ஒருவன் நெஞ்சில் ஈரமுடையான் என்பதை அவன் பிறர்க்குக் கொடுக்கும் கொடையினால் அறியலாம்.

3. ஒருவனின் பிரியாத உயர்ந்த நட்புடைமையை அவன் நண்பர்க்குச் செய்யும் உதவினால் அறியலாம்.

4. ஒருவர் கற்ற கல்வியை அவர்களுடைய அறிவினால் அளந்தறிய முடியும்.

5. ஒருவனது ஆராய்ச்சி அறிவுடைமையை அவன் எதிர்கொள்ளும் செயல்களால் அறிய முடியும்.

6. சிறுமையுடைய குடியில் பிறந்தான் என்பதை அவன் செருக்கினால் அறியலாம்.

7. ஒருவனையொருவன் வஞ்சனை செய்வதனால் அவன் நெஞ்சு கள்வனாதலை அறியலாம்.

8. ஒருவனின் தவறுகளை அவனுடைய சொல் சோர்வடைவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

9. ஒருவனுடைய அறிவு சோர்வடைவதலிருந்து அவனுடைய செயல் சோர்வடைவதை அறியலாம்.

10. ஒருவனுடைய முயற்சியின் திறத்தை அவன் முழக்கும் செயலாற்றலால் அறியலாம்.

### முதுமொழிக்காஞ்சி வினாக்கள்

### பகுதி I

1. முதுமொழிக்காஞ்சியின் ஆசிரியர் -------------------
2. கற்றலைவிடச் சிறந்தது-----------------
3. மேதையிற் சிறந்தது--------------
4. ஈரமுடைமை ______ அறிய
5. நட்புடைமையை _____ அறியலாம்

### பகுதி III

1. முதுமொழிக்காஞ்சியின் பெயர்க்காரணம் கூறி, அதன் பகுப்புகளை எழுதுக.
2. ‘சிறந்த பத்து’ எனும் அதிகாரத்திலுள்ள சிறந்தவைகளைக் கூறுக.
3. ‘அறிவுப்பத்து’ எனும் தலைப்பிலுள்ள பாடற்கருத்துகளை விவரி.

## அலகு - 4 மூதுரை (1 – 20 பாடல்கள்)

சங்க காலத்திலும், சங்க காலத்திற்குப் பின்னால் கம்பன், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் போன்ற புலவர்கள் நிலவிய காலத்திலும் தோன்றிய ஔவையாருக்குப் பின்னும் ஔவையார் ஒருவர் உள்ர். இவர் குழந்தைகளுக்கென்று

இளமைக்குரிய அறிவுரைகளாக ஆத்திச்சூடி, நல்வழி, கொன்றைவேந்தன், மூதுரை போன்ற நீதி நூல்களையும், விநாயகர் அகவல் என்ற தோத்திர நூலையும் செய்துள்ளார்.

ஔவையாரின் ஆத்திச்சூடி மிகச்சுருங்கிய யாப்பு வடிவம் தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுவரவாகும். ஔவையார் படைப்புகளில் அறம் உணர்த்தலே மேலோங்கிக் காணப்படுகின்றது. இவை எளிய தமிழிலும், அழகிய உவமைகளிலும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

மூதுரை வெண்பா யாப்பில் அமைந்தது. எளிய சொற்களில் அரிய கருத்துகள் இச்சிறிய நூலில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்நூலில் கடவுள் வாழ்த்துத் தவிர, மொத்தம் முப்பது பாடல்கள் உள்ளன. இந்நூலை ‘‘வாக்குண்டாம்’’ என்றும் அழைக்கின்றனர்.

**1. தென்னை – நல்லோர்**

நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாள்உண்ட நீரைத்
தலையாலே தான்தருத லான்

தென்னை மரம் வேரிலே உண்ட நீரை உச்சியிலே இளநீர்க் காய்களாகத் தந்து, நன்றியைக் காட்டுதல்போல நல்லவர்கள் தங்களுக்குப் பிறர் செய்த உதவிக்குத் தக்க சமயத்தில் நன்றியைப் புலப்படுத்துவார்கள்.

(நல்லோர்க்குச் செய்த நன்றித் தென்னையின் வேருக்கு ஊற்றிய நீர் இளநீராகக் கிடைப்பதைப் போல தக்க காலத்தில் வெளிப்படும்).

**2. நல்லோர்க்கு உதவி – கல்மேல் எழுத்து**

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே – அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்

நல்லோர்க்குச் செய்த உதவி கல்மேல் பொறித்த எழுத்தாக நிலைத்திருக்கும். தீயோர்க்குச் செய்த உதவி நீர்மேல் எழுதப்பட்ட எழுத்தாகச் சுவடு தெரியாமல் அப்போதே அழிந்துவிடும்.

**3. பருவந் தவறிப் பூத்தமலர் - இளங் கைம்பெண்ணின் அழகு**

இன்னா இளமை வறுமைவந்து எய்தியக்கால்

இன்னா அளவில் இனியவும் - இன்னாத
நாள் அல்லவா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆள் இல்லா மங்கைக்கு அழகு

சூடும் பருவந்தவறிப் பூத்த மலரால் பயனில்லை. அதுபோல, இன்பம் துய்க்கும் இளமைக்காலம் தவறிக் கிடைக்கும் செல்வம், பயனற்றதாகும். கணவன் இல்லாத பெண் பேரழிகியாக இருந்தும் பயனென்ன? அந்த அழகு அனுபவிக்க முடியாத முதுமையில் கிடைத்த செல்வம் போன்று துன்பத்தையே தரும்.

**4. காய்ச்சியபால், சுட்டசங்கு – மேன்மக்கள்**

அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

பாலை எவ்வளவு காய்ச்சினாலும் சுவையில் குன்றாது. சுங்கினைச் சுட்டு நீறாக்கினாலும் வெண்மைநிறம் மாறாது. அவைபோலவே, உயர் குணமுடைய பெருமைக்குரியவர்கள் எவ்வளவுதான் வறுமையில் தாழ்ந்த நிலையடைந்தாலும் இயல்பான பெருமைக் குணத்திலிருந்து சிறிதும் மாறுபடமாட்டார்கள். ஆனால் கீழ்க் குணம் உடையவர்கள் அதிகமாக அளவளாவி நட்புச் செய்தாலும் அவர்கள் உண்மையான நண்பர்கள் ஆக மாட்டார்கள்.

**5. செயலின் வெற்றி – பழுக்கும் பருவம்**

அடுத்து முயன்றாலும் ஆகும்நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா – தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பாழா

அடர்ந்த கிளைகளோடும் பெரிய உருவத்தோடும் ஓங்கி வளர்ந்துள்ள மரமென்றாலும், பழுக்கும் பருவத்தில் தான் பழுக்கும். அதுபோல, எவ்வளவு தான் முயன்றாலும், முடியக்கூடிய காலம் வாய்க்கிறபோது எவ்வினையும் வெற்றியாய் முடியும். (ஏற்ற காலத்தில் எண்ணி முயலும் செயலெ வெற்றி எய்தும்).

**6. கல்தூண் - மானமுள்ளவர்**

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ – கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்

தளர்ந்து வளையுமோ தான்

ஒரு கல் தூணின் மீது பெரும்பாரத்தை எற்றினால், அது தாங்காமல் பிளவுபட்டு உடைந்த சிதறுமே தவிர, சிறிதும் வளைந்து கொடுப்பது இல்லை. அது போலவே, மானம் இழக்க நேரும் நிலையில், பெரியோர்கள் உயிரைவிட்டு விடுவார்களே தவிர பகைவருக்குப் பணிந்து வாழ நினைக்கமாட்டார்கள்.

**7. நீர் உயரம் ஆம்பல் - கற்ற அளவு நுண்ணறிவு**

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல் தான்கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண்அறிவு – மேலைத்
தவத்து அளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்து அளவே ஆகும் குணம்.

நீர் நிலையில் உள்ள தண்ணீரின் உயர அளவுக்கே அல்லி மலர் உயர்ந்து தோன்றும். அதுபோலவே, ஒருவன் படித்து உணரும் நூல்களின் தன்மையைப் பொறுத்தே, அவனுடைய ஆய்வுத் திறமைகொண்ட நுண்ணறிவே அமையும். ஒருவன் தவமாக ஏற்றுக்கொள்ளும் பெருத்த முயற்சியின் அளவாகவே அவன் பெற்ற செல்வம் அமையும். அவன் பிறந்த குடியின் வழிவழியான சிறப்பான குணங்களைப் பொறுத்தே அவனது இயல்பான குணங்கள் அமைந்திருக்கும்.

**8. நன்மைக்குரியவை**

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே – நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே – அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

நல்லவர்களை நேரில் காண்பதும், அவர்களின் அறிவுரைகளைக் கேட்பதும், அவர்களின் குணங்களைப் புகழ்ந்து பேசுவதும், அவர்களோடு சேர்ந்து இருப்பதும் ஆகிய செயல்கள் நன்மைகளையே தரும்.

**9. தீமையைச் சேர்ப்பவை**

தீயாரைக் காண்பதுவும் தீதே திருஅற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே – தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது.

தீயவரைக் காண்பது, தீயவரின் பொருளில்லாப் பேச்சினை கேட்பது, தீயவரின் குணங்களைப் பேசுவது, தீயவரோடு சேர்ந்து இருப்பது ஆகிய யாவுமே தீமைகளைச் சேர்க்கும்.

### 10. நெல்லுக்கு நீர் - நல்லோர்க்கு மழை

நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழிஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை

நெற்பயிருக்கென்று இறைத்துப் பாய்ச்சப்படும் நீர், வாய்க்கால் வழியே ஓடும்போது, வாய்க்காலின் இருமருங்கிலும் உள்ள புல் பூண்டுகள், பயிர்களின் இடையே கலந்து வளரும் புல் முதலான களைகள் முதலியவற்றின் வளர்ச்சிக்கும் பயன்படுவதைப்போல, உலகில் உள்ள நல்லவர் ஒருவருக்காகப் பெய்யும் மழையானது, எல்லோர்க்கும் பயன்படுகிறது.

### 11. உமியோடு அரிசி – துணையோடு ஆற்றல்

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டுஉமி போனால் முளையாதாம் - கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி
ஏற்ற கருமம் செயல்

நெல்லுக்குள்ளிருக்கும் அரிசியே, மேலே உமியோடு இருக்கும்போது விதைத்தால் முளைக்கிறது. அந்த அரிசியே, உமி நீக்கப்பட்ட நிலையில் முளைப்பதில்லை. அதுபோலவே, பெருவலிமை கொண்டவரும் வேறு துணையில்லாமல் வெற்றியை யடைதல் என்பது இயலாது.

### 12. தாழை – கடல் மகிழம்பூ - சிற்றூறல்

மடல்பெரிது தாழை மகிழ்இனிது கந்தம்
உடல் சிறியர் என்று இருக்க வேண்டா – கடல் பெரிது
மண்நீரும் ஆகாது அதன்அருகே சிற்றூறல்
உண்நீரும் ஆகி விடும்.

பெரிதாக மடல் கொண்ட தாழைக்கு மணம் இல்லை. ஆனால் சிறிய இதழ்களைக் கொண்டிருந்தாலும் மகிழம் பூவிற்கு மணம் உண்டு. கடலில் நிறைய நீர் இருந்தும் அது கழுவுவதற்குக்கூடப் பயன்படுவது இல்லை. கடல் அருகே மணற்குழியில் சுரக்கும் ஊற்றுநீர், கழுவுவதற்கு மட்டுமன்றி உண்பதற்கும் பயன்படுகிறது.

**13. நல்ல மரம் - படிக்கத் தெரியாதவன்**

கவைஆகிக் கொம்புஆகிக் காட்டு அகத்தே நிற்கும்
அவை அல்ல நல்ல மரங்கள் - சவை நடுவே
நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய
மாட்டா தவன்நன் மரம்.

காட்டுக்குள் கிளைகளோடும் கொம்புகளோடும் கூடி நிற்கும் மரங்கள் நல்ல மரங்கள் ஆகா. சான்றோரின் அவையிலே கொடுக்கப்பட்ட ஓலையைப் படிக்கத் தெரியாதவனும், ஆன்றோரின் குறிப்பு அறிந்து நடந்து கொள்ளத் தெரியாதவனுமே நல்ல மரம் என்று சொல்ல வேண்டும்

**14. மயில் - கற்ற கவிஞன், வான்கோழி – கல்லாதவன்**

கான மயில்ஆடக் கண்டுஇருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி

காட்டில் அழகு மயில் தன் தோகையை விரித்து ஆடியதைக் கண்ட வான்கோழியும் தானும் மயிலைப்போல ஆடுவதாக நினைத்துக் கொண்டு, தன் அழகற்ற சிறகை விரித்து ஆடியதைப் போன்றது, கற்றறிந்தவர் கவிபாடுவதைக் கண்டு, கல்லாதவன் தானும் கவியென்று பாடுவது.

**15. வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி – கல்லின்மேல் இட்ட கலம்**

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல் - பாங்கு அறியாப்
புல்அறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம்.

வேங்கைப் புலியின் நோயினைக் குணப்படுத்திய நச்சு மருத்துவன், அப்போதே அப்புலிக்கு இரையானதைப் போல், நன்றி அறியும் பண்பில்லாத இழிந்த அறிவினர்க்குச் செய்யப்பட்ட உதவி கற்பாறையின்மீது ஏறியப்பட்ட மண்கலம் போல அழிந்துவிடும்.

**16. கொக்கு – காத்திருப்பவர்**

அடக்கம் உடையர் அறிவிலர் என்றுஎண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத் தலையில்
ஓடுமின் ஓட உறுமீன் வரும் அளவும்

வாடி இருக்குமாம் கொக்கு

நீர் மடையில் கொக்கானது, வாடியிருப்பதுபோல் நின்று சிறிய மீன்களை ஓடவிட்டு, பெரிய மீன்கள் வரும்வரை காத்திருந்து, வந்ததும் உடனே தப்பிப் போகாமல் அலகினில் கொத்தித் தன் இரையாக்கிக் கொள்ளும். அதுபோலவே, அறிவில் மிக்கவர் வெல்லும் காலம்வரை காத்திருந்து, அந்த நேரம் வாய்க்கும் அந்தக் கணமே பகைவர் மேல் பாய்ந்து வெற்றி கொள்வர். அடக்கமாக இருக்கும் காலத்தில் அவர்களை வென்று விடலாம் என்று கருதினால் அது மடமையே.

**17. குளத்தில் கொட்டி, ஆம்பல், நெய்தல் - வாழ்க்கையில் உண்மை உறவினர்**

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவுஅல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

நீருள்ள குளத்தில் இருக்கும் பறவைகள், நீர் வற்றியுவுடன் குளத்தை விட்டு நீங்கி வேறு இடம் சென்றுவிடும். அதுபோல, வளமாக வாழ்ந்தபோது உடனிருந்த உறவினர்கள், வறுமை வந்துற்றதும் நீங்கிப்போய் விடுவார்கள்.

அக்குளத்திலே நீருள்ள காலத்தில் இருந்த கொட்டி, அல்லி, நெய்தல் முதலியவை நீர் இல்லாக் காலத்தில் அக்குளத்தைவிட்டு நீங்காமல் அங்கேயே இருக்கும். அதுபோல, வறுமையுற்று வாடிக்கிடக்கும் காலத்திலும் நீங்கிப் போகாமல் உடன் இருப்பவர்களே உண்மையான உறவினர் ஆவர்.

**18. பொன்குடம் - சீரியர்**

சீரியர் கெட்டாலும் சீரியரே சீர்மற்று
அல்லாதார் கெட்டால் அங்கு என்ஆகும் சீரிய
பொன்னின் குடம் உடைந்தால் பொன்ஆகும் என்ஆகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால்

பொன்னால் ஆன குடம் உடைந்த பின்னும் பொன்னாகப் பயன்படும். அதுபோல சிறந்தத பண்புகளுடைய செல்வந்தர் வறுமையுற்று வாடினாலும், முன்போலவே அனைவர்க்கும் பயன்படுவர்.

மண்ணாலான குடம் உடைந்தால், அதன்பின்னர் ஒரு பயனும் இல்லை. அதுபோலவே, கீழ்மைக்குணம் உள்ளவர்கள் வறுமையுற்றால் ஒருவருக்கும் பயன்படமாட்டார்கள்.

**19. நீர் முகக்கும்படி – நிதியும் கணவரும் பயன்படும் வகை**

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்

நூழி முகவாது நால்நாழி – தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தாம்தாம்
விதியின் பயனே பயன்.

ஓர் அளவையைக் கடல் நீருக்குள் எவ்வளவுதான் அமிழ்த்தி அமிழ்த்தி எடுத்தாலும், அது ஒரு படியில் நான்குபடி நீரைக் கொள்ளாது, அதுபோலவே செல்வமும் கணவனும் மனவிருப்பத்துக்கேற்ப அமைந்திருந்தாலும், கணவன் பண்புக்கேற்ற அளவிலும், செல்வம் செலவழிக்கும் வகையிலும் அவரவர் அணுகுமுறைக்கேற்பவே பயன்கிடைக்கும்.

**20. உதவும் அயலவர் - மாமலை மருந்து**

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றுஇருக்க வேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி – உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்
ஆ மருந்து போல்வாரும் உண்டு.

நோய், உடலோடு பிறந்தே அவ்வுடலை அழிக்கிறது. அதுபோல, உடன்பிறப்புகள் சிறந்த உறவு என்றிருக்கக்கூடாது. (நன்மை செய்வதற்குப் பதிலாகத் தீமையே செய்வர்). எங்கோ ஒரு பெரிய மலையில் பிறந்த பச்சிலை (மூலிகை) நோயைப் போக்கும். உடன்பிறவாமல் எங்கோ பிறந்தவர்களே உதவுபவராக இருப்பர்.

## மூதுரை வினாக்கள்

## பகுதி – I

1. மூதுரை எழுதியவர் ___________________
2. மூதுரை ______________ என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது.
3. கடவுள் வாழ்த்து எக்கடவுளை வழிபடுவதாக அமைந்துள்ளது?
4. நல்லாருக்குச் செய்த உபகாரம் ______________ போல் காணுமே.
5. சுட்டாலும் வெண்மை தரும் சங்கு யாருக்கு உவமை?
6. தான்கற்ற நூல்அளவே ஆகுமாம் ______________.
7. எதைப் பொருத்து குணம் அமைந்திருக்கும்?
8. ______________ காண்பதுவும், கேட்பதுவும், உரைப்பதுவும் இணங்கி இருப்பதுவும் நன்று.
9. ______________ காண்பதுவும், கேட்பதுவும், உரைப்பதுவும் இணங்கி இருப்பதுவும் தீயது.

10. நல்லார் பொருட்டு எல்லோருக்கும் ______________

## பகுதி II

1. பிறருக்குச் செய்யும் உதவியைக் கூறும் இருபாடற் கருத்துக்களை எழுதுக.
2. ‘‘உயர் மரங்கள் எல்லாம் பருவத்தால் அன்றிப் பழா’’ – விளக்குக.

## பகுதி – III

1. நும்பாடப்பகுதியில் அமைந்த மூதுரையின் பாடற்கருத்துக்களை விவரி.

## அலகு – 5 களவழி நாற்பது (முழுவதும்)

களவழி ஆசிரியர் - பொய்கையார்

பாடல்கள் - 40

திணை - புறத்திணை – வாகைத்திணை

பாவகை - வெண்பா

களம் ஸ்ரீ போர்க்களம் போர்க்களம் பற்றிய நாற்பது பாடல்களைக் கொண்ட நூல் என்பது பொருள். பதிணென்கீழ்க்கணக்கு புறப்பொருள் சார்ந்த ஒரே நூல் இ∴து ஒன்றே.

ஏரோர் களவழி அன்றிக் களவழித்

தேரோர் தோன்றிய வென்றியும்

என்பது தொல்காப்பியம்.

இதிலிருந்து ஏர்க்களம், போர்க்களம் என இருவகை உ ண்டு. இவ்விரு களங்களையும் பாடுவது களவழி போரில் வெற்றி பெற்ற மன்னனின் தேர் முன்பு வெற்றி தோன்றப் பாடி வருவது போர்க்களவழி என்னும் கருத்துகள் புலனாகின்றன.

சோழன் கோச்செங்கணானும் சேரமான் கணைக்கால் இரும்பொறையும் போர்ப்புறம் (கழுமலம்) என்னும் ஊரில் போரிட்டனர். சேரமான் தோற்றுப்போனான். குடவாயில் கோட்டம் என்னும் இடத்தில் கணைக்கால் இரும்பொறை சிறை வைக்கப்பட்டான். சிறையில் அடைக்கப்பட்ட சேரமானை, காவலாளன் முதற்கொண்டு மதிப்பின்றி நடத்தினர்.

சேரமான் கணைக்காலின் மீது அன்பு கொண்டவர் பொய்கையார் சேரமானைச் சிறையில் இருந்து விடுவிப்பதற்காக, திருப்போர்ப்புறம் போரின் வெற்றியை நாற்பது வெண்பாக்களில் கோச்செங்கணான் மீது பொய்கையார் பாடினார். அப்பாடல்களைக் களவழி நாற்பது எனப்படுகிறது. ‘களவழி நாற்பது’ பாடியதற்கான பரிசாகச் சேரமான் கணைக்காலின் சிறை விடுதலையை முன் வைத்தார் பொய்கையார். கோச்செங்கணானும் புலவரின் வேண்டுகோளைத் தட்ட இயலாமல் ஏற்றுக்கொண்டான். களவழி நாற்பது பாடலில் யானைப்போரே மிகுதியும் பாடப்பட்டுள்ளது.

களவழி நாற்பது கார்த்திகைத் திருவிழா உவமிக்கப்பட்டுள்ளது. போரின் வீரர்கள் சிந்தும் குருதி கார்த்திகை விழாவில் ஒருங்கே சிந்தும் குருதி கார்த்திகை விழாவில் ஒருங்கே தோன்றும் விளக்குத் தொகுதியின் செம்மையைப் போல் இருக்கிறது எனப் பொய்கையார் கூறுகின்றார்.

1. "நாண்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வாண்மாய் குருதி களிறுழக்கத்-தாண்மாய்ந்து
முன்பக லெல்லாங் குழம்பாகிப் பின்பகல்
துப்புத் துகளிற் கெழுஉம் புனனாடன்
தப்பியா ரட்ட களத்து."

நீர்வளம் மிக்க நாட்டை உடைய செங்கண் சோழன், பிழை செய்தவரைக் கொன்ற போர்க்களத்தில் ஞாயிறு தோன்றிய காலைப்பொழுதில் இறந்துபட்ட வீரர்களுடைய உடம்பிலிருந்து வாள் அழுந்தியதால் வெளிப்பட்டு வரும் குருதியை யானைகள் கலக்க, முற்பகல் முழுதும் சேறாய்க் கிடந்தன. பிற்பகலில் பவளத்தூள் போல வானமெங்கும் பரவிநின்றது.

2. "ஞாட்பினு ளெஞ்சிய ஞாலஞ்சேர் யானைக்கீழ்
போர்ப்பி லிடிமுரசி னூடுபோ மொண்குருதி
கார்ப்பெயல் பெய்தபிற் செங்குளக் கோட்டுக்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற புனனாடன்
ஆர்த்தம ரட்ட களத்து.

. நீர்நாட்டையுடைய செங்கண் சோழன் ஆரவாரத்துடன் போர் செய்யும் இயல்புடையவன். போரில் அவன் வாளால் வெட்டப்பட்ட வீரர்களின் உடம்புகளிலிருந்து பெருக்கெடுத்த குருதி வெள்ளம். யானைகளின் கால்களுக்கு அடியில் ஓடிய காட்சி மழை பெய்த பின்பு சிவந்த குளத்தினது கரையின் கீழுள்ள மதகுகள் நீர் சொரிதலைப் போன்று இருந்தன.

3. "ஒழுக்குங் குருதி யுழக்கித் தளர்வார்
இழுக்குங் களிற்றுக்கோ டூன்றி யெழுவர்
மழைக்குரன் மாமுரசின் மல்குநீர் நாடன்
பிழைத்தாரை யட்ட களத்து."

மேகத்தின் முழக்கம் போன்று பெரிய முரசினுடைய நீர்வளம் மிக்க நாட்டினை ஆட்சி செய்யும் செங்கட்சோழன், தப்பிச் சென்றவரைக் கொன்ற போர்க்களத்தில் ஒழுகும் குருதியைக் கலக்கி, அதனைக் கடக்க முடியாது

தளர்ச்சி உறுவோர்கள் போர்க்களத்தில் முறிந்து கிடக்கும் யானையின் கொம்புகளை ஊன்றுகோலாகக்கொண்டு எழுவர்.

4. "உருவக் கடுந்தேர் முருக்கிமற் றத்தேர்ப்
பரிதி சுமந்தெழுந்த யானை-யிருவிசும்பிற்
செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற செங்கண்மால்
புல்லாரை யட்ட களத்து."

செங்கண்சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் அஞ்சத்தக்க வேகமாகச் செல்லுகின்ற தேரைச் சிதைத்து, அத்தேர்ச் சக்கரத்தினைச் சுமந்து எழுந்த யானைகள் அகன்ற வானத்தில் செல்லும் சூரியன் மறையும் மலைகள் போன்று விளங்கின.

5. "தெரிகணை யெ∴கந் திறந்தவர் யெல்லாம்
குருதி படிந்துண்ட காகம்-உருவிழந்து
குக்கிற் புறத்த சிரல்வாய் செங்கண்மால்
தப்பியா ரட்ட களத்து."

செங்கண் சோழன் போரில் தப்பியவர்களைக் கொன்ற களத்தில், அம்புகளாலும், வேல்களாலும் துளைக்கப்பட்டு, வீரர்களின் மேனிகளிலிருந்து வெளிவரும் குருதி மழையில் கருங்காக்கைகள் நனைந்து செந்நிறமாயின, அவற்றின் கரியவாயும் மீன் கொத்திப் பறவையின் சிவந்த வாயை ஒத்திருந்தன.

6. "நானாற் றிசையும் பிணம்பிறங்க யானை
யடுக்குபு வேற்றிக் கிடந்த-இடித்துரறி
யங்கண் விசும்பி னுருமெறிந் தெங்கும்
பெருமலைத் தூறெறிந் தற்றே யருமெணிப்
பூணேந் தெழின்மார் பியறிண்டேர்ச் செம்பியன் தெவ்
வேந்தரை யட்ட களத்து."

பெறற்கரிய மணிகள் பதிக்கப்பெற்ற அணிகலத்தை ஏந்திய அழகிய மார்பினையும், வலிய தேரையும் உடைய செங்கட்சோழன் பகையரசரைக் கொன்ற போர்க்களத்தில் பலதிசைகளில் இறந்த யானைகளின் பிணங்கள் அடுக்கப்பட்டு உயரமாகக் காட்சி தந்தன. அவை வானத்து இடிவிழுந்து சிதறிய மலைக்கூட்டங்களைப் போன்று இருந்தன.

7. "அஞ்சனக் குன்றேய்க்கும் யானை யமருழக்கி
இங்கு லிகக்குன்றே போற்றென்றுஞ்-செங்கண்

வரிவரான் மீன்பிறழுங் காவிரி நாடன்
பொருநரை யட்ட களத்து."

சிவந்த கண்களையும் வரிகளையும் உடையவரால் மீன்கள் பிறழும் படியான காவிரி நாட்டுத் தலைவன் செங்கட்சோழன் தன்னோடு போர் செய்பவரைக் கொன்ற போர்க்களத்தில் நீலமலை கண்போன்று விளங்கிய யானைகள் போர்க்கள குருதிச் சேற்றைக் கலக்கியதால் சாதிலிங்க மலைகளைப் போல விளங்கின.

8. "யானைமேல் யானை நெரிதர வானாது
கண்ணேர் கடுங்கணை மெய்ம்மாய்ப்ப-எவ்வாயும்
எண்ணருங் குன்றிற் குரீஇயினம் போன்றவே
பண்ணா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
நண்ணாரை யட்ட களத்து."

ஒப்பனை அமைந்த இடிக்கும் முரசினையும், நீர்வளம் மிக்க நாட்டையும் உடைய செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் யானைகள் மேல் யானைகள் சாய அவற்றின் உடம்புகளில் அம்புகள் தைத்திருந்த காட்சி, மலைமுகட்டில் குருவிகள் கூட்டமாய் அமர்ந்திருந்தது போல் இருந்தது.

9. "மேலோரைக் கீழோர் குறுகிக் குறைத்திட்ட
காலார்சோ டற்ற கழற்கா லிருங்கடல்
ஊணில் சுறபிறழ்வ போன்ற புனனாடன்
நேராரை யட்ட களத்து."

நீர்வளம் மிக்க காவிரி நாட்டு மன்னனாகிய செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தே பல்திசைகளிலிருந்தும் அம்புமழை பெய்வதால், எங்கும் செல்ல முடியாத பகையரசர்கள் யானைகள் செயலற்று நின்ற காட்சி தொன்று தொட்டு வரும் சிறப்பினையுடைய தாது மலையைப் போல விளங்கின

10. "பல்கணை யெவ்வாயும் பாய்தலிற் செல்கலா
தொல்கி யுயங்குங் களிறெல்லாந் - தொல்சிறப்பிற்
செவ்வலங் குன்றம்போற் றோன்றும் புனனாடன்
தெவ்வரை யட்ட களத்து."

நீர்வளமிக்க நாட்டையுடைய செங்கட்சோழன், பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் பல அம்புகளும் எவ்விடத்திலும் பாய்தலால் செல்ல மாட்டாது தளர்ந்து வருந்தும் யானைகள் எல்லாம் தொன்று தொட்டு வரும் சிறப்பினையடைய தாது மலைகள் போல விளங்கும்.

தாதுமலை, சிந்துரை மலை என்று சிறப்புப் பெயரைப் பெற்றுள்ளது. யானைகளின் உடம்பில் அம்புகளால் குருதி வழிய சிந்தூர மலையாகக் காட்சி தந்தன என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

11. “கழுமிய ஞாட்பினுண் மைந்திகந்தா ரிட்ட
ஒழிமுரச மொண்குருதி யாடித்-தொழின்மடிந்து
கண்காணா யானை யுதைப்ப விழுமென
மங்குன் மழையி னதிரு மதிராப்போர்ச்
செங்கண்மா லட்ட களத்து.”

கலங்குதல் இல்லாத போரை உடைய செங்கட்சோழன் கொன்ற போர்க்களத்தில், வலிவிழந்தவர்களின் கைவிடப்பட்ட முரசங்கள் குருதி வெள்ளத்தில் மிதந்து சென்றன. போரில் கண்களை இழந்த யானைகள் தன் கொல்லும் தொழிலை மறந்து மிதந்துவரும் முரசங்களை உதைக்க மழை மோதும் போல ஒலி எழும்பின.

12. “ஓவாக் கணைபாய வொல்கி யெழில்வேழந்
தீவாய்க் குருதி யிழிதலாற் செந்தலைப்
பூவலங் குன்றம் புயற்கேற்ற போன்றவே
காவிரிநாடன் கடாஅய்க் கடிதாகக்
கூடாரை யட்ட களத்து.”

காவிரி நாட்டையுடைய செங்கட்சோழன் தம் படைகளை விரைந்து செலுத்திப் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில், இடைவிடாது அம்புகள் தைக்க, அழகிய யானைகள் தளர்ந்து நெருப்பு நிறம் பொருந்திய இரத்தப் பெருக்கால் சிவந்த செம்மண் மலைகள் போன்று விளங்கின.

13. “நிரைகதிர் நீளெ∴க நீட்டி வயவர்
வரைபுரை யானைக்கை நூற-வரைமேல்
உருமெறி பாம்பிற் புரளுஞ் செருமொய்ம்பிற்
சேஎய்பொரு தட்ட களத்து.”

போர் வலிமைமிக்க செங்கட்சோழன் போர் செய்து கொன்ற போர்க்களத்தில் ஒளிமிக்க நீண்ட வாளைப் பின்னே வாங்கி வீரர்கள் மலையைப் போன்ற யானைகளின் துதிக்கைகளைத் துணித்தனர். கீழே விழுந்த துதிக்கைகள் அங்கும் இங்கும் துள்ளிப் புரண்டன. அக்காட்சி, மலைமேல் உள்ள நாகம் இடியுண்டு புரள்வதைப் போல இருந்தது.

14. “கவளங்கொள் யானையின் கைதுணிக்கப்பட்டுப்
பவளஞ் சொரிதரு பைபோற் றிவளொளிய
வொண்செங் குருதி யுமிழும் புனனாடன்
கொங்கரை யட்ட களத்து.”

நீர்வளமிக்க காவிரி நாட்டையுடைய செங்கட்சோழன் கொங்கு நாட்டவரைக் கொன்ற போர்க்களத்தில் உணவினைக் கவனமாகக் கொள்ளும் யானைகளின் துதிக்கை வெட்டுப்பட்டதால் பவளக்குவியல் வைத்திருக்கும் பையைப் போன்று விளங்கின. ஒளிமிகுந்த சிவந்த குருதியை உமிழ்ந்தன.

15. “கொல்யானை பாயக் குடைமுருக்கி யெவ்வாயும்
புக்கவா யெல்லாம் பிணம்பிறங்கத்-தச்சன்
வினைபடு பள்ளியிற் றோன்றுமே செங்கட்
சினமால் பொருத களத்து.”

கோபத்தை உடைய செங்கட்சோழன் போர் செய்த போர்க்களத்தில் வெண்கொற்ற குடைகளை அழித்துக் கொள்ளும் யானைகள் பாய்தலால் யானைக் காலில் மிதிப்பட்ட வீரர்களின் உடல்கள் எவ்விடத்தும் சிதறிக் கிடந்த காட்சி.தச்சன் பணி செய்யும் இடங்கள் போல விளங்கின.

தச்சன் பணி செய்யும் பட்டறையில் முழுமை அடையாத பொருள்கள் சிதறிக் கிடப்பது போல யானைகளால் மிதிப்பட்ட வீரர்களின் உடல்கள் சிதறிக்கிடந்தன என்று உவமை அமைந்திருப்பது ஆசிரியரின் நுட்ப அறிவை வெளிப்படுத்தியுள்ளது.

16. “பரும வினமாக் கடவித் தெரிமறவர்
ஊக்கி யெடுத்த வாவத்தி னார்ப்பஞ்சாக்
குஞ்சரக் கும்பத்துப் பாய்வன குன்றிவரும்
வேங்கை யிரும்புலி போன்ற புனனாடன்
வேந்தரை பட்ட களத்து.”

நீர்வளம் மிக்க நாட்டையுடைய செங்கட்சோழன் பகை மன்னரைக் கொன்ற போர்க்களத்தில திரண்ட வலிமையுடைய குதிரைகள் வீரம் மிக்கவர்களால் செலுத்தப்பட்டு, மன எழுச்சியோடு எழுப்பப்பட்ட ஆரவாரத்தை உடைய அஞ்சாத யானைகளின் மத்தகத்தில் பாயும் தன்மை உடையன. இக்காட்சி, மலையில் பாய்கின்ற பெரிய வேங்கைப் புலிபோன்று விளங்கின.

17. “ஆர்ப்பெழுந்த ஞாட்பினு ளாளா ளெதிர்த்தோடித்

தாக்கி யெறிதர வீழ்தரு மொண்குருதி
கார்த்திகைச்சாற்றிற் கழிவிளக்கைப் போன்றனவே
போர்க்கொடித் தானைப் பொருபுன னீர்நாடன்
ஆர்த்தம ரட்ட களத்து."

போர்க்குரிய கொடியினை உடைய படையினைப் பெற்ற செங்கட்சோழன் ஆரவாரித்து, பகைவரைப் போரில் வென்ற களத்தில், ஒருவரோடு ஒருவர் மோதி படைக்கலங்களை வீசுதலால் ஏற்பட்ட குருதி வெள்ளம், கார்த்திகை நாளில் மிகுதியான விளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்தது போன்று இருந்தது.

18. "நளிந்த கடலுட் டிமிறிரை போலெங்கும்
விளிந்தார் பிணங்குருதி யீர்க்குந்-தெளிந்து
தடற்றிடங் கொள்வாட் டளையவிழுந் தார்ச்சே(ய்)
உடற்றியா ரட்ட களத்து."

வீரவாளையும், கட்டவிழ்ந்த மாலையையும் உடைய செங்கட்சோழன் சினமூட்டிய பகைவரைக் கொன்ற போர்க்களம், கடலையும், அதில் செல்லும் தோணியையும் நினைவூட்டுவன போல இருந்தது, வீரர்களில் உடம்பிலிருந்து பெருக்கெடுத்து ஓடும் குருதி வெள்ளம் கடல் போன்று காட்சி அளித்தது, இறந்து கிடந்த வீரர்களின் உடல்கள் தோணிகளைப் போல தோன்றின, குருதி வெள்ளம் அலை அலையாகச் செல்வதால் அக்குருதி அலையில் உடல்கள் அங்கும் இங்கும் அலைக்க சிக்கப்பட்ட காட்சி தோணிகள் மிதந்து செல்வது போன்றிருந்தது.

19. "இடைமருப்பின் விட்டெறிந்த வெ.்.கங்கான் மூழ்கிக்
கடைமணி கான்வரத் தோற்றி-நடைமெலிந்து
முக்கோட்ட போன்ற களிறெல்லா நீர்நாடன்
புக்கம ரட்ட களத்து."

நீர்வளம்மிக்க காவிரி நாட்டையுடைய செங்கட்சோழன் போரில் புகுந்து பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் யானைகளின் தந்தங்களுக்கு இடையே அம்புகள் தைத்ததனால் மூன்று கொம்புகளை உடையனவாகக் காட்சி தந்தன.

20. "இரிசிறக ரீர்க்குப் பரப்பி யெருவை
குருதி பிணங்கவருந் தோற்றம்-அதிர்விலாச்
சீர்முழாப் பண்ணமைப்பான் போன்ற புனனாடன்
நேராரை யட்ட களத்து."

நீர்வளம் மிக்க நாட்டையாளும், செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் கழுகுகள் இறக்கைகளை விரித்து குருதியோடு கிடக்கும் பிணங்களை உண்ணும் காட்சி, களங்கமில்லாத ஓசையை உடைய முடிவினை அடிப்பவன் போன்று இருந்தன.

21. "இணைவே லெழின்மருமத் திங்கப்புண் கூர்ந்து
கணையலைக் கொல்கிய யானை-துணையிலவாய்த்
தொல்வலி யாற்றித் துளங்கினவாய் மெல்ல
நிலங்கால் கவருமலை போன்ற செங்கட்
சினமால் பொருத களத்து."

கோபத்தை உடைய செங்கட்சோழன் போர் செய்த களத்தில் வேல்களின் தாக்கத்தாலும், தன்னை இயக்க ஆளில்லாத காரணத்தினாலும், சோர்ந்து வலிவிழந்தது. பூமியில் விழுந்த காட்சி மலைகள் போன்று விளங்கின.

22. "இருநிலஞ் சேர்ந்த குடைக்கீழ் வரிநுதல்
ஆடியல் யானைத் தடக்கை யொளிறுவாள்
ஓடா மறவர் துணிப்பத் துணிந்தவை
கோடுகொ ளொண்மதியை நக்கும்பாம் பொக்குமே
பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
கூடாரை யட்ட களத்து."

ஒளி நிறைந்த இடி போன்ற முரசினையும், பாய்ந்து செல்லும் காவிரியாற்று நீர்வளத்தை உடைய நாட்டை ஆளும் திறனுமுடைய செங்கட்சோழன் பகைவரை வென்ற போர்க்களத்தில், புறங்காட்டாத வாளேந்திய சோழனின் வீரர்கள் யானைகளின் துதிக்கைகளைத் துண்டாக்கி பூமியில் விழச் செய்தனர், வெண்கொற்றக் குடைகளுக்கு அருகே வெட்டுண்ட துதிக்கைகள் கிடந்த காட்சி, முழுநிலவைக் கவர்ந்துண்ணும் பாம்புகள் போல கிடந்தன.

23. "எற்றி வயவ ரெறிய நுதல்பிளந்து
நெய்த்தோர்ப் புனலு ணிவந்தகளிற் றுடம்பு
செக்கர்கொள் வானிற் கருங்கொண்மூப் போன்றவே
கொற்றவேற் றானைக் கொடித்திண்டேர்ச் செம்பியன்
செற்றாரை யட்ட களத்து."

வெற்றியையுடைய வேலேந்திய படைகளையும் கொடித்தேரையும் உடைய செங்கட் சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் வீரர்கள் படைக்கலங்களை

எடுத்து எரிய யானைகளின் நெற்றி பிளந்து குருதி வெள்ளம் பெருக்கெடுத்தது. அக்காட்சி சிவந்த வானத்தில் காணப்படும் கரிய மேகத்தை ஒத்திருந்தன.

24. “திண்டோண் மறவரெறியத் திசைதோறும்
பைந்தலை பாரிற் புரள்பவை-நன்கெனைத்தும்
பெண்ணையந் தோட்டம் பெருவளி புக்கற்றே
கண்ணார் கமழ்தெரியற் காவிரி நீர்நாடன்
நண்ணாரை யட்ட களத்து.”

மணக்கின்ற மாலையை அணிந்தவனும் கண்ணுக்கு நிறைந்த காட்சியை உடையவனும், காவிரி நாட்டை ஆள்பவனும் ஆகிய செங்கட் சோழன் பகைவரை வென்ற போர்க்களத்தில் வலிமையுடைய தோள்களை உடைய வீரர்கள் வாளால் எறிதலால் திசைகள் தொறும் பகைவீரர்களின் தலைகள் பூமியில் விழுந்து கிடந்த காட்சி, பனங்காட்டில் புகுந்த பெருங்காற்றால் பனங்காய்கள் வீழ்ந்து கிடப்பதைப் போன்று இருந்தன.

25. “மலைகலங்கப் பாயு மலைபோ னிலைகொள்ளாக்
குஞ்சரம் பாயக் கொடியெழுந்து பொங்குபு
வானந் துடைப்பன போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து.”

நீர்வளம் மிக்க நாட்டை ஆளும் செங்கட்சோழன் பகைவரை வென்ற போர்க்களத்தில் மலைகள் போல நிலைகொண்ட யானைக் கூட்டங்கள் பாய்தலால், அவற்றின் மீது கட்டப் பெற்ற கொடிகள் மேல் எழுந்து வானத்தைத் துடைப்பன போன்று இருந்தன.

26. “எவ்வாயு மோடி வயவர் துணித்திட்ட
கைவாயிற் கொண்டெழுந்த செஞ்செவிப் புன்சேவல்
ஐவாய் வயநாகங் கவ்வி விசும்பிவருஞ்
செவ்வா யுவணத்திற் றோன்றும் புனனாடன்
தெவ்வரை யட்ட களத்து.”

காவிரி நாட்டை ஆட்சி செய்யும் செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில், வீரர்கள் துணிந்த கைகளைத் தமது வாயில் கொண்டு எழுந்த சிவந்த செவிகளை உடைய சேவல் பருந்துகள் பறந்த காட்சி வலிமைமிக்க

பாம்பினைக் கவ்விக் கொண்டு வானில் பறந்து செல்லும் சிவந்த வாயையுடைய கருடனைப் போல தோன்றின.

27. “செஞ்சேற்றுட் செல்யானை சீறி மிதித்தலால்
ஓண்செங் குருதிகள் தொக்கீண்டி நின்றவை
பூநீர் வியன்றமிடாப் போன்ற புனனாடன்
மேவாசை யட்ட களத்து.”

நீர்வளம் மிக்க காவிரி நாட்டை ஆட்சி புரியும் செங்கட்சோழன் பகைவரை வென்ற போர்க்களத்தில் குருதிச் சேற்றில் செல்லுகின்ற யானைகள் வெகுண்டு மிதித்தலால் குழிந்த இடங்களில் தேங்கிய குருதி, செம்பூக்களைக் கொண்ட நீர்நிலையை ஒத்திருந்தன.

28. “ஓடா மறவ ருருத்து மதஞ்செருக்கிப்
பீடுடை வாளார் பிறங்கிய ஞாட்பினுட்
கேடகத்தோ டற்ற தடக்கைகொண் டோடி
இகலன்வாய்த் துற்றிய தோற்ற மயலார்க்குக்
கண்ணாடி காண்பாரிற் றோன்றும் புனனாடன்
நண்ணாரை யட்ட களத்து.”

நீர்வளம் மிக்க காவிரி நாட்டை ஆளும் செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் புறங்காட்டி ஓடாத வீரர்கள் கோபம் கொண்டு செருக்குடையவராய் பெருமையுடைய வாளேந்தி போர் புரிய கேடயத்தோடு கைகள் அறுபட்டு விழ அவற்றைத் தமது வாயால் கவ்விக்கொண்டு நரிகள் ஓடின. அக்காட்சி அயலில் நின்றார்க்குக் கண்ணாடியில் காண்பது போல தோன்றின.

29. “கடிகாவிற் காற்றுற் றெறிய வெடிபட்டு
வீற்றுவீற் றோடு மயிலினம்போல்-நாற்றிசையும்
கேளி ரிழந்தா ரலறுபவே செங்கட்
சினமால் பொருத களத்து.”

சிவந்த கண்களையும், கோபத்தையும் உடைய செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் செடிகொடிகள் நிறைந்த சோலையுள் பெருங்காற்று வீசுவதால் வேறுவேறாக அஞ்சி ஓடும் மயில்களைப் போல நான்கு திசைகளிலும் தன் துணையை இழந்த மகளிர் அலறி நின்றனர்.

30. “மடங்க வெறிந்து மலையுருட்டு நீர்போல்
தடங்கொண்ட வொண்குருதி கொல்களி றீர்க்கு

மடங்கா மறமொயம்பிற் செங்கட் சினமால்
அடங்காரை யட்ட களத்து.”

சிங்கம் போன்ற வீரமிக்க வலிமையையினையும், சிவந்த கண்களையும் உடைய செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் மலைகளும் விளையும் படியாகப் பாறைகளை உருட்டி வருகின்ற வெள்ள நீர் போல பரந்த வெள்ளமானது கொல்லப்பட்ட யானைகளை இழுத்துச் சென்றது.

31. “ஓடா மறவ ரெறிய நுதல்பிளந்த
கோடேந்து கொல்களிற்றுக் கும்பத் தெழிலோடை
மின்னுக் கொடியின் மிளிரும் புனனாடன்
ஒன்னாரை யட்ட களத்து.”

நீர் வளமிக்க காவிரி நாட்டையுடைய செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் புறங்காட்டி ஓடாத வீரர்கள் வேலினை எறிதலால் நெற்றியில் பிறந்த கௌம்பினை ஏந்திய கொல்லும் யானையின் மத்தகத்தில் கட்டிய அழகிய பட்டானது மேகத்தின்கண் தோன்றும் மின்னற்கொடியை ஒத்திருந்தது.

32. “மையின்மா மேனி நிலமென்னு நல்லவள்
செய்யது போர்த்தாள்போற் செவ்வந்தாள்-பொய்
பூந்தார் முரசிற் பொருபுன னீர்நாடன்
காயந்தாரை யட்ட களத்து.”

பூமாலையினையும், வெற்றி முரசினையும் உடைய வறட்சியற்ற நீர்வளம் மிக்க காவிரி நாட்டை ஆட்சி செய்யும் செங்கட்சோழன் தன்மீது கோபத்து எழுந்த பகைவரைப் போரிட்டு சென்ற போர்க்களத்தில் குற்றமற்ற திருமேனியை உடைய நிலமென்னும் பெண்ணானவள் சிவந்த போர்வையைப் போர்த்தி இருந்தது போல் செந்நிறம் அடைந்தாள்.

33. “பொய்கை யுடைந்து புனல்பாய்ந்த வாயெல்லா
நெய்த லிடையிடை வாளை பிறழ்வனபோல்
ஐதிலங் கெ∴கி னவிரொளிவா டாயினவே
கொய்சுவன் மாவிற் கொடித்திண்டேர்ச் செம்பியன்
தெவ்வரை யட்ட களத்து.”

கத்தரித்த புறமயிரையுடைய குதிரையினையும், கொடி கட்டிய வலிமை வாய்ந்த தேரினையும் உடைய செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற

போர்க்களத்தில், குளத்தின் நடுவே நெய்தல் பூக்கள் பூத்திருக்க பூக்களின் நடுவே வரால் மீன்கள் பிறழ்வன போல அழகிய வேலொடு, ஒளிமிக்க வாள்களும் மின்னின.

முறைப்படி வேல்வித்தை, வாள்வித்தை கற்ற வீரர்கள் போர்க்களத்துள் கற்ற முறைப்படி போரிட முடிவதில்லை. சூழலுக்கு ஒப்ப தன் வீரத்தைக் காட்டினர் என்ற நுட்பம் இப்பாடலுள் அமைந்துள்ளது.

34 "இணரிய ஞாட்பினு ளேற்றெழுந்த மைந்தர்
சுடரிலங் கெ.்.க மெறியச்சோர்ந் துக்க
குடர்கொண்டு வாங்குங் குறுநரி கந்தில்
தொடரொடு கோணாய் புரையு மடர்பைம்பூட்
சேய்பொரு தட்ட களத்து."

தகட்டு வடிவமாகிய பசுமையான அணிகலத்தையடைய செங்கண் சோழன், போர் செய்து பகைவரைக் கொன்ற போர்க்களத்தின் கண், துன்பம் மிகுந்த போரில் எதிர்த்தெழுந்த வீரர்கள், ஒளி வீசுகின்ற வேல்களை எறிதலால் சரிந்து கொட்டிய குடர்களைக் (வீரர்களின்) கவ்விக் கொண்டு இழுக்கும் குறுநரிகள், தூணிலே சங்கிலியால் கட்டப்பட்ட வேட்டை நாய்களைப் போன்று விளங்கும்.

35. "செவ்வரைச் சென்னி யரிமானோ டவ்வரை
ஒல்கி யுருமிற் குடைந்தற்றான் - மல்கிக்
கரைகொண் றிழிதருஉங் காவிரி நாடன்
உரைசா லுடம்பிடி மூழ்க வரசோ(டு)
அரசுவா வீழ்ந்த களத்து."

கரைகளை அழித்துச் செல்லும்படியான நீர்வளமிக்க காவிரி நாட்டுத் தலைவனாகிய செங்கட்சோழனின் புகழமைந்த வேல்கள் குளிப்ப, அரசரோடு பட்டம் பெற்ற யானைகள் மறிந்து வீழ்ந்த களத்தின்கண் அங்ஙனம் வீழ்ந்தமை செம்மலையின் உச்சியிலுள்ள சிங்கத்துடன் அந்த மலை தளர்ச்சியடைந்து இடியேற்றிற்கு உடைந்தாற்போல் விளங்கியது.

36. "ஓஒ உவம னுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாள்
மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலா
ஆவுதை காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து."

காவிரி நாடாகிய செங்கட்சோழன் கழுமலம் என்னும் ஊரினைக் கைக்கொண்ட நாளில், அவன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தே குதிரைகள் உதைத்தலால் வெண்கொற்றக்குடைகள் எல்லாம் தலைமாறிக்கிடந்தன. இக்காட்சி பசுக்கூட்டங்களால் உதைக்கப்பட்ட காளான்களை ஒத்திருந்தன.

காளான் மிகவும் மென்மையானது. அதை அழிக்க வலிமை தேவை இல்லை. செங்கட்சோழன் தன் முழு வலிமையையும் காட்ட பகை கிட்டவில்லை. அவன் வீரத்திற்கு முன் பகையரசர்கள் காளான்களைப் போல வலிமை இல்லா எளிமையானவர்கள் என்பதை இவ்வுவமையின் வாயிலாக ஆசிரியர் நுட்பமாகச் சுட்டியுள்ளார்.

37. “அரசர் பிணங்கான்ற நெய்த்தோர் முரசொடு
முத்துடைக் கோட்ட களிறீர்ப்ப-எத்திசையும்
பௌவம் புணரம்பி போன்ற புனனாடன்
தெவ்வரை யட்ட களத்து.”

காவிரி நாட்டை ஆட்சி செய்யும் செங்கட்சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில், பகை அரசர்களின் உடல்கள் சிந்திய குருதி வெள்ளம் பெருகிட, இவ்வெள்ளத்தில் முரசினோடு, முத்தினை உடைய கொம்புகளையுடைய யானைகளையும் இழுத்துச் சென்றன. இக்காட்சி, கடலையும், கடலைச் சார்ந்த மரக்கலங்களையும் ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது.

38. “பருமப் பணையெருத்திற் பல்யானை புண்கூர்ந்(து)
உருமெறி பாம்பிற் புரளுஞ்-செருமொய்ம்பிற்
பொன்னார மார்பிற் புனைகழற்காற் செம்பியன்
துன்னாரை யட்ட களத்து.”

போர் வலிமையினையும், பொன்னாலும் அணிந்த மார்பினையும், வீரக்கழல் அணிந்த காலினையும் உடைய செங்கட்சோழன் தன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் ஒப்பனை செய்யப்பட்ட பருத்த பிடரியினையுடைய பல யானைகள் படைகளால் புண்கள் மிக இடியால் தாக்கப்பட்ட நாகங்கள் போல புரளும்.

இடி ஓசையைக் கேட்ட நாகம் துடிக்கும் இயல்புடையது. அதன் மீது இடி விழுந்தால் அதன் நிலைமை என்னவாகும் என்ற வியப்பை ஆசிரியர் சுட்டியுள்ளார்.

39. “மைந்துகால் யாத்து மயங்கிய ஞாட்பினுட்
புய்ந்துகால் போகிப் புலான்முகந்த வெண்குடை
பஞ்சிபெய் தாலமே போன்ற புனனாடன்

வஞ்சிக்கோ வட்ட களத்து.”

நீர்வளம் மிக்க காவிரி நாட்டையடைய செங்கட்சோழன் வஞ்சியரசராகிய சேரனைக் கொன்ற போர்க்களத்தில் மறவர்கள் காலைத்தளை செய்தலால் போக முடியாது நெருங்கிச் செய்த போரின்கண் காம்பு முறிந்து போய், சிவந்த புலாலை முகந்த வெண்கொற்றக்குடைகள் செம்பஞ்சுக் குழம்பு பெய்த வட்டிலைப் போன்று இருந்தன.

40. “வெள்ளிவெண் ணுஞ்சிலான் ஞால முழுவனபோல்
எல்லாக் களிறு நிலஞ்சேர்ந்த-பல்வேற்
பணைமுழங்கு போர்த்தானைச் செங்கட் சினமால்
கணைமாரி பெய்த களத்து.”

பல வேல்களையும், முரசு முழங்குகின்ற போர்ப்படைகளையும் மிக்க கோபத்தையும் உடைய செங்கட்சோழன் அம்புமழை சொரிந்த போர்க்களத்தில் வெள்ளியால் செய்த வெண் கலப்பையால் நிலத்தை உழுதல் போல யானைகள் எல்லாம் முகம் கவிழ்ந்து நிலத்தைச் சேர்ந்தன.

வீரர்களால் வெட்டப்பட்ட யானைகள் பூமியில் விழுந்தன. அவைகள் தன் வெண்கோடுகளால் பூமியை உழுதன என்று ஆசிரியர் தற்குறிப்பேற்றமாகக் கூறியுள்ளார்.

குருதி மழை பெய்ததும் யானைகள் உழத்தொடங்கின. இறந்தபிறகும் கடமை செய்யும் யானையின் செயல் நினைக்கத்தக்கது.

## களவழி நாற்பது - வினாக்கள்

1. பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் புறநூலாகப் போற்றப்படும் நூல் எது?
2. களவழி நாற்பதின் ஆசிரியர் யார்?
3. களவழி நாற்பதின் பாவகை யாது?
4. களவழி நாற்பது எத்திணையால் ஆனது?
5. யானைப்போரே மிகுதியும் பாடப்பட்டுள்ள நூல் எது?
6. களவழி நாற்பதில் வெற்றி பெற்ற மன்னன் யார்?
7. சோழன் செங்கணானால் சிறைவைக்கப்பட்டவர் யார்?
8. சோழன் செங்கணானும், சேரன் கணைக்கால் இரும்பொறையும் போர் புரிந்த இடம் எது?

9. களவழி நாற்பது பாடியதற்கான பரிசாக எதனை முன்வைத்தார் பொய்கையார்?
10. களவழி நாற்பதின் வழி உவமிக்கப்படும் விழா எது?
11. அட்டகளத்து என முடியும் நூல்?
12. ஏர்க்களம், போர்க்களம் இவ்விரு களங்களையும் பாடும் நூல்?
13. கணைக்கால் சிறை வைக்கப்பட்ட இடம் எது?
14. போர்க்களத்தின் பிற்பகலில் பவளத்தூள் போல காட்சியாவது எது?
15. போர்க்களத்தில் தளர்ச்சி உறுவோர்கள் எதனை ஊன்றுகோலாகக் கொண்டு எழுவர்?
16. சூரியன் மறையும் மலைகள் போல விளங்குவன எவை?
17. களவழி நாற்பதின் காக்கைகள் எந்நிறத்தில் இருந்தது.
18. போர்க்களத்தில் வானத்து இடிவிழுந்து சிதறிய மலைக்கூட்டங்களைப் போல் இருப்பன யாவை?
19. களவழியில் யானை உடம்பினில் அம்பு தைத்திருந்த காட்சி எவற்றைப் போல இருந்தது?
20. போர்க்களத்தில் சிந்தூர மலையாகக் காட்சியளிப்பது எது?
21. களவழி நாற்பதில் முழுநிலவை கவர்ந்துண்ணும் பாம்புகள் போல காட்சியளிப்பது எவை?
22. போர்க்களத்தில் தோணிகளைப் போல மிதந்து செல்வது யாவை?
23. களவழி நாற்பது பாடலில் மூன்று கொம்புகளைப் போல் காட்சி தந்தது எது?
24. போர்க்களத்தில் யானைகள் வெகுண்டு மிதித்தலால் குழிந்த இடங்களில் தேங்கிய குருதி எதனை ஒத்திருந்தன?
25. போர்க்களத்தில் நரிகள் தமது வாயால் எதனைக் கவ்விக்கொண்டு ஓடின.
26. போர்க்களத்தில் பசியால் நரிகள் எதனை இழுத்துச் சென்றது?
27. களவழிநாற்பது பாடலில் வேலுக்கும், வாளுக்கும் உவமையாக கூறப்பட்டுள்ளவை யாவை?
28. போர்க்களத்தில் பசுக்களால் உதைக்கப்பட்ட காளான்களை எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?
29. களவழியில் கடற்கரைக்கு அருகே கட்டப்பட்டிருக்கும் கலங்கள் போல காட்சியளித்தவை எவை?
30. போர்க்களத்தில் இடி விழுந்த நாகம் போல துடிப்பது எது?
31. களவழி நாற்பது பாடலில் யானைகள் எவ்வாறு புரண்டது?

32. களவழி நாற்பது பாடலில் கடலையும் கடலைச் சார்ந்த மரக்கலங்களையும் எதற்கு ஒப்புமையாகக் கூறப்பட்டுள்ளது?
33. போர்க்களத்தில் சாதிலிங்க மலைகளைப் போல் விளங்குவன யாவை?
34. போர்க்களத்தில் மழை மோதும் ஒலி போல எழும்புவன எவை?
35. போர்க்களத்தில் சேவல் பருந்துகள் பறந்த காட்சியினை எவ்வாறு உவமிக்கப்பட்டுள்ளது?

## பகுதி II

1. களவழி நாற்பது பாடலில் இடம்பெறும் செங்கண் சோழனின் வெற்றி சிறப்புகளை விவரி?
2. போர்க்களத்தில் யானைகள் படும் துயரத்தினைக் கூறுக.
3. களவழி நாற்பது பாடலில் வீரர்களின் போர்த்திறனை விவரி?
4. களவழி நாற்பது பாடலில் குருதிகளால் ஏற்படும் உவமை காட்சிகளை விவரி?
5. களவழி நாற்பது பாடலில் நீர் வளமிக்க நாட்டையுடைய செங்கட்சோழன் யானைகளை வீழ்த்திய விதத்தினை விவரி.
6. ‘உயிரினும் மாணப்பெரிது’ என்பதற்கு இணங்க வாழ்ந்த சேரன் கணைக்கால் இரும்பொறையை விளக்குக.

## பகுதி III

1. களவழி நாற்பது பாடலின் வழி நீ அறியலாகும் செய்திகள் யாவை?
2. களவழி நாற்பது பாடலில் காவிரி நாட்டையுடைய செங்கட்சோழன் வெற்றி சிறப்புகளைக் கூறுக.
3. களவழி நாற்பது பாடலின் வழி யானைகள் பற்றிய போர்களக் காட்சியை விவரி.

----------------------------------